# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–19



வேர்ச்சொற் கட்டுரைகள்–3

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
# தமிழ்க் களஞ்சியம்

**19**

## வேர்ச்சொற் கட்டுரைகள் – 3

*ஆசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

நூற் குறிப்பு

நூற்பெயர் : **பாவாணர்**
**தமிழ்க் களஞ்சியம் - 19**

ஆசிரியர் : மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்

பதிப்பாளர் : கோ. இளவழகன்

முதல் பதிப்பு : 1944

மறுபதிப்பு : 2009

தாள் : 16 கி வெள்ளைத்தாள்

அளவு : 1/8 தெம்மி

எழுத்து : 11 புள்ளி

பக்கம் : 8 + 160 = 168

நூல் கட்டமைப்பு : இயல்பு (சாதாரணம்)

விலை : உருபா. **155/-**

படிகள் : 1000

நூலாக்கம் : பாவாணர் கணினி
தி.நகர், சென்னை - 17.

அட்டை வடிவமைப்பு : வ. மலர்

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேசுவரா
ஆப்செட் பிரிண்டர்சு
இராயப்பேட்டை, சென்னை - 14.

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**
**"பெரியார் குடில்"**
பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் **தமிழ்மண் பதிப்பகம்** தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்** அவர்களும், மருத்துவர் **கு.பூங்காவனம்** அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.

"சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று **மறைமலையடிகளும்,** நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று **பாவேந்தரும்,** தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று **பேரறிஞர் அண்ணா** அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர் **இராசமாணிக்கனாரும்,** தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர் **தமிழ்குடிமகன்** அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர் **இளவரசு** அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர் **இளங்குமரனார்** அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# குறுக்க விளக்கம்

அகம். - அகநானூறு
அக. நி. - அகநானூறு நித்திலக் கோவை
அரிசமய. - அரிசமய - அரிசமய தீபம்
அரிச். பு. விவா. - அரிச்சந்திர புராணம், விவாக காண்டம்.
அருட்பா. நடராஜ - அருட்பா நடராஜபதி மாலை
அழகர் கல. - அழகர் கலம்பகம்
அறநெறி. - அறநெறிச்சாரம்
ஆசாரக். - ஆசாரக்கோவை
இரகு. - இரகு வமிசம் ...
இராசவைத். - இராச வைத்திய மகுடம்
இலக். வி. - இலக்கண விளக்கம்
இறை. - இறையனார் அகப்பொருள்
இறை. உரை - இறையனார் களவியலுரை
ஈடு. - ஈடு முப்பத்தாறாயிரப்படி
உபதேசகா. - உபதேசகாண்டம்...
உரி. நி. - உரிச்சொல் நிகண்டு
ஐங். - ஐங்குறுநூறு
ஐந். ஐம். - ஐந்திணை ஐம்பது
ஔவை. குறள். - ஔவைக்குறள்
ஔவை. தனிப்பாடல் - ஔவையார் தனிப்பாடல் திரட்டு
கந்தபு. - கந்தபுராணம்
கலித். - கலித்தொகை
கல்லா. - கல்லாடம்
கம்பரா. - கம்பராமாயணம்
காஞ்சிப்பு. - காஞ்சிப்புராணம்
காரிகை. - யாப்பருங்கலக்காரிகை
குமர. பிர. திருவாரு. - குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, திருவாரூர் நான்மணிமாலை
குருபரம். - குருபரம்பரை
குறள். - திருக்குறள்
குறிஞ்சிப். - குறிஞ்சிப்பாட்டு
குறுந். - குறுந்தொகை
குற்றா. குற. - குற்றாலக் குறவஞ்சி
குற்றா. தல. - குற்றாலத்தல புராணம்
கூர்மபு. தக்கன்வே. - கூர்ம புராணம், தக்கன் வேள்விப் படலம்
கூளப்ப. - கூளப்ப நாயக்கன் காதல்
கொன்றைவே. - கொன்றைவேந்தன்.
கோயிற்பு. - கோயிற்புராணம், பாயிரம்.
சங்கர. உலா. - சங்கர சோழனுலா
சி.சி. பரபக்கம் - சிவஞான சித்தியார் பரபக்கம்
சிபோ. பா. - சிவஞானபோதபாடியம்
சிலப். - சிலப்பதிகாரம்
சிவஞா. - சிவஞானபோதம்
சிவரக. - சிவரகசியம்
சிறுபஞ். - சிறுபஞ்சமூலம்
சிறுபாண். - சிறுபாணாற்றுப்படை
சினேந். - சினேந்திரமாலை
சீவக. - சீவக சிந்தாமணி
சூடா. - சூடாமணி நிகண்டு
சூத. - சூதசங்கிதை
சூளா. - சூளாமணி
சேதுபு. - சேதுபுராணம்
செவ்வந்திப். - செவ்வந்திப் புராணம்
சைவச. - சைவ சமயநெறி
சௌந்தரி. - சௌந்தரியலகரி
ஞானவா. - ஞானவாசிட்டம்
ஞானா. - ஞானமிர்தம்
தஞ்சைவா. - தஞ்சைவாணன் கோவை
தணிகைப்பு. நாட்டு. - தணிகைப் புராணம், நாட்டுப் படலம்
தண்டலை. சத. - தண்டலையார் சதகம்
தண்டி. - தண்டியலங்காரம்
தமிழ் நா. - தமிழ் நாவலர் சரிதை

தனிப்பா. - தனிப்பாடல் திரட்டு
தாயு. - தாயுமானவர் பாடல்
திணைமாலை. - திணைமாலை நூற்றைம்பது
திரிகடு. - திரிகடுகம்
திருக்காளத். - திருக்காளத்திப் புராணம்
திருக்கோ. - திருக்கோவையார்
திருநூற். - திருநூற்றந்தாதி
திருப்பு. - திருப்புகழ்
திருமந். - திருமந்திரம்
திருமுருகு. - திருமுருகாற்றுப் படை.
திருவள்ளுவ. - திருவள்ளுவமாலை
திருவாச. - திருவாசகம்
திருவாத. - திருவாதவூரர் புராணம்
திருவாலவா. - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
திருவிளை. - திருவிளையாடற்புராணம்
திவா. - திவாகர நிகண்டு
திவ். - திவ்வியபிரபந்தம்
தேவா. - தேவாரம்
தைலவ. தைல. - தைலவருக்கச் சுருக்கம்...
தொல். - தொல்காப்பியம்
தொல். எழுத்து - தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
தொல். உரி. - தொல்காப்பியம், உவமவியல்
தொல். சொல். சேனா.- தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை
தொல். பொரு. - தொல்காப்பியம், பொருளதிகாரம்.
தொல். மர. - தொல்காப்பியம், மரபியல்
தொல். மெய்ப்பாட். - தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்
நள. - நளவெண்பா
நற். - நற்றிணை
நன். - நன்னூல்
நாலடி. - நாலடியார்
நான்மணி. - நான்மணிக்கடிகை
நீதிநெறி. - நீதிநெறி விளக்கம்
நீதி வெண். - நீதிவெண்பா
நெடுநல். - நெடுநல்வாடை
நைடத. - நைடதம்
பட்டினப். - பட்டினப்பாலை
பணவிடு. - பணவிடுதூது
பதினொ. திருவிடைமும் - பதினொ ராந் திருமுறை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை
பதிற்றுப். - பதிற்றுப்பத்து
பரிபா. - பரிபாடல்
பழ. - பழமொழி நானூறு
பாக. - பாகவதம்
பாரத. - பாரதம்
பிங். - பிங்கல நிகண்டு
பிரபுலிங். - பிரபுலிங்கலீலை
பிரபோத. - பிரபோத சந்திரோதயம்
பு.வெ. - புறப்பொருள் வெண்பா மாலை
புறத். ஆசிரியமாலை - புறத்திரட்டு, ஆசிரியமாலை
புறம். - புறநானூறு
பெரியபு. - பெரியபுராணம்
பெருங். - பெருங்கதை
பெரும்பாண். - பெரும்பாணாற்றுப் படை
பொருந. - பொருநராற்றுப்படை
மணி. - மணிமேகலை
மலை. - மலையகராதி
மலைபடு. - மலைபடுகடாம்
மாறன. - மாறனலங்காரம்
மீனாட்சி. பிள்ளைத் - மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்
முல்லைப். - முல்லைப்பாட்டு
யாப். காரிகை. - யாப்பருங்கலக்காரிகை
யாப். வி. - யாப்பருங்கல விருத்தி
யாழ். அக. - யாழ்ப்பாணத்து மானிப்பாயகராதி
வள்ள. - வள்ளலார் சாத்திரம்
விநாயகபு. - விநாயக புராணம்
வி.சிந். - விவேக சிந்தாமணி
விறலிவிடு. - விறலிவிடுதூது
வெங்கைக்கோவை. - திருவெங்கைக் கோவை
வெண்பாப். செய். - வெண்பாப் பாட்டியல், செய்யுளியல்
S.I.I. Vol. - South Indian Inscriptions Volume

# மொழிப் பெயர்கள்

### தமிழ்

இ. - இந்தி
க. - கன்னடம்
ச. - சமற்கிருதம்
து. - துளு, துளுவம்
தெ. - தெலுங்கு
பிரா. - பிராகிருதம்
ம. - மலையாளம்
மராத். - மராத்தி
வ. - வடமொழி

### ஆங்கிலம்

AF.- Anglo - French
AS.- Anglo - Saxon
Du.- Dutch
E.- English
F.- French
G.- German
Gael.- Gaelic
Gk.- Greek
Goth.- Gothic
Heb.- Hebrew
K.- Kannada
Kur.- Kurukh
L., Lat.- Latin
Lith.- Lithuanian
LL.- Late Latin
M.- Malayalam
MDu.- middle Dutch
ME.- middle English
MLG.- middle Low German
OE.- old English
OF.- old French
OHG.- old High German
ON.- old Norse
OS.- old Saxon
S., Skt.- Sanskrit
Slav.- Slavonic
T., Te., Tel.- Telugu
T.- Tulu

### பல்வகைக் குறிப்புகள்

இ.வ. - இலக்கிய வழக்கு
உ.வ. - உலக வழக்கு
எ - டு. - எடுத்துக்காட்டு
ஒ. நோ. - ஒப்புநோக்க
செ. குன்றிய வி. - செயப்படு பொருள் குன்றிய வினை
செ. குன்றா. வி. - செயப்படு பொருள் குன்றா வினை
நாஞ்.வ. - நாஞ்சில் நாட்டு வழக்கு
யாழ்ப். - யாழ்ப்பாண வழக்கு
நெ.வ. - நெல்லை வழக்கு
c.f., - confer (=compare)

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | .... | iii |
| | குறுக்க விளக்கம் | .... | v |
| | மொழி பெயர்ப்பு | .... | vii |
| | **I. மொழிநூல்** | | |
| **நுல்** | 1 .நுல்[1] என்னும் வேர்ச்சொல் | ... | 3 |
| | 2. நுல்[2] (துளைத்தற் கருத்துவேர்) | ... | 13 |
| | 3. நுல்[3] (ஒளிர்தற் கருத்துவேர்) | ... | 21 |
| | 4. நுல்[4] (நெகிழ்ச்சிக் கருத்துவேர்) | ... | 27 |
| | 5. நுல்[5] (நீட்சிக் கருத்துவேர்) | ... | 37 |
| | 6. நுல்[6] (பொருந்தற் கருத்துவேர்) | ... | 52 |
| **புல்** | 7. புல்[1] (பொருந்தற் கருத்துவேர்) | ... | 62 |
| | 8. புல்[2] (பருத்தற் கருத்துவேர்) | ... | 72 |
| | 9. புல்[3] (திரட்டற் கருத்துவேர்) | ... | 81 |
| | 10. புல்[4] (விரும்பற் கருத்துவேர்) | ... | 87 |
| | 11. புல்[5] (வளைதற் கருத்துவேர்) | ... | 94 |
| | 12. புல்[6] (துளைத்தற் கருத்துவேர்) | ... | 101 |
| | தாய்மொழிப் பற்றே தலையாயப் பற்று | ... | 159 |

# வேர்ச்சொற் கட்டுரைகள்

[மூன்றாம் பகுதி]

நுல்[1] முதல் நுல்[6] வரை

புல்[1] முதல் புல்[6] வரை

## 1

# நுல்[1] என்னும் வேர்ச்சொல்

*அடிப்படைக் கருத்து : தோன்றல்.*

*வழிநிலைக் கருத்துகள் : இளமை, சிறுமை, மெலிவு, நுண்மை, கூர்மை, நுனிமை, முன்மை முதலியன.*

*நுல்– நல்– நன்– நனை. நனைதல் = 1. தோன்றுதல். ''மகிழ்நனை மறுகின் மதுரையும்'' (சிறுபாண். 67). 2. அரும்புதல். ''பிடவ மலரத் தளவ நனைய'' (ஐங். 499).*

*நனை = அரும்பு. ''மாநனை கொழுதி மகிழ்குயி லாலும்'' (நற்.9).*

*நுல் – நுரு = 1. இளம்பிஞ்சு. 2. அறுத்த தாளில் விடும் தளிர் (யா. வ.).*

*நுரு – நொரு = 1. சிறுபிஞ்சு. 2. காய்ப்பு மாறினபின் தோன்றும் பிஞ்சு. 3. விளைந்த பயிரின் அடியில் அல்லது கணுவில் தோன்றும் இளங்கதிர்.*

*நொருக்காய், நொருப்பிஞ்சு என்பன யாழ்ப்பாண வழக்கு.*

*நுல் – நல் – நறு – நாறு. நாறுதல் = தோன்றுதல், ''திருநாறு விளக்கத்து'' (பதிற். 52 : 13). 2. பிறத்தல். ''தேர் பத்தினன் மகவென நாறி'' (கல்லா. 94 : 25). 3. முளைத்தல். ''பாத்தி விதைத்தாலும் நாறாத வித்துள'' (பழ. 93).*

*நாறு = 1. முளை*(W.). *2. நாற்று. ''நாறிது பதமெனப் பறித்து'' (சீவக. 45).*

*நாறு – நாற்று = 1. இளம்பயிர். 2. பறித்து நடக்கூடிய பயிர்.*

*நுல்– நுன்– நுன்னி– நன்னி = 1. மிகச்சிறியது. 2. சிறியது. ''நன்னிக் குரங்கும் கொசுகும் பகையோ நமக்கென் றானே'' (இராமநா. உயுத். 1).*

நன்னிக்கல் = மருந்தரைக்குஞ் சிற்றம்மி (தைலவ. பாயி. 12, உரை).

நன்னிநூல் = துணியின் ஓரத்திலுள்ள சிறு நூல்துணுக்கு (W.).

நன்னிப் பயல் = சிறுபையன்.

சிறு பிள்ளைகளையும் சிற்றுயிரிகளையும் நன்னியுங் குன்னியும், நன்னி பின்னி என்பது உலக வழக்கு.

நுன்– நுனி = 1. நுனை, உச்சி. ''நுனிக்கொம்ப ரேறினார்'' (குறள். 476). 2. நுண்மை (திவா.). **ம.** நுனி.

நுனித்தல் = 1. கூராக்குதல். 2. கூர்ந்து நோக்குதல் அல்லது ஆராய்தல். ''நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்'' (மணிமே. 19 : 80).

நுனிப்பு = கூர்ந்தறிகை. ''நூனெறி வழாஅ நுனிப்பொழுக் குண்மையின்'' (பெருங். வத்தவ. 7 : 34).

நுனி– நுதி = 1. நுனி. ''நுதிமுக மழுங்க'' (புறம். 31). 2. கூர்மை. 3. அறிவுக் கூர்மை. ''நுதிகொணா கரிகன்'' (சீவக. 1110). 4. தலை. ''நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்காண்'' (கலித். 101). 5. முன்பு. ''நூற்றை வரோடு நடந்தாணுதி'' (சீவக. 1933, உரை).

நுனி– நுனை = நுனி, முனை. ''கூர்நுனை வேலும்'' (புறம். 42).

நுல் – நொல் – நொற்பு – நொற்பம் = 1. நுட்பம், நொற்பமான வேலை (W.). 2. எளிமை. ''நொற்ப வுலகத்தவர் நோய்தீர்த்து'' (பஞ்ச. திருமுக. 611).

நொற்பம்– நொற்பன் = சிறியன், எளியன்.

நுல்– நூல் (எள்)– நோல்– நோலை = 1. எள்ளுருண்டை. ''புழுக்கலு நோலையும்'' (5, 68). 2. எட்கசிவு, ''அணங்குடை நோலை'' (பு. வெ. 3 : 40).

நூல்– நூ = எள் (சூடா.). **தெ.** நூ, நூவு, நுவு, நுவ்வு.

நூ– = எள் (பிங்.). **தெ.** நூவு.

நூவுநெய் = எள்நெய் = எண்ணெய் (நல்லெண்ணெய்). **தெ.** நூனெ.

முதன்முதல் தோன்றியது ஆவின் (அல்லது எருமையின்) நெய். எள்ளிலிருந் தெடுக்கப்பட்ட நெய் எண்ணெய் (எள்நெய்) எனப்பட்டது. அது பின்னர் மாட்டுநெய் தவிரப் பிறநெய்வகைகட் கெல்லாம் பொதுப்பெயரான பின், நல் என்னும் அடைபெற்றது.

எள் மிகச் சிறிய கூலமாதலால், நூ (நூல்) எனப் பெயர் பெற்றது. எள்ளளவும், எள்ளத்தனையும், எட்டுணையும் என்னும் வழக்குகளை நோக்குக.

நூவு – நுவ்வு – நுவு – நுவல்.

நுவலுதல் = நுண்ணிய அறிவுச் செய்தியைச் சொல்லுதல். ''மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே'' (தொல். 102). ''நூலே நுவல்வோன் நுவலுந் திறனே'' (நன். பாயி. 3).

நுவல்வோன் = அறிவுச் செய்திகளைக் கூறும் ஆசிரியன்.

நுவல் – நூல் = ஒரு பொருள்பற்றிய அறிவுத் திரட்டு; கலை, கல்வித்துறை.

பொத்தகம் என்பது ஒரு நூலைக் கூறும் ஏட்டுத் தொகுதி அல்லது தாட்கற்றை. பொத்தகக் களஞ்சியம் என்ன வேண்டியது, இன்று நூல்நிலையம் என வழங்குகின்றது.

நூற்றல் = செய்யுளியற்றுதல். ''நொய்யசொன் னூற்க லுற்றேன்'' (கம்பரா. சிறப். 5).

நுவல் – நுவள் – நுவண் – நுவணம் = 1. இடித்த மா. 2. கல்வி நூல் (அக. நி.).

நுவண் – நுவணை = 1. நுட்பம் (திவா.). 2. இடித்த மா (திவா.). ''மென்றினை நுவணை யுண்டு'' (ஐங். 285). 3. பைந்தினை (பிங்.). 4. கல்விநூல் (சூடா.).

நுவணை – நுணவை = 1. எள்ளுருண்டை (சூடா.) 2. இடித்த மா (சூடா.)

நுவல் – நுவறு. நுவறுதல் = நுண்ணிதாக அல்லது பொடியாக அராவுதல். ''நுணங்கர நுவறிய... மருப்பின்... பேரியாழ்'' (மலைபடு. 35).

நுவ்வு – நவ்வு – நவ்வி = 1. மான்குட்டி. ''சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை'' (புறம். 2). 2. இளமை (சூடா.) 3. அழகு. ''நவ்வித் தோகையர்'' (கம்பரா. மாரீச. 14).

நுவல் – நவல் – நவர் – நவரை = சிறுகாய் வாழைவகை. ''நவரை–வாழைப் பழத்தான் மதி'' (பதார்த்த. 765). நவரை – நமரை.

நுல் – நூல் = நுண்ணிய இழை.

நூற்றல் = பஞ்சிழை யுண்டாக்குதல்.

நுல்– நுள்– நுள்ளுதல் = கூரிய உகிராற் கிள்ளுதல். **ம.** நுள்ளுக.

நுள்ளு = 1. கிள்ளு. 2. சிறு துண்டு அல்லது துணுக்கு.

நுள்– நுள்ளல் = சிறிய உலங்கு.

நுள்– நுள்ளான் = கடிக்குஞ் சிற்றெறும்பு.

நுள்ளல்– நொள்ளல் = சிறிய உலங்கு.

நுள்– நொள்ளை = கைக்குழந்தை (நெ.வ.).

நுள்– நுளம்பு = சிறிய உலங்கு (திவா.).

**ம.** நுழம்பு, **தெ.** நுஷுமு.

நுள்– நுளு– நொளு– நொளுவல் = (யா. வ.). 1. முற்றா நிலை. 2. இளம்பாக்கு. நொளுக்கல் = நொளுவல். நுள்– நுழு – நுழாய். நுழாய்ப் பாக்கு = இளம் பாக்கு (யா.வ.). நுழு– நுழுவல் = இளம் பாக்கு.

நுழு– நுகு– நுகும்பு = பனங்குருத்து. ''பனைநுகும் பன்ன'' (புறம். 249). ஒ.நோ. ஃ தொழு – தொகு. நுகு – நுங்கு = 1. இளம் பனங்காய். ''நுங்கின் றடிகண் புரையுங் குறுஞ்சுனை'' (கலித். 108 ஃ 40). 2. இளம் பனஞ்சுளை. ''நுங்குசூன் றிட்ட கண்''. (நாலடி. 44).

**தெ.** நுங்கு, **ம.** நொங்ஙு.

நுங்குப் பாக்கு = இளம்பாக்கு.

நுகு – நகு – நாகு = 1. இளமை. ''நாகிலை'' (சீவக. 1102). 2. இளம்பெண். 3. பெண் (தொல். மரபு. 3).

நுழு– நுழை. நுழைதல் = 1. நுண்மையாதல். ''நுழைநூற் கலிங்கம்'' (மலைபடு. 561). 2. கூரிதாதல். ''நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்'' (மதுரைக். 517).

நுழை = 1. நுண்மை (திவா.). 2. மதிநுட்பம் (W.).

நுழைவு = 1. நுண்மை. ''நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை'' (தொல். உரி. 76). 2. நுண்ணறிவு. ''நூலவர் நுழைவொடு நுழைந்து'' (சூளா. இரத. 117).

நுழை– நூழை = நுண்மை (பிங்.).

நுள்– நுண் = 1. மிகச் சிறிய. 2. கூரிய. 3. நொய்ய. 4. பருப் பொருளல்லாத. நுண்– நுண்மை.

நுண் – நுண்பு = நுண்மை. ''பாவியேங்கண் காண்பரிய நுண்புடையீர்'' (திவ். இயற். பெரிய திருவந். 8). **க.** நுண்பு.

நுண்பு – நுட்பு = நுண்மை.

நுட்பு – நுட்பம் = 1. நுண்மை. ''நெய்யினும் யாருமறிவர் புகை நுட்பம்'' (நாலடி. 282). 2. மதிநுட்பம். 3. அறிவு நுட்பம். 4. பொருள் நுட்பம். ''திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்'' (நன். 18). 5. கரந்துறை கோள்களுள் ஒன்று. ''வட்டம், சிலை, நுட்பம், தூமம்'' என்னும் கோள்கள் நான்கினும்'' (சிலப். 10 : 102, உரை). 6. காலநுட்பம் (பிங்.). 7. ஒரு செய்தியைக் குறிப்பாலுணர்த்தும் பொருளணி.

''தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்
அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்.'' (தண்டி. 63)

8. நுண்ணிய ஆராய்ச்சியுரை.

நுண்– நுணங்கு = நுண்மை (தொல். உரி. 76). நுணங்கு– நுணக்கம் = 1. நுண்மை (யாழ். அக.). 2. கூர்மை (அக. நி.).

நுண் – நுணா – நுணாவு. நுணாவுதல் = நுனிநாவால் தடவி யுணர்தல்.

நுணாவு – நுணாசு. நுணாசுதல் = நுனிநாவால் தடவியுணர்தல். நுணா– நுணை. நுணைத்தல் = நுணாவுதல் (நெ.வ.).

**ம.** நுண, **க.** நொணெ. நுண்– நுணி = நுனி (யாழ். அக.).

நுணித்தல் = 1. பொடியாக்குதல் (W.). 2. கூர்மையாக்குதல் (W.). 3. நுணுகி யாராய்தல். ''தெய்வ நுணித்தறங் குறித்த மேலோர்'' (கம்பரா. மந்திரப். 8). நுண்– நுணுகு = நுண்மை (திவா.).

நுணுகுதல் = 1. நுட்பமாதல். ''நுணுகிய நுசுப்பினார்'' (சீவக. 2611). 2. மெலிதல். ''தோணுணுகி'' (புறம். 96). 3. கூர்மையாதல். நுணுகிய அறிவு (உ.வ.).

நுணுகு – நுணுக்கு. நுணுக்குதல் = 1. பொடி செய்தல். 2. நுண்மையாக்குதல். 3. அரைத்தல். ''நுண்மணல் விராய் நுணுக்குநர்'' (திருவானைக். திருநிற். 14). 4. சிதைத்தல். ''வெகுளி நுணுக்கும் விறலும்'' (திரிகடு. 40). 5. கூர்மையாக்குதல் (இலக். அக.). 6. மதியை அல்லது அறிவைக் கூர்மையாக்குதல். ''புலமை நுணுக்கி'' (சீவக. 886). 7. சிறிதாயெழுதுதல். 8. நுட்பமாக வேலை செய்தல். 9. இன்னிசை யெழுப்புதல். ''அது தன்னை வீணையிலே ஏறிட்டு நுணுக்கினாள்'' (திவ். திருநெடுந். 15 : 122). 10. கையைக் குலுக்குதல் (கஞ்சத்தனம் செய்தல்).

நுணுக்கு – நுணுக்கம்.

நுணுகு – நுணுங்கு = பொடி (பிங்.).

*நுணுங்குதல் = (செ.கு. வி.). பொடியாதல்.*

*(செ. குன்றாவி.) மெல்லப் பாடுதல். ''அழகை யுடைத்தான பண்ணை நுணுங்கி'' (திவ். திருநெடுந். 22 ஃ 204).*

*நுளு— நுசு— நுசுப்பு = மகளிர் சிற்றிடை.*

*''நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை'' (குறள். 1115).*

*ஒ.நோ.ஃ உளு— உசு.*

*நுசு— நுசி— நொசி— நொசிவு = நுண்மை (தொல். உரி. 76).*

*நொசிதல் = 1. நுண்மையாதல். ''நொசிமருங்குல்'' (தொல். சொல். 368, இளம்பூ.). 2. குறைவுறுதல். ''நொசிவிலாத பூசனை'' (விநாயகபு. 36 ஃ 37). 3. செயற்கு அருமையாதல். ''நோற்றுணல் வாழ்க்கை நொசிதவத்தீர்'' (சிலப். 19 ஃ 223). 4. நைதல். ''நொசித்த துகில்'' (தொல். சொல். 330, உரை).*

*நுள்— நுறு— நூறு. நூறுதல் = 1. தூளாக்குதல். ''அரண்பல நூறி'' (அகம். 69). 2. துணித்தல். ''யானை யருஞ்சமந் ததைய நூறி'' (புறம். 93). 3. அழித்தல். ''பழம்பகை தவ நூறுவா யென'' (சீவக. 324). 4. இடித்தல் (பு. வெ. 6 ஃ 26, உரை). 5. அறைதல். ''முலைபொலி யாக முருப்ப நூறி'' (புறம். 25). 6. நெரித்தல். ''கரும்பினைக் கண்டகர நூறி'' (நாலடி. 156).*

**ம.** *நூறுக.,* **தெ.** *நூரு.*

*நூறு = 1. இடித்த அல்லது அரைத்த மா, பொடி, தூள். ''நூறொடு குழீஇன கூவை'' (மலைபடு. 137). 2. சுண்ணாம்பு. ''கோடுசுடு நூற்றினர்'' (மதுரைக். 401).* **ம.** *நூறு,* **து.** *நூத்ர. 3. நூறு என்ற எண் (பத்துப்பத்து).* **ம., தெ., க.** *நூறு.*

*நூறு எண்ண முடியாத துகள்களைக் கொண்டிருத்தலால், அதன் பெயர் பத்திற்கு மேற்பட்ட முதற் பேரெண்ணைக் குறித்தது.*

*நூறு— நீறு. ஒ.நோ.ஃ நூன்— நீன்— நீ. தூண்டு— தீண்டு. தீண்டா விளக்கு = தூண்டா விளக்கு.*

*நீறு = 1. புழுதி. ''அருவிதுக ளவிப்ப நீறடங்கு தெருவின்'' (சிறுபாண். 200 — 1). 2. சாம்பல். ''பொற்பாவாய் நீறாய் நிலத்து விளியரோ'' (நாலடி. 266). 3. திருநீறு. ''மந்திர மாவது நீறு'' (தேவா. 857 ஃ 1). 4. நீற்றின சுண்ணாம்பு (பிங்.).*

**ம.** *நீறு,* **தெ.** *நீரு.*

*நீறு – நீற்று. நீற்றுதல் = 1. பொடியாக்குதல். 2. சுட்ட சுண்ணாம்புக்கல்லை நீரிற் கலந்து தூள் அல்லது களியாக்குதல். 3. மாழைகளை (உலோகங்களை)ச் சுட்டுச் சுண்ணமாக்குதல்.*

*நுறு– நுறுங்கு. நுறுங்குதல் = பொடியாதல். 2. சிதைதல். ''நுறுங்கிய யாக்கையோடு'' (விநாயகபு. 80 : 442).*

*நுறுங்கு = குறுநொய். ''நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை'' (தொல். சொல். 1, உரை).*

***ம.*** *நுறுங்ஙு.*

*நுறுங்கு – நறுங்கு. நறுங்குதல் = 1. நொறுங்குதல். 2. தேய்கடையாதல். 3. வளர்ச்சி குறைதல். அவன் நறுங்கிப் போய்விட்டான் (உ.வ.).* ***க.*** *நலுகு* (g).

*நறுங்கு – நறுக்கு. நறுக்குதல் = 1. நொறுக்குதல். 2. துண்டித்தல். உன்னைக் கண்டங் கண்டமாய் நறுக்குகிறேன், பார் (உ.வ.). 3. வெட்டுதல். ''கைக் கத்திரிகையிட்டு நறுக்கின தலையாட்டத்தினை'' (பு.வெ. 3 : 10, உரை). 4. கொட்டத்தை யடக்குதல்.*

***ம.*** *நறுக்குக,* ***தெ.*** *நருக்கு,* ***க.*** *நரக்கு.*

*நறுக்கு = 1. துண்டு. 2. ஓலைச்சீட்டு. 3. இசைக்குழல் (நாதசுர) நாக்கு.*

*நுறு – நொறு – நொறுங்கு. நொறுங்குதல் = 1. பொடியாதல். 2. மனம் நொறுங்குதல் போல் வருந்துதல். மனம் நொறுங்குண்டது (உ.வ.).*

*நொறுங்கு = 1. நொய் (சூடா.). 2. தூள். ''நொறுங்காய்க் கூடி யிட்டன கொடுமுடித் துறுகற்கள்'' (சூளா. சீய. 145). 3. நுண்மை* (W.).

*நொறுங்கு – நொறுக்கு. நொறுக்குதல் = 1. பொடியாக்குதல். 2. மென்று தின்னுதல். 3. நையப் புடைத்தல். ''வீரரை நொறுக்கி'' (திருப்பு. 574).* ***க.*** *நுர்கு* (g).

*நொறுக்கரிசி = 1. குத்தும்போது நொறுங்கிய அரிசி. 2. அரைவேக்காட்டுச் சோறு.*

*நொறுக்கல் நெல் = 1. அறுப்புக் காலத்தில் மழையாற் பதத்த நெல்.*

*நொறு – நொறுவை = பல்லால் நொறுக்கித் தின்னும் சிற்றுண்டி, சிற்றுண்டி.*

நொறுவை– நொறுகை. நொறுவை– நொறுவல்.

நொறுநொறுத்தல் = உடைந்து நொறுங்குந் தன்மையாதல்.

நொறுநொறெனல் = நொறுங்குதற் குறிப்பு.

நொறு நாட்டியம் = 1. விறலுஞ் சுவையுந் தோன்ற நடிக்கும் நுண்வினை நடம். 2. பொருட்படுத்தத்தகாத மிகச் சிறு குற்றங்களைக் கூறுந் தன்மை. 3. துப்புரவு, சுவை, ஒழுக்கம் முதலியவற்றில் அளவிற்கு மிஞ்சிக் கவனஞ் செலுத்துதல்.

நடி– நடம்– நட்டம்– வ. நாட்ய (நாட்டியம்).

நுள்– நொள்– நொய் = 1. அரிசி நொறுக்கு (திவா.). 2. நுண்மை. 3. மென்மை. 4. நொய்ம்மை.

நொய்ம்மை = 1. சிறுமை, நுண்மை. 2. மென்மை. 3. கனமின்மை. ''மெய்ம்மை சீர்மை நொய்மை வடிவம்'' (மணிமே. 27 : 254).

நொய்ய = 1. நுட்பமான. ''பல்கல நொய்ய மெய்யணிந்து'' (சீவக. 991). 2. மென்மையான, ''அனிச்சப் போதி னதிகமு நொய்ய'' (கம்பரா. கோலங். 14). 3. வலியற்ற, நொய்ய கூற்று. 4. புன்மையான. ''நொய்தி னொய்யசொல்'' (கம்பரா. பாயி. 5). 5. வசையான. நொய்ய சொற் பொறாதவன்(W.).

நொள்– நோள்– நோட்கு– நோக்கு.

ஒ.நோ.: கொள் – கொள்கு – கொட்கு – கொக்கு = வளைந்த கழுத்துள்ள பறவை. கொட்கு – கொட்கி – கொக்கி.

நோக்குதல் = 1. கூர்ந்து பார்த்தல். ''நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல்'' (குறள். 1081). 2. சிறப்பாய்க் கருதுதல். ''அறனோக்கி யாற்றுங்கொல் வையம்'' (குறள். 189). 3. கவனித்தல். ''நச்சாமை நோக்காமை நன்று'' (ஏலாதி, 12). 4. கவனித்துத் திருத்துதல். ''புனையிழை நோக்கியும்'' (கலித். 76). 5. பாதுகாத்தல். ''நோக்காது நோக்கி'' (சி.போ. 1 : 4, வெண். ப. 79). 6. கவனித்துச் செய்தல். ''இவற்றை மும்மைசேர் யாண்டு நோக்கு'' (திருவாலவா. 31 : 15).

**ம.** நோக்குக.

நோக்கு = 1. கூர்ந்து நோக்கிச் சிறப்புப் பொருள் காணுமாறு அமைக்கும் எழுத்துஞ் சொல்லுமான செய்யுளுறுப்பு.

''மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே. (தொல். செய். 103)

2. கருத்தோடு கூடிய பார்வை. ''செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்'' (நாலடி. 298). 3. சிறப்பாகப் பார்த்தற்கேற்ற அழகு. ''நோக்கு விளங்க'' (மதுரைக். 13). 4. சிறந்த கருத்து. ''நூலவர் நோக்கு'' (திரிகடு. 29). 5. கூரிய அறிவு. ''நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞர்'' (மதுரைக். 517). 6. சிறப்பாகக் கருதற்கேற்ற பெருமை. ''நோக்கிழந்தனர் வானவ ரெங்களால்'' (கம்பரா. கும்பக. 328). 7. சிறந்த நடை. ''சொன்னோக்கும் பொருணோக்கும்'' (அஷ்டப். திருவரங்கக். தனியன், 2). 8. வேடிக்கைக் கூத்துகளுள் ஒன்று (சிலப். 3 : 12, உரை). 9. நோக்குங் கண். ''மலர்ந்த நோக்கின்'' (பதிற். 65:7).

**ம.** நோக்கு.

நோக்கு – நோக்கம். **ம.** நோக்கம்.

நோள்– நோடு. நோடுதல் = ஆய்ந்து பார்த்தல். இவ் வினை இன்று வழக்கற்றது. **க.** நோடு.

நோடு – நோட்டம் = 1. பொன் வெள்ளிக் காசு பண ஆய்வு. 2. பொன்மணி ஆய்வு. 3. விலைமதிப்பு. **ம.** நோட்டம், **கு.** நோட்ட.

நோட்டம் பார்த்தல் = 1. விலைமதிப்பறிதல். 2. நிலைமையாய்தல். 3. வேவு பார்த்தல். நோட்டம் பார்க்க வந்திருக்கிறான் (உ.வ.).

நோட்டம் – நோட்டன் = நோட்டஞ் செய்வோன்.

நோட்டக்காரன் = 1. காசாயும் வண்ணக்கன். ''நோட்டக் காரர் நெஞ்சடையக் கூப்பிடுவது'' (பணவிடு. 182). 2. பொன்மணி ஆய்வோன்.

**ம.** நோட்டக்காரன், **க.** நோட்டகார (g).

நோடு – நாடு. நாடுதல் = 1. ஆராய்தல். ''நாடாது நட்டலிற் கேடில்லை'' (குறள். 791). 2. தேடுதல். ''தனக்குத்தாய் நாடியே சென்றாள்'' (நாலடி. 15). 3. தெரிதல். ''முன்னவ னிதனை நாடி'' (கந்தபு. ததீசியு. 32). 4. விரும்புதல். ''நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்'' (பதிற். 86 : 7). 5. விரும்பிக் கிட்டுதல். இனி இங்கு நாடமாட்டான் (உ.வ.). **ம.** நாடுக, **து.** நாடுனி.

நாடு – நாட்டம் = 1. சிறப்பு நோக்கு.

''நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்.'' (தொல். களவு. 5)

*2. ஆராய்ச்சி. ''நன்மதி நாட்டத் தென்மனார்'' (தொல். எழுத்து. 483). 3. அழகு. ''இராசபுரம் என்னும் நாட்டமுடை நகரம்'' (சீவக. 1788). 4. விருப்பம். அவனுக்குப் படிப்பில் நாட்டமில்லை (உ.வ.). 5. நோக்கம். ''வேறொரு நாட்ட மின்றி'' (தாயு. பாயப்புலி. 12). 6. கண். ''வயவர் தோளு நாட்டமு மிடந்துடிக் கின்றன'' (கம்பரா. கரன்வதை. 71).* **ம.** *நாட்டம்.*

# 2

## நுல்$^2$ (துளைத்தற் கருத்துவேர்)

*நுல்– நொல்– நொலை = உட்டுளையுள்ள அப்பவகை. நொலை– நொலையல் (பிங்.).*

*நொல்– நெல்– நெலி. நெலிதல் = கடைதல்.*

*நெலி– ஞெலி. ஞெலிதல் = 1. தீக்கடைதல். ''ஞெலிதீ விளக்கத்து'' (புறம். 247). 2. குடைதல் (அக. நி.). 3. உரசுதல். ''ஞெலிகழை'' (ஐங். 307).*

*ஞெலி = உரசித் தீப்பற்றும் மூங்கில். ''ஞெலிசொரி யொண்பொறி'' (அகம். 39).*

*நெல்– நெர்– நெரு– நெருப்பு = மூங்கில் ஒன்றோடொன்று உரசிப் பற்றும் தீ.*

*நொல்– நோல்– நோலி– நோனி–* ***வ.*** *யோனி. இச் சொற்கு 'யு'* (to unite) *என்பதை வடவர் வேராகக் காட்டுவது பொருந்தாது.*

*நுல்– நல்– நல்லி = உட்டுளையுள்ள மூளை யெலும்பு. நல்லி–* ***இ.*** *நல்லீ.*

*நல்– நால்– நாலி– நாலிகை = உட்டுளையுள்ள மூங்கில்.*

*நுல்– நுள்– நுளை– நுளையன் = 1. நீருட் புகுந்து அல்லது முழுகி மீன் பிடிப்பவன். 2. நெய்தல்நிலத்தான் (திவா.). ஒ.நோ:* ***ம.*** *முக்குவன் = மீன் பிடிப்பவன், நெய்தல்நிலத்தான். நுளை = நுளையர் குலம்.*

*நுள்– நள் = 1. உள். 2. நடு.* ***க.*** *நள்.*

*நள்ளிடை = நடுவிடம். நள்ளிரவு = நடு இரவு.*

*ஒ.நோ: அகடு = உள், நடு.*

*நள்– நண்– நடு = 1. உள்ளிடம். ''நடுவூருள் நச்சு மரம்பழுத் தற்று'' (குறள். 1008). 2. உள்ளுறைவோனான இறைவன். ''கெடுவில் கேள்வியுள் நடுவா குதலும்'' (பரிபா. 2 : 25). 3. வானத்தின் உச்சி. ''காலைக் கதிரோன் நடுவுற்றதொர் வெம்மை காட்டி'' (கம்பரா. நகர் நீங்கு. 123). 4. அகடு (மையம்). 5. இடுப்பு. ''நடுங்க நுடங்கும் நடுவு'' (திருக்கோ. 31). 6. இடைப்பட்டது. 7. நடுநிலை. ''நடுவாக நன்றிக்கட் டங்கியான்'' (குறள். 117). 8. நயன்மை (நீதி).*

**ம., க., து.** *நடு,* **தெ.** *நடுமு.*

*நடு– நடுவு– நடுவண் = அகடு, இடை.*

*நடு – நாடு = 1. முல்லைக்கும் நெய்தற்கும் இடைப்பட்ட மருத நிலம். ''நாடிடை யிட்டும் காடிடை யிட்டும்'' (சிலப். 8 : 61, அரும்.). 2. மக்கள் வாழும் இடம். 3. தேசம். எ - டு : ஆங்கில நாடு. 4. தேசப் பகுதி. எ - டு : பாண்டிநாடு. 5. ஊர். எ - டு : கூறைநாடு. 6. சிற்றூர் (நாட்டுப்புறம்). 7. அரசியம். 8. உலகம். ''புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ'' (குறள். 1323). 9. இடம். ''ஈமநாட் டிடையி ராமல்'' (கம்பரா. இலங்கை தே. 45). 10. ஒரு பேரெண் (பிங்.).*

**ம., தெ., க., து.** *நாடு.*

*ஒ. நோ:*

*''வட்ட வரிய செம்பொறிச் சேவல்*
*ஏனல் காப்போ ருணர்த்திய கூவும்*
*கானத் தோர்நின் தெவ்வர் நீயே*
*புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்*
*புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்*
*பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்த*
*ராடுகளங் கடுக்கும் அகநாட் டையே''* *(புறம். 28)*

*அகம் = 1. உள். 2. உள்ளிடம். 3. மருதநிலம். ''ஆலைக் கரும்பி னகநா டணைந்தான்'' (சீவக. 1613).*

*நாடு– நாடன்– நாடான்– நாடார்.*

*நாடு– நாட்டான்– நாட்டார்.*

*நள்– நாள்– நாளம் = 1. உட்டுளை (சூடா.). ''கழுநீர் நாளத் தாளினா லொருத்தி யுண்டாள்'' (இராமநா. உண்டாட். 19). 2. உட்டுளையுள்ள தண்டு. ''கமல நாளத்திடை'' (கம்பரா. மிதிலைக். 75). 3. நரம்பு. நாளம்–* **வ.** *நால.*

*நாளம்– நாளி– நாழி = 1. உட்டுளைப் பொருள் (பிங்.). 2. ஒரு படி. ''நாழி நவைதீ ருலகெலாம்'' (கம்பரா. சரபங்க. 29). ''நாழி முகவாது*

*நானாழி'' (மூதுரை, 19). 3. நாழிகை வட்டில். 4. நாழிகை வட்டிலால் அறியப்படும் நேர அளவு (24 நிமையம்) (பிங்.). 5. நெசவுக் குழல். 6. அம்பறாத் தூணி. ''ஆர்ததும்பு மயிலம்பு நிறைநாழி'' (பரிபா. 18 : 30). 7. நாழி வடிவான நாண்மீன் (பூரட்டாதி), (பிங்.).*

***ம., க.*** *நாழி.*

*நாழி –* ***வ.*** *நாடி.*

*கைந்நாழி = சிறுநாழி.*

*நாழி – நாழிகை = 1. நாழிகை வட்டில். 2. நாழிகை வட்டிலால் அறியப்படும் நேர அளவு (24 நிமையம்). ''உயிர்த்தில னொரு நாழிகை'' (கம்பரா. பிரமா. 200). 3. தெய்வப்படிமை யிருக்கும் சிற்றறை. 4. நாடா. ''செய்யு நுண்ணூல் நாழிகையி னிரம்பா நின்று சுழல்வாரே'' (சீவக. 3019).*

***ம.*** *நாழிக* ***க.*** *நாளிகே* (g).

*நாழிகை –* ***வ.*** *நாடிகா.*

*உண்ணாழிகை (திருவுண்ணாழிகை) = கருவறை.*

*நாழி – நாடி = 1. அரத்தக்குழாய். 2. ஊதை பித்த கோழை காட்டும் தாது நரம்பு. ''மூளை யெலும்புகள் நாடி நரம்புகள்'' (திருப்பு. 918). 3. இடை, பிங்கலை, சுழிமுனை யென்னும் மூச்சுக் குழாய்கள். 4. உட்டுளை யுள்ளது (அரு. நி.). 5. பூவின் தாள் (யாழ். அக.). 6. நாழிகை (24 நிமையம்). 7. யாழ் நரம்பு. நாடி –* ***வ.*** *நாடி.*

*நாடி – நாடா = 1. நெசவுக் குழல். ''தார் கிடக்கும் நாடாப் போல மறுகுவர்'' (சீவக. 3019, உரை). 2. ஆடைக் கரையில் வைத்துத் தைக்கும் பட்டி* (ribbon). *நாடா –* ***உ.*** *நாரா.*

*நாளம் – நாணல் = 1. உட்டுளையுள்ள தட்டைவகை. 2. கரும்பு வகை.*

*நுள் – நுழு – நுகு – நுங்கு. நுங்குதல் = 1. விழுங்குதல் (துளை போன்ற வாய்க்குளிட்டு உட்கொள்ளல்). 2. உட்கொள்ளல் ''மகரவாய் நுங்கிய சிகழிகை'' (கலித்.). 3. வயிறாரப் பகுகுதல். ''நூறுநூறு குடங்களு நுங்கினான்.'' (கம்பரா. கும்ப. 60).*

***க.*** *நுங்கு.*

*நுங்கு – நொங்கு. நொங்குதல் = விழுங்குதல். ''திங்களிருள் நொங்க'' (தேவா. 1157 : 3).*

***ம.*** *நொங்ஙு.*

*நுகு – நுகர். நுகர்தல் = 1. உண்ணுதல். ''அடிசில் பிறர்நுகர்க'' (பு.வெ. 10, முல்லைப். 8). 2. இன்புறுதல். ''நின்னணி நல நுகர்கென'' (குறிஞ்சிப். 181). 3. வினைப்பயன் துய்த்தல்.*

*நுகர்ச்சி = 1. உண்ணுகை. ''கவியமுதம் நுகர்ச்சி யுறுமோ'' (திவ். திருவாய். 8 ፡ 10 ፡ 5). 2. வினைப்பயன் துய்ப்பு. ''அருந்தவ மாற்றியார் நுகர்ச்சிபோல்'' (கலித். 30). 3. துய்ப்புணர்ச்சி. ''உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை'' (மணிமே. 30 ፡ 189).*

*நுகு – நொகு – நொக்கு = வெடிப்பு (யாழ். அக.).*

*நுழு – நூழ் – நூழில் = 1. குழி. 2. குழியுள்ள செக்கு (அக. நி.). 3. கொன்று குவிக்கை. ''ஒள்வாள் வீசிய நூழிலும்'' (தொல். புறத். 17).*

*நூழிலர் = செக்கார், வாணியர்.*

*நூழிலாட்டு = செக்காட்டுவதுபோற் கொன்று குவிக்கை.*

*நுள் – நொள். நொள்ளுதல் = 1. மொள்ளுதல், முகத்தல். ''குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்'' (சிலப். 10 ፡ 85). 2. விழுங்குதல் (திவா.).*

*நொள்– நொள்கு. நொள்குதல் = மொள்ளுதல், முகத்தல்.*

*மொள்ளுதல் நீர்ப்பொருளையும், முகத்தல் கூலம் போன்ற பொருளையும், துளைத்தல் போன்றவே.*

*நொள் – நொள்ளல் = 1. குழிவு. 2. பார்வையற்றுக் கண் குழிந்த நிலை*(W.).

*நொள் – நொள்ளை = கண் குழிந்த குருடு. ''நொள்ளை நாகில'' (திருவிளை. பரிநரி. 14).*

*நொள்– நெள்– நெள்ளல் = பள்ளம், குழிவு.*

*நெள்ளல் – ஞெள்ளல் = 1. பள்ளம், பள்ளம் விழுந்த தெரு. ''கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்'' (புறம். 15). 2. குற்றம். ஞெள்ளுதல் = பள்ளமாதல்.*

*நொள் – நொடு – நொடி = வண்டிப் பாதையி லேற்பட்ட குழிப்பள்ளம். பாதை நொடியா யிருக்கிறது (உ.வ.).*

*நொள்– நொண்டல் = நுகர்கை (திவா.).*

*நொள்– நொண்டு– நெண்டு. நெண்டுதல் = தோண்டுதல் (நாமதீப. 737).*

*நொண்டு – நண்டு. நண்டுதல் = கிண்டுதல், கிளறுதல்.*

நண்டல் = கிண்டிக் குழைத்த வுண்டி. நண்டல் கிண்டிப் படைக்கிறது என்பது உலக வழக்கு.

நண்டற் சோறு = கிண்டிச் சமைத்த பொங்கற் சோறு. நண்டல் பிண்டல் = உண்ணற் காகாவாறு கூழுங் கட்டியுமாகச் சமைத்த சோறு. சோற்றை நண்டல் பிண்டலாக்கி விட்டாள் (உ.வ.).

நண்டு = 1. வண்டலிலும் மணலிலும் கிண்டினாற்போற் கீறிச் செல்லும் நீருயிரி (crab). 2. நண்டு வடிவான கடகவோரை. நண்டு– ஞண்டு (தொல். சொல். 452, உரை).

**ம.** நண்டு, **தெ.** எண்டிரி (எண்ட்ரி).

நெண்டு– ஞெண்டு. ஞெண்டுதல் = கிண்டுதல் (சூடா.).

ஞெண்டு = நண்டு. ''வேப்புநனை யன்ன நெடுங்கணீர் ஞெண்டு'' (அகம். 176).

நொள்– நோள்– நோண்டு. நோண்டுதல் = 1. தோண்டுதல். கண்ணை நோண்டிவிடுவேன், கிழங்கை நோண்டி யெடுத்து விட்டான் (உ.வ.) 2. கிளறுதல் (பிங்.). 3. முகத்தல் (திவா.). 4. குடைந்தெடுத்தல். 5. துருவி வினவுதல். நோண்டிக் கேட்கிறான் (உ.வ.). 6. கையிடுதல். அங்கே என்னத்தை நோண்டிக் கொண்டிருக்கின்றாய்? (உ.வ.). **ம.** நோண்டுக.

நோண்டு– நேண்டு– நேடு.

ஒ. நோ: தோண்டு– தேண்டு– தேடு.

நேடுதல் = 1. தேடுதல். ''கொண்டவ னிருப்ப மற்றோர்... வேலினானை நேடிய நெடுங்க ணாளும்'' (சீவக. 252). 2. பொருளீட்டுதல். 3. விரும்புதல் (யாழ். அக.). 4. எண்ணுதல். ''சூரபன்ம னிளவறன் முடிவு நேடி'' (கந்தபு. அசுரேந். 65). 5. இலக்காகக் கொள்ளுதல் (W.).

நேடு– நேட்டம் = ஈட்டிய பொருள் (நாஞ். வ.).

நாளிகேரம் என்னும் சொல் வரலாறு :

வடமொழியில் தென்னைக்கு நாலிகேர என்று பெயர். அதினின்று கேரளம் என்னும் சொல்லைத் திரிக்கவுஞ் செய்வர். நாலிகேர என்பது வடமொழியில் தன்னந் தனிச்சொல். அதற்கு அம் மொழியில் மூலமில்லை. கேரளம் என்பது சேரலம் என்பதன் திரிபா யிருக்கவும், அத் திரிவைத் தலைகீழாகக் காட்டுவது வடமொழியாளர் வழக்கம்.

*தென்னை இயற்கையாகத் தோன்றிய நிலம் குமரிநாடு. குமரிக் கண்டத் தென்பாக நாற்பத்தொன்பது நாடுகளுள் ஒரு பகுதி ஏழ்தெங்கநாடு. தென்னை தென்கோடியில் தோன்றியதனாலேயே, தென்றிசை அதனாற் பெயர் பெற்றது.*

*தென்னுதல் - கோணுதல், சாய்தல். இயல்பாகக் கோணுவதனாலேயே முடத்தெங்கு என்னும் அடைமுதற்சொல் எழுந்தது.*

*தென்– தென்னை. தென்– தென்கு– தெங்கு. தென் = தெற்கு. தென் + கு - தெற்கு. ஒ.நோ.: வடக்கு (வடம் +கு), கிழக்கு (கீழ் + கு), மேற்கு (மேல் + கு).*

*தென்னைக்கு நெய்தல்நிலம் மிக ஏற்றதாதலால், நெய்தல் மிக்க சேரநாட்டில் தென்னை தொன்றுதொட்டுச் சிறப்பாகச் செழித்தோங்கி வளர்கின்றது. தீயர் (தீவார்) இலங்கையினின்று வந்தவரேனும், தென்னை குமரிநாட்டுத் தொடர்புடையது.*

*அரிசி அல்லது நெல்லளக்கும் படி முதன்முதல் மூங்கிற் குழாயாலேயே அமைந்தது.*

*நுள்– நள்– நாள்– நாளம் = உட்டுளை, உட்டுளைப் பொருள், தண்டு.*

*நாளம்– நாளி = உட்டுளையுள்ள மூங்கில், புறக்காழது.*

*நாளி– நாழி = மூங்கிற்படி, படி.*

''புறக்கா ழனவே புல்லென மொழிப'' *(மரபு. 86)*

*என்னும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவால் தென்னையும் மூங்கிலொடு சேர்ந்து நாளியினமாம்.*

*வேந்தன் குடிப்பெயரினின்று அவன் நாட்டுப் பெயர் திரிவதுண்டு.*

*எ - டு: பாண்டியன் – பாண்டியம் = பாண்டிநாடு. இம் முறைப்படி, சேரலன் – சேரலம், சேரன் – சேரம் என்று திரியும்.*

*தென்மொழிச் சகரம் வடமொழியிற் ககரமாகத் திரிவதால், சேரலம் – கேரள(ம்), சேரம் – கேர(ம்) என்றாம்.*

*ஆகவே, நாலிகேர என்பது, சேரநாட்டில் சிறப்பாக வளரும் மூங்கிலொத்த புறக்காழ்த் தென்னை என்று பொருள்படலாம். (வடமொழியிற் சொன்முறை மாறும்).*

*நாலிகேர என்பது, தமிழில் நாளிகேரம் என்னும் வடிவே கொள்ளும்.*

*''வெள்ளை நாளிகேரம் விரியா நறும்பாளை'' (தேவா. 106:5).*

*முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்த போக்கறு பனுவலாகிய தொல்காப்பியம்,*

*''உரிவரு காலை நாழிக் கிளவி*
*இறுதி யிகரம் மெய்யொடுங் கெடுமே*
*டகரம் ஒற்றும் ஆவயி னான''* *(240)*

*''திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்*
*கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்*
*ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்*
*தெற்கொடு புணருங் காலை யான''* *(432)*

*என்று கூறுவதினின்று, மூங்கில் போன்றே தென்னையும் குமரி நாட்டுத் தொன்மை யுடைமை உய்த்துணரப்படும்.*

*நாளி – நாடி – நேடி = மூங்கில் (மலை.).*

*தனிச்சொல், கூட்டுச்சொல் எனச் சொல் இருதிறப்படுவது போன்றே, தனிக்கருத்து, கூட்டுக்கருத்து எனக் கருத்தும் இரு திறப்படும்.*

*நுழைதல் என்னுஞ் சொல்லில் நுண்மை, புகவு என்னும் இரு கருத்துகள் கலந்துள்ளன. இடுக்கமான வாயில் அல்லது புழை அல்லது இடைவெளி வழியாக, உடம்பை ஒடுக்கியும் ஒடுக்காதும் உட்செல்வது நுழைதல் என்றும், உடம்பைச் சற்றும் ஒடுக்காது, நிமிர்ந்து தாராளமாக ஒரு பெருவாயில்வழி உட்செல்வது புகுதல் என்றும் சொல்லப்படும். இவ் வழக்கு, காட்சிப் பொருள் கருத்துப் பொருள் ஆகிய இருவகைக்கும் பொருந்தும். ஆதலால், புகவுச் சீட்டை நுழைவுச்சீட்டு என்றும், புகவுத் தேர்வை நுழைவுத்தேர்வு என்றும் வழங்குதல் தவறாம்.*

*நுழு – நுழுது. நுழுதுதல் = தலைமயிரைச் சுருட்டி நுழைத்து முடித்தல். ''மயிர்நுழுதி மருங்குயர்ந்த தேசுடைய சிகழிகையில்'' (பெரியபு. ஆனாய. 15).* **க.** *நுலிசு,* **தெ.** *நுலுமு.*

*நுழுது – நுழுந்து. நுழுந்துதல் = (செ. குன்றாவி.) 1. நுழைத்தல், செருகல். 2. தலைமயிரை முடித்தல். ''திருக்குழலைக் குலைத்து நுழுந்த'' (ஈடு, 10:1:1). 3. நுழைத்து மறைவான இடத்தில் வைத்தல், மறைத்து வைத்தல்.*

*(செ. கு. வி.) 1. பதுங்குதல் (யாழ்ப்.). 2. நழுவுதல் (யாழ்ப்.). 3. நகர்தல் (யாழ்ப்.).*

நுழு – நுழை, நுழைதல் = 1. இடுக்கமான இடைவழி உட்செல்லுதல். திருடன் பலகணி வழியாய் வீட்டிற்குள் நுழைந்து விட்டான் (உ.வ.). ''மலர்ப்பொழி னுழைந்து'' (சிலப். 10 : 35). 2. இடைச்செருகலாய் அமைதல். தொல்காப்பியத்துள்ளும் ஆரியக் கருத்து நுழைந்துவிட்டது (உ.வ.). 3. வலக்காரமாக அல்லது கமுக்கமாக ஒரு வேலையிற் சேர்தல். அவன் மெள்ள மெள்ள நடுவணரசு அலுவலகத்தில் நுழைந்துகொண்டான் (உ.வ.). 4. நுண்ணிதாக விளங்குதல். அது அவன் மதியில் நுழையவில்லை (உ.வ.).

**ம.** நுழுக, **க.** நொளெ.

நுழை = 1. சிறுவழி. ''பிணங்கரி னுழைதொறும்'' (மலைபடு. 379). 2. பலகணி (பிங்.).

நுழைகடவை, நுழைவழி, நுழைவாயில் முதலியன சிறு திறப்புகளை அல்லது வாயில்களை உணர்த்துதல் காண்க.

நுழு – நுழல் – நுணல் = மணலிற்குள் நுண்ணிதாய் முழுகிக் கிடக்கும் தவளைவகை.

''மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்'' (பழ. 184)

நுணல்– நுணலை (பிங்.).

நுணா = நுணல் போன்ற காய் காய்க்கும் மஞ்சணாறி மரம்.

நுணா– நுணவு (மலை.) = மஞ்சணாறி மரம்.

நுணவு – நுணவம் = மஞ்சணாறி மரம்.

''நாகுமுதிர் நுணவம்'' (சிறுபாண். 51).

3

## நுல்[3] (ஒளிர்தற் கருத்துவேர்)

*ஒளி நெருப்பின் பண்பாதலால், நெருப்பைக் குறிக்குஞ் சொற்களினின்றே ஒளிர்தல் (விளங்குதல்) கருத்துச் சொற்கள் பெரும்பாலுந் தோன்றும்.*

*எ - டு ஃ தீ = நெருப்பு. தீவம்* (– Skt. dipa) *= விளக்கு. தீ* (–Skt. dhi) *= அறிவு (அகவொளி).*

*எரிதல் = வேதல், விளங்குதல். ஒளி = நெருப்பு, விளக்கு, அறிவு, புகழ்.*

*காய்தல் = எரிதல், விளங்குதல்.*

*தழலுதல் = எரிதல், விளங்குதல். தகுந்தகுமெனல் = எரிதல், ஒளிவீசுதல். தகதகவெனல் = விளங்குதல், திகழ்தல் = ஒளிர்தல்.*

*பொறி = அனல்துகள், ஒளி.*

*முளிதல் = எரிதல். மிளிர்தல் = ஒளிர்தல்.*

*நுல்– நெல்– நெலி– ஞெலி = உரசித் தீப்பற்றும் மூங்கில். நெல்– நெரு– நெருப்பு = உரசிப் பற்றும் தீ.*

*நெல்– நில்– நில. நிலத்தல் = ஒளிவீசுதல்.*

*நில– நிலத்தி = மின்மினி (சூடா.).*

*நில = நிலா. ''நிலவிரி கானல்''*

*நிலத்தி– நித்தி– நித்தில் = மின்மினி (நாமதீப. 253).*

*நித்தில்– நித்திலம் = ஒளிரும் முத்து.*

*''உரைபெறு நித்திலத்து மாலை''* *(சிலப். 3 ஃ 112 - 3)*

*நித்திலக் கோவை (முத்துமாலை) என்பது அகநானூற்றின் மூன்றாம் பகுதிப் பெயர்.*

*நில– நிலா = 1. திங்கள். ''துணிநிலா வணியினான்'' (திருவாச. 35 ஃ 5). 2. நிலாவொளி. ''விசும்பி னகனிலாப் பாரிக்குந் திங்களும்'' (நாலடி. 151). 3. ஒளி. ''நிலா விரித்து முச்சக முற்றும் நிழல்செய்'' (திருநூற். 78).* **ம.** *நிலா,* **தெ.** *நெல.*

*நில– நிலவு. நிலவுதல் = ஒளிவிடுதல் (பிங்.).*

*நிலவு = நிலா. ''நிலவுப்பயன் கொள்ளு நெடுமணன் முற்றத்து'' (நெடுநல். 95).*

*நில– நிழல் = 1. ஒளி. ''நிழல்கா னெடுங்கல்'' (சிலப். 5 ஃ 127). 2. படிவடிவம் (பிரதிபிம்பம்). ''நிழனோக்கித் தாங்கார் மகிழ்தூங்கி'' (சீவக. 2790). 3. சாயை. ''நாணிழற் போல'' (நாலடி. 166). 4. குளிர்ச்சி (சூடா.). 5. அருள். ''தண்ணிழல் வாழ்க்கை'' (பட்டினப். 204). 6. நயன்மை (நீதி. பிங்.). 7. பேய் (உ.வ.).*

**ம.** *நிழல்,* **க.** *நெழல்,* **தெ.** *நீட.*

*நிழலுதல் = 1. ஒளிவிடுதல் ''நெய்த்தலைக் கருங்குழ னிழன்று'' (சீவக. 1101). 2. படிவடிவிடுதல் (பிரதிபலித்தல்)* (W.). *3. சாயை வீழ்த்தல். ''வண்டுந் தேன்களு நிழன்று பாட'' (சீவக. 1270). 4. காப்பா யமைதல். ''ஏரோர்க்கு நிழன்ற கோலினை'' (சிறுபாண். 233).*

*நிழற்றுதல் = 1. ஒளிவிடுதல். ''பசும்பொ னவிரிழை பைய நிழற்ற'' (ஐங். 74). 2. சாயை வீழ்த்தல். ''கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்'' (புறம். 9). 3. மணியடித்தல். ''நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநாள்'' (முல்லைப். 50).*

*நிழற்ற – நிழறு. நிழறுதல் = ஒளிவிடுதல். ''திண்சக்கர நிழறு தொல்படையாய்'' (திவ். திருவாய். 6 ஃ 2 ஃ 5).*

*நிழல்– நிழலி = 1. ஒளி (திவா.). 2. நயன்மை (நீதி (பிங்.).*

*நிழல்– நீழல் = 1. ஒளி. 2. சாயை. 3. காப்பு. 4. காப்புடைய நாடு. ''பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்'' (குறள். 1034).*

*நீழை = ஒளி. ''நீழை யாண்மலர்'' (அரிசமய. குலசே. 5).*

*நிழல்– நிணல் = சாயை.*

*நிழல்– நிகர் = 1. ஒளி. ''நீர்வார் நிகர்மலர்'' (அகம். 11). 2. சாயை. 3. சமம். ''நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்'' (நாலடி. 64). 3. சமமாய் நின்று செய்யும் போர்.*

*ஒ.நோ: சமம் = ஒப்பு, போர். சமம்– சமர்.*

*நிகர்தல் = ஒத்தல். ''மஞ்சை நிகருந் தியாக வள்ளலே'' (விறலி விடு. 902).*

*நிகர்த்தல் = 1. விளங்குதல். ''தஞ்சே ணிகர்காவின்'' (திருக்கோ. 183). 2. ஒத்தல். ''கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை'' (தொல். பொருள். 290). 3. உறழ்தல், மாறுபடுதல். ''தன்னொடு நிகரா வென்னொடு நிகரி'' (ஐங். 67).*

*நிகர்ப்பு = ஒப்பு, போர்.*

*நிழல் – நிறன் – நிறம் = 1. ஒளி. ''நிறப்பெரும் படைக்கலம்'' (கம்பரா. தைல. 30). 2. வண்ணம். ''நிறங்கொள் கண்டத்து நின்மலன்'' (தேவா. 370 : 4). 3. சாயம். 4. இயல்பு. ''வின்னிற வாணுதல்'' (திருக்கோ. 58). 5. இசை, இசைத்திறம். (ஈடு, 2 : 6 : 11). 6. ஆளத்தி வகை. ''நிறவாளத்தி நிறம்குலை யாமற் பாரணை யுடனிகழும்'' (சிலப். 3 : 26, உரை). 7. புகழ். ''இவனோடு சம்பந்திக்கை தரமன்று நிறக்கேடாம்'' (ஈடு, 4 : 9 : 3). 8. ஒளியுள்ள மார்பு, மார்பு. ''செற்றார் நிறம்பாய்ந்த கணை'' (கலித். 57). 9. நடுவிடம். ''கடலிற் றிரைநிறஞ் சேர்மத்தின்'' (திருமந். 2313). 10. உடம்பு. ''மெல்லி யலைமல்லற் றன்னிற மொன்றி லிருத்திநின்றோன்'' (திருக்கோ. 58). 11. தோல். ''புலிநிறக் கவசம்'' (புறம். 13).*

**ம.** *நிறம்.*

*நெல் = பொன்போல் விளங்கும் தவசம் (கூலம்). ''சடைச் செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு'' (நள. 68). 'பொன்விளைந்த களத்தூர்' என்னுந் தொடர்களை நோக்குக. நெல்லிற்குச் சொல் என்னும் பெயர் தோன்றியதும் இக் கரணியம்பற்றியே.*

*சுல் – சுல்லி = அடுப்பு, மடைப்பள்ளி.*

*சுல் – சுள் – சுடு – சுடர். சுல் – சொல் – சொலி. சொலித்தல் = எரிதல், விளங்குதல். சொலி –* **வ.** *ஜ்வல்.*

**ம., க.** *நெல்.*

*நெற்கஞ்சி, நெற்சோறு, நெற்பொரி என்னுங் கூட்டுச் சொற்களில், நெல் என்பது நெல்லரிசியைக் குறிக்கும்.*

*நெல் – நெள் – நெழு – நெகு – நெகிழ் – நெகிழி.*

*நெகிழி = நெருப்பு (அக. நி.).*

*நெகிழி – நெகிடி = நெருப்புக் குவை. ''மதயானை... நெகிடிக்கெனப் பெரிய கட்டை மிகவேந்தி'' (தாயு. மௌனகுரு. 7).* **தெ.** *நெகடி.*

*நெகிழி – ஞெகிழி = 1. தீக்கடை கோல். ''ஞெகிழி பொத்த'' (குறிஞ்சிப். 226). 2. கொள்ளிக்கட்டை. ''விடுபொறி ஞெகிழியிற் கொடிபட மின்னி'' (அகம். 108). 3. தீ (பிங்.).*

*நெகு – நகு. நகுதல் = 1. விளங்குதல், திகழ்தல். ''பொன்னக் கன்னசடை'' (தேவா. 644 : 1). 2. முகம் விளங்குமாறு சிரித்தல். ''நகுதற் பொருட்டன்று நட்டல்'' (குறள். 784). 3. முகம் விளங்குதற் கேற்ப அகம் மகிழ்தல். ''மெய்வேல் பறியா நகும்'' (குறள். 774). 4. பூ மகிழ்தல் போன்று மலர்தல். ''நக்க கண்போ னெய்தல்'' (ஐங். 151). 5. சிரித்து அவமதித்தல். ''ஈகென் பவனை நகுவானும்'' (திரிகடு. 74).* ***க.*** *நகு* (g), ***தெ.*** *நவ்வு.*

*நகு – நகல் – நக்கல் = 1. ஒளி (அரு. நி.). 2. சிரிப்பு (சூடா.). 3. இகழ்ச்சி, நகையாண்டித்தனம் (பரிகாசம்). அவன் நக்கலாய்ப் பேசுகிறான் (உ.வ.).*

*நகு– நகை = 1. ஒளி. ''நகைதாழ்பு துயல்வரூஉம்'' (திருமுருகு. 86). 2. சிரிப்பு. ''நகைமுகங் கோட்டி நின்றாள்'' (சீவக. 1568). 3. மகிழ்ச்சி. ''இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி'' (சிறுபாண். 220). 4. இன்பம். ''இன்னகை மேய'' (பதிற். 68 :14). 5. பூவின் மலர்ச்சி. ''நகைத்தாரான் தான்விரும்பு நாடு'' (பு. வெ. 9 : 17). 6. மலர். ''எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்'' (பரிபா. 13 : 59). 7. நட்பு. ''பகைநகை நொதும லின்றி'' (விநாயகபு. நைமி. 25). 8. நயச்சொல் (திவா.). 9. விளையாட்டு. ''நகையேயும் வேண்டற்பாற் றன்று'' (குறள். 871). 10. நையாண்டி (பரிகாசம்). ''நகையினும் பொய்யா வாய்மை'' (பதிற். 70 : 12). 11. அவமதிப்பு. ''பெறுபவே... பலரா னகை.'' (நாலடி. 377). 12. பல்லிளிப்பு. 13. அணிகலம். 14. முத்து. ''அங்கதிர் மணிநகை'' (சீவக. 603). 15. முத்துமாலை. ''கோதை நகையொருத்தி'' (கலித். 92 : 33). 16. பல். ''நிரைமுத் தனைய நகையுங் காணாய்'' (மணிமே. 20 : 49). 17. நகைச்சுவை. ''நகையே அழுகை இளிவரல் மருட்கை'' தொல். மெய்ப். 3).*

***ம., தெ., து.*** *நக* (g), ***க.*** *நக* (g), *நகெ* (g).

*நகு – நகார் = பல். ''மடவோர் நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்'' (சிறுபாண். 57).*

*நகு – நங்கு = நையாண்டி. ''நங்கு தெறிப்பதற்கு நாடெங்கும் போதாது'' (ஆதியூரவதானி).*

*நங்குதல் = நையாண்டி செய்தல். ''நங்க வொழியினும்'' (பழமலை. 50).* ***தெ.*** *நங்கு.*

*நங்கு காட்டுதல், நங்கு வலித்தல் என்பன ஒக்க நடித்து நையாண்டி செய்தலைக் குறிக்கும் வழக்குச் சொற்கள்.*

*நகு – நகர் = 1. விளங்கித் தோன்றும் மாளிகை. ''பாழி யன்ன கடியுடை வியனகர்'' (அகம். 15). 2. வளமனை. ''கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்'' (புறம். 70). 3. அரண்மனை. ''நிதி துஞ்சு வியனகர்'' (சிலப். 27 : 200). 4. சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபம். ''அணிநகர் முன்னி னானே'' (சீவக. 701). 5. இல்லத்தில் வாழும் மனைவி. ''தன்னகர் விழையக் கூடி'' (கலித். 8). 6. அரண்மனை யொத்த கோவில். ''முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே'' (புறம். 6). 7. மாளிகையும் அரண்மனையும் மண்டபமும் கோயிலும் போன்ற கட்டடங்களாற் சிறந்து விளங்கும் ஊர். ''நெடுநகர் வினைபுனை நல்லில்'' (புறம். 23).* **தெ.** நகரு.

*நகர்– நகரி = சிறந்து விளங்கும் கட்டடங்களையுடைய ஊர். நகரி–* **வ.** *நகரீ. 'இ' சினைமுதலீறு.*

*நகர் – நகரம் = 1. பெருமாளிகை. 2. பெரிய அரண்மனை. 3. பெருங்கோயில். ''மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்'' (சிலப். 14 : 9). 4. வாழிடம். ''நகர மருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்'' (திவ். இயற். முதற். 33). 5. மாநகர், பேரூர் (சூடா.).*

*'அம்' பெருமைப்பொருட் பின்னொட்டு. இற்றைத் தமிழர் அதை அறியாது பொதுப்பொருளில் வழங்குகின்றனர்.*

*நகரம் –* **வ.** *நகர.*

*நகர் என்னும் மூலச் சொல்லும், அதன் நகு என்னும் மூலமும், வடமொழியில் இல்லை. தமிழை வடமொழி யென்னும் சமற்கிருதக் கிளையாகக் காட்டலையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்ப் பகைவரான பிராமணத் தமிழ்ப்புலவர் தொகுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியில், நகர் நகரி நகரம் ஆகிய மூவடிவுச் சொல்லும் வடசொல்லாகவே காட்டப்பட்டுள்ளன. நாம் ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்னும் உயர்ந்த பண்பாட்டை யுடையவரேனும், நாட்டு வரலாறொத்த மொழிவரலாற்றைச் சிதைப்பதும், உலகில் முதன்முதல் நாகரிக விளக்கேற்றிய நம் முன்னோரைத் தகவிலாரெனக் காட்டுவதும், அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அரும்பாடுபட்டுத் தேடி வைத்த அருஞ்செல்வத்தைப் போற்றாது வாரி வாரியில் எறிவதும், அறியாமையையோ, அடிமை மனப்பான்மையையோ, இறக்க இழிந்த தன்னலத்தையோ, படுகோழைத்தனத்தையோ, தமிழைப் பகைவர்க்கு வெளிப்படை யாகக் காட்டிக்கொடுக்கும் நாணமில்லாச் செயலையோதான் காட்டும். பண்பாடு வேறு; காட்டிக்கொடுப்பு வேறு.*

*மக்களின் பழக்கவழக்கங்கள் முதன்முதல் நகர் அல்லது நகரத்திலேயே திருந்தின. அதனால், சிற்றூர் வாணனையோ நாகரிகமில்லாதவனையோ நாட்டுப்புறத்தான் என்று இழித்துக் கூறுவது இன்றும் வழக்கமா யிருக்கின்றது. வாழ்க்கைத் திருத்தம் அல்லது பண்பாடு நகரத்தில் தோன்றியதானாலேயே, நாகரிகம் என்னும் பெயர்த்தாயிற்று.*

*நகர்– நகரகம்– நகரிகம்– நாகரிகம்.*

*நகரிப் பழக்கம் = நகர்வாணரின் திருந்திய ஒழுக்கம்.*

*நகர்ப்புறத்தான் (நாகரிகன்)* x *நாட்டுப்புறத்தான் அல்லது பட்டிக்காட்டான் = திருந்தாத பழக்கவழக்கத்தான்.*

*ஒ.நோ:* E. urban = living in a city or town, urban = polite, urbanity = polished manners.

L. civis = citizen, civil = polite, civilization = advanced stage in social development.

*முதற்கண் நகரங்களில் வழங்கியதனாலேயே, இற்றை வடமொழி யெழுத்து நாகரி யெனப்பட்டது. வடமொழி தேவமொழி யென்னும் ஏமாற்றினால், அது தேவநாகரியென வழங்கும்.*

4

## நுல்[4] (நெகிழ்ச்சிக் கருத்துவேர்)

துளைக்கப்பட்ட பொருள்கள் உளுத்த மரம்போற் கட்டு விட்டுப் போவதனாலும்; கையினாலும் கோலினாலும் எளிதாய்த் துளைக்கப்படும் அல்லது ஊடுருவப்படும் பொருள்களெல்லாம், நீருங் கூழும்போல் நெகிழ்ச்சிப் பொருள்களாகவே யிருப்பதனாலும், துளைத்தற் கருத்தினின்று நெகிழ்ச்சி அல்லது தளர்ச்சிக் கருத்துத் தோன்றிற்று.

உளு = புழு. உளுத்தல் = புழுத் துளைத்தல்.

ஒ.நோ: துள்– தொள்– தொள– தொளர்– தளர்.

நுல் – நல் – நலி. நலிதல் = 1. மெலிதல். 2. சரிதல். 3. தோற்றல் (தோல்வியடைதல்). 4. அழிதல். ''நண்ணா வசுரர் நலியவே'' (திவ். திருவாய். 10 : 7 : 4).

நலி – நலிவு – நலிபு = மெலிந்த ககரமாகிய ஆய்தம். ''நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்'' (தொல். செய். 221).

நல்– நால். நாலுதல் = சரிந்து அல்லது தளர்ந்து தொங்குதல். ''நான்ற முலைத்தலை நஞ்சுண்டு'' (திவ். இயற். 1 : 18). 2. கழுத்திற் சுருக்கிட்டுத் தொங்கிச் சாதல். ''நான்றியான் சாவலன்றே'' (சீவக. 2513).

நால்வாய் = 1. தொங்கும் வாய். ''நால்வாய்க் கரி'' (திருக்கோ. 55). 2. தொங்கும் வாயுள்ள யானை.

நால்– நாலி = கோலுங் கொடுக்குமாய்த் தொங்குங் கந்தைத் துணி.

நுல்– நுள்– நொள்– நொள்கு. நொள்குதல் = 1. சுருங்குதல். ''நூல் நொள்கிற்று'' (நன். 454, மயிலை). 2. இளைத்தல் (யாழ். அக.).

நொள்கு – ஞொள்கு. ஞொள்குதல் = 1. மெலிதல் (திவா.). 2. குறைவுபடுதல். ''புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி'' (அகம். 31).

*3. சோம்புதல். (திவா.) 4. அஞ்சுதல் (திவா.). 5. குலைதல் (பிங்.). 6. அலைதல் (பிங்.).*

*நொள்கெனல் – அச்சக் குறிப்பு.*

*நொள் – நெள் – ஞெள். ஞெள்ளல் = சோர்வு.*

*நொள் – நொள. நொளநொளத்தல் = 1. குழைதல். 2. வழுவழுப்பாதல்.*

*நொள் – நொளு. நொளுநொளுத்தல் = குழைதல்.*

*நுள் – நள். நளுநளுத்தல் = குழைதல்.*

*நொள் – நொளில் = சேறு (பிங்.).*

*ஒ.நோ: தொள் – தொள்ளி = சேறு. தொள்ளி – தொளி = சேறு.*

*நொளில் – நொறில் = 1. நுடக்கம். ''நொறிலியற் புரவி யுதியர் கோமான்'' (தொல். சொல். 396, உரை). 2. ஒடுக்கம் (பிங்.). 3. சேறு. ''செருநில நொறிற்செந் நீரினுள்'' (சூளா. அரசி. 274).*

*நொளு – நொளுப்பு = வேலை கழப்புகை.*

*நொள் – நொடு – நொடி. நொடித்தல் = 1. கட்டுக்குலைதல். சக்கரம் நொடிக்கும் (உ.வ.). 2. வணிகத்தில் இழப்படைதல். 3. செல்வநிலை தாழ்ந்து வறுமை யடைதல்.*

*நொடு – நொது. நொதுத்தல் = 1. தளர்தல். 2. அழிதல். நொது – நொந்து. நொந்துதல் = அழிதல். ''நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்'' (தேவா. 1218). 3. நொந்து – நந்து. நந்துதல் = 1. கெடுதல். ''நாடற்கரிய நலத்தை நந்தாத் தேனை'' (திருவாச. 9 : 15). 2. மறைதல். ''இடையுறு திருவென வந்து நந்தினான்'' (கம்பரா. உண்டாட். 67). 3. சாதல். ''திருமைந்தன் நந்த நீர்ந்தது மாயுளைப் பெற்றதும்'' (பிரமோத். 21 : 61). 4. அவிதல்.*

*நந்து = 1. மெல்லிய சதையுள்ள நீருயிரி. 2. அது இருக்கும் சங்கு.*

*''நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே'' (தொல். மரபு. 64).*

*நந்து – நத்து – நத்தை = 1. மெல்லிய சதையுள்ள ஊமைச்சி. 2. அது இருக்கும் கூடு.*

*நத்து – சங்கு. ''தத்தொடு நள்ளி'' (பரிபா. 10) நொது – நொதி = சேறு.*

*நந்து – நத்தம் = 1. சங்கு (சீவக. 547, உரை). 2. ஊமைச்சி. நெள் – நெழு – நெகு. நெகுதல் = 1. கழலுதல். ''எனவளை நெகவிருந் தேனை''*

(திவ். பெரியதி. 8 : 5 : 9). 2. மனமிரங்குதல். 3. காதலால் உருகுதல். ''என்புநெகப் பிரிந்தோன்'' (தொல். களவு. 23). 4. கரைதல். 5. பொடியாதல். 6. கெடுதல். ''மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது'' (சீவக. 426).

நெகு – நெக்கு = நெகிழ்ச்சி.

நெக்கவிடுதல் = 1. பொருத்துவாய் விடுதல். 2. பிளத்தல்.

'' ...................... ................ – நெட்டிருப்புப்
பாருக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்'' (நல்வழி, 83)

நெகு – நெக்கல் = 1. தளர்ந்தது. 2. அளிந்த பழம்.

நெகு – நெகிழ். நெகிழ்தல் = 1. பிணிப்புத் தளர்தல். ''கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி'' (அகம். 26). 2. நழுவுதல். ''எல்வளை நெகிழ்போ டும்மே'' (ஐங். 20). 3. நிலைகுலைதல். ''நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ'' (கலித். 17). 4. பூமலர்தல். ''காவியுங் குவளையு நெகிழ்ந்து'' (சூளா. நாட். 5). 5. குழைதல் (சூடா.). 6. இளகுதல். ''சேவடி நோக்கி விரும்பி யுண்ணெகிழ'' (கூர்மபு. பிரமவிஷ்ணு. 16). 7. மனமிரங்குதல். 8. மெலிதல். ''மென்றோள் நெகிழ விடல்'' (கலித். 86). 9. வெட்டிற்குப் பதமாதல். 10. விட்டு நீங்குதல்.

நெகு – நகு – நங்கு – நாங்கு. நாங்குதல் = 1. திடங்குன்றுதல். தாங்கி நாங்கிப்போக (உ.வ. யாழ்ப்.). 2. தளர்தல்.

நாங்குளு – நாங்குழு – தளர்ந்து நீண்டு இயங்கும் புழு. ''நாங்குழுவை வள்ளுகிரா லெற்றாமல்'' (பணவிடு. 265). நாங்குழு – நாங்கூழ். ''எறும்பிடை நாங்கூழெனப் புலனா லரிப்புண்டு'' (திருவாச. 6 : 25). நால் – நால்கு – நாகு – நாக்கு = 1. வாய்க்குள் தொங்கும் உறுப்பு. 2. படகு வலிக்குந் துடுப்பின் பலகை. 3. தீக்கொழுந்து.

நாகு – நாவு.

நாவு – நா = 1. ''யாகாவா ராயினும் நாகாக்க'' (குறள். 127). 2. சொல். ''நம்பி நாவினு ளுலகமெல்லாம் நடக்கும்'' (சீவக. 316). 3. துலைநா. ''துலைநா வன்ன சமநிலை யுளப்பட'' (ஆத். பேரா. பொதுப்பாயிரம்). 4. மணிநா. ''வாயிற் கடைமணி நடுநா நடுங்க'' (சிலப். 20 : 53). 5. தீக்கொழுந்து. ''எழுநா'' (பிங்.). 6. திறவுகோலின் நாக்கு. 7. இசைக்குழலின் ஊதுவாய்.

**தெ.** நாலுக, **க.** நாலகெ (g), **து.** நாளாயீ, **ம.**நாக்கு.

*நொள்– நொய். ஒ.நோ : தொள்– தொய். நொய்ம்மை = 1. தளர்ச்சி. 2. உறுதியின்மை. 3. கனமின்மை. ''மெய்ம்மை சீர்மை நொய்ம்மை வடிவம்'' (மணிமே. 27 : 254). 4. மென்மை. 5. மனத்திடமின்மை. 6. மனவுருக்கம். 7. வறுமை. 8. சிறுமை. 9. இழிவு.*

*நொய் = 1. மென்மையான. ''அனிச்சப் போதி னதிகமு நொய்ய'' (கம்பரா. கோலங். 14). 2. வலியற்ற. நொய்யமதி. 3. புன்மையான. ''நொய்தி னொய்ய சொல்'' (கம்பரா. பாயி. 5). 4. வசையான. நொய்யசொற் பொறாதவன்.*

*நொய்யவன் = புல்லன் (அற்பன்). ''நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்'' (கொன்றை. 57). நொய்து = 1. மெல்லியது. 2. கனமில்லாதது. ''விண்ணி னொய்தால்'' (ஞானவர. வீதக. 76). ''நொய்தாந் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்'' (நீதி வெண்பா. 8). 3. இழிவானது. ''நொய்தி னொய்ய சொல்'' (கம்பரா. பாயி. 5). 4. விரைவு. ''ஆயிழை நொய்தினுரை'' (சீவக. 1767).*

*நொய்– நொசு. நொசு– நொச. நொசநொசத்தல் = சோறுங் கஞ்சியும் கட்டுவிட்டு நொந்து போதல்.*

*நொசநொச வெனல் = சோறு நொந்துபோன நிலையடைதல்.*

*நொய்– நொ. நொதல் = சோறு நொந்துபோதல்.*

*நொசு– நசு. நசுநசுத்தல் = 1. குழைதல். 2. தடுமாறுதல். 3. விடாது தூறுதல். நசுநசுத்த மழை (உ.வ.) 4. ஈரமாயிருத்தல்.*

*நசுநசெனல் = 1. கட்டு நெகிழ்தற் குறிப்பு. 2. மெதுவாயிருத்தற் குறிப்பு. 3. விடாது மழை தூறற்குறிப்பு. 4. ஈரமாயிருத்தற் குறிப்பு.*

*நொசு– நொசி. நொசிதல் = 1. நைதல். ''நொசிந்த துகில்'' (தொல். சொல். 330, உரை). 2. குறைவுறுதல் ''நொசிவிலாத பூசனை'' (விநாயகபு. 36 : 37).*

*நசு– நச்சு. நச்சுமழை = விடாத சிறு தூறல். நச்சு வாயன் = விடாது பேசும் அலப்புவாயன்.*

*நொய்– நை. ஒ.நோ : பொய் (உட்டுளை)– பை. நைதல் = 1. நசுங்குதல். 2. தளர்தல். ''இடைநை வதுகண்டு'' (திருக்கோ. 134). 3. வாடுதல். 4. மனம் வருந்துதல். ''நைந்து சாமவர்க்கே'' (திருநூற். 43). 5. இரங்குதல். ''நீநல் காமையின் நைவரச் சாஅய்'' (புறம். 146). 6. தன்வயமிழத்தல். ''அரிவை நய'' (சீவக. 492). 7. சுருங்குதல். ''நையாத வாயுளுஞ் செல்வமும்'' (அருட்பா. 5, பொது. 2). 8. மாத்திரை குறைதல். ''வன்மையே லுகர முறுவது நையும்'' (வீரசோ. சந்தி. 2), 9. நிலைகெடுதல். 10. கெடுதல்.*

*நைய நறுங்கத் தட்டுதல்– மிக நொறுங்கச் சதைத்தல்.*

*ஒ.நோ: நெகவரைத்தல் = மாவாக அரைத்தல்.*

*நைச்சாந்து = மைப்பதச் சன்னக்காரை. நையப்புடைத்தல் = உடம்பு தளர அடித்தல். நைபவர் = வறியவர், நிலைமை தாழ்ந்தவர். ‘‘நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்’’ (கொன்றை. 56).*

*நைவு = 1. மிகப் பழுத்தது. 2. வாடினது. நைவருதல் = இரங்குதல் (புறம். 146).*

*நை – நயி – நசி. ஒ.நோ: மொய் – மொயி – மொசி. நசிதல் = 1. நசுங்குதல். 2. சுருங்குதல். 3. நிலைமை கெடுதல். 4. அழிதல்.*

*நசி –* **வ.** *நச்* (nas).

*நசித்தல் = (செ. கு. வி.). 1. நிலைமை தாழ்தல். அந்தக் குடும்பம் நசிந்துகொண்டு வருகிறது (உ.வ.). 2. அழிதல். ‘‘நசியா வுலகிற் பாவமும் நசிக்கும்’’ (காஞ்சிப்பு. மணிக. 61). 3. சாதல். ‘‘நசித்தவரை யெழுப்பியருள்’’ (அருட்பா. 6, அருள்விளக்க. 4).*

*(செ. குன்றா வி.). 1. அரைத்தல். 2. அழித்தல்.* **ம.** *நசிக்க. நசியல் = 1. நெரிந்தது. 2. துவள்வது. நசியலன் = கழப்புணி, நழுவி.*

*நசிவு = 1. நெரிவு, 2. பழி. 3. கேடு. நசிவு காணுதல் = நைந்து சேதப்படுதல்.*

*நசி – நசுங்கு. நசுங்குதல் = 1. நைந்து போதல். 2. பழம் நசுங்கி விட்டது (உ.வ.). 3. கசங்குதல். 4. நிலைகுலைதல்.*

*நசுங்கச் சப்பி = பிசினாறி.*

*நசுங்கு – நசுக்கு. நசுக்குதல் = 1. நசுங்கச் செய்தல். 2. சிரங்குக் கொப்புளத்தைத் தேய்த்துப் பிதுக்குதல். 3. மூட்டைப் பூச்சி பேன் முதலியவற்றை அழுத்தி அல்லது குத்திக் கொல்லுதல். 4. யானை உயிரிகளை மிதித்துக் கொல்லுதல். 5. எதிரிகளை அடக்கி யொடுக்குதல். 6. குடற்காற்றை அடக்கி வெளிவிடுதல்.*

**க.** *நசிக்கு.*

*நசுங்கல் = 1. நைந்த காயம். 2. மெலிந்தது. 3. சிறியது.*

*நசுங்கலான் = 1. உறுதியற்றவன். 2. சிறியது. நசுங்கலாண்டி = உறுதியற்றவன்.*

*நசுக்கு = 1. நெரிவு. 2. சிறியது.* **தெ.** *நலுசு.*

*நசுக்குணி = 1. சிறியது. 2. கூழையன். நசுக்குணி– நசுகுணி.*

*நசுக்கான் = 1. சிறியது. 2. சிறுபையன். நசுக்கான் பையன். (உ.வ.).*

*நசுவல் = 1. ஊக்கமற்ற— வன்— வள்— து. 2. மெலிந்த— வன்— வள் — து.*

*நை— நைஞ்சு— நஞ்சு. ஒ.நோ: பை— பைஞ்சு— பஞ்சு. மை— மைஞ்சு — மஞ்சு. பைம்மை = மென்மை. பைஞ்சு = மெல்லியது, நொய்யது. நஞ்சு = 1. உட்கொண்ட வுயிரிகளை நைவிக்கும் அல்லது கொல்லும் பொருள். ''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர்'' (குறள். 580). 2. தீயது. ''அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு'', அவன் வாயிலிருந்து வருவதெல்லாம் நஞ்சு (உ.வ.). 3. நஞ்சுக்கொடி. குழந்தை பிறந்துவிட்டது; ஆனால், நஞ்சு இன்னும் விழவில்லை. (உ.வ.).*

*நஞ்சு— நஞ்சன் = தீயவன்.*

*நைந்தான் = மெலிந்தான். நைந்தான்— நஞ்சான்.*

*நஞ்சானுங் குஞ்சும் = மெலிந்த குழந்தை குட்டிகள்.*

*நைந்து = மனமிரங்கி. நைந்து— நஞ்சு.*

*ஒ.நோ: ஐந்து— அஞ்சு.*

*நஞ்சுறுதல் = மனமுருகுதல், உளங்கனிதல். ''நஞ்சுற்ற காம நனிநாகரிற் றுய்த்த வாறும்'' (சீவக. 11).*

## நோதற் கருத்துச் சொற்கள்

*நெகிழ்ச்சிக் கருத்தில் தளர்ச்சிக் கருத்தும், தளர்ச்சிக் கருத்திற் கட்டுக்குலைவுக் கருத்தும், கட்டுக்குலைவுக் கருத்தில் வலுக் குறைவுக் கருத்தும், வலுக்குறைவுக் கருத்தில் வருந்தற் கருத்தும் பிறக்கும்.*

*வருந்தற் கருத்தில், நோயுறுதற் கருத்தும் துன்புறுதற் கருத்தும் தோன்றும்.*

*இவ் வெல்லாக் கருத்துகளினின்றும் அழிவுக் கருத்துக் கிளைக்கும்.*

*நுல்— நல்— நலி.*

*நலிதல் = 1. வருந்துதல், ''தேடி நலிந்தே கண்ணாற் காணாத காரணனை'' (சிவரக. நந்திகண. 1). 2. வருத்துதல். ''நடுங்கஞர் நலிய'' (பு.வெ. 12, பெண்பாற். 15, கொளு).* **தெ.** *நலி.*

நலித்தல் = வருத்துதல்.

நலிவு = 1. துன்பம். ''வையகத்து நலிவுகண்டு'' (பு.வெ. 8 : 34, கொளு). 2. கேடு. ''நோற்று நலிவிலா வுலக மெய்தல்'' (சீவக. 2727).

நுல்– நுள்– நொள்.

நொள்– நொள்ளா– நொள்ளாப்பு = வருத்தம்.

நொள்– நொய்– (நய்)– நை.

நைதல் = மனம் வருந்துதல்.

நைகரம் = துன்பம். ''நைகர மொழிந்து'' (விநாயகபு. 57 : 18)

நை = துன்பம். நைவருதல் = வருந்துதல். ''நைவாரா வாயமக டோள்'' (கலித். 103 : 66). நைவு = 1. வருந்துகை. 2.நோய். ''நாளு நைவகன்ற'' (தைலவ. தைல. பாயி. 1).

நைநை யெனல் = குழந்தை விடாது அழுது தொந்தரவு செய்தல்.

நை– (நய்)– நசு– நசல் = நோய் (W.).

நசலாளி = நோயாளி (W.).

நசிறாண்டி – தொந்தரவு செய்வோன் (யாழ்ப்.).

நசிறாளி– நசிறாணி = தொந்தரவு செய்பவன் (யாழ்ப்.).

ஒ.நோ: களவாளி– களவாணி.

நசு– நசுவல் = தொந்தரவு செய்பவன்– வள்– து.

நசுநசுத்தல் = தொந்தரவு செய்தல்.

நசுநசெனல் = தொந்தரவு செய்தற் குறிப்பு.

நசு– நச்சு = 1. தொந்தரவு. நச்சுப் பிடித்தவன் (உ.வ.). 2. அலப்பல்.

நச்சுதல் = 1. தொந்தரவு செய்தல். 2. அலப்புதல்.

நச்சுவேலை (நச்சுப் பிடித்த வேலை) = தொந்தரவு உண்டாக்கும் வேலை.

நச்சு– நச்சி = வீண் பேச்சுப் பேசித் தொந்தரவு செய்பவன்.

நச்சுநச்செனல் = தொந்தரவு செய்தற் குறிப்பு.

நச்சுப் பிச்சு = 1. தொந்தரவு. 2. ஓயாது அலப்புகை.

*நொய்– (நொயி)– நொசி. நொசிதல் = வருந்துதல்.*

*நொசித்தல் = வருந்துதல். ''நொசித்த வெம்முலை'' (சீவக. 654).*

*நொசி– நொசிவு = வருத்தம் (சூடா.).*

*நொள்– நெள் (நெழு)– நெகு.*

*நெகுதல் = 1. வருந்துதல். ''இனிச்செயல் யாவதெனவுள நெக்கார்'' (காஞ்சிப்பு. கயிலா. 30). 2. கெடுதல். ''மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது'' (சீவக. 426).*

*நொள்– நொது– நொந்து– நந்து– நந்தம்– நத்தம் = அழிந்துபோன வூரிடம், பாலைநிலத்தூர்.*

பகைவரால் அழிக்கப்பட்டுப் பாழடைந்த ஊரிருந்த இடங்கள், இன்றும் நத்தப்பாழ் என்றும் நத்தத்து மேடு என்றும் சொல்லப்படும்.

*நொள் – நோள் – நோளை = நோய்நிலை, நோளையுடம்பு (நோளைச்சரீரம்)* (W.).

*நோள்– நோய் = 1. நோவு. 2. பிணி. ''நோயிகந்து நோக்கு விளங்க'' (மதுரைக். 13). 3. துன்பம். ''அதிர வருவதோர் நோய்'' (குறள். 429). 4. துயரம் (பிங்.). 5. அச்சம். ''நோயுடை நுடங்குசூர்'' (பரிபா. 5 : 4). 6. குற்றம். ''பகலென்னும் பண்பின்மை பாரிக்கு நோய்'' (குறள். 851).*

**ம.** *நோயி.*

*நோயாளி = பிணியாளி.*

*நோய்தல் = 1. நோயால் மெலிதல். 2. பயிர் நோயால் வாடுதல்.*

*நோய்த்தல் = 1. நோயால் வருந்துதல். 2. நோயால் மெலிதல். 3. பயிர் நோயால் வாடுதல். 4. நிலம் உரமற்றுப் போதல்.*

*நோய்த்தல்– நோய்ச்சல் = நோய்ப்படுகை.*

*நோய்த்தல் – நோய்ஞ்சல் – நோயால் மெலிதல். நோய்ஞ்சல் – நோஞ்சல் = மெலிவு.*

*நோய்ஞ்சல்– நோய்ஞ்சலன் = நோயாளி.*

*நோய்ந்தான் – நோய்ஞ்சான் – நோஞ்சான் = நோயால் மெலிந்தவன்.*

*நோய்ஞ்சி = நோயாளி. நோய்ஞ்சி – நோய்ஞ்சியன் = நோயாளி. நோய்ஞ்சி– நோஞ்சி.*

நோய்முகன் = துன்பஞ் செய்யும் காரி (சனி). (தைலவ. தைல.).

நோய்– நோ. நோதல் = 1. நோவுண்டாதல், கண் நோகிறது (உ.வ.). 2. வருந்துதல். ''ஊரன்மீ தீப்பறக்க நொந்தேனும் யானே'' (நாலடி. 389). 3. துன்பப்படுதல். 4. வறுமைப்படுதல். நொந்தகுடி (உ.வ.). 5. துன்பத்தைச் சொல்லுதல். ''நோவற்க நொந்த தறியார்க்கு'' (குறள். 877). 6. சமைத்த வுண்டி பதன் கெடுதல். சோறு நொந்துபோய் விட்டது (உ.வ.). **க.**நோ, **ம.**நோ (க.), **தெ.** நோகுலு (g). நோ– நோதலை = நோதல்.

நோதல்– நோசல் = நோவு (W.).

நோ – நோதிறம் = முல்லை பாலைத் திணைகட்குரிய துயரப் பண்வகை (பிங்.). ''பாண்வாய் வண்டு நோதிறம் பாட'' (சிலப். 4 : 75). நோ = 1. வலி. 2. நோய் (W.). 3. துன்பம். ''நோநொந்து'' (குறள். 157). 4. வலுக்குறைவு. 5. சிதைவு.

நோ– நோக்காடு = 1. நோவு. 2. நோய். கொள்ளையா நோக்காடா? (உ.வ.). ''கண்ணோக் காடாம்'' (பணவிடு. 300). 3. மன நோவு (W.). 4. வறுமை (யாழ்ப்.).

நோ– நோப்பு– நோப்பாளம் = 1. வருத்தம். 2. சினம்.

''உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்'' (பழ.).

நோ– நோவு = 1. வலி. 2. ஈன்வலி. ''ஈன்றக்கா னோவும்'' (நாலடி. 201). 3. நோய். 4. துன்பம் (திவா.). 5. இரக்கம். ''தாம் நோவுபடா நிற்பர்'' (ஈடு).

வறுமையும் நோய்போன்ற துன்பமாகக் கருதப்படுவதால், நோய்நொடி யென்றும் நோவுநொடி யென்றும் இணைத்துச் சொல்வது மரபு. நொடித்தல் = நிலைகெடுதல், வறுமைப்படுதல்.

நோவாளி = நோயாளி.

**ம., க., து.** நோவு.

நோ – நொ. நொதல் = துன்புறுதல். ''நொக்கொற்றா'' (தொல். எழுத்து. 72, உரை). ''நொப்போ வெளவுரிஞ்'' (நன். 137).

நொ = 1. துன்பம். ''நொவ்வுற லெய்தி'' (கந்தபு. திருவவ. 39). 2. நோய் (W.).

நொ– நொம்பு– நொம்பலம் = துன்பம். **ம.** நொம்பலம்.

நொ– நொவ்வு. நொவ்வுதல் = 1. நோதல். 2. துன்புறுதல்.

*நொவ்வு = மெலிவு.*

*நொவ்வல் = 1. நோவு. 2. துன்பம். ''மையற் பெண்டிர்க்கு நொவ்வ லாக'' (அகம். 98).*

***குறிப்பு :*** *காரிக்கோள் துன்பந் தருவது என்னும் கருத்தினால், அது நோய்முகன் என்னப்பட்டது. ஆயின், இடைக்காலத்தில் தமிழ்ப்பகைவர் காரி என்னும் தென்சொல்லை வழக்கு வீழ்த்திச் 'சனி' என்னும் வடசொல்லைப் புகுத்தினதினால், 'சனியன்' என்னும் சொல் வழங்கத் தலைப்பட்டது. தமிழர் அனைவரும், இனி நோய்முகன் என்னும் சொல்லையே 'சனியன்' என்பதற்குத் தலைமாறாக வழங்குக.*

## 5

## நுல்[5] (நீட்சிக் கருத்துவேர்)

*நீட்சிக் கருத்து நெகிழ்ச்சிக் கருத்தின் வழிநிலைக் கருத்தே. நிற்றற் கருத்தும் நடத்தற் கருத்தும் நீட்சிக் கருத்தினின்று தோன்றும்.*

*நுல்– நெல்– நெள்– நெகு– நெகிழ் (நெகிள்)– நீள்.*

*நெகிள் (நெகிழ்)– நிகள்– நீள்– நிகளம். நிகள்– நிகலம் = நீளம் (உ.வ.).*

*எதுகை முகனை என்பதை எகனைமுகனையென்பதுபோல், அகலம் நீளம் என்பதை அகலம் நிகளம் என்றும் பொதுமக்கள் வழங்கியிருக்கலாம்.*

*ஈயமும் மெழுகும் போல்வன உருகியும், களியும் களிமண் ணும் போல்வன நீர்கலந்தும், நெகிழும்போது நீளுதல் காண்க.*

***1. நீடல்***

*நீளுதல் = 1. நீளமாதல். 2. பெருமையுறுதல் ''நீள்கழற் கன்பு செய்வாம்'' (கந்தபு. கடவுள் வா. 2). 3. ஓடுதல் (திவா.).*

***ம.** நீளுக, **க.** நீள்.*

*ஓடுதலாவது இயக்கத்தால் (செலவால்) விரைந்து நீளுதல். ஒ.நோ: படர்தல் = பரவுதல், செல்லுதல். ''கம்பியை நீட்டிவிட்டான்'' என்னும் உலக வழக்கையும் நோக்குக.*

*நீள் = 1. நீளம். 2. நெடுங்காலம் (காலநீட்சி). ''நீடூங்காய்'' (கலித். 131). 3. உயரம் (மேனோக்கிய நீட்சி). 4. ஆழம் (கீழ்நோக்கிய நீட்சி). ''நீணிலைக் கூவல்'' (கல்லா. 12). 5. ஒழுங்கு (நேர்வரிசை நீட்சி).*

*நீளம் = 1. நெடுந்தொலைவாக. 2. நெடுங்காலமாக. ''நீள நினைந்தடி யேனுமை நித்தலுங் கைதொழுதேன்'' (தேவா. 825 : 1).*

*நீள் – நீளக்க (உ.வ.). 1. நெடிதாக. 2. நெடுந்தொலைவாக. 3. நெடுங்காலமாக.*

நீள்– நீளம் = 1. நெடுமை. ''நீளம் பெருங்கண்களே'' (திருக்கோ. 109). 2. தொலைவு (பிங்.). ''கையா னிளமாப் புடைப்ப'' (சீவக. 2248). 3. காலத்தாழ்ப்பு.

நீளங்கடை = நாட்செல்லுகை (யாழ். அக.). **ம.** நீளம், **க.** நீள.

நீள் – நீளி. நீளித்தல் = 1. நீளுதல். 2. நெடுங்கால மிருத்தல். 3. காலந்தாழ்த்தல்.

நீளி = 1. நெடியவன். 2. நெடியது. நீள்– நீளை = காற்று (நீண்டு இயங்குவது) (பிங்.).

நீள்– நீளல்– நீழல் = காற்று (திவா.).

நீள்– நீட்சி– நீட்சிமை = நீட்டம்.

நீள்– நீட்பு– நீட்பம் = நீளம்.

நீள் – நீண்டவன் = திருமால் (குறள் தோற்றரவில் வானளாவ வுயர்ந்தவன்). ''நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனின்'' (கம்பரா. குகப். 41). நீண்டாயம் = நீளம் (யாழ். அக.).

நீள்– நீண்மை = பழைமை. ''நீண்மைக்க ணின்றுவந்த நிதியெலாந் தருவல்'' (சீவக. 1119).

நீள் – நீண். நீணுதல் = நெடுந்தொலை செல்லுதல். ''தண்டா மரையானு நீணுதல் செய்தொழிய நிமிர்ந்தான்'' (தேவா. 62:9).

நீள் – நீட்டு (பி.வி.). நீட்டுதல் = 1. நீளச்செய்தல். நாக்கை நீட்டு (உ.வ.). 2. பக்கவாட்டில் நீளக்காட்டுதல். கையை நீட்டு (உ.வ.). 3. கை நீட்டிக் கொடுத்தல். 4. பரிசிலளித்தல். ''பாடிய புலவர்க்குப் பரிசி னீட்டின்று'' (பு.வெ. 3:16, கொளு). 5. காணிக்கை படைத்தல். ''தளிகை நீட்டினதெல்லாம்'' (திருவிருத். 33, ப. 204). 6. நீண்ட பொருளைச் செருகுதல். ''குருதிவாள்... புண்ணு ணீட்டி'' (சீவக. 2293). 7. நீளப் பேசுதல். 8. நீள இசைத்தல். 9. காலந்தாழ்த்தல்.

நீட்டு– நீட்டல் = 1. நீளச்செய்தல். 2. குறிலை நெடிலாக இசைத்தல். ''நீட்டும்வழி நீட்டலும்'' (தொல். எச்ச. 7). 3. நீட்டி யளத்தல். ''முகத்த னீட்டல்'' (நன். 368). 4. தலைமயிரைச் சடையாக வளர்த்தல். ''மழித்தலு நீட்டலும் வேண்டா'' (குறள். 280). 5. பெருங்கொடை (பிங்.).

நீட்டு – நீட்டம் = 1. நீட்டுகை. ''வெள்ளத் தனைய மலர் நீட்டம்'' (குறள். 595). 2. ஓசை நீட்சி. ''நீட்டம் வேண்டின்... கூட்டி யெழூஉதல்'' (தொல். எழுத்து. 6). 3. காலந்தாழ்ப்பு. ''நிலைமை யறிய நீட்ட மின்றி'' (பெருங். மகத. 23:51).

*நீட்டு = 1. நீளவாட்டு. ஆவணம் நீட்டில் மடித்திருந்தது (உ.வ.). 2. நீட்டோலை. ''நீட்டோலை வாசியா நின்றான்'' (மூதுரை, 13). 3. தொலைவு. ''மதுரை நீட்டைந்து கூப்பிடு'' (திருவாலவா. 26:8). நெடுநீட்டு = பெருந்தொலைவு.*

*நீட்டு – நீட்டி. நீட்டித்தல் = 1. நீளச் செய்தல். கம்பியை நீட்டிக்க வேண்டும் (உ.வ.). 2. நீட்டிப் பேசுதல், பேச்சை நீட்டிக்கிறான் (உ.வ.). 3. காலந்தாழ்த்தல். ''தீம்பால் பெருகு மளவெல்லா நீட்டித்த காரணமென'' (கலித். 83). 4. நெடுங்காலம் நிலைத்தல். ''இவ்வுடம்பு நீட்டித்து நிற்கு மெனின்'' (நாலடி. 40).*

*நீள்– நீடு. நீடுதல் = 1. நீளுதல். 2. ஒலி நீளுதல். ''ஒற்றிசை நீடலும்'' (தொல். எழுத்து. 33). 3. பெருகுதல். நீடிய செல்வம்* (W.). *4. மேம்படுதல். ''நிலைமை நீடுத றலைமையோ நன்றே'' (ஞானா. பாயி. 3). 5. காலந்தாழ்த்தல். ''நீடன்மின் வாரு மென்பவர் சொற்போன்றனவே'' (பரிபா. 14:9). 6. நீண்ட நேரம் அல்லது காலம் தங்குதல். ''அளிநீ டளகம்'' (திருக்கோ. 122). 7. நிலைத்தல்.*

***ம.****நீடுக,* ***க.*** *நீடு,* ***தெ.*** *நெகெடு* (g).

*நீடு = 1. நெடுங்காலம். ''நீடுவாழ் கென்பாக் கறிந்து'' (குறள். 1312). 2. நிலைத்திருக்கை, ''நிலமிசை நீடுவாழ் வார்'' (குறள். 3).*

*நீடு – நீடி. நீடித்தல் = 1. நீளுதல். வாழ்நாள் நீடிக்கும் (உ.வ.). 2. நிலைநிற்றல்.*

*நெள்– நெடு = 1. நீண்ட. ''வேனெடுங் கண்கள்'' (சீவக. 1951). 2. பெரிய ''புரவல னெடுங்கடை குறுகிய வென்னிலை'' (பு. வெ. 9:2, கொளு). 3. பெருமை பெற்ற. ''நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானென்'' (மணிமே. 10 : 93). 4. ஆழமான. ''நெடும்புனலுள் வெல்லும் முதலை'' (குறள். 495). 5. உயரமான. ''நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே'' (கம்பர் தனிப்பாடல்). 6. மிகுந்த. ''நெடுமிடல் சாய'' (பதிற். 32 : 10). 7. நீண்டகால நெடும்பகை (உ.வ.). 8. காலந்தாழ்க்கும். ''நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்'' (குறள். 605). 9. புகழ்ச்சியான. ''மாராயம் பெற்ற நெடுமொழி யானும்'' (தொல். புறத். 8).*

*நெடுமை = 1. நீளம். ''குறுமையு நெடுமையு மளவிற் கோடலின்'' (தொல். மொழி. 17). 2. உயரம். ''நெடுமையா லுலகேழு மளந்தாய்'' (திவ். பெரியாழ். 5 : 1 : 4).*

*நெடு – நெடுமன் = 1. நீண்டது. 2. பாம்பு (யாழ். அக.).*

*நெடு – நெடுவல் = நெடிய ஆள் (யாழ். அக.). நெடுமி = 1. நெடியவள் (யாழ்ப்.). 2. ஓங்கி யுயர்ந்த மரம் (யாழ்ப்.).*

*நெடு – நெடுகு. நெடுகுதல் = 1. நீளுதல். 2. ஓங்கி வளர்தல். 3. நீடித்தல். 4. கடந்து போதல். 5. சாதல்* (W.).

*நெடுகு – நெடுக (வி.எ.) = 1. நீளமாக. 2. நேராகத் தொடர்ந்து. நெடுகப்போ (உ.வ.). 3. முழுத் தொலைவும். வழி நெடுக மழை பெய்தது (உ.வ.).*

*நெடுக – நெடுகல் – நெடுகலும் = காலம் முழுதும். நெடுகலும் களவாடியே வந்திருக்கின்றான் (உ.வ.).*

*நெடுகு– நெடுக்கு = 1. நீட்சி. 2. நீளவாட்டு. நெடுக்குச்சுவர் (உ.வ.).*

*நெடுக்கு – நெடுக்கம் = நெடுமை.* **ம.** *நெடுக்கம். நெடுக்கு – நெடுங்கு = நீட்சி.*

*நெடு– நெடுப்பு– நெடுப்பம் = நீட்சி* (W.).

**ம.** *நெடுப்பு,* **தெ.** *நிடுப்பு.*

*நெடுந்தகை = 1. பெரிய மேம்பாடு (பு. வெ. 46). 2. பெரிய மேம்பாட்டாளன் (பு. வெ. 27). 3. பெரிய நிலையையுடையவன் (பு. வெ. 79, கொளு). 4. அளத்தற்கரிய தன்மையை யுடையவன் (பு. வெ. 191).*

*நெடுநெடுத்தல் = மிக நீண்டிருத்தல் (யாழ். அக.). நெடு நெடுகுதல் = மிக நீண்டிருத்தல் (யாழ்ப்.). நெடுநெடெனல் = நெடு வளர்ச்சிக் குறிப்பு. நெடு – நெடி. நெடித்தல் = 1. நீட்டித்தல். 2. காலந்தாழ்த்தல். ''நெடியா தளிமின்'' (சிலப். 16 : 21).*

*நெடி – நெடிப்பு = நெடுநேரம். ''நெடிப்புறச் சானமுற் றிருந்து'' (சேதுபு. பராவசு. 37).*

*நெடிது = காலந்தாழ்த்து. ''நெடிது வந்தன்றா னெடுந்தகை தேரே'' (புறம். 296).*

*நெடியோன் = 1. நெட்டையன். 2. குறள் தோற்றரவில் நெடிதாக வளர்ந்த திருமால். ''செங்க ணெடியோன் நின்ற வண்ணமும்'' (சிலப். 11 : 51). 3. பெரியோன். ''முந்நீர் விழவி னெடியோன்'' (புறம். 9). நெடியன்–* **க.** *நிடியன்.*

*நெடு– நெடில் = 1. நீளம் (திவா.). 2. நீளமானது. 3. நெட்டெழுத்து. ''குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்'' (தொல். செய். 3). 4. பதினைந்து முதல் பதினேழெழுத்து வரை கொண்ட கட்டளை நெடிலடி.*

''மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.'' (தொல். செய். 36)

5. ஐஞ்சீரடி, ''அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்'' (யாப்பருங். 24). 6. மூங்கில். ''நெடில் படுத்த வெங்கானம்'' (வில்லி பா.வேத்.10).

நெடு – நெட்டு = 1. நெடுமை. 2. நெடுந்தொலைவு. ''நெட்டிலே யலையாமல்'' (தாயு. மலைவளர். 2). 3. ஓரிடத்திற்குப் போய்த் திரும்பும் தடவை (W.). 4. உப்பு மேடை (C.G.). 5. செருக்கு. ''நெட்டது செய்ய லாகாது காணும்'' (இராமநா. உயுத். 23). 6. குலை (W.). 7. ஒட்டாரம். ஒரு நெட்டிற்கு நிற்கிறான் (உ.வ.). 8. காம்பு (யாழ்ப்.).

நெட்டு – நெட்டம் = 1. நெடுமை. 2. செங்குத்து.

நெட்டு – நெட்டங்கம் = 1. செருக்கு. அவனை நெட்டங்க முடைக்கிறான் (உ.வ.). 2. பழித்துரை. ''பொட்டான தேவர்களும் நெட்டங்கம் படிப்பாரே'' (இராமநா. உயுத். 82).

நெட்டு – நெட்டாங்கு = 1. நீளவாட்டு. 2. செருக்கு. 3. பழித்துக் காட்டுகை.

நெட்டு – நெட்டில் = மூங்கில் (மலை.).

நெடு – நெட்டை = 1. நெடுமை. ''நெட்டைக் குயவற்கு'' (திருப்பு. 1038). 2. ஒருவகைப் படைக்கலம். (பதிற். 42 : 3, உரை). 3. முழுவெலும்புக் கூடு (சது.).

**க.** நெட்டனெ, **தெ.** நிட்ர.

நெட்டோலை = திருமுகம். ''அமணர் தங்கள்பாற் செல்ல விட்டான் கட்டி நெட்டோலை'' (திருவாலவா. 26 : 2).

நெட்ட நெடுமை = மிகு நீளம். ''அட்டம் வளராது நெட்ட நெடுமை கொண்டன'' (தக்கயாகப். 406, உரை).

நெடு – நடு. நடுதல் = 1. மேனோக்கிய நீளவாட்டில் ஊன்றுதல். ''நடவந்த வுழவரிது'' (தேவா. 133 : 8). 2. அழுந்தவைத்தல். ''திருவடியென் றலைமே னட்டமையால்'' (திருவாச. 40 : 8). 3. நிலைநிறுத்துதல்.

**ம., க.,** நடு, **து.** நட்பினி, **தெ.** நாட்டு.

நடு – நடவு = 1. நாற்றைப் பிடுங்கி நடுகை. ''பேர்த்து நடவு செய்குநரும்'' (திருவிளை. நாட்டுப். 20). 2. நட்ட பயிர். தண்ணீரில்லாமல் நடவு காய்கிறது. (உ.வ.) 3. நடவு கணக்கு (R.T.).

நடு– நட்டு. நட்டுதல் = கல் கம்பு தூண் முதலியவற்றை ஊன்றுதல். ''நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்தியே'' (சிவவாக்கியர் பாடல்).

இச் சொல் சென்னைப் ப.க.க.த. அகரமுதலியில் இல்லை.

நட்டு – நாட்டு. நாட்டுதல் = 1. நிறுவுதல். ''கற்பசு நாட்டி'' (திருவாச. 9 : 3). 2. நிலைநிறுத்துதல். ''சிலப்பதிகார மென்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' (சிலப். பதி. 60). 3. நீடு வாழவைத்தல். 4. படைத்தல். ''மண்ணாட்டுநர் காக்குநர் வீட்டுநர் வந்த போதும்'' (கம்பரா. நகர்நீ. 122). 5. எழுதுதல். ''இவன் நம்முடையான் என்று அங்கே நாட்டு என்று'' (ஈடு, 4 : 5 : 2).

கை நாட்டுதல் = 1. கையெழுத்திடுதல். 2. தற்குறி கீறுதல்.

நெட்டுக்குத்து– நட்டுக்குத்து.

நெட்டு– நட்டு = உப்புக் கொட்டி வைக்கும் மேடை (C.G.). **தெ.** நட்டு.

நீள்– நீர் = நீண்டு செல்லும் புனல். **ம.** நீர், நீரு, **க.** நீர், **தெ.** நீலு.

நீர்– நீரம் = புனல் (பிங்.). நீரம்– **வ.** நீர.

நீர்– ஈர் = ஈரம். ''ஈர்நறுங் கமழ்கடா அத்து'' (கலித். 21). 2. பசுமை. ''இருவெதி ரீர்ங்கழை'' (மலைபடு. 207). 3. நெய்ப்பு. ''ஈர்பெய்யுந் தளிரொடு'' (கலித். 32). 4. இனிமை. ''ஈர்ங்கொடிக்கே'' (திருக்கோ. 28). 5. கரும்பு (மலை.).

நீரம்– ஈரம் = 1. நீர்ப்பற்று. ''ஈரம் புலராக் கரத்தோருக்கு'' (வில்லி பா. திரௌபதி. 97). 2. குளிர்ச்சி (சூடா.). 3. பசுமை. 4. அருள். ''மலைநாட னீரத்துள்'' (கலித். 41). 5. நயனுடைமை. ''எதிர்பெய்து மறுத்த வீரத்து மருங்கினும்'' (தொல். கற்பு. 6). 6. அன்பு. ''ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு'' (மூதுரை, 2).

**ம.**, ஈரம், **க.** ஈர, **தெ.** ஈமிரி.

நீர் = 1. புனல். ''நிலந்தீ நீர்வளி'' (தொல். மரபு. 90). 2. சாறு. ''கரும்பினை... யிடித்துநீர் கொள்ளினும்'' (நாலடி. 156). 3. சிறுநீர். ''இவ்வெல்லையி னீர்பெய்து யான்வரு காறும்'' (பிரமோத். 2 : 50). 4. கடல். ''நீரொலித் தன்ன'' (மதுரைக். 369). 5. ஈரம் (W.). 6. குளிர்ந்த தன்மை. 7. தன்மை. ''அன்ன நீரார்க்கே யுள'' (குறள். 527). 8. நீர்ப்பொருள்.

நீர்– நீர்மை = 1. நீரின் தன்மை (குறள். 195, உரை). 2. சிறந்த தன்மை. ''நீர்மை யுடையார் சொலின்'' (குறள். 195). 3. தன்மை. ''நெடுங்கடலுந்

தன்னீர்மை குன்றும்'' (குறள். 17). 4. அழகு. ''மெய்ந்நீர்மை தேற்றாயே'' (திவ். திருவாய். 2 : 1 : 6). 5. நிலைமை. ''என்னீர்மை கண்டிரங்கி'' (திவ். திருவாய். 1 : 4 : 4).

நீர்நிறம் = நீல்நிறம். ''கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்'' (சிலப். 1 : 116).

நீர்– நீல் = 1. நீலம். ''நீனிற மஞ்ஞையும்'' (சிலப். 12 : 34). 2. கருமை (சூடா.). 3. கருங்குவளை. ''நீலித ழுண்கண்ணாய்'' (கலித். 33 : 28). 4. அவுரி.

நீல்– நீலம் = 1. நீலநிறம் (திவா.). ''நீலத் திரைக்கட லோரத்திலே'' (பாரதியார் பாடல்). 2. நீலச்சாயம். 3. தொண் (நவ) மணிகளுள் ஒன்று (பிங்.). (திருவாலவா. 25 : 18). 4. கருங்குவளை (திவா.). ''நீலமொடு நெய்த னிகர்க்குந் தண்டுறை யூரன்'' (ஐங். 2). 5. நீலமலை (பிங்.). 6. நீல ஆடை. ''பூங்கரை நீலந் தழீஇ'' (கலித். 115). 7. கருமை (திவா.). ''செங்கை நீலக் குஞ்சி நீங்கா தாகலின்'' (மணிமே. 22 :154). 8. கண்ணிலிடும் மை. ''நீல மிட்டகண் மடவியர் மயக்கால்'' (அருட்பா, 2, கருணைபெறாதிரங். 7). 9. இருள் (திவா.). 10. துரிசு (மூ. அக.). 11. நஞ்சு. ''நீறேறு மேனியார் நீலமுண்டார்'' (தேவா. 226 : 9).

நீலம்– **வ.** நீல.

நீலம் – நீலன் = 1. காரி (சனி) (திவா.). 2. கொடியவன். ''நிவர்த்தியவை வேண்டு மிந்த நீலனுக்கே'' (தாயு. பன்மாலை. 6). 3. ஒருவகைச் சம்பா. 4. ஒருவகை மாங்கனி. 6. ஒருவகைக் குதிரை.

நீலா = அவுரி (சங். அக.).

நீலி = 1. காளி (பிங்.). 2. மலைமகள் (பிங்.). ''நீலி யோடுனை நாடொறு மருச்சித்து'' (சிவப். பிரபந். சோண. 55). 3. கொடியவள். 4. பழையனூர் நீலி. ''மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால்'' (சேக். பு. 15). 5. நீலப் பூவகை. 6. அவுரி. 7. கருநொச்சி. 8. துரிசு.

நீலர் = அரக்கர் (நாமதீப. 73).

**2. நிற்றல்**

நீள்– நிள் = நில்.

ஒ.நோ: நெருநாள்– நெருநல்– நெருநற்று– நேற்று.

நெருநல் – நென்னல் – நென்னற்று – நென்னேற்று. நிற்றல் = 1. உடம்பு முழுதும் நெடிதாக நிமிர்ந்திருத்தல். ''நின்றா னிருந்தான் கிடந்தான்'' (நாலடி. 29). 2. மேற்செல்லாதிருத்தல். ''நில்லடா'' (கம்பரா.

*நாகபாச. 73). 3. ஒழுக்கத்தில் உறுதியாயிருத்தல். ''வீடுபெற நில்'' (ஆத்திசூடி). 4. நிலைத்திருத்தல். ''என்வலத்தில் மாறிலாய் நிற்க'' (பெரியபு. கண்ணப்ப. 185). 5. இடங்கொண்டிருத்தல். ''குற்றிய லிகர நிற்றல் வேண்டும்'' (தொல். எழுத்து. 34). 6. வேலை யொழிதல். வேலை நின்றுவிட்டது (உ.வ.). 7. அடங்கி யமைதல். ''சாயவென் கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்ப'' (கலித். 143 : 38). 8. எஞ்சியிருத்தல். ''நின்றதிற் பதினையாண்டு'' (திவ். திருமாலை. 3). 9. காலந்தாழ்த்தல். ''அரசன் அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும்''. 10. நீடித்தல் (பழ.).*

**ம.** *நில்க,* **க.** *நில்.*

*நில் (ஏவல் வினை) = 1. பொறுத்து நிற்றல். நில், வருகிறேன் (உ.வ.). 2. வினைசெய்யாது விடுதல். ''நில்லு கண்ணப்ப'' (பெரியபு. ஆறுமுக. உரைநடை. ப. 97). ''கண்ணப்ப நிற்க'' (பெரியபு. கண்ணப்ப. 183).*

*நில் – நிலம் = 1. நீர்போல் நீண்டோடாது ஒரேயிடத்தில் நிற்கும் பூதவகை. ''நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்'' (தொல். மரபு. 90). 2. நிலத்தின் புறணி. ''நிலந்தினக் கிடந்தன நிதி'' (சீவக. 1471). 3. மண். ''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்'' (குறள். 452). 4. நன்செய் அல்லது புன்செய். ''செல்லான் கிழவ னிருப்பின் நிலம்புலந்து'' (குறள். 1039). 5. மேன்மாடம் அல்லது மேல்தளம். ''பல நிலமாக அகத்தை யெடுக்கும்'' (ஈடு, 4 : 9 : 3). 6. நீரும் நிலமுஞ் சேர்ந்த ஞாலம். ''நிலம்பெயரினு நின்சொற் பெயரல்'' (புறம். 3). 7. நிலத்திலுள்ளார். ''நிலம் வீசும்... குன்றனைய தோள்'' (சீவக. 287). 8. நிலமகள். 9. நாடு. ''செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி'' (தொல். எச்ச. 2). 10. நிலத்துண்டு. ''நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து'' (தொல். சிறப்புப் பா.). 11. யாப்பின் நிலைக்களம்.*

*''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே*
*அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்'' (தொல். செய். 78)*

*12. செய்யுளடி யெழுத்து. ''மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்'' (தொல். செய். 49). 13. எழுத்தசை சீரென்னும் இசைப்பாட்டிடம். ''நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும்'' (மணிமே. 28 : 42). 14. இடம். ''நிலப்பெயர்'' (தொல். பெயர். 11). 15. வரிசை. ''கற்றுணர்ந் தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்'' (நாலடி. 133). 16. புலனம் (விடயம்). ''அவதார ரகசியம் ஒருவர்க்கும் அறிய நிலமல்ல'' (ஈடு, 1 : 3 : 11).*

**ம.** *நிலம்,* **க.** *நெல,* **தெ.** *நேல.*

*நில்– நில– நிலவு. நிலவுதல் = 1. நிலைத்திருத்தல். ''யாரு நிலவார் நிலமிசை மேல்'' (நாலடி. 22). 2. தங்குதல். ''இறுதியு மிடையும்... நிலவுதல்'' (தொல். வேற். மயங். 20). 3. வழங்குதல். ''நிலவு மரபினை யுடையது''*(W.).

*நில்– நிலை = 1. நிற்கை. ''பணைநிலை முனைஇ'' (புறம். 23). 2. உறுதி. ''நீக்கமு நிலையும்'' (திருவாச. 3 : 9). 3. நிலைமை. ''நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும்'' (நாலடி. 248). 4. தன்மை. ''திருந்துநிலை யாரத்து'' (பெரும்பாண். 46). 5. தங்குமிடம். ''நெடுந்தேர் நிலைபுகுக'' (பு.வெ. 6 : 2). 6. இடம். ''நின்னிலைத் தோன்றும்'' (பரிபா. 2 : 27). 7. கதவுநிலை. ''ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை'' (நெடுநல். 86). 8. மாடியடுக்கு. ''எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்க'' (நறுந். 54). 9. மரபுவழி யுரிமை. ''தன்பாட்டன் நிலையாய் வருகிற காணி''* (S.I.I.II, 310). *10. வில்மறவன் நிற்கும் வகை (மடக்கு, மண்டலம், முன்வலம், பின்வலம்). 11. ஓராள் நிற்கக் கூடிய நீராழம். ''நீர்நிலை காட்டுங் காலத்து'' (பெரும்பாண். 273). 12. ஒழுக்க நெறி. ''நிலையிற் றிரியாதடங்கியான் றோற்றம்'' (குறள். 124). 13. வாழ்க்கை நிலை. ''பிரமசரிய முதலிய நிலைகளினின்று'' (குறள். பரிமே. உரைப்பா.). 14. குலம். ''காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை'' (கல்லா. 45 : 20). 15. நிலைத்த தொழில். 16. ஒட்டாரம். 17. அமையம். 18. வளர்ச்சிப் படி* (stage).

**ம.** *நில,* **க.** *நெலெ,* **தெ.** *நெலவு.*

*நிலை – நிலையம் = 1. தங்குமிடம். 2. உறைவிடம். ''நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினான்'' (கம்பரா. கிளை. 55). 3. கோயில். ''நல்லூ ரகத்தே திண்ணிலையங் கொண்டு நின்றான்'' (தேவா. 414 : 5). 4. தொடர்வண்டி நிற்குமிடம்.*

*வடமொழியாளர் திருட்டுத்தனமாகவும் ஏமாற்றுத்தன மாகவும் நிலையம் என்னும் தென்சொல்லை நி + லயம் என்று பகுத்து, ஓரிடத்தொடு ஒன்றிப் போதல் என்று பொருள் கூறி, வடசொல்லாகக் காட்டுவர். அம் முறையையே பின்பற்றிச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலியும் நிலயம் என்னும் தவற்று வடிவையே மேற்கொண்டுள்ளது.*

*நிலைதல் = நிற்றல். 'உம்மை நிலையு மிறுதி யான'' (தொல். உருபியல், 7).*

*நிலைத்தல் = 1. நிற்றல். 2. உறுதிப்படுதல். 3. நீடித்தல். 4. மாறாதிருத்தல். 5. என்று மிருத்தல். 6. நீர்மட்டம் ஆளள விருத்தல். ''தண்ணீர் ஆளுக்கு நிலைக்குமா?'' (உ.வ.).*

*நிலைப்பு = 1. மாறாதிருக்கை. 2. என்றுமிருக்கை.*

*நிலைமை = 1. படித்திறம். ''பண்பு மேம்படு நிலைமையார்'' (பெரியபு. திருநீலநக். 23). 2. இயல்பு. ''வலியி னிலைமையான் வல்லுருவம்'' (குறள். 273). 3. நிற்குநிலை. 4. உறுதி ''நிலையி னெஞ்சத்தான்'' (நாலடி. 87). 5. வாழ்வுநிலை. 6. உடல்நிலை. 7. உளநிலை.*

*நிலையுதல் = நிலைபெறுகை. ''தோற்ற முடையன யாவும் நிலையுத லிலவாந் தன்மை'' (குறள். அதி. 34, உரைத் தோற்றுவாய்).*

*நிலை– நினை. நினைத்தல் = ஒன்றை மனத்தில் நிலைக்கச் செய்தல்.*

*''பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை*
*மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு*
*நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே'' (கலித்.9)*

*என்னும் 9ஆம் கலித்தாழிசை யீற்றடி முதற்சீர், ''நிலையுங்கால்'' என்றும் பாட வேறுபாடு கொண்டிருந்திருக்கலாம்.*

*நில்– நிற்பு = நிற்றல்.*

*நிற்பு = நிற்பாட்டு. நிற்பாட்டுதல் = 1. நிறுத்திவைத்தல்.*

*நில்– நிற்றம். ஒ.நோ: வெல்– வெற்றம், கொல்– கொற்றம்.*

*நிற்றம் = நிலைப்பு. நிற்றம்– நிற்றல்.*

*நிற்றலும் = நிலையாக, என்றும், எந்நாளும், ''குணபத் திரன்றாள் நிற்றலும் வணங்கி'' (சூடா. 7 : 76).*

*நிற்றம்– நிச்சம். ஒ.நோ.: முறம்– முற்றில்– முச்சில்.*

*நிச்சம் = என்றும், எப்போதும். ''நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப'' (தொல். களவு. 8).* **பிரா.** *நிச்சம்.*

*நிற்றல்– நிச்சல் = எப்போதும், எந்நாளும். ''நிச்ச லேத்து நெல்வாயி லார்தொழ'' (தேவா. 21 : 3).*

**க.** *நிச்சல்,* **தெ.** *நிச்சலு.*

*நிச்சல் – நிச்சலும் = எப்போதும், எந்நாளும். ''நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய'' (திவ். திருவாய். 1 : 9 : 11).*

**க.** *நிச்சலும்.*

*நிச்சம்– நித்தம். ஒ.நோ: நச்சு– நத்து.*

*நித்தம் = 1. என்றும் (கு.வி.எ.). ''நித்த மணாளர் நிரம்ப வழகியர்'' (திருவாச. 17 : 3). 2. என்றுமுள்ள நிலை (பெ.). ''நேரி னித்தமு மொட்டின னாகுமே'' (மேருமந். 652).*

*நித்தமணாளர் என்பது குறிப்புப் பெயரெச்சத் தொடருமாம். நித்தம் – நித்த. ஒ.நோ : பித்தம் – பித்த.*

*நித்த = என்றுமுள்ள.*

*நித்தம் –* **வ.** *நித்ய.*

*நித்தக்கட்டளை, நித்தக்கத்தரி, நித்தக்கருமம், நித்தக்காய்ச்சல், நித்தப்படிகாரன் என்பன தூய தென்சொற்றொடர்களே.*

*நிச்சல் – நித்தல் = எப்போதும், எந்நாளும். ''நித்தல் பழி தூற்றப்பட்டிருந்தது'' (இறை. கள. 1 : 14).*

*நித்தல் விழா = நாள்தொறும் நிகழும் விழா. ''நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே'' (சிலப். உரைபெறுகட். 4).*

*நித்தலழிவு = நாட்படிச் செலவு.* (S.I.I.III, 298).

*நிச்சலும் – நித்தலும் = எந்நாளும். ''உமை நித்தலுங் கைதொழுவேன்'' (தேவா. 825). உம்மை முற்றும்மை.*

*நித்தம் – நித்தன் = 1. கடவுள். 2. சிவபிரான் (பிங்.). 3. அருகன் (பிங்.).*

*ஒ.நோ: பித்தம் – பித்தன்.*

*நிற்றம், நிச்சம், நித்தம் என்னும் மூவடிவுகளுட் கடைப்பட்ட நித்தம் என்னும் வடிவினின்று, நித்ய என்னும் வடசொல்லைத் திரித்துக்கொண்டு, அதையே முத்தென்சொல் வடிவிற்கும் மூலமாகக் கூறி ஏமாற்றி வருகின்றனர் வடமொழியாளர். இதற்கு ஏதுவானது, ஏமாறுந்தன்மை மிக்க தமிழரின் பேதைமையே.*

*என்று முண்மைக் கருத்தைத் தோற்றுவித்தற்கு நிலைப்புக் கருத்தே பொருத்தமானது. வடமொழியாளர் கீழ், பின், உள் என்று பொருள்படும் 'நி' என்னும் முன்னொட்டை மூலமாகக் கொண்டு, ஒன்றன் உட்பட்டது, ஒன்றோடு தொடர்புள்ளது, தொடர்ந்தது, நீடித்தது, நிலைத்தது என்று கருத்துத் தொகுத்து, நித்ய என்னும் சொற்குப் பொருட்கரணியங் காட்டுவர். இதன் பொருந்தாமையை இனிமேலாயினுங் கண்டு தெளிக.*

*பிராமணன் நிலத்தேவன், சமற்கிருதம் தேவமொழி என்னும் மூடநம்பிக்கையையே அடியோடு விட்டொழிக.*

*நில்– நிலு– நிலுவை = 1. தங்குகை. ''நோயு நிலுவை கொண்டது'' (திருப்பு. 1111). 2. கட்டண எச்சம்* (arrears). *''ஏது குடி நிலுவை'' (பணவிடு. 169).* ***ம.*** *நிலவு,* ***தெ.*** *நிலுவ.*

*நிலு– நிறு. நிறுத்தல் = 1. நிற்கச் செய்தல். 2. எடை நிற்கச் செய்தல். 3. துலை தூக்கி எடைபார்த்தல். 4. தீர்மானித்தல். ''நாள்வரை நிறுத்து'' (கலித். 31 ៖ 23). 5. அமைத்தல். ''காமர்சாலை தளிநிறுமின்'' (சீவக. 306). 6. வைத்தல். ''நிறுத்த முறையானே'' (நன். 109, மயிலை.).*

***ம.*** *நிறுக்க. நிறுப்பான் = 1. துலாக்கோல் (பிங்.). 2. துலை யோரை (திவா.).*

*நிறு– நிறுவை = 1. எடை பார்ப்பு, எடை.*

*நிறு – நிறை = 1. நிறுக்கை (பிங்.). 2. எடையளவை. ''காவெ னிறையும்'' (தொல். தொகை. 27). 3. நூறு பலங்கொண்ட அளவை (சூடா.). 4. துலாக்கோல் (பிங்.). 5. துலையோரை (திவா.).*

*நிறைகோல் = துலாக்கோல்.*

*நிறு – நிறுத்து. நிறுத்துதல் = 1. நிற்கச் செய்தல். 2. நிமிர்ந்து நிற்கச் செய்தல். ''வெயில்வெரின் நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை'' (அகம். 37). 3. நிலைநாட்டுதல். நீ தான் என் குடும்பத்தை நிறுத்த வேண்டும் (உ.வ.). 4. மனத்தை ஒரு நிலையில் இருத்துதல். 5. மேற் செல்லாதிருக்கச் செய்தல். 6. தள்ளிவைத்தல். 7. வாசிக்கும் போதும் பாடும்போதும் உரிய விடங்களில் நிறுத்தல் செய்தல். 8. விலக்குதல். என் வேலைக்காரனை நிறுத்திவிட்டேன் (உ.வ.). 9. தொழில் அல்லது வினை செய்யா தொழிதல். அவர் வணிகத்தை நிறுத்திவிட்டார், அவன் கட்குடிப்பதை நிறுத்திவிட்டான் (உ.வ.). 10. விளக்கை யவித்தல். 'விளக்க மெய்யிற் காற்றினா னிறுத்தி'' (உபதேசகா. சிவத்துரோ. 492).*

***ம.*** *நிறுத்துக,* ***க.*** *நிறிசு.*

*நிறுத்து– நிறுத்தம் = 1. நிறுத்துகை. 2. நிறுத்துமிடம்.*

*நிறுத்தி வைத்தல் = ஒத்திவைத்தல்.*

*நிலைநிறுத்தல் = நிலையாக நாட்டல்.*

*நிறு – நிறுவு, நிறுவுதல் = 1. நிறுத்துதல். மறைமலையடிகளை நினைவுகூர ஒரு படிமை நிறுவப்பட்டது (உ.வ.). 2. நாட்டுதல். ''தம்புகழ் நிறீஇ'' (புறம். 18).*

*நிறுவு – நிறுவனம் = தொழிற்சாலை, கல்விச்சாலை, ஆராய்ச்சிக்கூடம் முதலியவற்றின் தோற்றுவிப்பு அல்லது அமைப்பு* (establishment).

*நிறுவனம் – நிறுவனர் = ஓர் அமைப்பைத் தோற்றுவித்தவர்* (Founder).

***3. நடத்தல்***

*நெடு – நெட – நட. நடத்தல் = 1. நிற்கும் இடத்தைவிட்டு நீளுதல்போற் காலடி வைத்துச் செல்லுதல். ''காளைபின் நாளை நடக்கவும் வல்லையோ'' (நாலடி. 398). 2. பரவுதல். ''குரையழல் நடப்ப'' (பு. வெ. 1 : 8). 3. ஒழுகுதல். வேலைக்காரன் வீட்டுத் தலைவனிடம் பணிவாய் நடந்துகொள்ள வேண்டும் (உ.வ.). 4. நிகழ்தல். திருவிழா என்றைக்கு நடக்கும்? (உ.வ.). 5. நிறைவேறுதல். உன் வஞ்சினம் (சபதம்) நடக்கவில்லை (உ.வ.). அது நடக்கிற கருமமா? (உ.வ.). 6. நிகழ்ந்து வருதல். எழுத்தாளர் அதிகாரம்தான் இன்று நடக்கிறது (உ.வ.).*

***ம.*** *நடக்க,* ***க.*** *நடெ,* ***தெ.*** *நடுச்சு,* ***து.*** *நடப்புனி.*

*நட – நடக்கை = 1. செல்கை. 2. வழக்கம். ''ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்'' (தொல். புறத். 36). 3. ஒழுக்கம். நன்னடக்கைத் தகுதித்தாள் வாங்கிக்கொண்டு வா (உ.வ.). 4. நிகழ்ச்சி.*

***ம.*** *நட.*

*நட – நடத்தை = 1. ஒழுக்கம். அவன் நடத்தை சரியாயில்லை (உ.வ.). 2. இயல்பு.*

***ம.*** *நடத்த,* ***தெ.*** *நடத்த,* ***க.*** *நடத்தெ.*

*நட – நடப்பு. 1. நடத்தை. 2. கருமம் நிகழ்ந்துவரும் முறை. நடப்பு எப்படி யிருக்கிறது? (உ.வ.). 3. இற்றை நிகழ்ச்சி. நடப்புச் செய்தி என்ன? (உ.வ.). 4. அவ்வப்போது நிகழ்வது. நடப்புக் கணக்கு* (Current Acount). *5. அடுத்த ஆண்டு. நடப்பிற்குப் பார்த்துக் கொள்ளலாம் (உ.வ.). 6. அடுத்துவரும் சுறவ (தை) மாதம். ''நடப்பிற்குக் கலியாணம், கழுத்தே சும்மாவிரு'' (உ.வ.). 7. காமத் தொடுப்பு. 8. இறுதிச் சடங்கிற்கு முந்தின நாள் கல்நடுகை. 9. தாலி வாங்குகை (யாழ்ப்.). 10. குறிக்கோள். ''ஊதியமாகிய நடப்பின் மேலே'' (சீவக. 770, உரை).* ***ம., து*** *நடப்பு.*

*நட – நடவை = 1. வழி. கான்யாற்று நடவை (மலைபடு. 214). 2. கடவைமரம்* (turnstile) *(பிங்.). 3. வழங்குமிடம். ''தலைமை வளர் தமிழ் நடவை யெல்லை'' (சேதுபு. திருநாட். 1). 4. திட்டம். ''நல்வரங்கொளு நடவையொன் றியம்புவேன்'' (சேதுபு. மங்கல. 69).*

***தெ.*** *நடவ,* ***க.*** *நடவெ.*

நட – நடம். நடமாடுதல் = 1. உலாவுதல். 2. நோய் நீங்கி நடந்து செல்லுதல். 3. அடைபட்டிருந்து வெளிவருதல். 4. தீயவர் திரிதல். இங்கு இரவில் திருடர் நடமாடுகின்றனர் (உ.வ.). 5. வழங்குதல். இன்று கள்ளப்பணம் நடமாடுகிறது (உ.வ.). 6. பரவிவருதல்.

**தெ.** நடயாடு.

நடமாட்டம் = 1. நடந்து செல்கை. அவன் பாயும் படுக்கையுமா யிருக்கிறான். ஒருமாதமாய் நடமாட்டமில்லை (உ.வ.). 2. வழங்குகை.

**தெ.** நடையாட்ட.

நட – நடை = 1. நடந்து செல்கை. ''கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்'' (நாலடி. 13). 2. கோள்களின் செலவு. 3. நடைவேகம். ''விடைபொரு நடையினான்'' (கம்பரா. எழுச்சி. 10). 4. வழி (பிங்.). 6. வாசலையடுத்த உட்பக்கம். 7. இடைகழி. ''அரக்கர் கிடைகளு நடைகளும்'' (இராமநா. சுந். 3). 8. கப்பலேறும் வழி. 9. சாலையோர நடைவழி. 10. அடி. ''பகட்டாவீன்ற கொடுநடைக் குழவி'' (பெரும்பாண். 243). 11. நடவை. மூன்று நடை தண்ணீர் எடுத்தேன், மணல் வண்டி எத்தனை நடை வந்தது? (உ.வ.). 12. ஒழுக்கம். 13. ஒழுக்க நூல். ''நன்றாக நடைபலவும் நவின்றார் போலும்'' (தேவா. 722 : 11). 14. இயல்பு ''என்றுங் கங்குலா நடைய தோரிடம்'' (சேதுபு. கந்தமா. 69). 15. வழக்கம். 16. தொழில். ''மாயோனிகளாய் நடைகற்ற வானோர் பலரும்'' (திவ். திருவாய். 1 : 5 : 3). 17. வாழ்க்கை நடப்பு. ''நடைப்பரிகாரம்'' (சிறுபாண். 104). 18. அன்றாடப் பூசை. ''நடையும் விழவொடு நாடொறு மல்குங் கழுமலத்துள்'' (தேவா. 152 : 8). 19. சொற்றொடரமைப்பு வகை. ''ஒன்றல்லவை பல தமிழ்நடை'' (காரிகை. செய். 4, உரை). தூய தமிழ்நடையைப் புதுப்பித்தவர் மறைமலையடிகள் (உ.வ.).

**ம.** நட, **தெ.** நட, **க.** நடெ.

நட – நடத்து. நடத்துதல் = 1. நடக்கச் செய்தல். 2. நடத்திச் செல்லுதல். 3. நிகழ்த்துதல். 4. மேற்பார்த்தல். 5. பிறரிடம் ஒழுகுதல். ஆசிரியர் மாணவரை அன்பாய் நடத்துவார் (உ.வ.). 6. கற்பித்தல். ஆசிரியர் இன்று மூன்று பாடம் நடத்திவிட்டார் (உ.வ.). 7. ஆண்டு நடத்துதல். கூட்டத்தை நடத்துகிறவர் யார்?

**ம.** நடத்துக, **க.** நடசு.

நடத்து – நடாத்து. ஆங்கில அரசர் இரு நூறாண்டு இந்தியாவிற் செங்கோல் நடாத்தினர்.

நட – நடவு. நடவுதல் = 1. கருமம் நடத்துதல். 2. ஏவுதல், செலுத்துதல். ‘‘கணையினை நடவி’’ (விநாயகபு. 80 : 704).

**தெ.**, க. நடப்பு, **து.** நடப்பாவுனி.

நடவு – நடாவு. நடாவுதல் = 1. நடாத்துதல். ‘‘இருளால் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்’’ (திவ். இயற். திருவிருத். 33).

நடைபடி = 1. நடத்தை. 2. வழக்கம். 3. அறமன்ற நடபடிக்கை.

நடைபடிகள் = செயல்கள்.

நடைபடிகள் – நடபடிகள் = செயல்கள். ‘‘அப்போஸ்தலர் நடபடிகள்’’ (விவிலியம்).

நடபடி – நடபடிக்கை = அறமன்றச் செயல்.

நடபடி = 1. நிகழ்ச்சி. 2. வழக்கம். 3. நடபடிக்கை. **ம.** நடபடி.

நடபடி – நடவடி = நடபடிக்கை.

**ம., து.** நடவடி.

நடபடிக்கை – நடவடிக்கை = 1. நடத்தை. 2. செயல். 3. அறமன்ற வழக்குத் தீர்ப்புச் செயல்.

**க.** நடபடிக்கெ, **து.** நடபாட.

## 6

## நுல்[6] (பொருந்தற் கருத்துவேர்)

*நுல்– நல்– நள்.*

*நள்ளுதல் = 1. சேர்தல் ''உயர்ந்தோர் தமைநள்ளி'' (திருவானைக். கோச்செங். 25). 2. செறிதல். ''நள்ளிருள் யாமத்து'' (சிலப். 15 : 105). 3. நட்புச் செய்தல். ''உறினட் டறினொரூஉம்'' (குறள். 812). 4. விரும்புதல். ''நள்ளா திந்த நானிலம்'' (கம்பரா. கைகேசி. 26).*

*நள்ளி = உறவு (சூடா.).*

*நள்(ளு) = மருங்கு (யாழ். அக.).*

*நள்ளுநர் = நண்பர் (திவா.). நள்ளார் = பகைவர். ''நள்ளார் பெரும்படை'' (கம்பரா. அதிகாயன். 219).*

*நள்– நளி. நளிதல் = 1. ஒத்தல். ''நாட நளிய நடுங்க நந்த'' (தொல். உவம. 11). 2. செறிதல். ''நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்'' (மலைபடு. 197). 3. பரத்தல். ''நளிந்த கடலுள் திமிறிரை போல்'' (களவழி. 18).*

*நளி– நளிய– ஓர் உவமவுருபு (தொல். 1232).*

*நளிவு = 1. செறிவு. ''நளியென் கிளவி செறிவு மாகும்'' (தொல். உரி. 25). 2. கூட்டம் (பிங்.). 3. பெருமை. ''தடவுங் கயவும் நளியும் பெருமை'' (தொல். உரி. 22). 4. அகலம். ''நளிகடற் றண்சேர்ப்ப'' (நாலடி. 166). 5. செருக்கு. ''விந்தகிரி நளிநீக் கென்றான்'' (சேதுபு. அகத். 3). 6. குறிப்பு. 7. பழிப்பு. 8. நகையாட்டு. அவன் எப்போதும் நளி பேசிக்கொண்டிருப்பான் (நாஞ். வ.).*

*நளி– நளம் = அகலம் (சது.).*

*நள்– நட்பு = 1. நேயம். ''அகநக நட்பது நட்பு'' (குறள். 786). 2. காதல். ''நின்னொடு மேய மடந்தை நட்பே'' (ஐங். 297). 3. உறவு (பிங்.). 4. நண்பன். 5. சுற்றம் (சூடா.).*

நள்– நண். நண்ணுதல் = 1. கிட்டுதல். ''நம்பனையுந் தேவனென்று நண்ணுமது'' (திருவாச. 12 : 17). 2. பொருந்துதல்.

நண்ணுநர் = நட்பினர் (பிங்.).

நண்ணார் = பகைவர். ''நண்ணாரு முட்குமென் பீடு'' (குறள். 1088). **ம.** நண்ணார்.

நண்மை = அண்மை. ''நட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்'' (புறம். 380 : 11).

நண்பு = நட்பு. ''நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்'' (குறள். 998). 2. அன்பு. ''எம்மானே நண்பே யருளாய்'' (திருவாச. 44 : 3). 3. உறவு (பிங்.).

**ம., க.** நண்பு, **தெ.** நனுப்பு.

நண் – நணி = அண்மையான இடம். ''திரையொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்'' (புறம். 154).

நண் – நணுகு. நணுகுதல் = 1. கிட்டுதல். ''நானணுகு மம்பொன் குலாத்தில்லை'' (திருவாச. 40 : 6). 2. ஒன்றிக் கலத்தல். ''நம்புமென் சிந்தை நணுகும் வண்ணம்'' (திருவாச. 40 : 6).

நணுகார் = பகைவர்.

நணுகு – நணுங்கு. நணுங்குதல் = நெருங்கிக் கலத்தல். ''சுரும்பினங்கள்... நரம்பென வெங்கு நணுங்க'' (ஏகாம். உலா. 276).

நளி– நடி. ஒ.நோ : களிறு – கடிறு.

நடித்தல் = 1. ஒத்து நடத்தல். 2. கூத்தாடுதல். ''நடிக்குமயி லென்னவரு நவ்விவிழி யாரும்'' (கம்பரா. வரைக்காட்சி. 15). 3. வடிவெடுத்தல். ''நடித்தெதிர் நடந்த தன்றே'' (இரகு. ஆற்று. 20). 4. நாடகமாடுதல். 5. பாசாங்கு செய்தல். ''நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து'' (திருவாச. 41 : 3).

நடி = ஆட்டம். ''நடிகொள் நன்மயில் சேர்திரு நாரையூர்'' (தேவா. 216 : 5).

நடிகன் = நாடக மேடையில் நடிப்பவன். நடிகன்– **வ.** நடிக.

நடிகை = நாடக மேடையில் நடிப்பவள். நடிகை– **வ.** நடிகா.

நடி – நடம் = தாண்டவம். ''இரத முடைய நடமாட் டுடையவர்'' (திருக்கோ. 57).

நடம்– **வ.** நட (நட்ட).

நடன்– நடி = நடனப்பெண் (திவா.).

நடி – **வ.** நடீ (நட்டீ).

நடம்– நட்டம் = நடனம். ''நட்டம் பயின்றாடு நாதனே'' (திருவாச. 1 : 89).

நட்டம்– **வ.** நாட்ய, ந்ருத்த; **பிரா.** நட்ட.

நட்டம்– நட்டவம் = நடம்பயிற்றுந் தொழில். ''நட்டவஞ் செய்ய நட்டவம் ஒன்றுக்கு''(S.I.I.II, 274).

நட்டவம்– நட்டுவம் = நடம்பயிற்றுந் தொழில்.

**தெ.** நட்டுவ.

நட்டுவம்– நட்டுவன் = நடம் பயிற்றுவோன், ஆட்டு விப்போன். ''உயிரையெல்லா மாட்டுமொரு நட்டுவனெம் மண்ணல்'' (திருவாதபு. புத்தரை. 75).

**ம.** நட்டுவன், **தெ.** நட்டுவுடு, **க.** நட்டுவ.

நட்டுவம்– நட்டு = 1. நடம். 2. நடன். 3. நட்டுவன். இனி, நட்டம்– நட்டு– நட்டுவம் என்றுமாம். ஒ.நோ: முட்டு– முட்டுவம்– முட்டுவன்.

நடி + அனம் – நடனம் = 1. கவின்கூத்து. 2. குதிரை நடை. ''பதினெட்டு நடனத்தொழில் பயிற்றி'' (கொண்டல்விடு. 176). 3. பாசாங்கு. 4. மாமாலம் (இந்திரசாலம்). ''நன்றுநன்றுநீ நம்முனர்க் காட்டிய நடனம்'' (கந்தபு. அவைபுகு. 87).

நடனம்– **வ.** (நட்டன) நடன.

நடனம்– நடனன் = கவின்கூத்தன்.

நடனன் – நடனி = கவின் கூத்தி. ''நடித்தெதிர் நடந்த தன்றே நடனியர் தம்மின் மன்னோ'' (இரகு. ஆற்று. 20).

நடி – அகம் = நாடகம் = 1. நடம் (பிங்.). 2. கதை தழுவி வருங் கூத்து.

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்'' (தொல். அகத். 53)

நாடகம்– **வ.** நாடக (நாட்டக).

நளி– நளினம் = 1. நயச்சொல். ''பயிலு மானவர் பேச னளினமே'' (சேதுபு. திருநா. 115). 2. நகையாட்டு. 3. முகமன்.

நள் – நய் – நய. நயத்தல் = 1. விரும்புதல். ''பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று'' (குறள். 150). 2. அன்பு செய்தல் (சூடா.). 3. விருப்பூட்டுதல். 4. மகிழ்தல். ''வல்லை மன்றநீ நயந்தளித்த'' (புறம். 59). 5. பாராட்டுதல். ''நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்'' (பத்துப். நச். உரைச்சிறப்.). 6. கெஞ்சுதல். 7. இணங்கிப்போதல். 8. இனிமையுறுதல். ''நஞ்சினுங் கொடிய நாட்ட மமுதினு நயந்து நோக்கி'' (கம்பரா. பூக்கொய். 7). 9. மேம்படுதல். 10. மலிவாதல். இவ்வாண்டு தவசம் நயத்துவிட்டது.

நய– நயம் = 1. விருப்பம். 2. அன்பு. ''நயந்தலை மாறுவார் மாறுக'' (கலித். 80). 3. தெய்வப்பற்று. ''பஃறெளியு நயங்கொண்டு பணிந்தேத்தி'' (தணிகைப்பு. பிரமன். 54). 4. நன்மை. ''நயமுணராக் கையறியா மாக்கள்'' (நாலடி. 163). 5. பணிவொழுக்கம். ''சான்றோரை நயத்திற் பிணித்து விடல்'' (நான்மணி. 12). 6. பயன். ''நல்வினை யுந்நயந் தந்தின்று.'' (திருக்கோ. 26). 7. இனிமை. ''நாரத முனிவர்க் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்'' (கம்பரா. கும்பகரு. 1). 8. மிகுதி. 9. மேம்பாடு. 10. மலிவு. காய்கறி விலை நயமாயிருக்கிறது (உ.வ.). 11. நேர்த்தி. 12. நேர்மை.

**க.**, **து.** நய, **தெ.** நயமு.

நயம்– நயன் = 1. நன்மை. 2. ஒப்புரவு. ''நயனுடை யான்கட் படின்'' (குறள். 216). 3. நேர்மை. ''நயன்சாரா நன்மையின் நீக்கும்'' (குறள். 194).

நயப்பு = 1. விருப்பு, அன்பு. ''நல்லாளொடு நயப்புற வெய்தியும்'' (திருவாச. 2:12). 2. பாராட்டு. 3. இன்பம். ''நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின'' (கம்பரா. கரன்வதை. 47). 4. நன்மை. 5. மேம்பாடு. 6. மலிவு.

நய– நச– நசை. நசைதல் = 1. விரும்புதல். ''எஞ்சா மண்ணசைஇ'' (மணிமே. 19:119). 2. அன்பு செய்தல். ''நசைஇயார் நல்கா ரெனினும்'' (குறள். 1199).

நசை = 1. ஈரம் (W.). 2. அன்பு. ''நசையிலார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்'' (திரிகடு. 94). 3. ஆசை. ''நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய'' (புறம். 15). 4. நம்பிக்கை. ''அரிதவர் நல்குவ ரென்னு நசை'' (குறள். 1156). **ப.க.** நசெ.

நசை = நண்பர் (பிங்.).

நச – நசு – நச்சு. நச்சுதல் = விரும்புதல். ''நச்சப் படாஅ தவன்'' (குறள். 1004). **க.** நச்சு.

நச்சு– நெச்சு.

நச்சு– நத்து. நத்துதல் = விரும்புதல். ''நாரியர் தாமறிவர் நாமவரை நத்தாமை'' (தமிழ்நா. 74).

நத்து– நெத்து.

நசுநாறி = பிசினாறி.

நுள்– நிள்– நிர்– நிர. நிரத்தல் = (செ.கு.வி.) 1. நெருங்குதல். ''கொண்மூக் கூடி நிரந்து'' (ஐந். ஐம். 5). 2. கலத்தல். ''நித்திலத் தொத்தொடு நிரைமலர் நிரந்துந்தி'' (தேவா. 332 : 9). 3. பரத்தல். ''நிரந்த பாய்மா'' (சீவக. 1859). 4. நிரம்புதல். ''பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை'' (தேவா. 194 : 9) 5. ஓர்மைப்படுதல். இருபகை வரும் நிரந்து போயினர் (உ.வ.).

1. (செ.குன்றாவி.) ஒழுங்குபடுத்துதல். ''நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்'' (குறள். 648). 2. சமபங்கிட்டளித்தல். எல்லார்க்கும் நிரந்து கொடு (உ.வ.). **தெ.** நெரயு.

நிர– நிரல் = 1. வரிசை. ''நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு'' (தொல். செய். 168). 2. ஒப்பு. ''நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென'' (புறம். 345).

**ம.** நிர, **க.**, **து.** நிறுகெ.

நிரலுதல் = ஒழுங்குபடுதல். ''நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு'' (தொல். செய். 170).

நிர– நிரை. நிரைதல் = 1. (செ.குன்றாவி.) ஓலை முதலிய வற்றை வரிசையாக வைத்து மறைத்தல். வீட்டைச்சுற்றி நிரைந் திருக்கிறது (உ.வ.). 2. முடைதல். வீடுவேயக் கிடுகு நிரைகிறார்கள் (உ.வ.) 3. ஒழுங்குபடுத்துதல். 4. நிரப்புதல்.

(செ.கு.வி.) 1. வரிசையாதல். 2. முறைப்படுதல். 3. திரளுதல். ''நிரைவிரி சடைமுடி'' (தேவா. 994 : 9).

நிரை– நிரைசல் = ஓலை முதலியவற்றால் அடைக்கும் அடைப்பு. ப.க. நெரக்கெ.

நிரை = 1. வரிசை. ''நிரைமனையிற் கைந்நீட்டும் கெட்டாற்று வாழ்க்கையே நன்று'' (நாலடி. 288). 2. ஒழுங்கு (சூடா.). 3. கூட்டம். ''சிறுகட் பன்றிப் பெருநிரை'' (அகம். 94). 4. ஆன்மந்தை. ''கணநிரை கைக்கொண்டு'' (பு.வெ. 1:9). 5. குறிலிணையும் குறினெடிலும் ஒற்றடுத்தும் ஒற்றடாதும் இணைந்தொலிக்கும் செய்யுளசை.

**ம.** நிர, **க.** நிறி, **தெ.** நெரி.

நிர– நிரவு. நிரவுதல் = (செ.கு.வி.) 1. வரிசையா யிருத்தல். ''நிரவிய தேரின் மேன்மேல்'' (கம்பரா. முதற்போர். 151). 2. பரவுதல். ''பார்முழுதும் நிரவிக் கிடந்து'' (தேவா. 152 ፡ 9). 3. சமனாதல் (W.)

(செ. குன்றாவி.) 1. சமனாக்குதல். ''உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்'' (பெரும்பாண். 211). 2. சராசரி பார்த்தல். 3. அழித்து நிலமட்ட மாக்குதல். ''அடங்கார் புரமூன்றும் நிரவ வல்லார்'' (தேவா. 777 ፡ 2).

நிரவல் = 1. சமனாதல். 2. சராசரி.

நிர– நிரப்பு. நிரம்புதல் = 1. நிறைதல். ''பருவ நிரம்பாமே'' (திவ். பெரியாழ். 1 ፡ 2 ፡ 17). 2. பருவமடைதல். அவள் நிரம்பின பெண் (யாழ்ப்.). 3. மிகுதல். ''நெற்பொதி நிரம்பின'' (கம்பரா. கார்கால. 74). 4. முதிர்தல். 5. முடிவுறுதல். ''நெறிமயக் குற்ற நிரம்பா நீடத்தம்'' (கலித். 12). **க.** நெர.

நிரம்பு – நிரப்பு = 1. நிறைவு (சூடா.). 2. சமதளம். 3. சமைதி (சமாதானம்). 4. வறுமை (ம.வ.). **தெ.** நிம்பு (நிம்ப்பு).

நிரப்பு– நிரப்பம் = 1. ஒப்புமை. ''நிரப்பமில் யாக்கை (கலித். 94). 2. சமம். ''குடக்குந் தெற்குங் கோணமுய நிரப்பங் கொளீஇ'' (பெருங். இலாவாண. 4 ፡ 56 – 60). 3. நிறைவு. ''நிரப்ப மெய்திய நேர்பூம் பொங்கணை'' (பெருங். மகத. 14 ፡ 62). 4. சிறப்பு (திவ். திருவாய். 1 ፡ 2 ፡ 3 ፡ பன்னீ.). 5. கற்பு (திவ். திருவாய். 5 ፡ 3 ፡ 3. பன்னீ.).

நிரை – நிரை. நிறைதல் = 1. நிரம்புதல். ''நிறையின் னமுதை'' (திருவாச. 27 ፡). 2. மிகுதல். நிறையக் கொடுத்தான் (உ.வ.). 3. வியன்றிருத்தல் (வியாபித்திருத்தல்). இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான் (உ.வ.). 4. பொந்திகை (திருப்தி) யடைதல். ''நிறைந்த மனத்து மாதரும்'' (திருவாலவா. 38 ፡ 5). 5. அமைதியாதல்.

**ம.** நிறயுக, **க.** நெறெ.

நிர்– நெர்– நெரு. நெருநாள் = நெருங்கிய நாள், நேற்று. நெருநாள் – நெருநல் = நேற்று. ''நெருந லுளனொருவன் இன்றில்லை'' (குறள். 336).

நெருதலை நாள் = நேற்று. (திருக்கோ. 21, துறை விளக்கம்).

நெருநல்– நெருநை. ''நெருநையி னின்று நன்று'' (கலித். 91).

நெருநல்– நெருநற்று. ''நெருநற்றுச் சென்றாரெங் காதலர்'' (குறள். 1278).

நெருநற்று – நேற்று. ''நேற்றிரா வந்தொருவன் நித்திரையிற் கைப்பிடித்தான்'' (காளமேகம்).

நெருநல்– நென்னல் = நேற்று. ''நென்ன னோக்கி நின்றா ரொருவர்'' (சிலப். 7, பாட். 45).

நென்னல் – நென்னற்று – நென்னேற்று. ''காலைப் பிடிக்கா நின்ற நென்னேற்றும்'' (திவ். திருப்பா. 16, வியா. 158).

நெர் – நெரி. நெரிதல் = 1. நெருங்குதல். ''நெரிமுகைக் காந்தள்'' (பரிபா. 14 : 13). 2. நெருங்கி யுரசி நொறுங்குதல். ''தலைபத்து நெரியக் காலாற் றொட்டானை'' (தேவா. 17 :7).

நெரி– நெரியல்– நெரிசல் = 1. நெருக்கமான கூட்டம். 2. நெரிந்தது.

நெர் – நெரு – நெருங்கு. நெருங்குதல் = 1. கிட்டுதல். 2. செறிதல். ''நெருங்கு மடியார்களு நீயு நின்று'' (திருவாச. 21 : 7). 3. நெருங்கிய உறவாதல். 4. ஒடுக்கமாதல்.

நெருக்கு – நெருக்கம் = 1. அருகன்மை. 2. நெருங்கிய வுறவு. 3. செறிவு. 4. ஒடுக்கம். 5. வேலைக் கடினம். 6. சடுத்தம் (அவசரம்). 7. வற்புறுத்தம். 8. நோய்க் கடுமை. 9. துன்பம்.

நெருக்கு– நெருக்கடம் = நெருக்கி யழுத்தும் நிலை.

நெருக்கு – நெருக்கடி = 1. நெருக்கும் மக்கட் கூட்டம். 2. சடுத்தநிலை. 3. வறுமைத் தொல்லை. 4. கடுந் துன்பநிலை.

நெரு – நெருள் = திணுங்கிய மக்கள் திரள். ''யானை போகிற போக்கைப் பார், பார்க்கப் போகிற நெருளைப் பார்'' (பழஞ் சொலவு).

நெர் – நேர். நேர்தல் = 1. நெருங்குதல். ''வீரவாகு தலைவனை நேர்ந்து சொல்லும்'' (கந்தபு. தருமகோப. 71). 2. தீண்டுதல். ''குழவித் திங்கட் கோணேர்ந் தாங்கு'' (பெரும்பாண். 384). 3. பொருந்துதல். ''நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை'' (தொல். எழுத்து. 134). 4. ஒத்தல். ''கனியைநேர் துவர்வாயார்'' (திருவாச. 5 : 27). 5. எதிர்ப்படுதல். ''பொழிலோ வொன்று நேர்ந்ததுவே'' (வெங்கைக்கோ. 321). 6. எதிர்தல். ''வேந்தன் றனைநேர்ந்து காண்பானா'' (இரகு. தசரதன். 21). 7. எதிர்த்தல். ''தானையை நேர்ந்து கொன்று'' (கம்பரா. மூலபல. 57). 8. உடன்படுதல். ''அழும்பில் வேளுரைப்ப நிறையருத் தானை வேந்தனு நேர்ந்து'' (சிலப். 25 : 178). 9. நிகழ்தல். இது தற்செயலாக நேர்ந்தது (உ.வ.). 10. நிரம்புதல். ''நேரத் தோன்றும் பலரறி சொல்லே'' (தொல். கிளவி. 7). 11. பொருத்தனை பண்ணுதல். பழனிக்குக் காவடி

யெடுக்க நேர்ந்துகொண்டான் (உ.வ.).

நேர்– நேர்ச்சி = 1. நிகழ்ச்சி. 2. நட்பு. ''கொடைபகை நேர்ச்சி'' (நன். 298).

நேர்த்தம் = 1. நட்பு. 2. உடன்பாடு. இருவர்க்கும் நேர்த்தமில்லை (உ.வ.).

நேர்த்தி = 1. நேரான நிலை. 2. திருந்திய நிலை. 3. சிறப்பு. 4. பொருத்தனை. நேர்த்திக்கடன் (உ.வ.)

நேர்முகம் = 1. எதிர்முகம். 2. உடன்பாடு.

நேர்ப்பு = நேர்த்தி. நேர்ப்பம் = 1. இயற்கை மூலம் (பிரகிருதி) (ஈடு, 8 : 1 : 6). 2. திறமை. ''சுழற்றிய நேர்ப்பம் இருந்தபடி'' (திவ். இயற். திருவிருத். 51, வியா.).

நேர் = 1. ஒப்பு. ''தன்னே ரிலாத தமிழ்'' (தனிப்பாடல்). 2. உவமை. 3. பொருந்திய வரிசை. 4. நேர்நிலை. 5. நேர்மை (நீதி). 6. ஒழுங்கு. 7. ஒழுக்கம். 8. திருந்திய தன்மை. 9. எதிர். 10. தனிமை (திவா.). 11. உயிர் அல்லது உயிர்மெய் தனித்த நேரசை.

**ம.**, **க.** நேர், **தெ.** நேரு, **து.** நேரெ.

நேர் – நேரம் = 1. வினைநேருங் காலப்பகுதி. ''நேரம் பார்த்து நெடுந்தகைக் குரிசிலை மீட்டிடம் பெற்று'' (பெருங். உஞ்சைக். 57 : 74). 2. தக்க சமையம் (திருக்கோ. 290, துறைவிளக்கம்). 3. இரு சாமங்கொண்ட அரைநாள் (திவா.).

**ம.** நேரம், **இ.** தேர்.

நெள் – நெய். நெய்த்தல் = 1. ஒட்டுதல். 2. ஒட்டும் பசைத்தன்மை யுடையதாயிருத்தல். 3. பளபளத்தல். ''நீண்டு குழன்று நெய்த்திருண்டு'' (கம்பரா. உருக்காட்டு. 57) 4. ஒட்டும் நீர்ப் பொருளாக உருகும் கொழுப்பு வைத்தல், கொழுத்தல். நெய்த்தமீன்(W.).

நெய் = 1. ஒட்டும் நீர்ப்பொருள் (எண்ணெய்). ''நெய்யணி மயக்கம்'' (தொல். கற்பு. 5). 2. ஆவின் அல்லது எருமையின் நெய். ''நீர்நாண நெய்வழங்கியும்'' (புறம். 166). 3. அந் நெய்யாக உருக்கப்படும் வெண்ணெய். ''நெய்குடை தயிரி னுரையொடும்'' (பரிபா. 16 : 3). 4. புழுகுநெய். ''மையிருங் கூந்த னெய்யணி மறப்ப'' (சிலப். 4 : 56). 5. நெய்போ லொட்டுந் தேன். ''நெய்க்கண் ணிறாஅல்'' (கலித். 42). 6. நெய்போ லுறையும் அரத்தம். ''நெய்யரி பற்றிய நீரெலாம்'' (நீர்நிறக்.

51). 7. நெய்யா உருகுங் கொழுப்பு. ''நெய்யுண்டு'' (கல்லா. 71). 8. உளம் ஒட்டும் நட்பு. ''நெய்பொதி நெஞ்சின் மன்னர்'' (சீவக. 3049).

**ம., க.** நெய், **தெ.** நெய்யி. **வ.** ஸ்நிஹ் – ஸ்நேஹ.

எண்ணெய் = 1. எள்ளிலிருந் தெடுக்கப்படும் நெய் (நல் லெண்ணெய்). 2. நெய்ப்பொருள், விளக்கெண்ணெய், தேங்கா யெண்ணெய், புன்னைக்கா யெண்ணெய், கடுகெண்ணெய், முதலியன.

நெய்ப்பொரு ளெல்லாவற்றுள்ளும் ஆவின் அல்லது எருமையின் நெய் ஊட்டமான உணவிற்குரியதாய்த் தலைசிறந்த தாதலால், நெய்யென்னும் பொதுப் பெயரையே சிறப்புப் பெயராகக் கொண்டது.

முதன்முதலாக எள்ளின் நெய்யைக் குறித்த எண்ணெய் என்னுஞ் சொல், மிகப் பெருவழக்காய் வழங்கியதால் நாளடைவில் தன் சிறப்புப் பொருளை யிழந்து, நெய்யல்லாத நெய்ப் பொருள்களின் பொதுப் பெயராயிற்று. அதனால், தன் பழம்பொருளைக் குறித்தற்கு 'நல்' என்னும் அடைபெற்றது. இதனால், நெய்க்கு அடுத்துச் சிறந்தது நல்லெண்ணெய் என்பது பெறப்படும். ''வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு'' என்பது பழமொழி.

நெய்த்துவர் – நெய்த்தோர் = நெய்ப்பதமுள்ள அல்லது நெய்போ லுறையும் அரத்தம். ''நெய்த்தோர் வாய... குருளை'' (நற். 2).

துவர் = சிவப்பு, அரத்தம்.

**தெ.** நெத்துரு, **க.** நெத்தரு.

நெய் – நேய் – நேயம் = 1. நெய் (பிங்.). 2. எண்ணெய் (பிங்.). 3. அன்பு. ''நேயத்த தாய்நென்ன லென்னைப் புணர்ந்து'' (திருக்கோ. 39). 4. பத்தி (தெய்வப்பற்று). ''நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி'' (திருவாச. 1 : 13).

**பிரா.** நேஅம், **வ.** ஸ்நேஹ.

நேயம் – நேசம் = 1. அன்பு. ''நேசமுடைய வடியவர்கள்'' (திருவாச. 9 : 4). 2. ஆர்வம். ''வரும்பொரு ளுணரு நேச மாசறு தயிலம் பாக்கி'' (இரகு. இரகுவு. 38). 3. தகுதி. ''பூச்சியின் வாயினூல் பட்டென்று பூசைக்கு நேச மாகும்'' (குமரே. சத. 59). **ம.** நேசம்.

நேசம்– நேசி. நேசித்தல் = 1. அன்பு வைத்தல். ''நேசிக்கும் சிந்தை'' (தாயு. உடல் பொய். 32). 2. ஆர்வங் கொள்ளுதல். ''நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்'' (தாயு. பரிபூர.).

நேசி = 1. அன்பன். 2. காதலி.

நேயம்– நேம் = அன்பு.

நேம் – நே = 1. அன்பு. 2. ஈரம். ''நேஎ நெஞ்சின் கவுரியர் மருக'' (புறம். 3).

நெய்– நெய்ஞ்சு– நெஞ்சு = 1. அன்பு செய்யும் மனம். ''தன்னெஞ்சே தன்னைச்சுடும்'' (குறள். 293). 2. மனத்திற் கிருப்பிட மான நெஞ்சாங்குலை (இருதயம்). 3. நெஞ்சாங்குலையுள்ள மார்பு. ''தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇ'' (தொல். எழுத்து. 83). 4. மனச்சான்று. ''நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை'' (கொன்றை. 54). 5. நடு. ''குன்றி னெஞ்சுபக வெறிந்த'' (குறுந். 1). 6. திடாரிக்கம். ''நெஞ்சுளோ ரஞ்சும் வித்தை'' (திருவாலவா. 35 : 17).

ஒ.நோ: வேய்ந்தன்– வேந்தன். **ம.**நெஞ்சு.

நெஞ்சு – நெஞ்சம் = 1. மனம். ''தாமுடைய நெஞ்சந் துணையல் வழி'' (குறள். 1299). 2. அன்பு. ''நெஞ்சத் தகநக நட்பது நட்பு'' (குறள். 786).

நெஞ்சு – நெஞ்சகம் = மனம். ''நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்'' (தேவா. 1173 : 1)

நெய்தல் = நூலை ஆடையாக இணைத்தல். ''நெய்யு நுண்ணூல்'' (சீவக. 3019). 2. தொடுத்தல். ''நெய்தவை தூக்க'' (பரிபா. 19 : 80).

**ம.** நெய்க, **க.** நெய்.

நெய்– நெயவு– நெசவு.

நெய் – நெய்தல் = 1. வறண்ட கோடைக்காலத்தும் குளநிலத்தோ டொட்டியிருக்கும் கொடிவகை.

> ''.............................. - அக்குளத்திற்
> கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
> ஒட்டி யுறுவார் உறவு'' (மூதுரை, 17)

2. அக் கொடி வளரும் கடற்கரை. ''எற்பாடு நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும்'' (தொல். அகத். 8).

**ம., க.** நெய்தல்.

# 7

## புல் [1] பொருந்தற் கருத்துவேர்

புல்லுதல் = 1. பொருந்துதல். ''அல்லா வாயினும் புல்லுவ வுளவே'' (தொல். பொருளியல், 27). 2. புணர்தல். ''புலந்தாரைப் புல்லா விடல்'' (குறள். 1303). 3. தழுவுதல். 'என்னாகம்.... புல்லி'' (பு.வெ. 9 : 49). 4. வரவேற்றல். ''புல்லா வகம்புகுமின்'' (நாலடி. 303). 5. ஒத்தல். ''புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல'' (தொல். பொருள். 289, உரை). 6. ஒட்டுதல் (W.). 7. நட்புச் செய்தல். ''ஒல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்'' (தொல். புறத். 21, உரை).

புல் = புணர்ச்சி (பிங்.).

புல் = புலி (திவா.).

புல் – புல்லி – புலி = முன்னங் கால்களால் தழுவிப் பற்றும் வேங்கை அல்லது சிறுத்தை.

**ம., க., தெ.**, புலி, **து** பில்லி.

புல் – புல்கு. புல்குதல் = 1. அணைதல். அணைத்தல். ''அன்னந் தன்னிளம் பெடையொடும் புல்கி'' (தேவா. 584 :9). 2. புணர்தல். (சது.). 3. நண்பராய் மருவுதல் (யாழ்ப்.).

புல்– புலம் = 1. ஐம்பொறிகள் பொருள்களொடு பொருந்தி அறியும் அறிவு. ''நுண்மா ணுழைபுலம்'' (குறள். 407). 2. பொறியுணர்வு. ''அடல்வேண்டு மைந்தன் புலத்தை'' (குறள். 27 : 6). 4. இலக்கணம். ''புலந்தொகுத் தோனே'' (தொல். பாயிரம்). 5. நூல். 6. மறைநூல். ''புலம்புரி யந்தணர்'' (பரிபா. 6 : 45). 7. கூர்மதி (W.). 8. துப்பு (C.G.). 9. பொருந்தியிருக்கும் நிலம். ''புலங்கெட விறுக்கும் வரம்பி றானை'' (புறம். 16). 10. நிலம். 11. விளைநிலம். ''விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்'' (குறள். 85).

புலம்– புலன் = 1. பொறியறிவு. ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்'' (குறள். 1101). 2. பொறி, ''புலனொடு புணரான்'' (ஞானா.

48 : 9). 3. அறிவுடைமை. ''செல்வம் புலனே புணர்வு'' (தொல். மெய்ப். 11). 4. கண்கூடு. ''பெரும்புணர்ப் பெங்கும் புலனே'' (திவ். திருவாய். 2 : 8 : 3). 5. தெளிவு. 6. தெளிவான வனப்பு என்னும் பனுவல் வகை.

''சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே'' (தொல். செய். 239)

7. துப்பு. புலனறிதல் (உ.வ.). 8. பொறி போன்ற உறுப்பு. ''ஒன்பது வாய்ப்புலனும்'' (நாலடி. 47). 9. வயல். ''புலனந்த'' (பரிபா. 7 :9).

புலம் – புலம்பு = நிலம். மெல்லம் புலம்பு = நுண்மணலால் மெல்லிய நெய்தல்நிலம். (திருக்கோவை, 379, உரை). மெல்லம் புலம்பன் = நெய்தல்நிலத் தலைவன். ''மெல்லம் புலம்பன் பிரிந்தென'' (குறுந். 5).

புலம்பு – புலம்பன் = அறிவுடைய ஆதன் (ஆன்மா). ''புலம்பனுக் கொன்றும் புணர்ந்திலை போலும்'' (திருமந். 2934).

புலம் – புலமை = நிலம், வயல். **க.** பொல.

புலம் – புலவன் = 1. அறிஞன். 2. அறிவுள்ள பாவலன். 3. தேவன். 4. அறிவன் (புதன்).

புலவன் (ஆ. பா.) – புலத்தி (பெ. பா.).

ஒ.நோ: கிழவன் – கிழத்தி.

புலத்தி – புலச்சி = அறிவுள்ளவள். ''சிவனிற் புலச்சி தனக்கு'' (திருப்பு. 123). ஒ.நோ: வேட்டுவத்தி – வேட்டுவச்சி.

புல்ல = 1. பொருந்த. 2. போல (உவமவுருபு). ''புல்லப் பொருவப் பொற்பப் போல'' (தொல். உவம. 11).

புலம் – புலர். புலர்தல் = தெளிதல், தெளிவாதல். ''நல்லா ணெஞ்சமும் புலர்ந்த தன்றே'' (சீவக. 1937). 2. விடிதல். ''புலர் விடியல்'' (பு. வெ. 2 : 47).

**ம.** புலருக.

புலர்ச்சி = விடிகை. ''இருளின் புலர்ச்சி யென்றென்று'' (வெங்கைக் கோவை, 380).

புலர்பு = விடியல். ''பனிப்புலர் பாடி'' (பரிபா. 11 : 83).

*புலர்– புலரி = 1. விடியல். ''புலரி புலருதென்று'' (திருமந். 210). 2. கதிரவன். ''தாமரைப் பூநனி முகிழ்த்தன புலரி போனபின்'' (கம்பரா. சித்திர. 42).*

*புல்– புர்– புரை. புரைதல் = 1. பொருந்துதல். ''புறத்தோ ராங்கட் புரைவ தென்ப'' (தொல். கற்பு. 35). 2. தைத்தல். ''தம்முடைய வஸ்திரத்தைப் புரையா நின்றாராய்'' (ஈடு, 4 : 10 : 7). 3. ஒத்தல். ''வேய்புரை பெழிலிய... பணைத்தோள்'' (பதிற். 65 :8). 4. நேர்தல். ''புணர்ந்தோரிடை முலையல்கல் புரைவது'' (பரிபா. 6 : 55).* ***க.*** *புருள்.*

*புரை = ஒப்பு (பிங்.).* ***தெ.*** *புருது.*

*புரைய = 1. பொருந்த. 2. போல (உவமவுருபு), ''கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய'' (தொல். உவம. 15).*

*புல்– புள்– புண்– புணர். புணர்தல் = 1. பொருந்துதல் (திவா.). 2. நட்பாடல். ''ஊதிய மில்லார்ப் புணர்தல்'' (நாலடி. 233). 3. ஏற்புடையதாதல். ''குரல் புணர்சீர்'' (புறம். 11). 4. மேற்கொள்ளுதல். ''பொருவகை புரிந்தவர் புணர்ந்த நீதியும்'' (பெருங். வத்தவ. 6 : 6. 5). 5. உடலிற் படுதல். ''மென்முலைமேற் பனிமாருதம் புணர'' (கம்பரா. சூர்ப்பண. 77). 6. கலவி செய்தல். ''மன்னியவளைப் புணரப் புக்கு'' (திவ். பெருமாள். 6 :9). 7. சொற்கூடுதல். ''மொழிபுண ரியல்பே'' (தொல். எழுத்து. புணரியல், 6). 8. கூடியதாதல். ''புணரின் வெகுளாமை நன்று'' (குறள். 308).*

***ம.*** *புணருக,* ***க.*** *பொணர்.*

*புணர்ச்சி = 1. சேர்க்கை (பிங்.). 2. ஒரிடத்தாரா யிருக்கை. ''புணர்ச்சி பழகுதல் வேண்டா'' (குறள். 785). 3. கலவி. ''தகைமிக்க புணர்ச்சியார்'' (கலித். 118). 4. சொற்கூட்டு. ''எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி'' (தொல் எழுத்து. புணரியல், 39).*

*புணர்ப்பு = 1. பனுவல் (பிரபந்தம்). ''நாயகன்பேர் வைத்துப் புணர்த்த புணர்ப்புக் கேட்டாற் போலே காணும்'' (ஈடு, 5 : 9 : 3). 2. இணைப்பு. 3. கலவி செய்விப்பு. 4. சொற்கூட்டு. 5. சூழ்ச்சி. ''முதியவன் புணர்ப்பினால்'' (கலித். 25). 6. உடம்பு (சூடா.). 7. மாயம். ''புணர்ப்போ கனவோ'' (திருக்கோ. 17).*

*புணர்வு = 1. சேர்க்கை. 2. கலவி. ''புணர்வின் னினிய புலவிப் பொழுதும்'' (சீவக. 1378). 3. இணைப்பு (சூடா.). 4. உடம்பு (பிங்.).*

*புணர் – புணரி = கலந்தெழும் பேரலை. ''வரைமருள் புணரி வான்பிசி ருடைய'' (பதிற். 11).*

*புண்– புணி. புணித்தல் = சேர்த்துக் கட்டுதல்.*

*புணி – பிணி. பிணித்தல் = 1. சேர்த்துக் கட்டுதல். ''பெருவெளிற் பிணிமார்'' (மலைபடு. 326). 2. வயப்படுத்துதல். ''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்'' (குறள். 643). 3. கட்டித் துன்புறுத்துதல்.*

*பிணி – 1. கட்டுகை. ''பிணியுறு முரசம்'' (புறம். 25). 2. கட்டு. ''பிணிநெகிழ்பு'' (பரிபா. 3 : 55). 3. நெசவுத் தறியின் நூற்படை (யாழ்ப்.). 4. பற்று. ''பொருட்பிணிச் சென்று'' (அகம். 27). 5. (கட்டு நெகிழா) மொட்டு. ''பிணிநிவந்த பாசடைத் தாமரை'' (கலித். 59). 6. பின்னல். ''பிணிகொள் வார்குழல்'' (தேவா. 469:3). 7. (கட்டி நெருக்குவது போன்ற) நோய். ''பிணிக்கு மருந்து பிறமன்'' (குறள். 1102). 8. துன்பம்.*

*பிணியகம் = காவலிடம். ''பிறர் பிணியகத் திருந்து'' (பட்டினப். 222).*

*பிணி– பிணிகை = கச்சு (பெண்டிர் மாரொட்டிச் சட்டை).*

*புண்– புணை. புணைத்தல் = கட்டுதல்.*

*புணை = 1. கட்டு, விலங்கு (சூடா.). 2. தெப்பம் (கட்டுமரம்). ''நல்லாண்மை யென்னும் புணை'' (குறள். 1134). 3. உதவி. ''அறம்புணை யாகலு முண்டு'' (கலித். 144). 4. ஒப்பு. ''புணையில்லா வெவ்வ நோய்'' (கலித். 124). 5. ஈடு. 6. ஆட்பிணை. ''இவனுக்குப் புணை''*(S.I.I.V. 173).

*புணை – புணையல் = மாட்டுப் பிணைப்பு. புணைய லடித்தல் = பிணைத்த கடாவிட்டுக் கதிரை யுழக்குதல். புணையல்– புணைசல்.*

*புணை – பிணை. பிணைதல் = 1. சேர்தல், இணைதல். ''கழுநீர் பிணைந்தன்ன வாகி'' (சீவக. 491). 2. செறிதல். ''பிணையூப மெழுந்தாட'' (மதுரைக். 27). 3. புணர்தல். ''மங்கையர் தம்மொடும் பிணைந்து'' (திருவாச. 41 :6).*

*பிணை = 1. பொருத்து. ''இதையுங் கயிறும் பிணையு மிரிய'' (பரிபா. 10 :54). 2. கட்டு. 3. இணைக்கப்படுகை. ''பிணையார மார்பம்'' (பு. வெ. 12 :6). 4. பூமாலை. ''வெறிகொண்ட முல்லைப் பிணைமீது'' (பெரியபு. கண்ணப்ப. 57). 5. பொறுப்பாண்மை. ''பிணைக் கொடுக்கிலும் போக வொட்டாரே'' (திவ். பெரியாழ். 4 : 5 :2). 6. உடன்பாடு. (யாழ். அக.). 7. களைகண், பேணுகை. ''பெட்டாங் கொழுகும் பிணையிலி'' (நான்மணி. 91).*

*பிணை– பிணைச்சு = புணர்ச்சி (பிங்.).*

*புணையல்– பிணையல் = 1. ஒன்றுசேர்கை. ''தாமரை யலரிணைப் பிணையல்'' (பரிபா. 2 ::53). 2. நடன இணைக்கை. ''பிண்டியும் பிணையலும்'' (சிலப். 3 : 18). 3. மாலைவகை. ''பித்திகைப் பிணையன் மாலை'' (சீவக. 2177). 4. பூமாலை. ''தாதுகு பிணையல் வீசி'' (சீவக. 463). 5. கதிருழக்குங் கடாப் பிணைப்பு. 6. புணர்ச்சி. 7. கதவுப் பொருத்து.*

*புண் – பூண். பூணுதல் = 1. நுகத்திற் கட்டப்படுதல். ''பூண்டன புரவியோ'' (கம்பரா. இராவணன்வ. 38). 2. மணஞ் செய்தல். ''பூண்டான் கழித்தற் கருமையால்'' (நாலடி. 56). 3. நெருங்கி யிறுக்க மாதல். அவனுக்குப் பல் பூண்டுவிட்டது (உ.வ.). 4. விலங்கு மாட்டப்படுதல். ''புனைபூணும்'' (குறள். 836). 5. நுகம் மாட்டிக் கொள்ளுதல். ''படுநுகம் பூணாய், பகடே'' (சிலப். 27 ::228). 6. அணிதல். ''பூண்பதுவும் பொங்கரவம்'' (திருவாச. 12 : 1). 7. மேற்கொள்ளுதல். ''அன்பு பூண்டனை'' (கம்பரா. விபீடணனடை. 2). ''போர்த்தொழில் வேட்கை பூண்டு'' (கம்பரா. படைத்தலை. 1).*

**க.** பூண், **தெ.** பூணு.

*பூண் = 1. உலக்கை தடி முதலியவற்றின் முனையிற் செறித்த தொடி அல்லது வளையம். ''பூண்செறிந்த தலையை யுடைய பரிய தண்டுக்கோலை'' (புறம். 243, உரை). 2. யானைக் கோட்டின் கிம்புரி (பிங்.). 3. அணி. ''நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி'' (மதுரைக். 569). 4. கவசம். ''பூணணி மார்ப போற்றி'' (சீவக. 264).*

**ம.**, பூண், **தெ.** பொன்னு.

*பூண் – பூணி = 1. நுகம் பூணும் எருது. ''பூணி பூண்டுழப் புட்சிலம்பும்'' (தேவா. 647 : 3). ''கடம்பூருக்கு வழியெதுவெனின் இடம்பூணி யென்னாவின் கன்று எனல்'' (நேமி. சொல். 5, உரை). 2. கன்றுகாலி. ''பூணி மேய்க்கு மிளங்கோவலர்'' (திவ். பெரியாழ். 3::6::7). 3. விடையோரை (இடபராசி). 4. ஒருவகைப் பறவை. ''பெரும் பூட் பூணியும் பேழ்வாய்க் கொக்கும்'' (பெருங். உஞ்சைக். 51 ::69).*

*பூணித்தல் = 1. பொருத்துவித்தல். 2. தோற்றுவித்தல். ''விசும்பிற் புத்தப் புதுமதியம் பூணித்தான்'' (மாறனலங். 224). 3. மேற்கோள் பூணுதல். ''என்னோடே பூணித்து'' (ஈடு, 10::8::5). 4. பொருத்திக் குறித்தல்.* (to allude to, to refer to).

*பூண்– பூட்கை = 1. மேற்கோள் (பிரதிக்ஞை). ''பூட்கை யில்லோன் யாக்கை போல'' (புறம். 69). 2. கொள்கை. 3. மேற்கோளொடு கூடிய வலிமை. ''ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'' (திருமுருகு. 247).*

*பூண் – பூண்டு = பற்போன்ற பருப்புகள் அல்லது சுளைகள் நெருங்கிப் பொருந்திய பூடுவகை. எ-டு : 1. வெங்காயப் பூண்டு, வெள்ளைப் பூண்டு. 2. சிற்றெச்சம்* (vestige, trace). *''ஆண்பூண்டு கண்டாலும் பேசாமற் கட்டிட்டாள்.'' (விறலிவிடு. 822). ஆரியப் பூண்டை வேரறுக்க வேண்டுமென்பது ஒருசிலர் கொள்கை.*

*பூண்டு– பூடு = 1. வெங்காயம் அல்லது வெள்ளுள்ளி. 2. நிலத்தொடு படர்ந்த சிறுசெடி. ''புல்லாகிப் பூடாய்'' (திருவாச. 1 : 26).*

*ஒ.நோ : கூண்டு – கூடு.*

*பூண்– பூட்சி = 1. பொருந்துகை, பூணுகை (சது.). 2. அணி (கல்லா. 91 :9, உரை). 3. புணர்ப்பு. ''பூதப் பூட்சி யுள்ளெழும் போதமும்'' (பிரபோத. 31 : 36). 4. உயிரொடு பூண்ட வுடல் (பிங்.). ''புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய்'' (தேவா. 1160 : 6). 5. கொள்கை. 6. மனவுறுதி. ''உறுபொரு ளுணரும் பூட்சியோய்'' (கம்பரா. உயுத். மந்திர. 66). 7. உரிமை (அக. நி.). 8. வரிவகை. எ-டு : ஈழம் பூட்சி.*

*பூண் – பூட்டு (பி.வி.). பூட்டுதல் = 1. பொருத்துதல். 2. காளை முதலியவற்றை நுகத்திற் பிணைத்தல். ''களிறுபல பூட்டி'' (பதிற். 44 : 16). 3. பொருத்தி அணிதல். ''பைந்தார் பூட்டி'' (பதிற். 42 : 10). 4. மாட்டுதல். ''பொருசிலை மேற்சரம் பூட்டான்'' (ஏரெழு. 17). 5. தொழுவிலடித்தல்* (W.). *6. விலங்கு மாட்டுதல்* (W.). *7. நாணேற்றுதல். ''பூட்டுசிலை'' (சீவக. 1788). 8. பூட்டுப் பூட்டுதல். 9. இறுகக் கட்டுதல். ''பூட்டிய கையன்'' (கம்பரா. குகப். 34). 10. மனத்தை யிணைத்தல். ''என்பாற் பூட்டு நண்பு பூண்டான்'' (பாரத. வாரணா. 37). 11. ஒப்படைத்துப் பொறுப்பேற்றுதல். ''தாதை பூட்டிய செல்வம்'' (கம்பரா. வாலிவ. 81). 12. பொருத்திக் கூறுதல்* (W.). *13. வழக்குத் தொடுத்தல். ''கொடுமைசால் வழக்குப் பூட்டி'' (திருவிளை. மாமனா. 14).*

**ம.** *பூட்டுக,* **க.** *பூடு.*

*பூட்டு – பூட்டகம் = 1. போலி. எ - டு : பூட்டக வேலை. 2. வீண் பெருமை. ''என்ன பூட்டகமோ'' (பெருந்தொ. 1275). 3. வஞ்சகம். ''பூட்டக மோ விது'' (இராமநா. அயோத். 21). 4. மருமம் (இரகசியம்). அந்தச் செய்தி பூட்டகமா யிருக்கிறது (உ. வ.).*

**க.** *பூட்டக,* **தெ.** *பூட்டகமு.*

*புல்– பொல்– பொரு. பொருதல் = 1. பொருந்துதல். ''பொய்பொரு முடங்குகை'' (சிலப். 15 : 50). 2. தொடுதல், முட்டுதல். ''விண்பொரு புகழ்'' (புறம். 11). ''விண்பொரு வியன்குடை'' (புறம். 35). 3. ஒப்பாதல். ''மலை*

*யெத்தனை யத்தனை... பொருகிற்பன'' (கம்பரா. அதிகா. 150). 4. தடவுதல். ''வீணை பொருதொழிலும்'' (சீவக. 1795). 5. தாக்குதல். ''பொருபுனல் தரூஉம்'' (சிறுபாண். 118). 6. கடைதல். ''ஒன்றைக் கிரிமத்தைப் பொருது'' (திருப்பு. 1). 7. வன்மையாய் வீசுதல். ''குரூஉப் புகைபிசிரக் கால்பொர'' (பதிற். 15 : 6). 8. போர் செய்தல். ''ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய'' (புறம். 2). 9. சூதாடுதல். ''போது போகுமா றிருந்து பொருதும்'' (பாரத. சூது. 169). 10. மாறுபடுதல். ''கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை'' (புறம். 35).*

*பொரு = 1. ஒப்பு. ''பொருவாகப் புக்கிருப்பார்'' (தேவா. 780 : 11). 2. உவமை (பிங்.). 3. எதிர்த்தடை. ''ஆறு சமயங்கட் கெல்லாம் பொருவாகி நின்றானவன்'' (திவ். திருவாய். 9 : 4 : 8).*

*பொருமுக வெழினி = பொருந்தி வரும் இரட்டைத் திரை. பொருங்கதவு = இரட்டைக் கதவு.*

*பொரு – பொருவு. பொருவுதல் = 1. பொருந்துதல். 2. ஒத்தல். ''உன்னைப் பொருவு முனிவோர்'' (கந்தபு. திருக்கல். 55). 3. நேர்தல். ''போன்றன வினைய தன்மை பொருவியது'' (கம்பரா. இரணிய. 152). 4. உராய்தல். ''விற்கொணாண் பொருவுதோள்'' (கம்பரா. நிந்தனை. 52).*

*பொருவு = ஒப்பு. ''பொருவற்றா ளென்மகள்'' (திவ். திருநெடுந். 19).*

*ஒப்புப்பொருவு, உறழ்பொருவு எனப் பொருவு இருவகை.*

*பொருவ = ஓர் உவமவுருபு. ''புல்லப் பொருவ'' (தொல். உவம. 11).*

*பொரு– பொருந். பொருநுதல் = 1. பொருந்துதல். ''உண் பொருந்'' (நன். 137). 2. உடன்படுதல்* (W.).

*பொருந் – பொருந்து. பொருந்துதல் = 1. நெருங்குதல். ''பொருந்தவந் துற்ற போரில்'' (கம்பரா. கும்பகருண. 13). 2. அடைதல். ''வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்'' (புறம். 10). 3. அளவளாவுதல் (பிங்.). 4. புணர்தல். ''மணிமேகலை... பொருந்தின ளென்னும் பான்மைக் கட்டுரை'' (மணிமே. 23 : 46). 5. இலக்கண நெறிப்படுதல். ''பண்பொருந்த இசைபாடும்'' (தேவா. 268 :5). 6. இயலுதல். ''பூத மைந்தினும் பொருந்திய வுருவினாற் புரளான்'' (கம்பரா. இரணிய. 18). 7. நிகழ்தல். ''புண்ணியம் பொருந்திற்று'' (கம்பரா. கும்பகருண. 131). 8. நிறைவேறுதல்* (W.). *9. தகுதியாதல். 10. அமைதல். ''அறநெறி பொருந்த''*

(கம்பரா. விபீடண. 43). 11. மனம் இசைதல். ''கொணர்கு வாயெனப் பொருந்தினன்'' (கம்பரா. மருத்து. 85).

**க.** பொருது.

பொருந்து – பொருத்து = 1. இணைப்பு (W.). 2. மூட்டு. 3. உடலெலும்பு மூட்டு. ''பொருத்தெலாங் கட்டுவிட்டு'' (பணவிடு. 298). 4. ஒன்றுசேர்ப்பு. ''பொருத்துறு பொருளுண் டாமோ'' (கம்பரா. கும்பகருண. 157). 5. நெற்றிமூலை மண்டையோட்டுப் பொட்டு.

பொருத்து – பொருத்தம் = 1. பொருந்துகை. 2. தகுதி. ''பொய்ம்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன்று'' (திருக்கோ. 356). 3. இணக்கம். அவனுக்கும் எனக்கும் பொருத்தமில்லை (உ.வ.). 4. மணமக்களின் பிறப்பிய (ஜாதக) இணக்கம்.

பொருத்து – பொருத்தனை = 1. பொருத்தம். 2. நேர்த்திக்கடன். (துன்ப நிலையில் தெய்வத்தொடு இட்ட சூளை நிறைவேற்றுதல்). இதைச் சென்னைப் ப. க. த. அகரமுதலியில் 'பிரார்த்தனை' என்னும் வடசொல்லின் திரிபாகக் குறித்திருப்பது குறும்புத்தனமாம்.

பொருத்து – பொத்து.

பொத்துதல் = 1. பொருத்துதல். 2. கலத்தல். ''நெஞ்சம் பொத்தி'' (பு. வெ. 11, ஆண்பால் 4). 3. தீ மூட்டுதல். ''கனையெரி பொத்தி'' (மணிமே. 2 : 42). 4. தைத்து மூட்டுதல். 5. தைத்தல். இலையைப் பொத்து (உ. வ.). 6. மாலை கட்டுதல். ''மறுகண்ணியும் பொத்தி'' (ஈடு, 1 : 3 : 1). 7. கற்பனை செய்தல். ''இல்லாத் தெய்வம் பொத்தி'' (தேவா. 658 :7). 8. திறப்பின் அல்லது கிழிவின் இருபுறத்தையும் பொருத்தி மூடுதல். பொல்லம் பொத்துதல் (உ. வ.). 9. வாய் கண் காது முதலியவற்றை மூடுதல். ''தன்செவித் தொளையிரு கைகளாற் பொத்தி'' (கம்பரா. இரணிய. 22). 10. விரல் மடக்கி உள்ளங்கையை மூடுதல் (உ. வ.). 11. மறைத்தல். ''செம்பால்... கிளர்படி பொத்தின'' (கம்பரா. கரன்வதை. 100). 12. புதைத்தல். ''மண்ணிடைக் கடிது பொத்துதல்'' (கம்பரா. விரா தன்வதை. 43).

(செ. குன்றிய வி.). = நிறைதல். ''வான்மேற் பொத்தின குழு'' (கம்பரா. கரன்வதை. 100).

**க., ம.** பொத்து.

பொத்து – பொத்தகம் = 1. சுவடி. ''நிறைநூற் பொத்தகம் நெடுமணை யேற்றி'' (பெருங். உஞ்சைக். 34 : 26). 2. நிலக்கணக்கு. ''பொத்தகப்படி குழி'' (S.I.I. III, 80).

*பொத்தகம் –* **வ.** *புஸ்தக,* **இ.** *புஸ்தக்.*

*பூர்ஜம் பட்டையினின்று செய்யப்பட்டது என்று வடவர் கூறும் பொருட்கரணியம் பொருந்தாது. புஸ்தக என்னும் வடசொல் வடிவையே புத்தகம் என்று திரித்து வழங்கி வருகின்றனர்.*

*ஒ.நோ : மனம் –* **வ.** *மனஸ் – மனது.*

*மதி – மாதம் –* **வ.** *மாஸ – மாசம்.*

*பொத்தகம் = ஏடுகளின் சேர்க்கை. ஏட்டுச் சுவடி, சுவடி சேர்த்தல் என்னும் வழக்குகளை நோக்குக.*

*பொத்து– பொட்டு = நெற்றிமூலை மண்டையோட்டுப் பொருத்து.*

*பொட்டுதல் = பொருத்துதல், சேர்த்துக் கட்டுதல். பொட்டு – பொட்டணம்.*

*பொரு – பொருநன் = 1. உவமிக்கப்படுவோன். ''போர்மிகு பொருந'' (திருமுருகு. 276). 2. ஏர்க்களத்தேனும் போர்க்களத்தேனும் சென்று உவமித்துப் பாடும் பாணன் (பாடகன்). 3. உவமித்துப் பாடியாடும் கூத்தன். ''பண்ணிமை யடைத்த பலகட் பொருநர்'' (கம்பரா. ஊர். 162).*

*பொருந் – பொருநை = பாறையொடு பொருது (மோதி) இறங்கி யோடும் (தாமிரபரணி) ஆறு. ''குமரி பொன்னி வைகை பொருநைநன் னதிகள்'' (குமர. பிர. மீனா. பிள். 11). ஒ.நோ : ''கல்பொரு திறங்கும் மல்லற் பேரியாறு'' (புறம். 132).*

*பொருநை– பொருநல். ''பொருநல் வடகரை'' (திவ். திருவாய். 6 : 5 : 8).*

*பொருந்– (பொருத்து)– பொருந்தம் = பொருநை (பிங்.).*

*பொரு– பொருள் = 1. பொருந்திய உடமை. 2. பண்டம். 3. பொன் (சூடா.). 4. செல்வம். ''பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின்'' (நாலடி. 6). 5. சொத்து. 6. மதிக்கப்படுவது. 7. உருப்படி. 8. சொற்பொருள். 9. புலனம் (விஷயம்). 10. உவமியம் (உபமேயம்).*

*பொருள்– பொருட்டு = 1. (பெ.). கரணியம் (காரணம்) (பிங்.). 2. மதிப்பிற்குரியது. அதையொரு பொருட்டாகக் கொள்ளவில்லை (உ.வ.).*

*(கு.வி.எ.). 4. பயனோக்கி (நிமித்தம்). ''வேளாண்மை செய்தற் பொருட்டு'' (குறள். 81).*

***ம.*** *பொருள்,* ***க.*** *பொருளு,* ***து.*** *பொர்லு.*

*பொரு – போர் = 1. பொருந்துகை. ''திண்போர்க் கதவம்'' (மதுரைக். 354). 2. சண்டை. ''குன்றேறி யானைப்போர் கண்டற்றால்'' (குறள். 758). 3. இகல் (போட்டி). ''வீணைவாட் போர்க்கலாம்'' (சீவக. 620).*

*போர்த்தல் = 1. மூடுதல். ''பெற்றம் புலியின்றோல் போர்த்து மேய்ந் தற்று'' (குறள். 273). 2. மூட அணிதல். ''ஆரம்போர் திருமார்பை'' (கம்பரா. இராவணன் வதை. 240). 3. சூழ்தல். ''விண்ணோ ரெங்கோன் புடையிற் போர்த்தார்'' (கந்தபு. சிங்கமு. 457).*

*போர்க்கதவு = 1. பல பலகைகளை இணைத்த கதவு. ''புலிப்பொறிப் போர்க்கதவின்'' (பட்டினப். 40). 2. இரட்டைக் கதவு (சிலப்.).*

*பொல் – போல். போலுதல் = ஒத்தல். போல = உவமவுருபு. ''பொறப்பப் போல'' (தொல். உவம. 11).*

*போல்– போலி = 1. ஒத்தது. 2. எழுத்துப்போலி. 3. வினைத்திறத்தில் மட்டமானது. எ - டு : போலிவேலை. 4. மட்டமான பொருள். எ-டு : போலிக்கல். போலும் – ஒப்பில் போலி. போன்றான் – போஞ்சான் = மட்டமான வேலைப்பாடுள்ளது.*

## 8

## புல்[2] (பருத்தற் கருத்துவேர்)

பொருந்தற் கருத்தினின்று பருத்தற் கருத்துப் பிறக்கும். பல பொருள்கள் ஒன்றுசேர்வதால் பருமை உண்டாகும். ''சேரே திரட்சி'' (தொல். உரி. 65).

புல்– பல் = பல. பல்காற் பறவை = வண்டு.

''பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்'' (பெரும்பாண். 183).

பல்கால் = பல சமையம், அடிக்கடி, ''பல்காலுந் தோன்றி'' (நாலடி. 27).

பல் – பன்மை = 1. ஒன்றிற்கு மேற்பட்ட தொகைப் பருமை. ''தானறி பொருள்வயிற் பன்மை கூறல்'' (தொல். கிளவி. 23). 2. தொகுதி. ''உயிர்ப்பன்மை'' (புறம். 19). 3. ஒரு தன்மைப்பட் டிராமை. ''பன்மையே பேசும் படிறன் றன்னை'' (தேவா. 674 :5). 4. குறிப்பின்மை. பன்மையாகவே பேசினான் (உ.வ.) (W.)

பல் – பல்லம் = ஒரு பேரெண் (திவா.). பல் = மிகுந்த. பல்வலிப் பறவை = சரபம். ''பல்வலிப் பறவை பற்றுபு'' (பெருங். இலாவாண. 11 :54). பல்லம்– பல்லவம் = பலமுறை பாடப்படும் கீர்த்தனை யுறுப்பு (W.).

பல்லவம்– பல்லவி = திரும்பத் திரும்பப் பலமுறை பாடப்படும் கீர்த்தனை முதலுறுப்பு. **க.** பல்லவி.

பல்– பல்லக்கு = சிவிகையினும் பெரிய (தூக்கிச் செல்லும்) ஊர்தி. ''தந்தப் பல்லக்குஞ் சிவிகையுந் தாங்கி'' (தொண்டை. சத. 87). சிவிகை (சிறுத்தது) x பல்லக்கு. சிவிந்த பழம் என்னும் வழக்கை நோக்குக.

**ம.** பல்லக்கு, **க.** பல்லக்கி, **பிரா.** பல்லங்க்க, **ச.**பர்யங்க்க.

சென்னைப் ப.க.த. அகரமுதலியில், இச் சொல் சமற்கிருதத்தினின்று பிராகிருத வழியாகத் தமிழுக்கு வந்ததென்று தலைகீழாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பல்லக்கைக் குறிக்கும் **பர்யங்க்க** என்னும் வடசொல், பல்யங்க்க என்னும் வடிவும் கொள்ளும். அது தென்சொல் வடிவிற்கு நெருக்கமான தென்பது தெளிவு.

பர்யங்க்க என்னும் வடசொற்கு மூல விளக்கம், மானியர் வில்லியம்சு சமற்கிருத ஆங்கில அகரமுதலியிற் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

'paryanc........... to turn about or round, revolve, R. V. X, 119, 5.

pary-anka............. a bed, couch, sofa, litter, palanquin, Kaush Up............"

புரிதல் = வளைதல். எ - டு : வலம்புரி, இடம்புரி. புரி– பரி. பரிதி = வட்டமான கதிரவன். பரிசல் = வட்டமான நீர்கடத்துக் கூடை. பரிசை = வட்டமான கேடகம்.

அங்குதல் = வளைதல், சாய்தல், கோணுதல், வாட்டஞ் சாட்டமாதல்.

வணங்கு – வாங்கு – வங்கு – அங்கு. வங்கு – வங்கி = நெளிவளையல், வளைந்த கத்தி (பிச்சுவா). அங்கு – அங்கணம் = வாட்டஞ்சாட்டமான சாய்கடை.

''அங்கணத்து ளுக்க வமிழ்தற்றால்'' (குறள். 720)

''ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்'' (நாலடி. 175)

பரி– **வ.** பரி, round, around, about, round about.

அங்கு– **வ.** அஞ்ச், to bend, curve, incline, curl.

ஒ.நோ : பொங்கு– பொஞ்சு.

பர்யங்க்க என்னும் வடசொற்குக் கூறப்படும் பொருட் கரணியம், ஒருமருங்கு தமிழுக்கும் பொருந்தும்.

பல்லங்கு– பல்லக்கு– பல்லாக்கு.

பல்லங்கு = பலவளைவு. பல்லக்கின்மேல் மூங்கில் மூவளை வினதா யிருத்தல் காண்க.

''வருத்தவளை வேய்அரசர் மாமுடியின் மேலாம்''(நீதிவெண்பா, 7)

பல்லக்கு– பல்லாக்கு.

*பல் – பல்கு. பல்குதல் = 1. பலவாதல். ''ஞாயிறு பல்கிய மாயமொடு'' (பதிற். 62 : 6). 2. மிகுதல். ''பல்கிய விரும்பினான்'' (பிரமோத். பஞ்சா. 21).*

*பல்– பல = 1. ஒன்றுக்கு மேற்பட்டவை. ''பலவற் றிறுதி யுருபிய னிலையும்'' (தொல். எழுத்து. உயிர்மயங். 18). பலகாரம் = பல சுவையுள்ள தின்பண்டம். 2. பழங்களெல்லாவற்றுள்ளும் பெரிய பலா. ''பலங்கனி'' (திவ். பெரியதி. 3 : 1 : 5).* ***சி.*** *பல* (phala).

*பல – பலவு = பலா. ''பலவுந் தெங்கும் வாழைகளும்'' (திவ். திருவாய். 5 : 9 : 4).*

*பல– பலா. ''பலாப்பழத் தீயி னொப்பாய்'' (திருவாச. 6 : 46).*

*பல்– பர்– பரு. ஒ.நோ: சில்– (சிர்)– சிறு. பருத்தல் = பெருத்தல். ''பருத்த தோளும் முடியும் பொடிபட'' (தேவா. 498 : 11).*

*பரு– பருக்கன் = பரும்படியானது.*

*பருக்கை = 1. பருமனாகை. 2. சோற்றவிழ். ''பருக்கையிலாக் கூழுக்குப் போட வுப்பில்லை யென்பார்க்கும்'' (தனிப்பா.).*

*பருப்பொருள் = 1. நுண்பொருளல்லாத பரும்படிப் பொருள். ''பருப்பொருட் டாகிய பாயிரம் (இறை. கள. 1, உரை). 2. சுவையற்ற செய்தி. ''பதர்ச்சொற் பருப்பொருள் பன்னுபு நீக்கி'' (பெருங். இலாவாண. 4 : 51). 3. மேலெழுந்த வாரியான பொருள். ''பருப் பொருள் கடிந்து பொருட்டார்ப் படுத்து'' (படுத்துப். உரைச்சிறப்.).*

*பருப்பு = 1. பருமை. ''பருப்புடைப் பவளம் போல'' (சீவக. 2273). 2. சிறிதான அரிசியினும் பெரிய பயற்றுள்ளீடு.*

*அரிசி* x *பருப்பு. அரி– அரிசி.*

***தெ., க.*** *பப்பு.*

*பருமம் = 1. பருமை. 2. பதினெண் கோவை அரைப்பட்டிகை. ''பருமந் தாங்கிய'' (திருமுருகு. 146). 3. புடைத்திருக்கும் புட்டம் (யாழ். அக).*

*பருமம்– பருமன் = 1. பருமை. 2. பருத்த– வன்– வள்– து* (W.).

*பருமை = 1. பருத்திருக்கை. 2. பரும்படியான தன்மை. 3. முதன்மை. 4. பெருமை.*

*பருமை– பருமி. ஒ.நோ: ஒருமை– ஒருமி. பருமித்தல் = 1. பருத்தல். 2. பெருமை யடைதல். 3. எக்களிப்புடனிருத்தல்* (W.).

பரு– பெரு– பெருமை.

பெருத்தல் = 1. பருத்தல். 2. மிகுதல். ''கரடியாதி பெருத்த'' (விநாயகபு.). இனம் பெருத்துவிட்டது (உ.வ.). 3. உயர்வாதல்.

பெருமை = 1. பருமை. 2. மாட்சிமை. ''பெருமையுந் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு'' (குறள். 974). 3. மிகுதி, பெரும்பான்மை. 4. வல்லமை. 5. கீர்த்தி. 6. செருக்கு. பதவி யுயர்ந்தவுடன் அவனுக்குப் பெருமை வந்துவிட்டது (உ.வ.). 7. எக்களிப்பு. நான் தமிழன் என்று சொல்லிக் கொள்வதிற் பெருமைப்படுகிறேன்.

பெரு – பெருகு. பெருகுதல் = 1. மிகுதல். ''பெருகுமத வேழம்'' (திவ். இயற். 2 : 75). 2. வளர்தல். ''தளிபெருகுந் தண்சினைய'' (பரிபா. 8 : 91). 3. வளர்ச்சியடைதல். ''பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்ற லினிது'' (குறள். 811) 4. நிறைதல். 5. முதிர்தல். ''பெருகுசூ லிளம்பிடிக்கு'' (கம்பரா. சித்திர. 10). 6. ஆக்கந்தருதல்.

பெருகு – **க.** பெர்சு.

பெருகு = புளித்துப் பெருகும் தயிர் (பிங்.).

புரை– பிரை– பெருகு = பிரை குத்தியதால் தயிரான பால்,

**தெ.** பெருகு, **ம.**பெருகு, பெருங்ஙு.

பெருகு – பெருக்கு. பெருக்குதல் = 1. மிகுத்தல். 2. விரிவடையச் செய்தல். ''வாரி பெருக்கி'' (குறள். 512). 3. குப்பை கூட்டுதல். 4. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் குறித்த மடங்கு அதிகப்படுத்துதல்.

**ம.** பெருக்குக, **தெ.** பெருகு (g), **க.** பெர்சிசு.

பெருக்கல் = 1. ஆக்கமடையச் செய்தல். ''பின்யா னிவனைப் பெருக்கலு முற்றனன்'' (பெருங். உஞ்சைக். 37 : 200). 2. குப்பை கூட்டுதல். 3. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் குறித்த மடங்கு அதிகப்படுத்துதல்.

பெருக்கம் = 1. மிகுதி. ''உண்மைப் பெருக்கமாந் திறமை'' (திருவாச. 42 : 7). 2. வளர்ச்சி. 3. ஆக்கம். ''பெருக்கம் பெருமித நீர்த்து'' (குறள். 431). 4. நீர்ப்பெருக்கமான வெள்ளம். ''புதுப்பெருக்கம் போல'' (நாலடி. 354). 5. நீடிப்பு. தாலிப் பெருக்கம் (உ.வ.).

பருக்கன் = பெருக்கன் = பரும்படியானது.

பெருக்கன்– பெருக்கான் = பெருச்சாளி (கோவை வழக்கு). பெருத்த எலி – பெருச்சாளி (மரூஉ). பெரு + சாளி (பெரும் பணப்பை) என்று காளமேகப் புலவர் பகுத்தது பொருந்தாது. பரு – பரிய – பெரிய = 1. பருத்த. எ-டு : பெரிய காய். 2. பருத்தகன்ற. எ - டு: பெரிய வீடு. 3. அகன்ற. எ - டு : பெருநிலம். 4. மூத்த. எ-டு : பெரியண்ணன். 5. தலைமையான. எ-டு: பெரிய ஆசிரியர். 6. உயர்வான. எ-டு: பெரிய திருவடி. 7. சிறப்பான. எ-டு: பெரிய கொடை 8. திருச்சிறப்பான. எ-டு: பெரிய வெள்ளிக்கிழமை. 9. வலிய. எ-டு: பெரிய காற்று. 10. மிகுந்த. எ-டு: பெரிய செல்வம். 11. உயரமான. எ-டு: பெரிய மரம். 12. நீண்டுயர்ந்த. எ-டு : பெரிய மலை.

பருமி – பருமிதம் – பெருமிதம் = 1. மேன்மை. ‘‘பெருக்கம் பெருமித நீர்த்து’’ (குறள். 431). 2. உள்ளக் கிளர்ச்சி, உள்ளக் களிப்பு (திவா.). 3. மேம்பாட்டுணர்ச்சி.

‘‘கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே’’ (தொல். மெய்ப். 9)

செருக்கு. ‘‘பெருமை பெருமித மின்மை’’ (குறள். 979).

புல்– புது. ஒ.நோ: மெல்– மெது.

புது – புதல் = 1. செறிந்த தூறு. ‘‘புதன்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று’’ (குறள். 274). 2. புல்லினம் (திவா.). 3. மருந்துப்பூடு (திவா.).

புதல்– புதர் = தூறு.

**தெ., க.** பொதரு.

புது– புதா = 1. பெருநாரை. ‘‘புள்ளும் புதாவும்’’ (சிலப். 10 : 117). 2. மரக்கால் நாரை (சிலப். 10 : 117, அரும்.).

புதா– புதை = அம்புக்கட்டு. ‘‘புதையம்பிற் பட்டு’’ (குறள். 597). 2. மரச்செறிவு, செடியடர்த்தி. 3. ஆயிரம் என்னும் தொகை.

புது– பூது– பூதம் = 1. பருத்தது, பெரியது. 2. பெரும் பேய். ‘‘பூதங் காப்பப் பொலிகளந் தழீஇ’’ (புறம். 369 : 17). 3. கூந்தற்பனை (சங். அக.).

நிலம் நீர் முதலிய ஐம்பூதங்களுள் ஒன்றைக் குறிக்கும் பூதம் என்னும் சொல் பூ (வ. bhu) என்னும் முதனிலையினின்று திரிந்தது. பூத்தல் – தோன்றுதல். இவ் விருவேறு சொற்களையும் ஒன்றாகக் காட்டியதோடு, வடசொல்லாகவுங் குறித்திருப்பது, சென்னைப் ப. க. த. அகரமுதலித் தொகுப்பாளரின் குறும்புத்தனமானது.

*பூதம் – பூதவம் = மிகப் பெரியதாய்ப் படரும் அல்லது பூதம் குடியிருக்கும் ஆலமரம் (திவா.).*

*பூதம்– பூதன் = 1. மகன் (யாழ். அக.). 2. ஒரு பண்டை யியற் பெயர். ''பொய்கை பூதன் பேயார்'' (அஷ்டப். நூற்றெட். காப்பு). பூதம்–* **வ.** *பூத* (bhuta). *பூதன்– பூதல்– பூதலி. பூதலித்தல் = உடல் பருத்தல்.*

*புதை – புடை. புடைத்தல் = 1. பருத்தல். 'மெச்சவே புடைத்த முத்தமார்தனத்தி'' (திருப்பு. 1176). 2. வீங்குதல். ''உடல்புடைப்ப வடித்து'' (திருவாலவா. 34 : 4)*

**க.** *பொடெ.*

*புடை = 1. பருத்த பாகம்* (W.). *2. பகுதி. ''மற்றப் புடை யெல்லாம் ஒவ்வாது'' (இறை. கள. 1, ப. 23). 3. பக்கம். ''ஒருபுடை பாம்பு கொளினும்'' (நாலடி. 148). 4. சார்பு. 5. இடம் (பிங்.). 6. முறை. ''நிர்வகிப்பதும் சிலபுடைகளுண்டு'' (ஈடு, 10 : 10 : 11).*

*புடை – புடைவி– புடவி = 1. பருத்த ஞாலம் (திவா.). 2. உலகம். ''அதிர்வன புடவிக ளடையவே'' (தக்கயாகப். 723).*

**க.** *பொடவி,* **தெ.** *புடமி,* **பிரா.** *புடவீ–* **வ.** *ப்ருத்வீ.*

*புடை – புடைவை = 1. சுற்றிக் கட்டும் ஆடை. ''வெண் புடைவை மெய்சூழ்ந்து'' (பெரியபு. திருநாவுக். 61). 2. மகளிர் சேலை.*

*புடைவை– புடவை = 1. துணி.* (S.I.I. IV, 31). *2. சேலை.*

*புடை – புடம் – புட்டம் = 1. புடைத்த பின்புறம் (குண்டி). 2. புடைவை (பிங்.).* **தெ.** *புட்டமு.*

*புட்டம்–* **வ.** *ப்ருஷ்ட.*

*ஒ.நோ :* LG. but, Du. bot, Sw. but – buttock.

*புட்டம் – புட்டகம் = புடைவை. ''புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்.'' (பரிபா. 12 : 17). புட்டம் – புட்டா = வீங்கின விதை (அண்டம்).*

**தெ.** *புட்ட* (dd), **க.** *புட்டெ* (dd).

*புட்டா– புட்டை = பெருத்த விதை (அண்டம்* elephantoid scrotum).

*புட்டம் – புட்டி = பருமை. ''புட்டிபடத் தசநாடியும் பூரித்து'' (திருமந். 574).*

புடை – புணை – பணை. பணைத்தல் = 1. பருத்தல். ‘‘பணைத்த வெம்முலை’’ (கம்பரா. எழுச்சி. 33). 2. செழித்தல் (நாலடி. 251).

பணை = 1. பெருமை. ‘‘பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்’’ (தொல். உரி. 41). 2. பருத்த மூங்கில். ‘‘பெரும் பணைத்தோள்’’ (பு.வெ. 11, ஆண்பாற். 1). 3. பெரிய முரசு. ‘‘வியன்பணை யுருமென வதிர்பட்டு’’ (பதிற். 39 ஃ 5).

புது – பொது = 1. பலர் கூடிய கூட்டம், மன்று, அம்பலம், மக்கட்டொகுதி. 2. மன்று கூடும் இடம். 3. பலர்க்கும் அல்லது எல்லார்க்கும் உரிய நிலைமை. ‘‘பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்’’ (குறள். 528). 4. சிறப்பின்மை. ‘‘பொதுக் கொண்ட.... வதுவை’’ (கலித். 66). 5. இயல்பு அல்லது வழக்கம். ‘‘உரை பொதுவே’’ (கம்பரா. முதற். 172). 6. எல்லார்க்கும் ஒத்த நடுவுநிலை.

**ம.** பொது, **தெ.** பொது (பொத்து).

பொது – பொதுள். பொதுளுதல் = 1. நெருங்குதல். ‘‘சிகையனல் பொதுளியதால்’’ (கம்பரா. இந்திரசித். 20). 2. நிறைதல். ‘‘ஞானங் குணங்கல்வி நூல்பொதுளி’’ (அரி சமய. பரகால். 7). 3. தழைத்தல். ‘‘இருள்படப் பொதுளிய’’ (திருமுருகு. 10).

பொது– பொதும்பு = 1. சோலை. ‘‘காந்தளம் பொதும்பில்’’ (அகம். 18). 2. குறுங்காடு. ‘‘முல்லையம் பொதும்பின்’’ (சீவக. 3042).

பொதும்பு – பொதும்பர் = 1. மரச்செறிவு. ‘‘பொழிலின் வியன் பொதும்பரின்’’ (திருக்கோ. 39). 2. இளமரக்கா. ‘‘வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்’’ (பெரும்பாண். 374). 3. சோலை.

பொது – பொதி = 1. தொகுதி. ‘‘பெய்கணைப் பொதிக ளாலே வளர்ந்தது பிறந்த கோபம்’’ (கம்பரா. நாகபா. 114). 2. கொத்து. ‘‘அம்பொதித் தோரை’’ (மலைபடு. 121). 3. உடல். ‘‘பொதியே சுமந்துழல்வீர்’’ (தேவா. 1154 ஃ 9). 4. பருமன். ஆள் பொதியா யிருக்கிறான் (உ.வ.). 5. அம்பலம். ‘‘மன்றும் பொதியினு மாமயில் சேர் தஞ்சை வாணன்’’ (தஞ்சைவா. 34). 6. பொதியமலை. ‘‘பொதிமா முனிவ’’ (சிவதரு. பாவ. 23).

பொதி – பொதிகை = பொதியமலை.

பொதி – பொதியம் = பொதியமலை. ‘‘பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே’’ (புறம். 2).

*பொதி + இல் – பொதியில் = 1. அம்பலம். ''தமனியப் பொதியிலும்'' (மணிமே. 28 : 66). 2. பொதியமலை. ''ஆஅய் மழைதவிழ் பொதியில்'' (குறுந். 84).*

*பொதி – பொதிர். பொதிர்தல் = 1. வீங்குதல். ''புனைதார் பொர நொந்து பொதிர்ந்தவென்'' (சீவக. 1380). 2. மிகுதல்.*

*பொதிர்த்தல் = பருத்தல். ''பொதிர்ந்த முலையிடை'' (பரிபா. 21 : 25).*

*பொது – பொத்து – பொத்தை = பருமையானது. பொத்தைக்கால் = யானைக்கால். பொத்தை மிளகாய் = தடித்த மிளகாய். பொத்தையன் = தடித்தவன் (யாழ். அக.).*

*பொத்து – பொத்தி = 1. மடல்விரியா வாழைப்பூ (யாழ்ப்.). 2. சோளக்கதிர்* (W.). *3. விதை (அண்டம்). 4. வரால்மீன். ''மத்தியுஞ் சிறு பொத்தியும்'' (குருகூர்ப் பள்ளு.).*

*பொத்துப் பொத்தெனல் = தடித்திருத்தற் குறிப்பு. குழந்தை பொத்துப் பொத்தென்றிருக்கிறது (உ.வ.).*

*பொத்து – பொந்து. பொந்து பொந்தெனல் = தடித்திருத்தற் குறிப்பு.*

*பொந்தன் = தடித்தவன். பொந்தநந்தடி = பெருந்தடி (நெல்லை). பொந்தத்தடி = பெருந்தடி (நாஞ்சில்).*

*பொந்தான் பொதுக்கெனல் = தடித்தும் சதை தளர்ந்தும் இருத்தற் குறிப்பு.*

*பொந்தான் – போந்தான் = பெருங்கோழி.*

*பொந்து – பொந்தி = பருமை (சங். அக.).*

*பொந்தி – போந்தி = வீக்கம் (யாழ். அக.).* **தெ.** *போத். போந்திக்கால் = யானைக்கால்.* **தெ.** *போதக்காலு.*

*பொது – பொதை = செடியடர்த்தி.*

*பொது – போது – போதா = பெருநாரை (சிலப். 10 :117, உரை).*

*பொதி – போதி = மலை (பிங்.).*

*புல் – பொல் – பொலி. பொலிதல் = 1. பெருகுதல்* (W.). *2. மிகுதல். ''கழுநீர் கண்ணகன் பொய்கை'' (மதுரைக். 171). 3. சிறத்தல். ''பொலிந்த வருந்தவத் தோற்கே'' (புறம். 1). 4. செழித்தல். ''பொலியு மால்வரை'' (தேவா. 236 : 8). 5. நீடுவாழ்தல். ''வழிவழி சிறந்து பொலிமின்'' (தொல். செய். 109).*

*பொலி – பொலிசை = 1. ஊதியம். ''பொன்பெற்ற பொலிசை பெற்றார் பிணையனார்'' (சீவக. 2546). 2. வட்டி. ''பொலிசைக்குக் கொண்டவூரும்''* (S.I.I. II, 82). **ம.** *பொலிச.*

*பொலியூட்டு = பொலிசையூட்டு.* (S. I. I. III, 84 : 88).

*பொலிசை– பலிசை = 1. ஊதியம். பலிசையாற் பண்டம் பகர்வான். (பு.வெ. 12, வென்றிப். 2). 2. வட்டி.* **ம.***பலிச.*

*இப் பொன் பதினெண் கழஞ்சே மூன்று மஞ்சாடி குன்றிக்கும் பலிசையாற் சந்திராதித்தவல் ....... அட்டுவோமானோம்.* (S.I.I.I, 116).

*பொலி– (பொளி) பொழி. பொழிதல் = (செ. குன்றாவி.) 1. திரண்டு பெய்தல். ''கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்'' (புறம். 203). 2. மிகச் செலுத்துதல். ''இளங்கோளரி பொழிந்தான்'' (கம்பரா. நிகும்பலை. 118). 3. மிகுதியாய்க் கொடுத்தல் (சூடா.). 4. தட்டுத் தடங்கலின்றி விரைந்து பேசுதல்.*

*(செ.கு.வி.) 1. நிறைதல். ''பொழிமணித் தண்டூண்'' (பெருங். உஞ்சைக். 47 : 110). 2. நிறைந்தொழுகுதல் ''புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்து'' (மணிமே. 14 : 49).*

*பொழித்தல் = திரட்டுதல்.*

*பொழிப்பு = திரட்டு. பொழிப்புரை = திரட்டுரை.*

*பொல்– பொல்கு– பொலுகு. பொலுகுதல் = அதிகப்படுதல்.* **தெ.** *பொலசு* (Z).

*பொழி– பொழில் = 1. பெருமை (பிங்.). 2. சோலை (பிங்.). ''காவ தப்பொழிற் கப்புறம்'' (கம்பரா. வனம்புகு 52). 3. பூந்தோட்டம் (திவா.). ''அணிமலர்ப் பூம்பொழி லகவயின்'' (மணிமே. பதி. 38). 4. ஞாலம். ''பொழில் காவலன்'' (பு.வெ. 6 : 6). 5. உலகம். ''நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும்'' (திவ். திருவாய். 1 : 4 : 5). 6. நாடு (சூடா.). 7. நாட்டின் கூறு. ''நாவலந் தண்பொழில்'' (பெரும்பாண். 465).*

***குறிப்பு :***

*1. பருத்தல் என்பது ஒன்றற்கும் பலவின் ஈட்டத்திற்கும் பொதுவாம்.*

*2. பருத்தல், மிகுதல், தொகுதல், செறிதல், நிறைதல் என்பன ஓரினக் கருத்துகள்.*

## 9

## புல்[3] (திரட்டற் கருத்துவேர்)

பருத்தற் கருத்தினின்று திரட்டற் கருத்துப் பிறக்கும்.

பொழித்தல் = திரட்டுதல். பொழிப்பு = திரட்டு, பிண்டம். பொளி = திரண்ட வரப்பு. ''பொளியை வெட்டி இரண்டு தளையும் ஒன்றாக்கினான்'' (W.).

வரம்பு கட்டுதல், வரம்பு திரட்டுதல் என்னும் வழக்குகளை நோக்குக.

பொளி– பொழி = 1. கணு. ''பொற்குடம் பொருந்திய பொழியமை மணித்தூண்'' (பெருங். உஞ்சைக். 48 : 87). 2. வயல்வரம்பு, வரப்பு.

புல்– புள்– பிள்– பிழம்பு = 1. திரட்சி. ''கடுந்தழற் பிழம் பன்ன'' (திருவாச. 29 : 7). 2. வடிவு. ''உண்மை யுணர்த்திப் பிழம்புணர்த்தப் படாதன'' (இறை.கள. ப. 15). 3. உடல். ''பிழம்புநனி யுலர்த்தல்'' (தொல். புறத். 20, உரை).

பிள்– பிண்டு = 1. திரட்சி. 2. உடம்பு. ''பிண்டாலம் வித்தின்'' (திருமந். 3025).

ஒ.நோ : கள்– கண்டு, நள்– நண்டு, சுள்– சுண்டு, வள்– வண்டு.

பிண்டு– பிண்டம் = 1. திரளை. 2. சோற்றுத் திரளை. ''பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்'' (தொல். புறத். 8). 3. உண்டை (பிங்.). 4. தென்புலத்தார்க்குப் படைக்கும் சோற்றுண்டை. 5. சதைத்திரள். ''உறுப்பில் பிண்டமும்'' (புறம். 28). 6. உடம்பு. ''உண்டி முதற்றே உணவின் பிண்டம்'' (புறம். 18). 7. தொகுதி. ''பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்'' (புறம். 184). 8. நூற்பிரிவுப் பொருளைப் பொதுப்படத் தொகுத்துக் கூறும் நூற்பா. ''பிண்டந் தொகைவகை குறியே செய்கை'' (நன். 20). 9. மூவுறுப்படங்கிய நூல். ''மூன்றுறுப் படக்கிய பிண்டத்தானும்'' (தொல். செய். 170).

ஒ.நோ ஃ கண்டு – கண்டம், துண்டு – துண்டம்.

**தெ.** பிண்டலி, **வ.** பிண்ட, **க.** பெண்ட்டெ, ஹெண்ட்டெ, ஹெண்டெ.

பிண்டக்கரு = உறுப்பற்ற சதைத்திரளான கரு (embryo, foetus).

பிண்டக் காப்பு = சோறு. பிண்டக் காப்புக்குத் தாளம் போடுகிறான் (உ.வ.).

பிண்டக் கருமம் = தென்புலத்தார்க்குப் பிண்டம் படைக்கும் சடங்கு.

பிண்டகன் = பிண்டம் படைப்போன்.

பிண்ட நூற்பா = அதிகாரப் பொருளை அல்லது நூற்பிரிவுப் பொருளைத் தொகுத்துக் கூறும் நூற்பா.

பிண்டதானம் = பிண்டப் படைப்பு.

பிண்டப் பொருள் = கருத்து (W.).

பிண்டப் பொழிப்பு = பிண்டவுரை (சி.போ. பா.1, ப. 26, சுவாமிநா).

பிண்டபாகம் = ஐயம் (பிச்சை) (அக. நி.).

பிண்டம் பிடித்தல் = (செ. குன்றாவி.). 1. உண்டை திரட்டுதல். 2. உருச்சிதைத்து உருண்டை யாக்குதல்.

(செ. கு. வி.). கரு உண்டாதல் (உ.வ.).

பிண்டம் விழுதல் = காய் விழுதல் (abortion).

பிண்டவுரை = பொழிப்புரை (W.).

கரு, கருமம், தானம், பாகம் என்பன வடமொழிக்கண் சென்று வழங்கும் தென்சொற்களே. என் ★ **வடமொழி வரலாறு** என்னும் நூலைப் பார்க்க.

பிண்டு – பிண்டி. ஒ.நோ ஃ கண்டு – கண்டி, துண்டு – துண்டி.

பிண்டி = 1. வடிவம் (சிலப். 3ஃ26, உரை). 2. கூட்டம் (W.). 3. ஏழாம் நாள் (புனர்பூசம்) (சூடா.). 4. இணையா வினைக்கை வகை (சிலப். 3ஃ18, உரை).

---

★ Sanskrit Language VIII, Non-Aryan Influence in Sanskrit.

பிண்டித்தல் = (செ. குன்றாவி.) திரளை யாக்குதல். ''பிண்டித்து வைத்த வுண்டியை'' (தொல். புறத். 8, உரை). 2. தொகுத்தல்.

(செ. கு. வி.) திரளுதல். ''பிண்டித்துப் பெருகிற் றென்பார்'' (சீவக. 1276).

பிண்டி – பிடி. ஒ.நோ: கண்டி – கடி, தண்டி – தடி.

பிடித்தல் = (செ. குன்றாவி.) 1. கையால் இறுக்கித் திரட்டுதல் அல்லது திரளையாக்குதல். பொரிவிளங்காய் பிடிக்க வேண்டும். (உ.வ.). 2. கையால் இறுக்கித் திரட்டிப் படிமையமைத்தல். ''பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது'' (பழ.). 3. கையால் இறுக்கித் திரட்டுதல் போல் ஒன்றை இறுகப் பற்றுதல். குடை பிடித்தான் (உ.வ.). 4. ஒன்று இன்னொன்றைப் பற்றுதல். பூனை எலியைப் பிடிக்கும், இன்றைக்குக் குளத்தில் மீன் பிடிக்கிறார்கள். ஓடுகிற மாட்டைப் பிடித்துக்கொண்டு வந்தான். ஊர்காவலர் குற்றவாளியைப் பிடித்துக்கொண்டார்கள். இந்தப் பிள்ளையைக் கொஞ்சநேரம் பிடி (உ.வ.). 5. கோணியைப் பிடித்து வாங்குதல். திருநெல்வேலிக்கு அரிசி பிடிக்கப் போயிருக்கிறார்கள் (உ.வ.). 6. கயிற்றைப் பிடித்து வாங்குதல். காங்கேயத்திலிருந்து ஒரு சோடி மாடு பிடித்து வந்திருக்கிறான் (உ.வ.). 7. கலத்தில் நீர் கொள்ளுதல். குழாயில் நீர் பிடித்துவா (உ.வ.). 8. கழங்கு விளையாடுதல். தட்டாங்கல் பிடித்து விளையாடுகிறார்கள். ஒற்றையா இரட்டையா பிடிக்கலாமா? (உ.வ.) 9. பொருத்துதல். நாற்காலிக் காலுக்கு வாங்கு பிடிக்க வேண்டும் (உ.வ.). 10. அழுத்தித் தடவுதல். உடம்பு பிடிக்கிறவன் இங்கே இருக்கிறானா? 11. சுளுக்குதல். காலில் நரம்பு பிடித்துக்கொண்டிருக்கிறது (உ.வ.). 12. இறுக்கமாயிருத்தல். சட்டை முதுகிற் பிடிக்கிறது (உ.வ.). 13. உள்ளடக்குதல். அந்தப் பெட்டி எல்லார் உடுப்பையும் பிடிக்கும் (உ.வ.). 14. ஒட்டிக்கொள்ளுதல். பேன் பிடித்த தலை (உ.வ.). 15. தாங்குதல். முட்டுக்கட்டை சுவரைப் பிடித்துக்கொண்டிருக்கிறது (உ.வ.). 16. ஒளிப்படம் எடுத்தல். படம் பிடிக்கும் இடம் (உ.வ.). 17. பற்றிக் கொள்ளுதல். யார் சேலையி லிருந்தோ சாயம் பிடித்துவிட்டது (உ.வ.). 18. பற்றியெரிதல். குடிசையில் தீப்பிடித்துவிட்டது. 19. அடித்தல். விதை பிடித்த காளை. 20. குறைத்தல். சம்பளத்திற் பத்து ரூபா பிடித்துக்கொண்டார்கள் (உ.வ.). 21. நிறுத்தி யடக்குதல். சல்லிக்கட்டில் மாடு பிடிப்பார்கள் (உ.வ.). 22. அடைதல். ''பெருகிய செல்வநீ பிடி'' (கம்பரா. கிளைகாண். 23). 23. அடைந்தேறுதல். மதுரை போய் வண்டியைப் பிடித்தான். 24. சொல்லைப் பயன்படுத்தல். அவன் சொன்ன சொல்லைப் பிடித்துக்கொண்டான். 25. அகப்படுத்துதல். அவன் பிடிகொடுக்க மாட்டான் (உ.வ.). 26. வசப்படுத்துதல். அவனைப்

*பிடித்தால் இது எளிதாய் முடியும் (உ.வ.). 27. பற்றுக்கோடாகக் கொள்ளுதல். ''அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை'' (திருவாச. 5 : 27). 28. புகலடைதல். ''உன்னை நான் பிடித்தேன் கொள்'' (திவ். திருவாய். 2 : 6 : 1). 29. மேற்கொள்ளுதல். ''விசுவ ரூபம் பிடித்தானே'' (இராமநா. சுந்தர. 19). 30. உணர்ந்து கொள்ளுதல். ஆசிரியன் கற்பித்ததை மாணவர் பிடித்துக்கொள்ள வேண்டும் (உ.வ.). 31. குறிக்கொள்ளுதல். ''பிடித்தது முடிக்கவல்ல விச்சையர்'' (பிரபோத. 24 : 52). 32. கடைப்பிடித்தல். ''பெருமானுரை பிடித்தேம்'' (கம்பரா. நிகும். 143). 33. ஒட்டாரம் பண்ணுதல். ஒரே பிடியாய்ப் பிடிக்கிறான் (உ.வ.).*

*(செ.குன்றிய வி.) 1. ஒட்டிக்கொள்ளுதல். அழுக்குப் பிடித்ததுண்டு. 2. தோன்றுதல். மழையிற் பாசம் பிடிக்கும் (உ.வ.). 3. விருப்பமாதல். எனக்கும் அவனுக்கும் பிடிக்காது (உ.வ.). 4. ஏற்றதாதல். அந்தவூர்த் தண்ணீர் எனக்குப் பிடிக்கவில்லை (உ.வ.). 5. செலவாதல். திருமணத்திற்கு ஆயிரம் உருபா பிடிக்கும் (உ.வ.). 6. நிகழ்தல். மலைநகரில் மாலைதொறும் மழை பிடிக்கும் (உ.வ.).*

***ம., க.*** *பிடி.*

*பிடித்தம் = 1. குறைப்பு. சம்பளப் பிடித்தம். 2. சிக்கனம். பிடித்தமாய்ச் செலவு செய்யவேண்டும். 3. மனப்பொருத்தம். தகப்பனுக்கும் மகனுக்கும் பிடித்தமில்லை. 4. விருப்பம். மேனாட்டுப் பொருள்களில் எனக்குப் பிடித்தம் அதிகம்.* ***க.*** *ஹிடித்த.*

*பிடித்து = (பெ.) ஒரு கைப்பிடிப் பொருள். ''பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்'' (குறள். 1037). 2. தொடங்கி. ''என் பிறப்பே பிடித்து'' (ஈடு, 2 : 1 : 1).*

*பிடிப்பு = 1. பற்றுகை. 2. ஒட்டுகை. 3. ஊதைப்பற்று* (rheumatism). *4. பிடித்தம். 5. கருத்து. ''பிறர் செல்வமும் நம்பேறெனப் பிடிப்புள்ள வெம்மிடத்து'' (பிரபோத. 27 : 62). 6. உறுதி. 7. கட்டு. 8. கைப்பிடி. 9. சார்பு, தோது. ''ஒருவனுக்குப் பிடிப்பாய்ப் பேசு''* (W). *10. நிலைக்களம்.*

***ம., க.*** *பிடிப்பு.*

*பிடிமானம் = 1. பிடித்தம். 2. பிடிப்பு. 3. கைப்பிடி. 4. உறுதி.*

*பிடி = 1. பற்றுகை. 2. கைமுட்டி. 3. மற்பிடி. 4. படைக்கலப்பிடி. ''தோல்கழியொடு பிடிசெறிப்பவும்'' (புறம். 98). 5. உள்ளங்கைப் பிடியளவு. ''தன்கேளைப் பிடிகளொறும் வேறாஞ் சுவைபெற வூட்டி'' (வெங்கைக்கோ. 377). 6. நால்விரல் கொண்ட அளவு. 7. பணியார வகை. ''பிடிசுட்டுப் படைத்தல்''*(W.). *8. பேய். ''பெண்டிர்பிடிபோல'' (திருவுந்தி.*

*35). 9. உறுதி. 10. உதவி. 11. குதிரையின் வாய்க்கருவியிற் கோக்குங் குசை. ''மாத்தாட் பிடியொடு'' (நெடுநல். 178). 12. மனத்திற் பதிகை. 13. நம்பிக்கை. 14. மதக்கொள்கை. 15. நளிநயம் (அபிநயம்) முதலியவற்றின் எடுப்பு.*

***ம., தெ., க.** பிடி.*

*பிடிக்கொம்பன் (சிறு கொம்புள்ள விலங்கு). பிடிக் கொழுக்கட்டை, பிடிகயிறு, பிடிகல், பிடிகாசு, பிடிகாரன், பிடிகிழங்கு, பிடித்தராவி, பிடித்த வேர்ப்பங்கு, பிடித்தாட்டிக்கழி, பிடிச்சிற்றுளி, பிடிச்சீலை, பிடிசாம்பல், பிடிசுட்டுப் படைத்தல், பிடிசுவர், பிடிசுற்றுதல், பிடிசெம்பு, பிடிசோறு, பிடித்தபிடி, பிடித்தாடி (பலகறை), பிடிதண்டம், பிடிதம் (ஐயம்), பிடிநாள் (நன்னாள்), பிடிநெல், பிடிப்பிட்டு, பிடிபாடு, பிடிமண், பிடிமீசை, பிடியரிசி, பிடியல் (சிறுதுகில்), பிடியனம் (குறித்த அளவு கொள்ளும் பானை), பிடியாள், பிடியெழுத்தாணி முதலிய சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வருவன.*

*கைபிடித்தல் (கைக்கொள்ளுதல்). கைபிடி (கையிற் பெற்றுக்கொண்ட பொருள்), கைபிடிசுவர் முதலிய கூட்டுச் சொற்களும், அரிவாட்பிடி, அறுவாட்பிடி, உளிப்பிடி, கத்திப்பிடி, குடைப்பிடி, கொட்டுப்பிடி முதலிய பிடிவகைப் பெயர்களும்; உடும்புப்பிடி, கடைப்பிடி, குரங்குப்பிடி, குருட்டுப்பிடி, விடாப்பிடி முதலிய பிடிப்புப் பெயர்களும் தொன்றுதொட்டனவே.*

*பிண்டம் என்னும் தென்சொல், வடமொழி மரபின்படி ஈறுகெட்டுப் 'பிண்ட' என இருக்கு வேதத்தில் நின்று, திரளை, உண்டை என்னும் பொருள்களைக் குறிக்கின்றது. அதனின்று, பிண்டத்வ, பிண்டக், பிண்டன முதலிய தனிச் சொற்களையும்; பிண்டகத்த, பிண்டகரண, பிண்டதர்க்கக முதலிய கூட்டுச் சொற்களை யும், ஏறத்தாழ எழுபதுவரை திரித்துள்ளனர்.*

*அங்ஙனமே, பிண்டி என்னும் தென்சொல் வடிவினின்று, பிண்டித, பிண்டின், பிண்டீ முதலிய தனிச்சொற்களையும்; பிண்டிதமூல்ய, பிண்டிதார்த்த, பிண்டீகரண, ஸபிண்டீகரண, பிண்டீபாவ* (bh) *முதலிய கூட்டுச் சொற்களையும்; ஏறத்தாழ முப்பது வரை திரித்துள்ளனர்.*

*ஆரியத்திற்குத் தமிழொடு அல்லது திரவிடத்தொடு தொடர்பில்லையென்றும், சமற்கிருதம் ஏறத்தாழ ஐந்நூறு சொற்களை மட்டும் திரவிடத்தினின்று கடன் கொண்டுள்ளதென்றும், கூறும் பரோ என்னும் சமற்கிருதப் பேராசிரியர் கூட, பிண்டம் என்னும் சொல்*

*தென்சொல்லே யென்று தம் ‘சமற்கிருத மொழி’* (Sanskrit Language) *என்னும் நூலிற் பின்வருமாறு குறித்திருத்தல் காண்க.*

“*Pinda* ‘lump, clod’: *Ka, petta, pette, pente, hente, hende,* clod, lump of earth,’ *Te, pedda, pella ‘id’, pendali* ‘a lump or mass’, *Ka., Te, pindu* ‘to squeeze together.”

*ஒ.நோ : பிழி. பிழிதல் = உள்ளிருக்கும் நீர்ப்பொருள் வடியுமாறு, ஒன்றை இறுக்கிப் பிடித்தல்.*

*பிண்டம் அல்லது பிண்டி என்பது வடசொல்லாயின், பிடி என்னும் வினைச்சொல்லும், அதன் நூற்றுக்கணக்கான திரி சொற்களும் கூட்டுச்சொற்களும் வடசொல்லாம். பிடி என்பது, குமரி நாட்டில் தோன்றிய அடிப்படைத் தமிழ்ச்சொற்களுள் ஒன்றாத லாலும், இருக்குவேதம் மிகப் பிற்காலத்ததாதலாலும், பிண்டம் அல்லது பிண்டி என்பது தென்சொல்லே யென்பது தெரிதரு தேற்றமாம்.*

## 10

## புல்[4] (விரும்பற் கருத்துவேர்)

*பொருந்தற் கருத்தினின்று மனம் பொருந்துதலாகிய விரும்பற் கருத்துத் தோன்றும்.*

*புல்லுதல் = நட்புச் செய்தல்.*

*புல்– புல்கு. புல்குதல் = நண்பராய் மருவுதல்.*

*புல்– புர்– புரி. புரிதல் = விரும்புதல்.*

*''புகுமுகம் புரிதல்''* *(தொல். மெய்ப். 13)*

*புரித்தல் (பி.வி.) = விரும்பச் செய்தல்.*

*''புரித்த தெங்கிள நீரும்''* *(சீவக. 2402)*

*புரி–* **வ.** *ப்ரீ– ப்ரிய, ப்ரீதி, ப்ரேம (முதலியன).*

*புரி – பரி. பரிதல் = 1. பற்றுவைத்தல். ''பண்டம் பகர்வான் பரியான்'' (பு. வெ. 12, ஒழிபு. 2). 2. சார்பாகப் பேசுதல். அவனுக்காகப் பரிய வேண்டா (உ.வ.). 3. காதல் கொள்ளுதல். ''பாண பரிந்துரைக்க வேண்டுமோ'' (ஐந். ஐம். 23). 4. இரங்குதல். ''பாழாய்ப் பரிய விளிவது கொல்'' (பு. வெ. 3 : 8). 5. வருந்துதல். ''பழவினைப் பயனீ பரியல்'' (மணிமே. 12 : 50). 6. வருந்திக் காத்தல். ''பரியினு மாகாவாம் பாலல்ல'' (குறள். 376). 7. அஞ்சுதல். ''வடுப்பரியு நாணுடையான்'' (குறள். 502).*

*பரி = 1. அன்பு* (W.). *2. வருத்தம் (சூடா).*

*புல் – புள் – (புளு) – புகு – புகல், புகலுதல் = 1. விரும்புதல். ''செருப்புகன் றெடுத்த'' (திருமுருகு. 67). 2. மகிழ்தல். ''முகம்புகல் முறைமையின்'' (தொல். கற்பு. 11).*

*புகல் = 1. விருப்பம். ''வானுறை புகறந்து'' (பரிபா. 19 :1). 2. கொண்டாடுகை. ''புகலகல் நின்மார்பின்'' (கலித். 79).*

*புகல் – புகல்வு = விருப்பம். ''முனைபுகல் புகல்வின் மாறா மைந்தரொடு'' (பதிற். 84 : 17).*

*புள்– பிள்– பிண்– பிணி– பிடி = பெண்யானை.*

*''பிடியென் பெண்பெயர் யானை மேற்றே'' (தொல். மரபு. 52). பிணி = பற்று. ''பொருட்பிணிச் சென்று'' (அகம். 27).*

*பிடித்தல் = 1. பற்றுதல். 2. விரும்புதல். பிண்– பிணா = 1. பெண். 2. பெண்டு. ''பெண்ணும் பிணாவும் மக்கட் குரிய'' (தொல். மரபு. 62).*

*பிணா– பிணவு = பன்றி, புல்வாய், நாய், கரடி என்பவற்றின் பெண்.*

*''பன்றி புல்வாய் நாயென மூன்றும்*
*ஒன்றிய என்ப பிணவின் பெயர்க்கொடை'' (தொல். மரபு. 59)*

*''எண்குதன் பிணவோ டிருந்தது போல'' (மணிமே. 16 : 68). பிணவு – பிணவல் = மேற்குறித்த மூன்றன் பெண்.*

*''பிணவல் எனினும் அவற்றின் மேற்றே'' (தொல். மரபு. 60).*

*பிணா – பிண – பிணை = 1. விருப்பம். ''பிணையும் பேணும் பெட்பின் பொருள'' (தொல். உரி. 40). 2. விலங்கின் பெண் (பிங்.).*

*''புல்வாய் நவ்வி உழையே கவரி*
*சொல்வாய் நாடின் பிணையெனப் படுமே'' (தொல். மரபு. 58)*

*பெண்மான். '' பிணையேர் மடநோக்கும்'' (குறள். 1089)*

*பிள்– பெள். பெள் + தல் - பெட்டல்.*

*பெட்டல் = 1. விரும்புதல். ''பிரித்தலும் பெட்டலும்'' (தொல். கற்பு. 6). 2. செய்ய விரும்புதல். ''பெட்டவை செய்யார்'' (இனி. நாற். 23). 3. காதலித்தல். ''பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'' (குறள். 141).*

*பெட்பு = 1. விருப்பம். ''குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்'' (தொல். களவு. 11). ''பெட்புறும்...... தீப நிகர்த்தவால்'' (கம்பரா. மூலபல. 135). 2. பேணுகை. ''பெட்பின் றீதல் யாம்வேண் டலமே'' (புறம். 205). ''பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்'' (தொல். களவு. 11). 3. அன்பு (சூடா). 4. பாதுகாப்பு.*

*பெட்டார் = 1. நண்பர் (சூடா). 2. விரும்பியவர். ''பேணாது பெட்டார்'' (குறள். 1178).*

பெள்– பெட்டை = 1. பெண். 2. சில விலங்கு புட்களின் பெண்பால்.

''ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய'' (தொல். மரபு. 53)

''புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப'' (தொல். மரபு. 54)

**ம., தெ.** பெட்ட.

பெட்டையன் = 1. ஆண்மையற்றவன். 2. பேடி. பெட்டைச்சி என்பது இரட்டைப் பெண்பாலான உலக வழக்கு. பெட்டை மருட்டு = பெண்டிரை அல்லது பேதையரை அச்சுறுத்தி ஏமாற்றுகை.

பெட்டைச் சிறுக்கி என்னும் வயவுச்சொல் இழிவழக்கு. சிறுமியரைப் பெட்டைப் பசன்கள் என்பது கொச்சை வழக்கு (வ.ஆ.). பையன்– பயன்– பசன்.

பெட்டை. பெடை = பறவைகளின் பெண்பால்.

''பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்'' (தொல். மரபு. 55).

''செந்தலை யன்றில் இறவி னன்ன
கொடுவாய்ப் பெடையொடு'' (குறுந். 160)

**ம.** பெட, **க.** ஹேட்டே. பெடை– பேடை = பெண்பறவை.

''மாத ரிருங்குயின் மணிநிறப் பேடை'' (பெருங். 1 ፡ 33 ፡ 29)

**ம.** பேட, **க.** ஹேட்டே.

பேடை – பேடு = 1. பெண்பால். ''பேடலி யாணர் போலும்'' (தேவா. 249 ፡ 1). 2. பெண் பறவை. ''பேடுஞ் சேவலும்'' (மலைபடு. 141, உரை). 3. சில விலங்குகளின் பெண். ''தெய்வமாக வைத்த எருமையாகிய பேட்டின் கொம்போடே'' (கலித். 114, உரை). 4. பேடனுக்கும் பேடிக்கும் பொதுப்பெயர். 5. பேடி. 6. கூத்துப் பதினொன்றனுள் ஒன்றான பேடிக் கூத்து. அது,

''சூரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
யகன்ற வல்கு லந்நுண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து'' (மணிமே. 3 ፡116 – 22)

ஆடுவது, ''பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்'' (மணிமே. 3 : 125). 7. நடுவிரல். ''சுட்டும் பேடும்'' (சிலப். 3 : 18, உரை). 8. உள்ளீடில்லாக் காய். இந்தத் தேங்காய் பேடு (உ.வ.).

பேடு– பேடன் = ஆண்டன்மை கொண்ட பெண்.

பேடன்– பேடி = 1. பெண்டன்மை கொண்ட ஆண். ''பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்'' (தொல். கிளவி. 4). ''பெண்ணவா யாணிழந்த பேடி'' (நாலடி. 251). 2. புணர்ச்சியாற்ற லின்மை. 3. நடுவிரல். ''சுட்டுப் பேடி'' (சிலப். 3 : 18, உரை மேற்கோள்). 4. அச்சம்.

**ம.**, **தெ.**, **க.** பேடி, **து.** பேடி (b).

பேடித்தல் = அஞ்சுதல்.

இச் சொல்லைப் பீஷ் என்னும் வடசொற் றிரிபாகக் காட்டியுள்ளது. சென்னைப் ப. க. க. த. அகரமுதலி. அவ் வடசொல்லே பே (பேம்) என்னும் தென்சொற் றிரிபாகும்.

ஆய்த வெழுத்தைப் பேடி யெழுத்தென்று உவின்சிலோ அகரமுதலி குறித்திருப்பது பொருந்தாது. அதை அலியெழுத் தென்பதே பொருத்தமாம். உயிரும் மெய்யுமல்லாத ஆய்தம், ஆணும் பெண்ணுமல்லாத அலிபோன்றிருத்தலின், அலியெழுத் தென்னப் பட்டது. பேடிக்கு ஆண் தோற்றமும் பெண்டன்மையு முண்டு.

''எண்ணுங் குறிலா ணியைந்த நெடிலெல்லாம்
பெண்ணாகு மொற்றாய்தம் பேடாகும்''

என்று வெண்பாப் பாட்டியல் நூற்பாவோதினும் (முதன்மொழி. 6), ''ஒற்றெழுத்தும் ஆய்தவெழுத்தும் அலியெழுத்தாம்'' என்றே அதன் உரை கூறுதல் காண்க. பேடு என்பது பேடனுக்கும் பேடிக்கும் பொதுப்பெயர். ஒரு பாலுந் தழுவாததே அலியாம்.

பெள்– பெட்டு. பெட்டுதல் = விரும்புதல்.

''ஒன்றியான் பெட்டா வளவை'' (புறம். 399)

''ஒன்றியான் பெட்டா வளவையின்'' (பொருந. 73)

பெட்டா வளவை = விரும்பிக் கேட்பதற்கு முன்னே.

பெள்– பெண் = 1. இருதிணைப் பெண்பால். 2. உயர்திணைப் பெண்பால். ''பெண்ணும் பிணாவும் மக்கட் குரிய'' (தொல். மரபு. 92). ''பெண்ணே பெருமை யுடைத்து'' (குறள். 907). 3. சிறுமி. 4. மகள்.

''இந்திரன் பெண்ணை'' (கந்தபு. திருப்ப. 35). 5. மணமகள். ''பெண்கோ ளொழுக்கம் கண்கொள நோக்கி'' (அகம். 112). 6. மனைவி. ''பெண்ணீற் றுற்றென'' (புறம். 82). 7. பெண்டன்மை.

**ம.** பெண்., **க.**பெண், ஹெண்ணு.

பெண்ணடி = பெண் பிறங்கடை (வாரிசு). ''ஒரு பெண்ணடிதன் காணிக்குத் தேடக் கருத்தாகி'' (விறலிவிடு. 152).

பெண்ணலி = பெண்டன்மை மிக்க அலி. (தொல். மரபு. 106, உரை).

பெண்ணன் = ஆண்மையற்றவன்.

பெண்ணாண் = கணவன் மனைவியர் (தம்பதிகள்) (நாமதீப. 176).

பெண்ணாறு = கிழக்கு நோக்கி யோடி வங்கக் கடலிற் கலக்கும் ஆறு. ''ஆணாறு பெண்ணாறு ஒன்றின்றிக்கே'' (ஈடு, 4 : 4 : பிர.).

பெண்ணெழுத்து = நெட்டுயிரெழுத்து (வெண்பாப். முதன் மொழி. 6).

பெண்ணையன் = 1. பெண்டன்மையுள்ளவன். 2. மனைவிக் கடங்கியவன்.

பெண்ணைவாயன் = பெண்டிரைப்போற் பேசுவோன்.

பெண்பிள்ளை = 1. பெண்குழந்தை. 2. பெண்டு. ''நாயகப் பெண்பிள்ளாய்'' (திவ். திருப்பா. 7). 3. மனைவி.

பெண்பிள்ளைப் பிள்ளை = பெண் பிள்ளை. (மிகைபடக் கூறும் உலக வழக்கு). ''பொம்பிளைப் பிள்ளை'' என்பது இதன் கொச்சை வடிவு.

பெண்பெண்டாட்டி = பெண்டு. ''ஒரு பெண்பெண்டாட்டி ஆணுடை யுடுத்து'' (ஈடு, 6 : 2 : பிர.). இச் சொல், இன்று வடார்க்காட்டு ஆம்பூர் வட்டத்தில், பொம்மநாட்டி என்னும் கொச்சை வடிவில் வழங்குகின்றது.

பெண்மகள் = 1. பெண்டு (W.). 2. சிறுமி. ''பேதைப் பருவத்துப் பெண்மகளை'' (தொல். சொல். 164, சேனா.).

பெண்மகன் = சிறுமி. ''பெண்மை யடுத்த மகனென் கிளவியும்'' (தொல். பெயரியல், 10). இதற்கு, ''புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை, மாறோக்கத்தார் இக் காலத்தும் பெண்மகனென்று வழங்குப'' என்பது சேனாவரையர் உரை.

பெண்மகன் என்னும் மாறோக்கத்தார் வழக்கு, பெட்டைப் பசன் என்னும் ஆம்பூர் வட்டத்தார் வழக்குப் போன்றது.

மாறோக்கம் (மாறோகம்) கொற்கை சூழ்ந்த நாடு. பெண் வாயன் = பெண்டிர்போற் சளசளவென்று பேசுபவன்.

பெண்பாலரையும் மனைவியையும் பெண்சாதி என்பது இரு பிறப்பி (hybrid) என்னும் இழிவழக்கு. இதில், நிலைச்சொல் தமிழ்; வருஞ்சொல் வடமொழி.

பெண்சாதி = 1. பெண்பாலார். ''உலகத்துப் பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணைபோலும் நோக்கினையுடைய மகளிர்'' (மதுரைக். 555, உரை). 2. மனைவி. ''உன்தன் வீட்டுப் பெண்சாதிக்காக'' (இராமநா. அயோத். 8).

தேவமொழியெனத் தவறாகவும் பேதைத்தனமாகவும் நம்பப்படும் வடசொல், பெண்சாதி என்னும் வழக்கில் இழிவடைந்திருப்பது வியப்பிற்கிடமானதே.

பெண் – பெண்டு = 1. பெண்பாலள். ''ஒரு பெண்டாலிதய முருகினையாயின்'' (வெங்கைக்கோ. 47). 2. ''வனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே'' (ஐங். 57).

**ம.** பெண்டி, **க.** பெண்ட, ஹெண்ட, **தெ.** பெண்ட்டி.

பெண்டு– பெண்டன் = பேடி (திவா.).

**க.** ஹெண்ணுக.

பெண்டாளன் = பெண்டை மனைவியாகக் கொண்டவன் அல்லது நுகர்பவன்.

பெண்டாட்டி = 1. பெண். ''ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து'' (இறை. கள. 1, உரை). 2. மனைவி. ''கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி'' (திரிகடு. 96). 3. வேலைக்காரி (S.I.I. II, 483).

**க.** ஹெண்டத்தி.

பெள்– பேள்– பேட்பு = விருப்பு.

பேள்– பேண். பேணுதல் = 1. விரும்புதல். ''பேணான் வெகுளி'' (குறள். 526). 2. போற்றுதல். ''தந்தைதாய்ப் பேண்'' (ஆத்தி. 20). 3. பாதுகாத்தல். ''பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்'' (புறம். 9). 4. மதித்தல். ''தெய்வம் பேணித் திசைதொழு தனிர் சென்மின்'' (பரிபா. 15 : 48). 5. மதிப்புரவாக நடத்துதல். ''பிறர்தன்னைப் பேணுங்கா

னாணலும்'' (திரிகடு. 6). 6. வழிபடுதல். ''அமரர்ப் பேணியும்'' (பட்டினப். 200). 7. பொருட்படுத்துதல். ''துவலைத் தண்டுளி பேணார்'' (நெடுநல். 34). 8. பிழை நேராமற் காத்தல். ''பாணியுந் தூக்கு நடையும் பெயராமை பேணி'' (பு. வெ. 12, ஒழிபு, 19). 9. சுவடித்தல். ''பேணி நிறுத்தா ரணி'' (கலித். 104). 10. கருதுதல் (திவா.). 11. குறித்தல் (சூடா.). 12. உட்கொள்ளுதல். ''விளங்குபொறற் கலத்தில் விரும்புவன பேணி'' (சிறுபாண். 244). 13. அறிதல். ''பேணா தொருத்தி பேதுற'' (பரிபா. 7 : 67). 14. ஒத்தல். ''பெருநறாப் பேணியவே கூர்நறா வார்ந்தவள் கண்'' (பரிபா. 7 :63). 15. மகிழ்தல். ''பிறனாக்கம் பேணா தழுக்கறுப்பான்'' (குறள். 163).

*பேண் = 1. விருப்பம். ''பிணையும் பேணும் பெட்பின் பொருள'' (தொல். உரி. 40). 2. பேண் மரம்* (W.).

*பேண்– பேணம் = 1. மதிப்பு. 2. பதனம். 3. ஊட்டந்தருகை.*

*பேண்– பேணரவு = பேணல்.*

*பேண்– பேணி = ஒருவகைப் பணியாரம்.*

*பேண்– பேணகம் = ஒருவகைப் பலகாரம்.*

***வ.*** *பேணிக* (phenika).

*பேணுநர் = பாதுகாப்போர்.*

*''பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ'' (மணிமே. 14 : 47).*

*பேணார் = பகைவர். ''பேணா ரகநாட்டு'' (பு. வெ. 3 : 4).*

*ஒ.நோ : பெட்டு = விருப்பம்.* E. pet.

"pet, n., & v. t. (-tt-). 1. Animal tamed & kept as favourite, or treated with fondness; darling, favourite, (often attrib.); one's - aversion, what one specially dislikes; - cock, small stop-cock for draining, letting out steam, etc; - name, one expressing fondness or familiarity.

2. v.t. Trat as a - fondle; - ting party (colloq.), social gathering of young people at which hugging, kissing, etc., are indulged in. (16th C.Sc. & north., orig. unkn.)''

*- The Concise Oxford Dictionary.*

## 11

## புல்[5] (வளைதற் கருத்துவேர்)

*புல் – புர் – புரள். புரளுதல் = 1. உருளுதல். அடித்துப் புரண்டு விழுந்தான், கழுதை புரண்ட களமாய்ப் போய்விட்டது (உ.வ.). 2. சுற்றுதல்* (W.). *3. அலைமறிதல். ''புரணெடுந் திரைகளம்'' (கம்பரா. விபீடண. 27). 4. கரைகடந்தோடுதல். ஆறு கரைபுரண்டோடுகிறது (உ.வ.). 5. மாறி மாறி வருதல். 'வெயில்களும் நிலாக்களும் புரள'' (கம்பரா. பிரமா. 99). 6. மாறுபாடடைதல். 7. சொற்பிறழ்தல். 8. சாதல். ''கழுத்திலே புண்ணாகிப் புழுத்துப் புரண்டான்'' (குருபரம். 165. ஆறா.). 9. பணம் விரைந்து தொகுதல் அல்லது கைமாறுதல்.*

***ம.** புரளுக, **க.** பொரள், **தெ.** பெரலு.*

*புரள் – புரளி = 1. பொய். 2. வஞ்சனை. 3. குறும்பு* (W.). *4. கலகம்* (W.).

*புரள் – புரண்டை – பிரண்டை = திருகலான கொடிவகை.*

***ம.** பிரண்ட.*

*புரள் – புரட்டு. புரட்டுதல் = 1. உருட்டுதல். ''முடையுடைக் கருந்தலை புரட்டு முன்றா ளுகிருடை யடிய'' (பட்டினப். 230). 2. கீழ்மேலாகத் திருப்புதல். 3. கறி முதலியவற்றைக் கிண்டி வதக்குதல். கறியைப் புரட்டு, கத்தரிக்காயைப் புரட்டியிருந்தது (உ.வ.). 4. உண்டபின் வயிற்றிற் கோளாறு நேர்தல். வயிற்றைப் புரட்டுகிறது (உ.வ.) 5. சொற்பொருள் திரித்தல். 6. வஞ்சித்தல்* (W.). *7. நிலத்திற் படிவித்து அழுக்காக்குதல். புதுச் சேலையைக் கீழும் மேலுமாகப் புரட்டுகிறாள் (உ.வ.).*

***ம.** புரட்டுக, **க.** பொரள்சு.*

*புரட்டு – புரட்டல் = குழம்புங் கூட்டுமின்றிக் கட்டியாகச் சமைத்த கறிவகை.*

புரட்டு = 1. கீழ்மேலாகத் திருப்புக. 2. சொற்பொருள் திரிப்பு. ''புறப்பட்டார் புரட்டுப் பேசி'' (திருவாலவா. 38 : 14). 3. வஞ்சகம். 4. குமட்டல். 5. வயிற்றுவலி. 6. கறிச் சமையல் வகை.

புரட்டன் = 1. சொற்பொருள் திரிப்போன். 2. மாறாட்டக்காரன்.

புரட்டு – புரட்டி = 1. தோசை திருப்பி. 2. புரட்டன்.

புரள்– புரட்சி = 1. பெருங்கலகம். 2. அரசியல்வகை மாற்றம். எ-டு : இரசியப் புரட்சி. 3. மக்கள் வாழ்க்கை முறை (தொழில், மதம், மொழி, கல்வி, ஊண், உடை முதலியவற்றின்) மாற்றம். 4. பிறழ்வு.

புரள் – பிறழ். பிறழ்தல் = 1. மாறுதல். ''சிறுகா பெருகாமுறை பிறழ்ந்து வாரா'' (நாலடி. 110). 2. முறை கெடுதல். ''களிற்றுகிர்ப் பிறழ்பற் பேய்கள்'' (சீவக. 804). 3. மாறுபட்டுக் கிடத்தல். ''மயிலெருத்துற ழணிமணி நிலத்துப் பிறழ'' (கலித். 103). 4. பெயர்தல் (அக. நி.). 5. புடைபெயர்தல். ''மாணெழி லுண்கண் பிறழுங் கயலாக'' (கலித். 98). 6. நெளிதல். ''வயலாரல் பிறழ்நவும்'' (பதிற். 13 :1). 7. வெட்டி வெட்டி விளங்குதல். ''ஒளி பிறழு நெடுஞ்சடை'' (கல்லா. 54 : 11). 8. முரிதல். ''திரைபிறழிய விரும்பௌவத்து'' (பொருந. 178). 9. திகைத்தல். ''பிறங்க லிடையிடைப் புக்குப் பிறழ்ந்து'' (பரிபா. 19 :59). 10. நடுங்குதல் (சூடா.). 11. சொன்மாறுதல். 12. இறந்துபடுதல். ''பிணிபுநீ விடல்சூழிற் பிறழ்தரு மிவளென'' (கலித். 3).

புரள்– பிரள்– பிரளி (பிறளி) = குழந்தை நோய்வகை.

புர்– புரி. புரிதல் = 1. வளைதல். 2. திரும்புதல். ''மற்றை யருகே புரியில்'' (திவ். இயற். திருவிருத். 42. வியா. ப. 247). 3. முறுக்குக் கொள்ளுதல். ''சுகிர்புரி நரம்பின்'' (மலைபடு. 23). 4. அசைதல். ''தார்புரிந் தன்ன'' (பதிற். 66 :13).

புரி = 1. முறுக்கு. ''புரியடங்கு நரம்பு'' (சிறுபாண். 34). 2. சுருள். ''புரிக்குழன் மடந்தை'' (சீவக. 2688). 3. சுரி (spiral screw). 4. யாழ் நரம்பு. ''புரிவளர் குழலொடு'' (சீவக. 124). 5. கயிறு, ''மரற்புரி நரம்பின்'' (பெரும்பாண். 181). 6. சங்கு. ''புரியொருகை பற்றி'' (திவ். இயற். 1 : 31). 7. மாலை. ''புரிமணி சுமந்த பொற்பூண்'' (சீவக. 619). 8. கட்டு (சூடா.). 9. வளைந்த மதில். 10. மதில் சூழ்ந்த நகரம் (பிங்.).

**ம., க., து.** புரி.

புரிக்கூடு = வைக்கோற் புரி. நெற்கூடு. ''புரிக்கூட்டில் நின்ற.......... பல வருக்கத்து நெல்லு'' (சிலப். 10 : 123, உரை).

*புரிகுழல் = கடை குழன்று சுருண்ட கூந்தல். ''புரிகுழன் மாதர்'' (சிலப். 14 :37).*

*புரிசடை = சுருண்ட சடை* (W.).

*புரிநூல் = முறுக்கிய பூணூல். ''திருமார்பினிற் புரிநூலும்'' (தேவா. 385 : 3).*

*புரிமணை = வைக்கோற்புரி வளையம்.*

*புரிமுகம் = 1. சங்கு. 2. நத்தை.*

*சங்குக் கூடும் நத்தைக் கூடும் உள் வளைவுள்ளன.*

*புரிமுறுக்கு = முறுக்கு வளையல்.*

*இடம்புரி = இடப்புறமாக வளைந்த சங்கு.*

*கொடும்புரி = மிக ஏறிய முறுக்கு.*

*முப்புரி = முறுக்கிய முந்நூல் (பூணூல்).*

*வலம்புரி = வலப்புறமாக வளைந்த சங்கு.*

*வைக்கோற்புரி = முறுக்கிய வைக்கோற் கயிறு.*

*புரி – புரிவு = 1. தப்பி நீங்குகை. ''புரிவின்றி..... போற்றுவ போற்றி'' (பு. வெ. 8 :20). 2. தவறு. ''புரிவிலா மொழிவிதுரன்'' (பாரத. சூது. 43). 3. வேறுபடுகை (அக. நி.).*

*புரி– புரிசை = நகரைச் சூழ்ந்த மதில்.*

*''ஏந்துகொடி யிறைப்புரிசை'' (புறம். 17).*

*புரி– பரி. பரிதல் = 1. (வளைந்து) முறிதல், ''வெண்குடை கால்பரிந் துலறவும்'' (புறம். 229). 2. அறுதல். ''பரிந்த மாலை'' (சீவக. 1349). 3. அழிதல். ''பழவினை பரியுமன்றே'' (சீவக. 1429). 4. பிரிதல்* (W.).

*பரித்தல் = சூழ்தல். ''குருதி பரிப்ப'' (அகம். 31). 2. அறுத்தல் (அக. நி.).*

***க.** பரி. பரி– **வ.** பரி.*

"*Pari*, ind. round, around, about, round about; fully, abundantly, richly (esp.) ibc. (where also pari) to express fullness (or high degree), R.V. & c. & c. as a prep. (with acc.) about (in space and time), R.V., A.V., against opposite to, in the direction of, towards, to, ib. (of. Pam. i, 4, 90; also at the beginning of a comp. mfn. cf. ib. ii, 2, 18, Vartt. 4 Fat. and *Pary - adhyayana*), beyond, more than, A.V., to the share of (with as or bhu, to fall to a person's lot.), Pam

i, 4, 90, successively, severally (e.g. vriksham pari sincati, he waters tree after tree), ib; (with abl.) from, away from, out of, R.V.; A.V.; SBr. (cf. Pam, I, 4.93); outside of, except, Pam, 1,4,88, Kat. (often repeated, ib. viii, 1, 5; also at the beginning of or the end of am ind. Comp., ib. II, I, 12); after the lapse of Mu. III, 119; MBh. XIII, 4672 (some read *parisamvatsarat*); in consequence or on account or for the sake of, R.V.; A.V.; according to (esp. *dharmanas pari*, according to ordinance or in conformity with law or right), R.V.; (cf. Zd. pairi, *Gk. pari*)''.

*- A Sanskrit English Dictionary by Sri Monier Monier Williams, p. 591*

"*peri*, pref. = Gk. *peri* round, about, as: *perianth*, floral envelope; - carditis n., inflammation of - cardium; - *cardium*, membranous sac enclosing the heart, so - *cardiac*, - *cardial*, aa.; *pericarp*, seed-vessel, wall of ripened ovary of plant.........''

- The Concise Oxford Dictionary

*பரிகலம் = 1. வட்டில், வட்டமான உண்கலம். ''மலரயன் கொடுத்த பரிகல மிசையவே'' (குற்றா. குற. 13). 2. தெய்வமும் உயர்ந்தோரும் உண்டெஞ்சிய மிச்சில். ''வேதியச் சிறுவற்குப் பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி'' (பதினொ. கோயினான். 40).*

*பரிகை = 1. மதிலைச் சூழ்ந்த அகழி (திவா.). 2. மதிலுண் மேடை (பிங்.). தோன்றுமிப் பரிகை'' (மேருமந். 1054).*

*பரிகை –* ***வ.*** *பரிகா.*

*பரிகம் = 1. மதில் (சூடா.). 2. அகழி. 3. மதிலுண் மேடை.*

*பரிசு = வட்டமான கூடையோடம்* (coracle).

*பரிசு – பரிசல்* (coracle).

*பரி – பரிசை = 1. வட்டமான கேடகம் (புறம். 16, உரை). 2. வட்டமான விருது* (W.). *3. கூடையோடம்.*

*பரி – பரிதி = 1. வட்ட வடிவு (திவா.). ''பரிதி ஞாலத்து'' (புறம். 174). 2. கதிரவன். ''பரிதியஞ் செல்வன்'' (மணிமே. 4 :1). 3. கதிரவனை அல்லது திங்களைச் சூழ்ந்த கோட்டை (பரிவேடம்) (பிங்.). ''வளைந்து கொள்ளும் பரிதியை'' (இரகு.இந்து.7). 4. தேருருளை. ''அத்தேர்ப் பரிதி'' (களவழி. 4). 5. சக்கரப் படைக்கலம். ''பரிதியிற் றோட்டிய வேலைக் குண்டகழ்'' (கல்லா. 80 : 23). 6. சகோடப்புள். ''தண்கோட்டகம் பரிதியங் குடிங்கு கூடுமே'' (இரகு. நாட்டுப். 40). 7. கோளின் தொலைக்கோண வளவு* (epicycle).

*பரிதி காந்தம் = ஒருவகைக் கன்மணி* (jasper), *''பரிதி காந்தமென் றுரைத்திடு பன்னொரு சிகரத்து'' (உபதேசகா. கைலை. 24).*

*பரிதிபாகை = வானநூ லளவைவகை* (W.).

*பரிதி வட்டம் = கதிரவன் மண்டலம்.*

*''வெங்கதிர்ப் பரிதி வட்டத் தூடுபோல் விளங்கு வாரே'' (திவ். பெரியதி. 4 : 5 : 10).*

*புர் – புரு – புருவு – புருவம் = 1. கண்களின் மேலுள்ள மயிர் வளைவு. ''கொடும்புருவங் கோடா மறைப்பின்'' (குறள். 1086). 2. புண்விளிம்பு* (W.). *3. செய்வரப்பு* (W.).

*புருவம் –* ***வ.*** *ப்ருவ* (bhruva).

Cf. E. brow = arch of hair over eye, OE. bru, ON. brur, eyebrow.

*புரு– புருள்– புருளை– புருடை = முறுக்காணி.*

*ஒ.நோ : உருள்– உருளை– உருடை – ரோதை –* L. rota, wheel.

*புருடை – பிருடை = 1. முறுக்காணி*(W.). *2. புட்டியடைக்குந் தக்கை. 3. சுழலாணி (சங். அக.).*

***தெ.*** *பிரட* (b), ***க.*** *பிரடெ* (d).

*பிருடை – பிரடை = 1. முறுக்காணி* (W.). *2. முறுக்காணி வில்லை.*

***தெ.*** *பிரட,* ***க.*** *பிரடெ.*

*புல்– புள்– பள்– பண்டு– பண்டி = 1. சக்கரம். 2. வண்டி ''செந்நெற் பகரும் பண்டியும்'' (சீவக. 61). 3. சகட நாண்மீன் (சூடா.).*

***தெ., க.*** *பண்டி.*

*பண்டி – பாண்டி = 1. கூடாரப் பண்டி (சிலப். 14 : 168, அரும்.). 2. மாட்டுவண்டி. ''அகவரும் பாண்டியும்'' (பரிபா. 10 : 16). 3. வட்டமான வட்டு அல்லது சில். 4. நிலத்திற் கீறிய கட்டங்களில் வட்டெறிந்து நொண்டி விளையாடும் (பாண்டிநாட்டு) விளையாட்டு. 5. காளை அல்லது எருது (பரிபா. 20 :17, குறிப்பு).*

*பாண்டி– பாண்டில் = 1. வட்டம் (திவா.). ''பொலம்பசும் பாண்டிற் காசு'' (ஐங். 310). 2. தேர்வட்டை (சிலப். 14 : 168, உரை). 3. இரு சக்கர வண்டி, ''வையமும் பாண்டிலும்'' (சிலப். 14 : 168). 4. குதிரை பூட்டிய தேர் (திவா.). ''பருந்துபடப் பாண்டிலொடு பொருத பல்பிணர்த்*

தடக்கை'' (நற். 141). 5. வட்டக்கட்டில். ''பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்'' (நெடுநல். 123). 6. வட்டத்தோல். ''புள்ளி யிரலைத் தோலூ னுதிர்த்துத் தீதுகளைந் தெஞ்சிய திகழ்விடு பாண்டில்'' (பதிற். 74). 7. வட்டக் கண்ணாடி. ''ஒளிரும்....... பாண்டில் நிரைதோல்'' (பு. வெ. 6 ஃ 12). 8. வெண்கலத் தாளம். ''இடிக்குரல் முரச மிழுமென் பாண்டில்'' (சிலப். 26 ஃ 194). 9. கிண்ணி, ''சுழற்பாண்டிற் கணைபொருத துளைத்தோ லன்னே'' (புறம். 97). 10. விளக்குத் தகழி (பிங்.). 11. குதிரைச் சேணம். ''பாண்டி லாய்மயிர்க் கவரிப் பாய்மா'' (பதிற். 90 ஃ 35). 12. குண்டை (காளை). ''மன்னிய பாண்டில் பண்ணி'' (சீவக. 2054). 13. விடையோரை (இடபராசி) (திவா.). 14. வட்டப் பாதமுள்ள விளக்குத் தண்டு. ''நற்பல பாண்டில் விளக்கு'' (நெடுநல். 175). 15. வட்டாரம், மண்டலம், நாடு (W.).

பாண்டி – பாண்டியம் = 1. எருது. ''செஞ்சுவற் பாண்டியம்'' (பெருங். உஞ்சைக். 38 ஃ 32). 2. எருது கொண்டுழும் உழவு அல்லது பயிர்த்தொழில். ''பாண்டியஞ் செய்வான் பொருளினும்'' (கலித். 136).

பாண்டி – பாண்டியன் = காளை யொத்த மறவன்.

''மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து'' (குறள். 624)

''அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ'' (புறம். 90)

''நிரம்பாத நீர்யாற் றிடுமணலு ளாழ்ந்து
பெரும்பார வாடவர்போற் பெய்பண்டந் தாங்கி
மருங்கொற்றி மூக்கூன்றித் தாடவழ்ந்து வாங்கி'' (சீவக. 2784)

உழைப்பது காளை.

காளை = 1. இளவெருது. 2. கட்டிளமைப் பருவத்தினன் (திவா.). 3. ஆண்மகன் (திவா.). 4. பாலைநிலத் தலைவன் (திவா.). 5. மறவன். ''உரவுவேற் காளையும்'' (புறம். 334).

முதற் பாண்டியன் அவன் காலத்திற் பண்டையனா யிருந்திருக்க முடியாதாதலால், பண்டு என்னும் சொல்லினின்று பாண்டியன் என்னும் வேந்தன் குடிப்பெயரைத் திரித்து, பழைமை யானவன் என்று பொருள் கூறுவது பொருந்தாது.

*பாண்டியன் நாடு என்பது பிற்காலத்திற் பாண்டிநாடென மருவிற்று.*

***குறிப்பு :*** *1. வளைதற் கருத்து, சாய்தல், கோணல், மடங்கல், நெளிதல், வட்டமாதல், உருண்டையாதல், உருள்தல், சுற்றுதல், சுழலுதல் முதலிய இனக் கருத்துக ளெல்லாவற்றையுந் தழுவும்.*

*2. வட்டக் கருத்தினின்று முழுமைக் கருத்துப் பிறக்கும். எ-டு : கடனை வள்ளிதாய்க் கொடுத்துத் தீர்த்துவிட்டான். வள்ளிது = வட்டமானது, முழுமையானது.*

E. roundly = in thorough - going manner.

*இம் முறையில், பரி என்னும் தென்சொல்லும் வடமொழியில் முன்னொட்டாகி* (prefix), *அல்லது முழுநிறைவு முழுமைக் கருத்தைத் தோற்றுவிக்கும். எ-டு : பூரணம் - பரிபூரணம்.*

## 12

# புல்[6] (துளைத்தற் கருத்துவேர்)

*புல்லுதல் = துளைத்தல். இவ் வினைச்சொல் வழக்கிறந்தது. புல் = 1. உட்டுளையுள்ள நிலைத்திணைவகை. ''புறக்கா ழனவே புல்லென மொழிப'' (தொல். மரபு. 86). 2. ஊனுண்ணா விலங்குணவான தாளுள்ள நிலைத்திணைவகை. ''பசும்புற் றலைகாண் பரிது'' (குறள். 16). 3. உட்டுளையுள்ள பனை. ''அன்றில் புற்சேக்கை புக்கு'' (கல்லா. 38 : 10). 4. பனை வடிவான நாள் (அனுடம்) (பிங்.). 5. உட்டுளையுள்ள தென்னை (தைலவ. தைல.). 6. உட்டுளையுள்ள மூங்கில். புல்லாங்குழல் (உ.வ.). 7. புற்போன்ற கம்பம் பயிர் (பிங்.). புல், கம்பம்புல் (உ.வ.). 8. புல்லரிசி. 9. சிறுமை. ''புல்லுளை'' (கம்பரா. வரைக்காட்சி. 70). புன்மை = சிறுமை, சிறுதன்மை. 10. இழிவு. ''புன்கோட்டி'' (நாலடி. 255). புல்லன் = இழிந்தோன். ''கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளென்ன'' (கம்பரா. தாடகை. 72).*

**ம.** *புல்,* **க.** *புல்,* **தெ.** *புலு.*

*புல்– பொல். பொல்லுதல் = 1. துளைத்தல். 2. உளியாற் கொத்துதல். பொல் = உட்டுளையுள்ள பதர்.*

**தெ.** *பொல்லு,* **க.** *பொள்ளு.*

*பொல்லம் = துளை, ஓட்டை, இழிவு. பொல்லம் பொத்துதல் = 1. நார்ப்பெட்டியின் ஓட்டையடைத்தல். துணிக் கிழிசலை இணைத்துத் தைத்தல். ''பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை'' (பொருந. 8). பொல்லாப் பிள்ளையார் = உளியாற் கொத்தப்படாத தான்றோன்றிப் பிள்ளையார். பொல்லாமணி = துளையிடப்படாத மணி, மாசிலாமணி.*

*புல் – புர் – புரை = 1. உட்டுளை. ''புரைபுரை கனியப் புகுந்து'' (திருவாச. 22 : 3). 2. உட்டுளைப் பொருள் (பிங்.). 3. குரல்வளை. புரையேறுதல் (உ.வ.). 4. விளக்குமாடம். 5. உள்ளோடும் அல்லது*

*உட்டுளைப்புண். 6. பை மடிப்பு அல்லது அறை* (W.). *7. கூறுபாடு. ''புரைவிடுத் துரைமோ'' (சீவக. 1732). 8. (உள்ளீடற்ற அல்லது உண்மையில்லாப்) பொய். ''வடிவிற் பிறந்த புகலும் புரை யின்றிக்கே'' (ஈடு, 4 ඃ 3 ඃ 9). 9. நொய்ம்மை (கனமின்மை). ''புரையாய்க் கனமாய்'' (தேவா. 174ඃ7). 10. குற்றம். ''புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்'' (குறள். 292). 11. இழிவு. 12. (உட்டுளையுள்ள) வீடு. ''புரைபுரை யாலிவை செய்ய வல்ல'' (திவ். பெரியாழ். 2 ඃ 9 ඃ 1). 13. தவச்சாலை. ''புரையுட் புக்கனர்'' (கம்பரா. திருவவ. 42). 14. கோவில். ''புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி'' (பதிற். 15 ඃ 37). 15. வீட்டறை, கொட்டகையறை. ஆக்குப்புரை (உ.வ.). 16. பெட்டியறை. 17. மாட்டுத் தொழுவம். 18. இடம்.*

***ம.*** *புர,* ***வ.*** *புர. ஒ. நோ ඃ* Gk. *poros*, passage, L., OF., ME., E. *pore*, minute opening.

*புரை = துளை, சிறுதுளை.*

*புரை– புரைசல் = 1. துளை. 2. குற்றம். 3. மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று. 4. வலியின்மை. ''பிறனுடைய புரைசல்களை எப்படி யறியலாம்'' (பஞ்சதந். 64). 5. மருமம் (இரகசியம்). 6. குழப்பம்.*

*புரையன் = 1. வீடு. 2. இலைக்குடில்.*

*புரையுள் = வீடு (பிங்.).*

*புரைப்பு = 1. குற்றம். ''புரைப்பிலாத பரம்பரனே'' (திவ். திருவாய். 4 ඃ 3 ඃ 9). 2. ஐயுறவு. ''புரைப்பறத் தெளிதல் காட்சி'' (மேருமந். 107). புரையோர் = கீழோர், இழிந்தோர்.*

*புரைத்தல் = இன்னாமுரல் (அபசுர) வகை. (திருவாலவா. 57 ඃ 14, அரும்.).*

*புரைப்படுதல் = மரம் பொந்துபடுதல். ''மரம் புரைப்பட்டது'' (தொல். உரி. 92, உரை).*

*பொல்– பொள். பொள்ளுதல் = (செ. குன்றாவி.) 1. துளைத்தல். 2. பொளிதல்.*

*(செ. கு. வி.) 1. கிழிதல்*(W.). *2. கொப்புளம் உண்டாதல். எண்ணெய்ச் சுடர் விழுந்து கை பொள்ளிவிட்டது (உ.வ.).*

*பொள்ளல் = 1. துளைக்கை. 2. பொளிகை. 3. துளை.*

*''சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது''*
*வீதலோ நிற்றல் வியப்பு''* *(நன். 12)*

4. மரப்பொந்து (பிங்.). 5. அப்பவகை. 6. கொப்புளம். 7. அம்மை வடு. 8. குற்றம்.

பொள்ளாமணி = துளையா மணி.

பொள்– பொண்டான் = எலி தன்னைப் பிடிப்பவர் தன் வளையைத் தோண்டும்போது, தப்பியோட அமைத்திருக்கும் மறைவான பக்க வளை.

பொல் (பொள்)– பொ. பொத்தல் = (செ. குன்றா வி.). துளைத்தல். ''பொத்தநூற் கல்லும்'' (நாலடி. 376).

(செ. கு. வி.). தீத்துளைத்துக் கொப்புளித்தல். தீப்பட்டுக் கை பொத்துப் போய்விட்டது (உ.வ.).

பொத்தல் = 1. துளை. 2. கடன். 3. குற்றம்.

**ம.** பொத்து, **க.** பொட்டார, **து.** பொட்ரெ. பொத்தல் – பொத்தர்.

பொத்து = 1. துளைப்பு, துளை. 2. பொந்து. ''முதுமரப் பொத்தில்'' (புறம். 364). 3. வயிறு. ''பொத்தடைப்பான் பொருட்டால் மையல் கொண்டீர்'' (தேவா. 188 : 6). 4. பொய். ''புல்லறிவு கொண்டு பல பொத்துமொழி புத்தா'' (திருவாத. பு. புத்தரை. 77). 5. குற்றம். ''பொத்தி னண்பிற் பொத்தியொடு'' (புறம். 212). 6. தீயொழுக்கம் (W.).

பொத்து – பொத்தை = பொத்தல்.

''பொத்தை யூன்சுவர்'' (திருவாச. 26 : 7).

பொத்து – பொந்து = 1. மரப்பொந்து. ''ஆனந்தத் தேனிருந்த பொந்தை'' (திருவாச. 13 : 2). 2. எலி நண்டு பாம்பு முதலியவற்றின் வளை.

**தெ.** பொந்த (b).

பொள்– பொள்ளை = 1. துளை. ''பொள்ளைக் கரத்த போதகத்தின்'' (திவ். பெரியதி. 5 : 1 : 2).

பொள் – பொளி. பொளிதல் = (செ.குன்றாவி.) 1. துளைத்தல், துளைசெய்தல் (W.). 2. உளியாற், கொத்துதல் ''கல்பொளிந்த தன்ன'' (மதுரைக். 482). 3. பிளத்தல் ''பொளிந்து திண்சிலை'' (விநாயகபு. 22 : 43). 4. இடித்தல். ''கற்றரையைப் பொளிந்து பண்ணின கிடங்கினை யுடைய'' (மதுரைக். 730, உரை).

*(செ.கு.வி.) 1. ஓட்டையாதல். ''கண்டவிட மெங்கும் பொளிந்து'' (ஈடு. 4 : 1 : 1). 2. பள்ளமாதல்.*

*பொளித்தல் = 1. துளை செய்தல். ''மாடத்தாங்கட் சாளரம் பொளித்த கால்போகு பெருவழி'' (மணிமே. 4 : 52). 2. கிழித்தல். 'களிறு... ஆச்சாவைப் பிளந்து அந்நாரைப் பொளித்து'' (தொல். பொருளியல், 37, உரை).*

*பொளி = 1. உளியாலிட்ட துளை. 2. மண்வெட்டியின் வெட்டு. 3. பாய் பின்ன வகிர்ந்து வைக்கும் ஓலை. சிறு பொளிப்பாய் (நாஞ்சில் நாட்டு வழக்கு). 4. மண்வெட்டியாற் புல்லொடு சேர்த்து வெட்டிய வரப்பு மண்.*

*பொள் – பொளு. பொளுபொளுவெனல் = துளையிலிருந்து நீர்ப்பொருள் ஒழுகற் குறிப்பு.*

*புல்– புல்– புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி.*

*புழுத்தல் = 1. புழுவைத்தல். புழுத்த கத்தரிக்காய். புழுப்புழுத்துச் செத்தான் (உ.வ.). 2. புழுவரித்தல்.*

*புழு– புகு. ஒ.நோ : தொழுதி– தொகுதி. தொழு– தொகு.*

*புகுதல் = 1. துளைத்தல்போல் உட்செல்லுதல். வீட்டுக்காரர் வீட்டுக்குட் புகுந்தார்., பகைப்படை நாட்டிற்குட் புகுந்தது. வாள் உறைக்குட் புகுந்தது (உ.வ.). ''வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்'' (குறள். 346). 2. உட்படுதல். 'சிறைதளை சங்கிலி புகிலும்'' (*S.I.I. III, 28). *3. அகப்படுதல். ''சூறை புகுவன பாறையே'' (தக்கயாகப். 64). 4. காலத்துட் செல்லுதல். ''பிராய நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்'' (திவ். திருமாலை, 3). 5. செல்லுதல். 6. தொடங்குதல். ''கடனீ ராடுவான்... புகும்'' (திவ். இயற். 3 : 69). 7. நிகழ்தல்.*

*புகு– புகா = (உட்புகும்) உணவு. ''புகாஅக் காலை'' (தொல். களவு. 16). புகா– புகவு = 1. புகுகை. ''கழுது புகவயர்'' (ஐங். 314). 2. உணவு. ''பழஞ்சோற்றுப் புகவருந்தி'' (புறம். 395).*

*புகு–* **வ.** புஜ் (bhuj). *ஒ.நோ : பகு–* bhaj. *புகு– புகல் = 1. புகுகை. ''முனைபுகல் புகல்வின்'' (பதிற். 84 : 17). 2. இருப்பிடம். ''புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை'' (ஐங். 295). 3. உயிருக்கு இருப்பிட மான உடம்பு (பிங்.). 4. கூலம் இடுங்குதிர் (திவா.) 5. அடைக்கலம் ''புகலது கூறுகின்றான்'' (கம்பரா. விபீடண. 109). 6. துணை (பிங். 7. பற்றுக்கோடு. ''மையணற் காளை பொய்புக லாக'' (நற். 179). 8. ஆம்புடை (உபாயம்). ''புகலொன் றில்லா அடியேன்'' (திவ். திருவாய். 6 : 10 : 10). 9. போக்கு. அடிக்கடி புகல்சொல்கிறான் (உ.வ.).*

புகலி = 1. புகலடைந்த – வன் – வள். 2. ஒரு பெரு வெள்ளக் காலத்திற் புகலிடமாயிருந்த சீகாழி.

புகு – புகார் = ஆறு கடலொடு கலக்குமிடம். ''புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்'' (புறம். 30). 2. காவிரி கடலொடு கலந்த இடத்துக் காவிரிப்பூம்பட்டினம். ''பெரும்பெயர்ப் புகாரென் பதியே'' (சிலப். 20 : 56).

புகு– புகுது. புகுதுதல் = 1. உட்செல்லுதல். ''பொய் யிலங்கெனைப் புகுதவிட்டு'' (திருவாச. 5 : 92). 2. நிகழ்தல். ''வேறொன்றும் புகுதா விட்ட''. (பெரியபு. எறிபத்த. 38).

புகுது – புகுதி = 1. மனைவாயில் (பிங்.). 2. நிகழ்ச்சி. ''புகுதி யின்னதால்'' (கந்தபு. சிங்கமு. 20). 3. நுண்மதி. ''புகுதி கூர்ந்துள்ளார் வேதம்'' (கம்பரா. முதற் போர். 222). 4. வழி (அரு. நி.). 5. வருவாய் (அரு. நி.).

புகுது– புகுரு. புகுருதல் = புகுதல்.

புகுரு– புகுர்– பூர். பூர்தல் = புகுதல்.

பூர்– பூரான் = மண்ணிற்குள் விரைந்து புகும் நச்சுப் பூச்சி.

புகவொட்டு– புகட்டு. புகட்டுதல் = 1. நீர்ப்பொருளைக் கலத்தில் ஊட்டுதல். குழந்தைக்குச்சங்கில் பால் புகட்டு (உ.வ.). 2. அறிவுறுத்துதல். ''செவிதிறந்து புகட்ட'' (திருவிளை. விடையிலச். 4).

புகட்டு – போட்டு. போட்டுதல் = புகட்டுதல். போட்டுப் பால், குழந்தைக்கு மருந்து போட்டு (உ.வ.).

புகவிடு– புகடு. புகடுதல் = வீசியெறிதல். ''மரனொடு வெற்பினம் புகட வுற்ற பொறுத்தன'' (கம்பரா. நாகபாச. 146).

புகு – போ. போதல் = 1. புகுதல். ஊசியின் காதில் இந்த நூல் போகுமா? (உ.வ.). 2. எண்ணில் அடங்குதல். பத்தில் ஐந்து இரண்டு தரம் போகும் (உ.வ.). 3. செல்லுதல். ''மாமலர் கொய்ய... யானும் போவல் '' (மணிமே. 3 : 83). 4. நெடியதாதல், நீளுதல், நேராதல்.

''வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள'' (தொல். உரி. 19)

5. விரிதல். போது = விரியும் பேரரும்பு. 6. பரத்தல். ''எதிர்போம் பல்கதிர் ஞாயிற்றொளி'' (கலித். 144 : 40). 7. கூடியதாதல். மூச்சுவிடப் போகவில்லை (உ.வ.). 8. நீங்குதல். குடிபோன வீடு (உ.வ.). 9. ஒழிதல். ''பல்போனாலும் சொல் போகுமா? (பழ.). 10. கழிதல். ''போனதை

நினைக்கிறவன் புத்தி கெட்டவன்'' (பழ.). போன ஆண்டு மழை பெய்யவேயில்லை (உ.வ.). 11. மறைதல். பொழுது போயிற்று (உ.வ.). 12. முடிவாதல். ''இன்ப மாவதே போந்தநெறி யென்றிருந்தேன்'' (தாயு. சின்மயானந்த. 5). 13. புணர்தல். அவளோடு போனான் (உ.வ.). 14. சாதல்... ''தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்'' (தேவா. 692 : 2).

போ– போக்கு = 1. செல்கை. வழிப்போக்கு. 2. மனச்சாய்வு. அவன் போகிற போக்கு எனக்குப் பிடிக்கவில்லை (உ.வ.). 3. வகை. அது ஒரு போக்கு. 4. களைகண். போக்கற்றவன் (உ.வ.). 5. புகல். ''இலங்கை போக்கறவும்'' (கம்பரா. மாயாசனக. 83). 6. நிலவாசி. ஆற்றுப்போக்கான இடம். 7. சாட்டு. ஒரு போக்குக் காட்டுவதற்குக் கடன்காரனை அவனிடம் அனுப்பினேன் (உ.வ.). 8. சாக்குப் போக்குச் சொல்லாதே குற்றத்தை ஒத்துக்கொள் (உ.வ.). 9. குற்றம். ''போக்கறு பனுவல்'' (தொல். சிறப்புப் பாயிரம்). 10. சாவு. ''போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே'' (திருவாச. 1 : 77).

போகவிடு– போக்கு– போடு. போடுதல் = வலிதாய்க் கீழிடுதல்.

போகடுதல் = (செ. குன்றாவி.) 1. போகவிடுதல். ''போகெனப் போகடா'' (சீவக. 1365). 2. விட்டுவிடுதல். ''போகட்ட உடம்பையும்'' (சீவக. 951, உரை).

(செ.கு.வி.) நீங்குதல். ''பொல்லாதது போக்கடும்'' (தேவா. 376 : 4).

போ– போகு. போகுதல் = 1. போதல். 2. நீளுதல்.

போ – போது. போதுதல் = 1. செல்லுதல். 2. விரிதல். 3. போதியாதாதல். சொன்னால் மட்டும் போதுமா? எழுதிக் கொடுக்க வேண்டாவா? (உ.வ.).

புழு – புழல் = 1. உட்டுளை. ''பூழி பூத்த புழற்கா ளாம்பி'' (சிறுபாண். 134). 2. சாய்கடை (சலதாரை) (பிங்.). 3. பண்ணியாரம். ''தீப்புழல் வல்சி'' (மதுரைக். 395). 4. மீன்வகை (பிங்.).

புழல்– போல் = 1. உள்ளீடல்லாதது. போல் கம்பி x கெட்டிக்கம்பி. 2. (உட்டுளையுள்ள) மூங்கில் (மலை.). 3. புகல் (W.). 4. பொய்.

தெ. போலு.

புழல்– புகல் = புரையுள்ளது (நெல்லை).

புகல்வேலை – அணிகலங்களில் உட்டுளையமையச் செய்த வேலை.

புழல்– புடல். ஒ.நோ : குழல்– குடல்.

புடல் = உட்டுளையுள்ள புடலங்காய்.

புடல்– புடலை = புடலங்காய்.

புடலை– **தெ.** பொட்ல, **க.** படல.

புடலங்காய்– வ. பட்டோலிக்கா.

பட்டோலிக்கா என்னும் வடசொல் தமிழிற் புடல் என்று திரிந்துள்ளதாக, சென்னைப் ப.க.க. தமிழ் அகரமுதலி துணிச்சலுடன் குறிக்கின்றது. பகுத்தறிவுள்ளவர் உண்மை கண்டுகொள்க.

புள் – புளு – புடு – புடி. புடித்தல் = பொய் சொல்லுதல். பொய்புடிக்கிறான் (சேலம் வழக்கு). இது பொய்புளுகுகிறான் என்பது போன்ற மிகைபடக் கூறல்.

புடி – பிடி – பிசி. ஒ.நோ : ஒடி – ஒசி. பிசி = 1. பொய். 2. உவமக் கூற்று வாயிலாக உண்மை நிகழ்ச்சியை அறிவித்தல். 3. விடுகதை.

''பிசியும் நொடியும் பிறர்வாய்க் கேட்டு'' (மணிமே. 22 : 62).

''ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே'' (தொல். செய். 174)

புடி – புசி. **க.** புசி.

புளு – புளுகு. புளுகுதல் = பொய் சொல்லுதல். புளுகு = பொய். புளுகுணி = வழக்கமாய்ப் பொய் சொல்பவன்.

புளுகு– **வ.** பல்கு (phalgu).

புல்– புற்று. ஒ.நோ : சுல் (சுலவு)– சுற்று. புற்று = 1. உட்டுளையுள்ள கறையான் மண்கூடு. ''புற்றிடை வெகுளி நாகம்'' (சீவக. 1285). கறையான் புற்றிற் பாம்பு குடிகொண்டது போல (உ.வ.). 2. எறும்பு வளை. 3. புரை வைத்த புண். ''புழுச்செறி... புற்றுறு நோய்'' (கடம்பபு. இலீலா. 116).

**தெ.** புட்ட, **ம.**, **க.** புத்து.

புற்று– புற்றம். ''நெடுஞ்செம் புற்றம் ஈயல் பகர'' (ஐங். 497).

புற்றளை = புற்றுவளை. ''நாகம் கிடந்த ..... புற்றளை'' (மணிமே. 20 : 99).

புற்றுத்தேன் = மதிலிடுக்கில் ஈக்களால் வைக்கப்பட்ட தேன்.

*புற்றுவெடிப்பு = பாதத்தில் தோன்றும் பித்த வெடிப்பு.*

*புழு – புழை = 1. துளை. ''தம்பத்தின்மேற் புழையே ழுளவாக்கி'' (திருநூற். 23). 2. குழாய்* (W.). *3. வாயில். ''திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி'' (மணிமே. 6 : 22). 4. சிறுவாயில். ''வாயிலொடு புழையமைத்து'' (பட்டினப். 287). 5. பலகணி. ''சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்'' (மதுரைக். 358). 6. ஏவறை. ''கவையுங் கழுவும் புதையும் புழையும்'' (சிலப். 15 : 212). 7. நரகம். ''போகும் புழையுட் புகுந்து'' (ஏலாதி, 11). 8. காட்டுவழி. ''கவை முள்ளிற் புழையமைப்பவும்'' (புறம். 98). 9. ஒடுக்கவழி. ''புழை தொறு மாட்டிய'' (மலைபடு. 194). 10. ஆறு. சேரநாட்டு வழக்கு.*

*புழைத்தல் = துளையிடுதல். ''அனங்கன் வாளி புழைத்ததம் புணர்மென் கொங்கை'' (கம்பரா. கைகேசி. 85).*

*புழைக்கை = 1. தும்பிக்கை. 2. யானை (திவா.).*

*புழைக்கை = பூழ்க்கை – பூட்கை = யானை. ''பொன்றி வீழ்ந்த புரவிவெம் பூட்கைதேர்'' (கம்பரா. முதற்போர். 58). ''பூழ்க்கை முகன் மனுவை நனியென்னின்'' (விநாயகபு. 14 : 9).*

*புழை– புடை = 1. துளை. எலிவளை*(W.). *3. குகை. 4. குகை போன்ற கிணற்றடிப் புழை.*

*புடை – புடம். ஒ.நோ : நடை – நடம். நடமாடுதல் = நடந்து திரிதல். நடமாட்டம் = நடந்து திரிகை, உலாவுகை. ஆள் நடமாட்டம் = ஆள்கள் உலாவி வழங்குகை.*

*புடம் = பொன்னைக் காய்ச்சித் தூய்மைப்படுத்தும் சிறு கலம் (ஞானா. 15 :26). 2. தொன்னை (இலைக்கலம்) (யாழ். அக.).*

*புடம் –* **ப.** *புட* (puta).

*புழை – பூல் = துளை (இலக். அக.).*

*புழை – பூழை = 1. துளை. ''புகையும் புகற்கரிய பூழை நுழைந்து'' (நாலடி. 282). 2. சிறுவாயில். ''புழைத்தலை நுழைந்து'' (தேவா. 845 : 1).*

*புள் – பூள் – பூறு. ஒ.நோ : கீள் – கீறு. பூறுதல் = துளைத்தல், கிழித்தல், கீறுதல்.*

*பூறு – பீறு. ஒ.நோ : நூறு – நீறு.*

*பீறுதல் = (செ. குன்றாவி.) 1. கிழித்தல். ''அல்குற் பூந்துகிற் கலாபம் பீறி'' (கம்பரா. ஊர்தே. 189). 2. கீறுதல். ''பன்றிக்குமுன் முத்தைப்*

போட்டால் அவற்றைப் பீறிப் போடும்'' (விவிலியம், தமிழ் மொழிபெயர்ப்பு). 3. துளைத்தல். மூக்குப்பூறுதல். 4. பிளத்தல்.

பீறு– பீறல் = 1. கிழித்தல். 2. கந்தை. ''பீறற்சிலை யிதாருக் கென்று'' (அரிச். பு. சூழ்வினை. 91). 3. கிழிசல். ''சோறது கொண்டு பீற லடைத்தே'' (தனிப்பாடல்).

பீறு– பீற்றல் = 1. கிழிசல். 2. கந்தை.

மூக்குப் பூறி = மூன்றாம் பிள்ளையாகப் பிறந்து மூக்குக் குத்தப் பெற்ற ஆண்பிள்ளை.

மூக்குப் பூறி– மூக்குப் பீறி.

பூறு = மலவாய்.

(போடு– **தெ.** பெட்டு. ஒ.நோ: E. put, OE. potian, L. posit, pono, E. pose).

புள்– பிள். பிள்ளுதல் = (செ. கு. வி.) இரண்டாகவோ பலவாகவோ பிளந்து விடுதல். 2. துண்டுபடுதல். அப்பளம் பிண்டு போயிற்று (உ.வ.). 3. மனம் வேறுபடுதல். நட்புப் பிரிதல். இருவர்க்கும் பிட்டுக்கொண்டது (உ.வ.).

(செ. குன்றாவி.) 1. பிடுதல். ''அன்னையவள் தரும் பிட்டுப் பிட்டுண்டாய்'' (குமர. பிர. மதுரைக். 1). 2. தகர்த்தல். ''முடியொரு பஃதவை யுடனே பிட்டான்'' (தேவா. 883 : 8).

**க.** பிளிகு (g).

பிள்– பிள. பிளத்தல் = (செ. கு. வி.) 1. வெடித்தல், ''வேய்பிளந் துக்க வெண்டரளம்'' (கம்பரா. தாடகை. 8). 2. திறத்தல். ''வாய்பிளந்துக்க'' (ஷ ஷ).

(செ. குன்றாவி.) 1. இரண்டாக வுடைத்தல். ''மலைகீழ்து பிளந்த சிங்கம்'' (திவ். திருவாய். 7 :4 : 6). 2. வெடிக்கச் செய்தல். 3. ஊடுருவுதல். ''ஒண்டழல் விண்பிறந்த தோங்கி'' (திருவாச. 18 : 8). 4. பாகுபடுத்துதல், பகுத்தல். ''யாதும் பிளந்தறியும் பேராற்றலான்'' (சிறுபஞ். 58). 5. வெல்லுதல். அவனைப் பேச்சிலே பிளந்துவிட்டான் (உ.வ.).

பிள– பிளவு = 1. வெடிப்பு. 2. விரிந்துண்டாகுஞ் சந்து. 3. பிரிவு. 4. பிரிந்திசைப்பு. ''இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்பட'' (தொல். சொல். 412, சேனா.).

பிள– பிளவை = 1. பிளக்கப்பட்ட துண்டு. ''பைந்நிணப் பிளவை'' (மலைபடு. 176). 2. வெடிக்கும் சிலந்திவகை.

*பிள– பிளாச்சு = கிழித்த மூங்கிற் பட்டி.*

*பிளாச்சு– பிளாச்சி.*

*பிளாச்சு– பிளிச்சு = மூங்கிற் பட்டி (சீவக. 634, உரை).*

*ஒ.நோ :* MDu. splitten, G. spleissen, E. split.

*பிள– பிளா = வாய் விரிந்த இறைகூடை (யாழ்ப்.).*

*பிளா – பிழா = 1. வாய் விரிந்த ஓலைத்தட்டுக் குட்டான். ''மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றி'' (பெரும்பாண். 276). 2. இறை கூடை. ''ஓங்குநீர்ப் பிழாவும்'' (சிலப். 10 : 111).*

*பிழா– பிழார் = இறைகூடை (சூடா.).*

*பிழா– பிடா– பிடவு– பிடகு– பிடகம்– 1. வாய் விரிந்த பூந்தட்டு. 2. பூக்கூடை. 3. பூந்தட்டுப் போன்ற புத்தமறைப் பகுதி முப் (திரி) பிடகத்துள் ஒன்று. ''பெரியோன் பிடக நெறி'' (மணிமே. 26 : 66). 4. நூல் (திவா.). 5. தட்டில் இடும் ஐயம் (பிச்சை) (சது.). 6. வெடிக்கும் கொப்புளம். ''பெம்பிடகப் பிணியால் மேனி வெடிப்புண்டு'' (திருக்காளத். பு. 17 : 31).*

***வ.*** *பிடக* (t).

*பிடகம்– பிடகன் = திரிபிடக ஆசிரியனான புத்தன் (பிங்.).*

*பிடகு – பிடக்கு = புத்தர் பிடக நூல். ''பிடக்கே யுரை செய்வார்'' (தேவா. 245 : 10).*

*பிடகு– பிடகை = பூந்தட்டு. ''பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்'' (மதுரைக். 397).*

***வ.*** *பிடகா* (t).

*பிள்– பெள்– பெட்டி = 1. அகன்ற வாயுள்ள பனைநார்க் கூடை. 2. அகன்ற வாயுள்ள மர அல்லது மாழைக் கலம். 3. வண்டி யோட்டுபவன் இருக்கைக்குக் கீழுள்ள பெட்டி போன்ற இடம். 4. வண்டியோட்டுபவன் இருக்கை. 5. பெட்டி போன்ற தொடர் வண்டிக் கூண்டின் அறை. 6. வழக்காளர் கூண்டு. 7. சுண்ணாம்பு அளக்கும் முகத்தலளவை.*

*பெட்டி–* ***வ.*** *பேட்டி.*

*பெட்டி– பெட்டகம் = 1. மரப்பெட்டி. ''ஆங்கி லங்கும் அளப்பரும் பெட்டகம்'' (திருவாலவா. 27 : 22). 2. மணப் பெண்ணிற்கு வரிசை கொண்டு செல்லும் கட்டுப் பெட்டி* (W.).

பெட்டகப் பெட்டி = மரம் இரும்பு முதலியவற்றாலாகிய பெரும் பேழை. பெட்டகம் – **வ.** பேட்டக.

பெள்– பேள்– பேழ் = 1. அகலம். 2. பெருமை (பிங்.).

பேழ்வாய் = பெரிய வாய். ''பிறழ்பற் பேழ்வாய்..... பேய் மகள்'' (திருமுருகு. 47).

பேழ் – பேழை = 1. பெருமை. ''பேழை வார்சடை'' (தேவா. 853 : 6). 2. பெட்டி. 3. கூடை. 4. சிறு படகு.

பிள் – பிடு. பிடுதல் = இரண்டாக அல்லது துண்டு துண்டாகப் பிளத்தல்.

பிடு – பிடுகு = வானம் வெடிப்பது போன்ற இடி. ''பெரும் பிடுகு'' (S.I.I. II, 341).

**தெ., க.** பிடுகு (g).

பிடுகு – பிடுங்கு. பிடுங்குதல் = (செ. கு. வி.) 1. உடைதல். வெள்ளத்தால் குளக்கரை நடுவிற் பிடுங்கிவிட்டது (உ.வ.). 2. அடைப்பு விலகுதல். தண்ணீர்த் தொட்டியில் அடைப்புப் பிடுங்கி விட்டது (உ.வ.). 3. வெடித்தல். குழியில் அல்லது குழாயில் வெடிமருந்து பிடுங்கிவிட்டது (உ.வ.). 4. வெளிப்படுதல். வெளிக்குப் போகாது நீண்ட நேரம் அடக்கி வைத்ததனால் பிடுங்கிவிட்டது (உ.வ.).

(செ. குன்றாவி.) 1. பறித்தல். கீரை பிடுங்குதல் (உ.வ.). 2. வலிந்து கவர்தல். அவன் கையிலிருந்த பணப்பையைப் பிடுங்கிக் கொண்டான் (உ.வ.). 3. பெயர்த்தல் ஆறு அணையைப் பிடுங்கிக் கொண்டு போகிறது. யானை மரத்தை வேரோடு பிடுங்கிவிட்டது (உ.வ.). ''பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டி'' (தனிப்பா.). 4. கொத்தித் தின்னுதல். பிணம் பிடுங்கிக் கழுகு (உ.வ.) 5. கடித்தல். அந்தக் குளத்திற் குளித்தால் மீன் பிடுங்கிவிடும். 6. இழுத்தல் அல்லது பிய்த்தல். உடும்புக் கறி தின்றவன் வாயாலெடுத்தால் உட்சதையைப் பிடுங்கிக்கொண்டு வரும் (உ.வ.). 7. பசி வாட்டுதல். பசி வந்து பிய்த்துப் பிடுங்குகிறது (உ.வ.). 8. தொந்தரவு செய்தல். வீட்டிற்குப் போனால் மனைவி மக்கள் பிடுங்கல் வெளியே வந்தாற் கடன்காரன் பிடுங்கல் (உ. வ.).

**ம.** பிடுங்ஙுக.

பிடு – பிடுகு – பிடுங்கு = ஒ.நோ : OE. brecan, OS. brekan, OHG. brethan, Goth. brikan, E. break, L. frag, frang, fract.

பிடுங்கு – பிடாங்கு = குழாய் வெடி (வேட்டு).

பிடு– பிது– பிதிர். பிதிர்தல் = 1. சிறுசிறு துணிக்கையாகப் பிரிதல். 2. பழந்துணி சிதைந்து கிழிதல். 3. நொறுங்கல். ''பிதிர்ந்து போயின பிறங்கல்க ளேழும்'' (கந்தபு. யுத்தகாண். முதனாட். 50). 4. சிதறுதல். ''பிதிர்ந்தெழுந் தார்த்த பொடிக்குழீஇ'' (கம்பரா. பிரமாத். 100). 5. பரத்தல். ''பிதிரொளித் தவிசின்'' (தணிகைப்பு. வீராட் 78). 6. மனமயங்குதல். ''பிதிரு மனமிலேன்'' (திங். இயற். நான்மு. 84).

பிதிர் = 1. பூஞ்சுண்ணம் (பிங்.). 2. பொடி (பிங்.). 3. திவலை (பிங் 4. துண்டம். ''மதிப்பிதிர்க் கண்ணியீர்'' (தேவா. 599 : 4). 5. தீப்பொறி. ''கொல்ல னெறிபொறி பிதிரின்'' (நற். 13). 6. சேறு. ''மருப்பிற் பிதிர்பட வுழக்கி'' (கல்லா. 62 : 10). 7. கால நுட்பம் (பிங்.). 8. கைந்நொடி (W.). 9. விடுகதை. ''கதைகளும் பிதிர்களு மொழிவார்'' (கம்பரா. ஊர்தேடு. 139). 10. வியப்புச் செயல். ''பின்னால் தான் செய்யும் பிதிர்'' (திவ். இயற். நான்மு. 83).

பிதிர்– புதிர் = விடுகதை.

பிது – பிது – பிதுங்கு. பிதுங்குதல் = 1. உள்ளீடு வெளிப்படுதல். ''கதிர்முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி'' (தேவா. 56 : 10). 2. சுவரிற் செங்கல் வெளி நீண்டிருத்தல். 2. கண் பிதுங்குதல். வேலைக் கடுமையாற் கண் பிதுங்கினாற் போல் வருத்த மிகுதல்.

பிதுங்கு– பிதுக்கு. பிதுக்குதல் = 1. உள்ளீட்டை வெளிப் படுத்துதல். ''பீட்பிதுக்கி'' (நாலடி. 20). 2. ஊறின மொச்சைப் பயற்றை விரலால் அமுக்கி அதன் பருப்பை வெளிப்படுத்துதல். பிதுக்குப் பருப்பு (உ. வ.).

**க.** ஹ¯துக்கு.

பிது– பிசு– பிசிர். பிசிர்தல் = துளியாகச் சிதறுதல். ''வல்வில் பிசிர'' (பதிற். 50 : 6). 2. பிசுக்குக் கேட்டல்.

பிசிர் = 1. நீர்த்துளி. ''வான்பிசிர்க் கருவியின்'' (ஐங். 461). 2. ஊற்றுநீர். ''மலிரும் பிசிர்போல'' (பரிபா. 6 : 83). 3. குருத்து. ''பிசிரொடு சுடுகிழங்கு நுகர'' (புறம். 225). 4. ஆடையிலெழுஞ் சிம்பு.

பிசு– பிசுகு. பிசுகுதல் = 1. கடையிற் பண்டம் வாங்கிய பின் மேலும் ஒரு சிறிது விலையின்றிக் கேட்டல். 2. கஞ்சத்தனம் பண்ணுதல். அவன் கால் துட்டுக்குப் பிசுகுகிறான் (உ.வ.).

பிசுகு– பிசுக்கு = 1. சிறு துணிக்கை, சிற்றளவுப் பொருள். 2. பண்டம் விலைக்கு வாங்கிய பின் மேலும் விலையின்றிக் கேட்கும் சிற்றளவுப் பொருள். ஒரு பிசுக்குப் போடு (உ. வ.).

பிசுக்கு – பிசுக்கன் = புல்லன், சிறுமகன்.

பிசுக்கர் = புல்லர். ''பேதவாதப் பிசுக்கரை'' (திருவிசைப். திருமாளி. 4 : 5).

பிசுக்கு – பிசுக்கி = புல்லன், சிறியோன், போடா பிசுக்கி (உ. வ.).

பிசுக்கு – விசுக்கு = சிறு துணிக்கை.

விசுக்கு – விசுக்காணி = மிகச் சிறியது.

விசுக்காணிப் பயல் = மிகச் சிறுவன், குட்டிப் பையன்.

பிள்– பிர்– பிரி. பிரிதல் = 1. கட்டவிழ்தல். மூட்டை பிரிந்து விட்டது (உ. வ.). 2. முறுக்கு நெகிழ்தல். 3. தொகுப்பு நீங்குதல். மாலை பிரிந்து கிடக்கிறது. 4. பகுக்கப்படுதல். ''பிரிப்பப் பிரியா'' (தொல். சொல். 410). 5. விலகுதல். குடும்பத்தைவிட்டுப் பிரிந்து போனார்கள் (உ. வ.). 6. வேறுபடுதல். ''உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்'' (தொல். சொல். 4). 7. பொருத்து விடுதல். 8. வகைப்படுதல். 9. தண்டப்படுதல். இந்த ஊரிற் பணம் பிரியாது (உ. வ.).

**ம.** பிரி(யுக), **க.** பிரி.

பிரி– பிரிவு = 1. விலகல். 2. பாகம். 3. வகுப்பு. 4. வகை. 5. பகுதி. 6. கிளை.

பிரி – பிரியல் – பிரிசல் = 1. பாகப்பிரிவு. 2. கூரை பிரிப்பு. 3. கட்டவிழ்வு. 4. பணந்தண்டல்.

பிள் – பிட்டு = பிண்டு உதிரியான சிற்றுண்டி வகை. ''மதுரையிற் பிட்டமுது செய்தருளி'' (திருவாச. 13 : 16). தினைமா (W.).

ஒ.நோ : உதிரி = பிட்டு.

**ம., க., தெ.** பிட்டு. பிட்டு – **வ.** பிஷ்ட.

பிள் – பிண்டி = 1. நுண்பொடி. 2. மா. ''செந்தினையின் வெண் பிண்டி'' (பதினொ. திருவீங். 44). 3. பிளந்த நாக்குப் போன்ற பிண்ணாக்கு (பிள் + நாக்கு). ''பாரிற் பிண்ணாக்கு முண்டாம்'' (காளமேகம்).

**தெ.** பிண்டி, **து.** புண்டி.

பிண்ணாக்கு – **வ.** பிண்யாக்க. எள், இலுப்பை, வேம்பு முதலியவற்றின் விதைகளை எண்ணெயாட்டியபின் எஞ்சிய சக்கை, பிளவுபட்ட நாக்குப் போலிருப்பதால் பிண்ணாக்கு எனப்பட்டது.

பிள்– பிண்– பிணம் = கட்டுவிட்ட (decomposed) சவம் (சா– சாவு – சாவம் – சவம்). செத்த சவம், நாற்றப்பிணம் அல்லது பிண நாற்றம் என்னும் வழக்குகளை நோக்குக.

பிண் – பிணகு – பிணங்கு. பிணங்குதல் = 1. மாறுபடுதல். ''பிணங்கோ மெவரொடும்'' (திருநூற். 66). 2. ஊடுதல்.

இணங்கு என்னும் சொல்லிற்கு எதிராக, அதன் எதுகையாக அமைந்த சொல் பிணங்கு என்பது.

பிணங்கு – பிணக்கு = மாறுபாடு. ''பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்'' (திருவாச. 30 : 1).

பிணக்கு– பிணக்கம் = மாறுபாடு. ''பாம்பு கங்கை பிணக்கந் தீர்த்து'' (தேவா. 29 : 2). 2. ஊடல்.

புள் – புய். புய்தல் = 1. பறிக்கப்படுதல். ''புய்ந்துகால் போகிப் புலான்முகந்த வெண்குடை'' (களவழி. 39). 2. மறைதல். ''கோலப் பகற்களி றொன்றுகற் புய்ய'' (திவ். இயற். திருவிருத். 40).

புய்த்தல் = பறித்தல்.

''புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை'' (புறம். 28)

''உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
..........................................
கோடுபுய்க் கல்லா துழக்கு நாட'' (கலித். 38)

''கோட்டினிற் குத்திக் குடற்புய்த் துறுத்து'' (மணிமே. 13 : 47)

புய்– பிய். பிய்தல் = 1. பிள்ளுதல். 2. பிரிதல். 3. கிழிதல்.

பிய்த்தல் = 1. பிடுதல். 2. கிழித்தல். 3. பிரித்தல். 4. இலை, படம் முதலியவற்றைச் சிதைத்தல். 5. பறித்தல். 6. பிடுங்குதல். ''பேயு நாயு மவருடலம் பிய்த்துத் தின்ன'' (உத்தரரா. திருவோல. 24). 7. வருத்துதல். 8. பிறன்கோள் மறுத்தல். அவனைப் பிய்த்தெறிந்து விட்டான் (உ. வ.).

பிய் = பியர். பியர்தல் = பெயர்தல். (S. I. I. III, 151 : 4). **ம.** பியர்.

பியர்– பெயர். பெயர்தல் = 1. இடம்விட்டு நீங்குதல். 2. பிரிதல். நிலம்பெயர்ந் துறைதல் (தொல். பொருள். 169). 3. கிளர்தல். ''ஓதநீரிற் பெயர்பு பொங்க'' (புறம். 22). 4. உரசித்தேய்தல். 5. சலித்தல். 6. அசைபோடுதல். ''விளையா விளங்க ணாற மெல்குபு பெயரா''

(சிறுபாண். 45). 7. பிறழ்தல். ''நிலம்பெயரினும் நின்சொற் பெயரல்'' (புறம். 3). 8. மாறுதல் ''ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து'' (திருவாச. 3 : 134). 9. தளர்தல். 10. கட்டுவிடுதல். 11. தேய்தல், சிதைத்தல். 12. அடியிடுதல். 13. போதல். 14. கூத்தாடுதல். 15. மீளுதல். ''சூழ்ந்த நிரைபெயர'' (பு. வெ. 1 : 10). 16. பணப்புழக்கமாதல். அந்தவூரில் எந்த நாளும் பணம் பெயரும் (உ. வ.). 17. பணத் தண்டலாதல். ஆயிரம் உருபா பெயர்ந்தது (உ. வ.).

பெயர்த்தல் = பெயரச் செய்தல்.

பெயர்– பேர். பேர்தல் = பெயர்தல். பேர்த்தல் = பெயர்த்தல்.

பொள்– பள்– பள்ளம் = 1. குழி. ''பள்ள மீனிரை தேர்ந்துழலும்'' (தேவா. 93 : 5). 2. கன்னத்தில் விழும் குழிவு. 3. ஆழம். ''பள்ள வேலை பருகுபு'' (இரகு. ஆற்று. 1). 4. தாழ்வு. ''பள்ளம தரிய படர்சடை மேற்.... கங்கை'' (தேவா. 427 : 1). 5. தாழ்நிலம்.

பள்ளம் – பள்ளன் – பள்ளமான மருதநிலத்தில் வாழும் உழவர் வகுப்பான்.

பள்ளன் – பள் = 1. பள்ளர் வகுப்பு. 2. ஒருசார் பள்ளர் வாழ்க்கை பற்றிய ஒருவகை நாடகப் பனுவல் (அரு. நி.). 3. காளிக்குக் காவு கொடுக்குங் காலத்துப் பாடப்படும் பண்வகை.

பள்ளன் – மள்ளன் = மருதநிலத்தில் வாழும் உழவன். ''மள்ள ருழுபக டுரப்புவார்'' (கம்பரா. நாட. 18).

பள்ளன்– பள்ளி = 1. பள்ளர்குலப் பெண். 2. பள்ளன் மனைவி. 3. வன்னியர் குலம். 4. வன்னியர் குலச் சிற்றரசன். ''ராஜாக்கள் போகப் பள்ளிகள் வந்து புகுருமா போலே'' (திவ். இயற். திருவிருத். 40, வியா. 235).

பள்ளன்– பள்ளத்தி = பள்ளர்குலப் பெண்.

பள்ளத்தி– பள்ளச்சி = பள்ளர்குலப் பெண்.

பள்ளி– பள்ளிச்சி = வன்னியர்குலப் பெண்.

பள்– பள்ளு = பள்ளர் வாழ்க்கைபற்றிய நாடகப் பனுவல்.

பள் – பள்ளி = 1. படுக்கை. பள்ளிகொண்டான், பள்ளியெழுச்சி முரசம். 2. தூக்கம். ''பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப'' (கலித். 121). 3. விலங்கு துயிலிடம் (பிங்.). 4. படுக்கையறை.

**குறிப்பு :** துளைத்தல் என்பது, குழித்தல், குடைதல், தோண்டுதல், துளையிடுதல், துருவுதல் என்றும்; குத்துதல், வெட்டுதல், கிள்ளுதல், கீறுதல், சீவுதல், சிதைத்தல், அறுத்தல், கிழித்தல், பிளத்தல், உடைத்தல்,

பகுத்தல் (பிரித்தல்), துண்டித்தல், (துண்டுபண்ணுதல்), பொடித்தல் என்றும்; குலைத்தல், கலைத்தல் என்றும்; வினைக்கும் கருவிக்கும் ஏற்றவாறு பலதிறப்படும்.

மாழையும் (metal) கல்லும் மரமும் போன்ற வன்பொருள்கள் கருவிகளாலும், கனிகளும் உண்டி வகைகளும் களிமண்ணும் போன்ற மென்பொருள்கள் கருவியாலும் கையாலும் துளைக்கப்படும்.

சில பொருள்கள், தக்க நிலைமை வரின், நிலம் வெடிப்பதும் கனிபிளப்பதும் போல, தாமாகவே துளையுண்ணும்.

குழித்தல் குடைதல் போன்றன ஆழவாட்டில் துளைத்தல்; வெட்டுதல், அறுத்தல் போன்றன நீளவாட்டில் துளைத்தல்.

குழித்தலுங் கீறுதலுங் குடைதலும் போன்றன குறையத் துளைத்தல்; துருவுதலும் வெட்டுதலும் பிளத்தலும் போன்றன நிறைய அல்லது முற்றத் துளைத்தல்.

முற்றத் துளைத்தலால் பகுத்தல், பிரித்தல், துணித்தல், பொடித்தல் முதலியன ஏற்படுகின்றன.

(பிரி – பிரிவு. ஒ.நோ : L. pars, partis, portionem)

பள்ளி = 5. படுக்கையறையுள்ள வீடு. 6. வீடு. 7. வீடு போன்ற இடம், இடம். ''சொல்லிய பள்ளி நிலையின வாயினும்'' (தொல். எழுத்து. பிறப். 18), ''சொல்லிய பள்ளி எழுதரு வளியின்'' (ஷெஷெஷெ 20). 8. தச்சன் பணி செய்யும் இடம், பட்டறை, ''தச்சன் வினைபடு பள்ளி'' (களவழி. 15). 9. அரசன் வீடாகிய அரண்மனை. பள்ளிக்கட்டில் = அரியணை, ''நின்பள்ளிக் கட்டிற் கீழே'' (திவ். திருப்பா. 22). பள்ளிக்கட்டு = இளவரசியின் திருமணம் (நாஞ்.). பள்ளித் தேவாரம் = அரண்மனைத் தெய்வ வழிபாடு (நாஞ்.). 10. தெய்வ வீடாகிய கோவில். ''கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்'' (குறள். 840). 11. சமண புத்தர் கோவில். ''புத்தர் நோன்பியர் பள்ளி யுள்ளுறை'' (திவ். பெரியதி. 2 : 1 : 5). 12. முகமதியர் கோவில், பள்ளிவாசல். 13. இறந்த அரசரின் நினைவுக் குறியாகக் கட்டப்பட்ட கல்லறை. (S. I. I. III, 24). பள்ளியடைப் படலம் (கம்பரா.). 14. முனிவர் தவநிலையம். ''மாதவி மாதவர் பள்ளியு ளடைந்ததும்'' (மணிமே. 18 : 8). 15. அறச்சாலை, அயலாரையும் இரப்போரையும் உண்பிக்கும் ஊர் மடம். 16. மடத்திலும் கோவிலிலும் நடத்தப்பெற்ற கல்விக்கூடம். ''பள்ளியி லோதி வந்ததன் சிறுவன்'' (திவ். பெரியதி. 2 : 3 : 8). 17. அரண்மனை அல்லது கோவில் உள்ள நகரம் (பிங்.). 18. தாழ்வான கூரை வீடுகளுள்ள இடைச்சேரி. ''காவும் பள்ளியும்'' (மலைபடு. 451). 19. இடைச்சேரி போன்ற சிற்றூர் (பிங்.).

பள்ளம் என்பது நிலமட்டத்தினும் தாழ்வான இடம். நிற்கும் நிலையினும் படுக்கும் நிலை தாழ்வாயிருப்பதால், படுக்கை அல்லது படுக்குமிடம் பள்ளியென்றும், படுத்துத் தூங்குதல் பள்ளி கொள்ளுதல் என்றும் சொல்லப்பட்டன.

பள்ளிமாடம் = அரசர் துயிலும் மாடம். ‘‘பள்ளிமாட மண்டபம்’’ (சீவக. 146). பள்ளியந் துலா = துயிலும் பல்லக்கு. ‘‘பள்ளி யந்துலா வேறுவர்’’ (மதுரைப் பதிற். 19). பள்ளியோடம் = படுக்கை யமைந்த படகு.

பகலெல்லாம் அங்குமிங்கும் அலைந்து திரிந்து உணவு தேடிய முதற்கால அநாகரிக மாந்தனுக்குப் போன்றே, இக்கால நாகரிக மாந்தனுக்கும், பாதுகாப்பாக இராத்தங்கி இனிதாக உறங்குதற்கு வீடு இன்றியமையாததா யிருத்தல் காண்க. பள்ளி கொள்ள உதவாத அமைப்பு உண்மையான வீடாகாது.

பல வீடுகள் சேர்ந்ததே ஊராதலின், வீட்டுப் பெயர் சினையாகு பெயராக ஊரையுங் குறிக்கும்.

எடுத்துக்காட்டு :

குடி = வீடு, ஊர் (காரைக்குடி, மன்னார்குடி).

இல் = வீடு, ஊர் (அழும்பில், கிடங்கில்).

பள்ளி = வீடு, ஊர் (திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி).

நகர் = வெண்சுதை தீற்றிய காரை வீடு அல்லது மாளிகை, அத்தகைய வீடுள்ள ஊர்.

**ம.** பள்ளி, **தெ.** பல்லிய, பல்லெ, **க.** ஹள்ளி, **வ.** பல்லி.

பொதுமக்கள் பணத்திலிருந்து நாலரை யிலக்கம் உருபா செலவிட்டுத் தொகுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியில் (Lexicon), பள்ளி என்னும் தூய பழந்தென்சொல் பல்லி என்னும் வடசொல்லின் திரிபாகக் காட்டப்பட்டிருப்பதும், அதை யெடுத்துக் கூறியும் பெருந்தமிழ்ப் பேராசிரியருள்ளும் இரண் டொருவர் தவிர ஏனையரெல்லாம் பேசா மடந்தையர் போல் மானமின்றி வாளா விருப்பதும், மருட்கைக் குரிய செய்திகளாகும்.

பள்ளி– பாளி– பாழி = 1. மக்கள் துயிலிடம். ‘‘பெரும்பாழி சூழ்ந்த விடத்தரவை’’ (திவ். இயற். 1 : 20). 2. விலங்கு துயிலிடம் (பிங்.). 3. கோயில். ‘‘ஐயன் பாழியில் ஆனை போர்க்குரித்தாம் அன்று’’ (ஈடு, 1 : 1 : 5). 4. முனிவர் உறைவிடம் (பிங்.). 5. இடம். ‘‘வானவர்கோன் பாழி’’ (திவ். இயற். 2 : 13). 6. மருதநிலத்தூர் (சூடா.). 7. நகரம் (பிங்.) ஒ.நோ :

Gk. *polis*, city. *8. சிறுகுளம். ''பூழி நாட்டார்..... சிறுகுளத்தைப் பாழி என்றும்..... வழங்குப'' (தொல். சொல். 400, நச். உரை). ஒ.நோ:*OE., MLG. pol, E. pool. *9. எலிவளை, எலிப்பாழி (உ.வ.). 10. குகை (திவா.).*

*பள் – பள்ளை = 1. குள்ளம். 2. குள்ளமான பள்ளையாடு.* **ப.க.** *பட்டெ* (dd).

*பள்ளை– பள்ளையன் = குள்ளன், குறுகிப் பருத்தவன். (யாழ். அக).*

*பள்ளையன் – பள்ளச்சி = குள்ளி. பள்ளையம் = 1. பள்ளமான உண்கலம்* (W.). *2. சிறுதெய்வப் படையல் உயரத்தை நோக்கக் குள்ளம் பள்ளமாயிருத்தல் காண்க. பள்ளம் – தாழ்மட்டம்.*

*பள் – பள்கு, பள்குதல் = பதுங்குதல். ''பள்கி நோக்குபு பயிர்த்து நடந்தான்'' (சூளா. சுயம். 31).*

*பள்– பண் = 1. நீர்நிலை. ''பண்குலவத் தாலமிசை நடித்து'' (குற்றா. தல. திருநதிச். 12). 2. நீர்நிலை போன்ற வயல், வயலிற் செய்யும் வேலை, தொழில்.*

*பண்– பண்ணை[1] = விலங்கு துயிலிடம் (பிங்.).*

*பண்ணை[2] = 1. மருதநிலம். ''வளநீர்ப் பண்ணையும் வாவியும்'' (சிலப். 11 : 13). 2. வயல் (பிங்.). ''பண்ணைசூழ்ந் திலகுந் திருமுனைப் பழைய நாடு'' (பாரத. பாயி. 6). ''வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியும்'' (சிலப். 13 : 192). 3. நீர்நிலை (பிங்.). 4. மரத்திற்கு அடியில் நீர் பாய்ச்சுமாறு சுற்றிவரத் தோண்டி வைக்கும் பள்ளம். மரத்திற்குப் பண்ணை பிடிக்க வேண்டும் (உ.வ.). 5. நிலக்கிழாரே செய்யும் பயிர்த்தொழில்* (C.G.). *6. வாரக்குடி. 7. நெற்குத்துமாறு நடுவிற் பள்ளஞ்செய்து நிலத்திற் பதிக்கப்பட்ட வட்டக்கல். 8. பல்லாங்குழி விளையாட்டிற்கு நிலத்தில் தோண்டப்படும் குழி.*

**க.** *பண்ணெய.*

*பண்ணையார் = பெருநிலக்கிழார். பண்ணையாள் = வாரக் குடியாள்.*

*பண்ணையாளி – பண்ணையாடி – பண்ணாணடி = வாரக்குடி வைத்துப் பயிர் செய்யும் பெருநிலக்கிழார்.*

*பண்ணை – பணை[1] = 1. விலங்கு துயிலிடம் (பிங்.). 2. யானை குதிரைகள் தங்குமிடம். ''பணைநிலை முனைஇக் களிறுபடிந் துண்டென'' (புறம். 23), ''பணையமை பாய்மான்'' (கலித். 57).*

பணை[2] = 1. மருதநிலம். ''பெருந் தண்பணை பாழாக'' (புறம். 16). 2. வயல். ''இரும்பணை திரங்க'' (பதிற். 43.12). 3. நீர்நிலை (பிங்.).

பண் – பணி. பணிதல் = 1. தாழ்தல். ''பணியிய ரத்தைநின் குடையே'' (புறம். 6), 2. செருக்கின்றியடங்குதல். ''எல்லார்க்கு நன்றாம் பணிதல்'' (குறள். 125). 3. இறங்குதல் (W.). 4. தாழ்வாதல். 5. குறைதல். 6. எளிமையாதல். 7. வணங்குதல். ''உடையான் கழல் பணிந்திலை'' (திருவா. 4 : 35) பணிந்தவன் = குள்ளன் (W.).

**ம.** பணியுக.

பணித்தல் = 1. தாழ்த்துதல். ''வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப'' (பு. வெ. 4 : 9, கொளு). 2. குறைத்தல் (W.). 3. மிதித்தல், ''நந்து மாமையும் பணித்து'' (சீவக. 2109). பணிவிடை = தொண்டு, குற்றேவல். திருப்பணி = தெய்வத் தொண்டு.

பணி – படி. படிதல் = 1. அடியில் தங்குதல். வண்டல் படிந்திருக்கிறது (உ.வ.). 2. தங்குதல். ''பறவை படிவன வீழ'' (நெடுநல். 10). 3. வயமாதல். ''அடியாத மாடு படியாது'' (பழ.). 4. கீழ்ப்படிதல். பெரியோர்க்குப் படிந்து நடத்தல் வேண்டும் (உ.வ.). 5. குளித்தல். ''தடங்கடலிற் படிவாம்'' (திருவாச. 38:9). 6. அமுங்குதல். எண்ணெய் தேய்த்துச் சீவினால் மயிர் படியும் (உ.வ.). 7. தணிதல், வெள்ளம் படிந்தது (உ.வ.). 8. கீழே விழுந்து வணங்குதல். ''சிரந் தலத்துறப் படிந்து'' (உபதேசகா. சிவத்து. 344).

பணி செய்வோன் = 1. வேலைக்காரன். 2. விழாக்காலத்தில் தாரையும், இழவுநாளில் சங்கும் ஊதுபவன். கீழ்ப்படிதல் = சொன்னபடி செய்து பணிவாய் நடத்தல்.

பணி– பாணி, பாணித்தல் = 1. காலந் தாழ்த்தல். ''பாணிநீ நின்சூள்'' (பரிபா. 8:56). 2. காத்திருத்தல். ''பாணியே மென்றார்'' (கலித். 102). 3. பின்வாங்குதல். ''சமரிற் பாணியான்'' (கந்தபு. மூவாயிரர். 59).

பாணி = பள்ளமான இடத்தில் தங்கும் அல்லது பள்ளம் நோக்கி ஓடும் நீர். ''விண்ணியல் பாணியன்'' (பதினொ. பொன்வண். 30).

**க.** பணி, **மரா.** பாணி, **இ** பாணீ.

நீரைக் குறிக்கும் பாணி என்னுஞ்சொல் வடமொழியில் இல்லை. நீரம் என்னும் தமிழ்ச்சொல் வடமொழியில் நீர என்று கடைக்குறைந்து வழங்கும்போது, பாணி (நீர்) என்னும் சொல் இந்தியில் பாணீ என்று திரிந்து வழங்குவது இயற்கைக்கு மாறன்று.

*பண்– பண்ணல் = 1. வயலைத் திருத்துதல். 2. பயிர் செய்தல். ''பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்'' (பழ.). 3. வேலை செய்தல். 4. செவ்வையா யமைத்தல். 5. அழகுபடுத்துதல். 6. அணியமாக்குதல் (ஆயத்தஞ் செய்தல்). 7. இசையெழுவும் எண்வகையுள் ஒன்று. ''பண்ணல்...... எண்வகையா லிசையெழீஇ'' (சிலப். 7 ః 5-8).*

*பண்– பண்ணு. பண்ணுதல் = 1. பயிர் செய்தல். 2. வேலை செய்தல். 3. செய்தல் ''உம்பர்க் கிடந்துண்ணப் பண்ணப்படும்'' (நாலடி. 37). 4. செவ்வைப்படுத்துதல். 5. அழகுபடுத்துதல். ''பட்டமொ டிலங்கப் பண்ணி'' (சூளா. கல்யா. 14). 6. அணியமாக்குதல். ''பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்'' (புறம். 12). 7. யாழ் நரம்பில் அலகு (சுருதி) அமைத்தல். 8. பண்ணிற்கேற்ப யாழ் நரம்பமைத்தல். ''மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்'' (மலைபடு. 534). 9. சமைத்தல். ''பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்'' (மலைபடு. 417). 10. உண்டாக்குதல். பானை சட்டி பண்ணுகிறவன் குயவன். (உ.வ.).*

*மாந்தன் முதன்முதற் கற்றுக்கொண்ட கைத்தொழில உணவு விளைக்கும் பயிர்த்தொழிலாதலால் பண்ணுதல் என்னும் பண்ணை வினையைக் குறித்த சொல்லே பொதுவினையைக் குறிக்குஞ் சொல்லாயிற்று.*

*ஒ.நோ ః கை = கைத்தொழில், பயிர்த்தொழில்.*

*''இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்'' (குறள். 1035)*

*பண் – பணி = 1. கைத்தொழில். பணிக்களரி = தொழிற்சாலை, பட்டறை, ''கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத் தனவாயின'' (புறம். 95, உரை). 2. அழகு பண்ணும் அணிகலம் (பிங்.). ''பணியெலாம் பணிய தாகி'' (கந்தபு. ததீசியுத். 106). 3. வேலைப்பாடு. ''பணிபழுத் தமைந்த பூண்'' (கம்பரா. இலங்கை கே. 12). 4. பிழைப்புத் தொழில்.*

***ம.** பணி. பணித்தட்டார் = பொற்கொல்லர். ''பணித்தட்டார் பணிபண்ணுமிடங்களில்'' (சிலப். 6 ః 135, உரை).*

*பணி– பணிக்கு = வினைத்திறமை.*

*பணிக்குச் செலுத்துதல் = வேலையாள்களின் வேலையை மேற்பார்ப்பவன்* (W.).

*பணிக்குச் சொல்லுதல் = வேலை செய்யும் முறையைக் காட்டுதல்* (W.). *2. பிறர் வேலையிற் குற்றங்கூறுதல். கட்டத் தெரியாவிட்டாலும்*

*கட்டின வீட்டிற்குப் பணிக்குச் சொல்வான். (உ.வ.).*

*பணிக்கு– பணிக்கம் = வினைத்திருத்தம், தொழிற்றிறமை* (W.).

*பணிக்கம்– பணிக்கன் = 1. வினைத்திறவோன். 2. ஆசிரியன் (பிங்.). 3. படைக்கலம் பயிற்றுவோன். ''படையானொரு பணிக்கன் தோன்றி'' (திருவாலவா. 35 : 1). 4. கூத்துப் பயிற்றுவோன், ஆடலாசிரியன். 5. தலைமைக் கொற்றன்* (W.). *6. யானைப்பாகன்* (W.). *7. நஞ்சு மருத்துவன்.*

*கையைக் குறிக்கும் பாணி என்னுஞ் சொல் வடமொழியிற் சிறப்பாக வழங்கினும், அதற்கு மூலமாகக் காட்டப்படும் பண் என்னுஞ் சொல்லிற்கு, பண்டமாற்றுதல், பணையம் வைத்தல், பேரம் பேசுதல் என்னும் பொருள்களே உள. அவை பொருந்து வனவல்ல.*

*எந்தப் பொருளையும் தொழிலையுஞ் செய்தற்குக் கை இன்றியமையாத உறுப்பாதலால், செய்தலைக் குறிக்கும் சொல்லி னின்று கைப்பெயர் அமைவதே இயற்கைக்குப் பொருத்தமாம். பண் (பண்ணு)– பாண்– பாணி (=பண்ணி).*

*தண்டபாணி = தண்டம் (தண்டு + அம்) ஏந்திய கையன், முருகன். தண்டம் என்னும் சொல்லும் தவறாக வடசொல்லெனக் கருதப்படுகின்றது.*

*ஒ.நோ : செய்–* **தெ.** *சேயி* (c), **க.** *கெய். கெய்யி,* **த.** *கை. செய்– கெய்– கை.*

*கை யென்னும் பெயர், செய் என்னும் வடிவில் குமரிநாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும்.*

*கரு – வக்ரு – கர = கை. கருத்தல் செய்தல். இவ் வினைச்சொல் கடைக்கழகக் காலத்திற்கு முன்பே வழக்கற்றுப் போயிற்று. கருமம், கருவி, கரணம் முதலிய சொற்களை நோக்குக.*

*பண்ணுதல் என்னுஞ் சொல், அலகு, பண் என்னும் இரு வகையில் இசையமைத்தலைக் குறிக்க ஆளப்பட்டதனால், பண் என்னுஞ் சொல் இசை வகையையுங் குறித்தது.*

*பண்ணலாவது :*

*''வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்*
*விலக்கின் றிளிவழி கேட்டும்*
*இணைவழி யாராய்ந் திணைகொள முடிப்பது*
*விளைப்பரு மரபிற் பண்ண லாகும்' (சிலப். 7: க, பழங்குறிப்புரை).*

*''பண்ணல் – பாட நினைந்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெயருந் தன்மை மாத்திரை யறிந்து வீக்குதல்'' (சீவக. 657, நச். உரை).*

*ஒ.நோ : செய் – செய்யுள்.*

*''வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'' (நன். 268).*

*செய்யுள் இசைப்பாவிற்கு இனமானதே. பாட்டு, பாணி, தேவபாணி, பெருந்தேவபாணி என்னுஞ் சொற்கள், செய்யுட்கும் இசைப்பாவிற்கும் பொதுவாக வழங்குதல் காண்க.*

*பண் = 1. இசைவகை. ''பண்ணென்னாம் பாடற் கியை பின்றேல்'' (குறள். 573). 2. எழுமுரல் (சுர). இசைவகை. ''பண்ணுந் திறனும்'' (பெருங். வத்தவ. 3 : 56). ''நிறைந்த நரம்பு நிகழும் பண்ணெனல்'' (பிங். 6 : 324). 3. இசைப்பாட்டு (பிங்.). 4. நரப்புக் கருவிகளான யாழ்வகைகள். ''பண்கெழு மெல்விரலால்'' (சீவக. 220).*

*பண் – பாண் = பாட்டு. ''பூணினான்றன் பாண்வலைச் சென்று பட்டாள்'' (சீவக. 2040).*

*பாண் – பாணன் = இசையும் இசைத்தமிழும் வளர்த்த பண்டைத் தமிழ வகுப்பான். ''கூத்தரும் பாணரும்'' (தொல். புறத். 36).*

*பாணன் – பாணான் = ஆரியச் சூழ்ச்சியால் இசைத் தொழிலிழந்து தையல் வேலை செய்யும் தமிழ வகுப்பான்.*

*பாணன் – பாண் = பாணர் குலம்.*

*பாண் – பாணு = பாட்டு. ''பாணுவண் டரற்றுங் கோலச் சிகழிகை'' (சீவக. 2447).*

*பாணன் – பாணி = பாணன் மனைவி, பாணர்குலப் பெண்.*

*''என்கொணர்ந்தாய் பாணாநீ யென்றாள் பாணி'' (தனிப்பாடல்)*

*பாண் – பாடு. பாடுதல் = 1. பண்ணிசைத்தல். ''மறம்பாடிய பாடினியும்மே'' (புறம். 11). 2. வண்டு இமிழ்தல். ''வண்டு பல விசைபாட'' (திவ். பெரியதி. 3 : 9 :3). 3. செய்யுள் செய்தல். ''பாடினார் பல்புகழைப் பல்புலவர்'' (பு. வெ. 8 : 1). 4. செய்யுளாற் புகழ்தல். ''பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்'' (புறம். 32). 5. சண்டையில் வைதல். அவளை நன்றாய்ப் பாடிவிட்டாள். (உ.வ.). ''ஆடினாள் பாடினாள்'' (தனிப்பாடல்).*

*பாடு – பாட்டு = 1. பாடுகை. 2. இசைப்பாடல். 3. இன்னிசை. ''கூத்தும் பாட்டும்'' (மணிமே. 2 : 19). 4. செய்யுள் ''பாட்டுரை நூலே'' (தொல். செய். 78). 5. வசைமொழி. என்னிடம் பாட்டுக் கேட்க வேண்டுமா? (உ.வ.).*

*பாடு – பாடகன் = பாடுவோன். ''பாடகர் பாணர் புகழக் கண்டு'' (திருவாலவா. 55 : 3).*

*பாடகன் – பாடகி = பாடுபவள் (நாம. 183).*

*பாடகன் – பாடினி = பாணர்குல மகள். ''மறம்பாடிய பாடினி யும்மே'' (புறம். 11).*

*பாடு – பாடி = 1. பாடுபவன். எ - டு : வலவன்பாடி. பாடுபவள். எ-டு : கூழுக்குப் பாடி. பாடுவது. எ-டு : வானம்பாடி. 2. பாடி யிரப்பெடுப்பவன்– வள். பாடி பரதேசி* (W.).

*பாண்– பாணி = 1. இசைப்பாட்டு (திவா.). ''புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி'' (சிலப். 8 : 44). 2. இன்னிசை (சங்கீதம்). ''பாணியாழ'' (சீவக. 1500). 3. இசையொலி. ''கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்'' (சிலப். 13 : 148). 4. இசையுறுப் பாகிய தாளம். ''தண்ணுமைப் பாணி தளரா தெழூஉக'' (கலித். 102).*

Poem *என்னும் கிரேக்க ஆங்கிலச் சொல்லும், பண் செய்யுள் என்னும் இரு சொற்களை வேர்ச்சொற் பொருளில் ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.*

Gk. poema = *poiema* f. *poieo*, to make.

*பொள்– பொய். பொய்தல் = (செ.கு.வி.) 1. துளைக்கப்படுதல். ''பொய்தக டொன்று பொருந்தி'' (கம்பரா. பஞ்ச. 49). 2. பிடுங்கப் படுதல். ''பொய்த குத்தின....புண்'' (கம்பரா. கிங்கர. 50).*

*(செ.குன்றாவி.) வீழ்த்துதல். ''அவை பார்சோரப் பொய்தான்'' (கம்பரா. அட்ச. 33).*

*வீழ்த்துதலாவது பள்ளமான அல்லது கீழ்மட்டமான இடத்தை அடையச்செய்தல்.*

*பொய் – பொய்கை = 1. ஏரி அல்லது குளம். ''பொய்கை வாயிற் புனல்பொரு புதவின்'' (பதிற். 27). 2. இயற்கையான ஏரி. ''வாவியும் பொய்கையுங் கண்டீர்'' (சீவக. 337).*

*பொய் = 1. உட்டுளை. ''பொய்பொரு முடங்குகை'' (சிலப். 15 : 20). 2. மரப்பொந்து (பிங்.). 3. உள்ளீடில்லாதது. 4. உண்மை யல்லாதது. ''பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ'' (குறள். 938). 5. போலியானது*

(W.). *6. நிலையாமை. ''புற்புதமே யன்ன பொய்க்குடி வாழ்க்கையை'' (திருநூற். 3). 7. மாயை* (W.).

***ம.*** *பொய்.*

*பொய்த்தல் = (செ. குன்றாவி.) 1. உண்மையல்லாததைச் சொல்லுதல். ''தன்னெஞ் சறிவது பொய்யற்க'' (குறள். 293). 2. ஏமாற்றுதல், வஞ்சித்தல். ''நின்றோடிப் பொய்த்தல்'' (நாலடி. 111).*

*(செ. கு. வி.). 1. செயல் தவறுதல். ''விண்ணின்று பொய்ப்பின்'' (குறள். 13). 2. கெடுதல். ''பொருளென்னும் பொய்யா விளக்கம்'' (குறள். 753).*

*பொய்– பொய்தல் = 1. மணற் சிற்றில். ''பொய்தலணி வண்டிமிர் மணற்கோடு'' (பரிபா. 20 : 23). 2. மகளிர் விளையாட்டு. ''பொய்த லாயமொடு'' (சிலப். 6 : 151).*

*பொய்..... பொய்ச்சு = பழத்தின் குற்றம்* (W.), *சொத்தைப் பகுதி.*

*பொய்ச்சு– பொய்ச்சா. பொய்ச்சாத்தல் = மறத்தல்* (W.).

*பொய்ச்சா– பொச்சா. பொச்சாத்தல் = 1. மறத்தல்– ''புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க'' (குறள். 719). 2. இகழ்தல். ''கொடையளிக்கட் பொச்சாவார்'' (ஆசாரக். 67).*

*பொச்சாப்பு = 1. மறதி. ''பொச்சாப்புக் கொல்லும் புகழை'' (குறள். 532). 2. மனவுறுதியின்மை. ''வன்சொல் பொச்சாப்பு'' (தொல். பொருள். 274). 3. குற்றம் (பிங்.). 4. பொல்லாங்கு* (W.).

*ஒன்றை மறந்த மனம் ஓரளவு உள்ளீடற்ற கூடு போலிருத்த லால், மறதி பொய்ச்சாப் பெனப்பட்டது.*

*பொய்– (பய்)– பை.*

*ஒ.நோ : வள் = கூர்மை. வள்– (வய்)– வை = கூர்மை.*

*பை = துணி, தோல் முதலியவற்றாலான உள்ளீடற்ற உறை.*

*''தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்*
*கூத்தன் புறப்பட்டக் கால்'' (நாலடி. 36)*

*பய் – பயம்பு = 1. பள்ளம் (திவா.). 2. குழி. ''கரந்து பாம்பொடுங்கும் பயம்பு'' (மலைபடு. 199). 3. யானைபடு குழி. ''பயம்பில்வீழ் யானை'' (சிலப். 25 : 31). 4. நீர்நிலை (பிங்.).*

*பய்– பயல் = பள்ளம் (பிங்.).*

*பொள்– பொளு. பொளுபொளுவெனல் = ஓட்டைவழி ஒழுகுதற் குறிப்பு.*

பொளு– பொழு– போழ்.

போழ்தல் = (செ.கு.வி.) 1. பிளவுபடுதல். ''புலம்புங் கனகுரற் போழ்வாய வன்றிலும்'' (திவ். இயற். திருவிருத். 87). 2. பிரிவுபடுதல் (W.).

(செ. குன்றாவி.) 1. பிளத்தல். ''கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப'' (பதிற். 19 : 2). 2. ஊடுருவிச் செல்லுதல். ''கடற்குட்டம் போழ்வர் கலவர்'' (நான்மணி. 18). 3. அழித்தல். ''நீடிருள் போழு நிலைமைத்து'' (சீவக. 2118).

**க.** போழ்.

போழ் = 1. பிளவு. ''போழ்படக் கிடந்த'' (கல்லா. முருகக். 26). 2. துண்டம். ''பசுங்காய்ப் போழொடு'' (பெரும்பாண். 307). 3. பிளந்தறுத்த தோல்வார். ''போழ்தூண் டூசி'' (புறம். 82 : 4). 4. தகடு. ''வெள்ளிப்போழ் விலங்கவைத் தனைய'' (சீவக. 70).

போழ்முகம் = பிளந்தாற் போன்ற முகத்தை அல்லது வாயையுடைய பன்றி (பிங்.).

போழ்வாய் = 1. பிளந்த வாய். ''போழ்வாய வன்றிலும்''. 2. பொக்கை வாய் (யாழ்ப்.). **க.** பொடுவாய் (b). ''போழ்வாய்ச்சி கட்டுடம்பு பூரித்தாள்'' (விறலிவிடு. 195).

போழ் – போழம் = பொய், வஞ்சனை, மாறுபடுஞ் சொல். ''போழம் பலபேசி'' (தேவா. 1080 : 11).

போழப் பெட்டி = 1. அகன்ற வாயுள்ள வண்ணப் பனை யோலைக் கூடை. 2. மணமகள் வீட்டிற்கு வரிசை கொண்டுபோகும் சாயவட்டி.

பொழு– பொழுது = இருளைத் துணிக்கும் கதிரவன்.

ஒ.நோ : ''தாழிருள் துமிய மின்னி'' (குறுந். 270).

பொழுது புறப்பட, பொழுது சாய, பொழுது வணங்கி (சூரிய காந்தி) முதலிய வழக்குகளால், பொழுது என்னும் சொல் முதலாவது கதிரவனைக் குறித்ததென்பது பெறப்படும்.

பொழுது = 1. கதிரவன். ''பொழுதுபோய்ப் பட்ட பின்றை'' (சீவக. 1747). 2. காலம்.

''முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'' (தொல். அகத். 4)

*3. நாள். ''விருந்தும் மருந்தும் மூன்று பொழுது'' (பழ.). 4. வாழ்நாள். ''பொழுதளந் தறியும் பொய்யா... காண்கையர்'' (முல்லைப். 55). 5. சிறுபொழுது.*

*''மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்*
*வேலைநீ வாழி பொழுது'' (குறள். 1231)*

*6. பெரும்பொழுது. ''எந்நில மருங்கிற் பூவும் புள்ளும் அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்'' (தொல். அகத். 19). 7. நேரம். ''நிற்பரவு பூசையினும் பொழுது போக்கெனக் கருள் புரிவாய்'' (சிவப். பிரபந். சோண. 29). 8. வேளை. ''கலந்த பொழுதுங் காட்சியும் அன்ன'' (தொல். அகத். 16). 9. அமையம். நான் நிலையத்தை அடைந்தபொழுது வண்டி வரவில்லை (உ.வ.). 10. நொடி. ''ஒருபொழுதும் வாழ்வ தறியார்'' (குறள். 337). 11. தடவை. முப்பொழுது மருந்து (உ.வ.). 12. தக்க சமையம் அல்லது காலம். ''இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது'' (குறள். 481). ''பொழுதொடு புணர்தல்'' (பிங்.). 13. பகல் அல்லது இரவு ஒரு பொழுது வேலை, ஒருபொழுது உறக்கம்.*

***ம.*** *பொழுது,* ***ப.க.*** *போழ்து,* ***து.*** *பொர்து,* ***தெ.*** *ப்ரொத்து* (dd).

*பொழுது – போழ்து = 1. வேளை. ''அழல்மண்டு போழ்தின்'' (நாலடி. 202). 2. முழுத்தம் (முகூர்த்தம்). ''இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய'' (கலித். 93).*

*போழ்து – போது = 1. கதிரவன். ''போதுஞ் சென்றது குடபால்'' (கம்பரா. வனம்புகு. 19). 2. வேளை அல்லது அமையம். ''ஆட்கொண்ட போதே கொண்டிலையோ'' (திருவாச. 33 : 7).*

*போழ்து – போழ்தம் = வேளை.*

*பொள் – பொய். பொய்தல் = வீழ்த்துதல். ''அவை பார்சோரப் பொய்தான்'' (கம்பரா. அட்ச. 33).*

*வீழ்தல் என்னும் தன்வினைச்சொல், மழை பெய்தலையுங் குறிக்கும்.*

*எ-டு :*

*''விசும்பிற் றுளிவீழி னல்லால்'' (குறள். 16)*

*''வீழ்க தண்பெயல்'' (தேவா.)*

*பொய் – பெய். பெய்தல் = 1. துளைவழி நீர் ஒழுகுதல் போல முகிலினின்று மழை விழுதல். ''பெய்யெனப் பெய்யும் மழை'' (குறள்.*

*55). ஒ.நோ : ''வானின் றமையா தொழுக்கு'' (குறள். 20). 2. சிறுநீர் ஒழுகவிடுதல். மோத்திரம் பெய்தான் (உ.வ.). 3. வார்த்தல். ''பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்'' (புறம். 115). நெய் பெய்த சோறு (உ.வ.). 4. கலத்தில் இடுதல். ''உலைப்பெய் தடுவது போலுந்துயர்'' (நாலடி. 114). 5. கீழிடுதல், ''பார்த்துழிப் பெய்யிலென்'' (நாலடி. 26). 6. இடைச் செருகுதல். இடையிடையே சில சொற்களைப் பெய்து (உ.வ.). 7. ஈதல். ''உயிர்க்கு.... வீடுபே றாக்கம் பெய்தானை'' (தேவா. 975 : 7). 8. அமைத்தல். ''பிரான் பெய்த காவு கண்டீர்....மூவுலகே'' (திவ். திருவாய். 6 : 3 : 5). 9. இட்டுப் பரப்புதல். ''தருமணல் தாழப் பெய்து'' (கலித். 114). 10. நீர்க்குள் இடுதல். ''கரும்தலை யடுக்கலி னணைகள்... பெருங் கடலிடைப் பெய்து'' (கம்பரா. கும்ப. 248). 11. அணிதல். ''மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்'' (பரிபா. 20 : 21). 12. செறித்தல். ''பெய்ம்மணி யேய தேர்'' (கம்பரா. நாகபாச. 128). 13. கட்டுதல். ''புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி'' (பெரும்பாண். 218). 14. கையாளுந் திறம். ''பெய்திற னெல்லாம் பெய்து பேசினேன்'' (கம்பரா. கும்ப. 169).*

**ம.** பெய்யுக.

*பெய் – பெயர் = 1. இடுங்குறிச் சொல். பெயரிடுதல் என்னும் வழக்கை நோக்குக. ''மறவர் பெயரும் பீடும் எழுதி'' (அகம். 67). 2. புகழ். ''பெரும்பெயர் மீளி'' (கலித். 17). 3. ஆள் எத்தனை பெயர் இங்கு வேலை செய்கிறார்கள்? (உ.வ.). 4. தலைக்கீடு (வியாஜம்). ''திருவிழா வென்பதோர் பெயரால்'' (காஞ்சிப்பு. நகர. 70).*

*பெயருக்கு = ஒப்பிற்கு. கடமை யுணர்ச்சியின்றிப் பெயருக்கு வேலை செய்கிறான் (உ.வ.).*

**ம.** பெயர், **தெ.** பேரு, **க.** பெசர், **து.** புதேரு.

*பெயர்– பெயரன் = (முதற் காலத்திற் பாட்டன் பெயரைப் பெற்று வந்த) மகன் மகன்.*

*பெயரன்– பெயர்த்தி (பெ. பா.).*

*பெயர்– பேர் = 1. பெயர்க் குறியீடு. ''பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்'' (நாலடி. 175). 2. ஆள். ''அயற்பேரைக் காய்தி'' (கம்பரா. சரபங். 30). 3. உயிரி (பிராணி). ''விசும்பிற் செல்வதோர் பேர் செலாது'' (கம்பரா. நாகபா. 156). 4. புகழ். ''பேர்பரந்த பிரமாபுரம் மேவிய'' (தேவா. 62 : 3). 5. தலைக்கீடு. ''ரக்ஷிக்கைக்க ஒரு பேர் காணும் வேண்டுவது'' (ஈடு, 9 : 3 : 1). 6. ஒப்பு. பேருக்கு வேலை செய்கிறான் (உ.வ.).*

**ம.** பேர். **தெ.** பேரு.

*பேராண்டி = பேரன்.*

*பேராளன் = 1. பெருமையுடையவன். ''உம்பராளும் பேராளன்'' (திவ். பெரியதி. 7 : 4 : 4). 2. பல பெயர் தாங்கியவன். ''பேராளன் பேரோதும் பெரியோரை'' (திவ். திருநெடுந். 20). 3. மான்றலை (மிருகசீரிடம்) (பிங்.). 4. சகடம் (ரோகிணி) (சூடா.).*

*பேராளி = 1. இன்னொருவர் பெயரைக் கொண்ட – வன்– வள். 2. கீர்த்தி பெற்ற– வன்– வள் (யாழ்ப்.).*

*பெயரன்– பேரன். பெயர்த்தி– பேர்த்தி.*

*பெய் – பேய். பேய்தல் = மழை பெய்தல் (உ.வ.). ''பேய்ந்துங் கெட்டது, ஓய்ந்துங் கெட்டது'' (பழ.).*

*பேய்– பேயு– பேசு.*

*ஒ.நோ : தேய்– தேயு– தேசு–* ***வ.*** *தேஜஸ்,* ***இ.*** *தேஜ்.*

*பேசுதல் = மழை பெய்வது போலச் சொற்களைச் சொரிதல்.*

*ஒ.நோ : பொழிதல் = மழை பொழிவது போல விரைந்தும் விடாதும் பேசுதல்.*

*பேசு–* ***வ.*** *பாஷ்* (bh). *– பாஷா (– பாஷை– பாடை, பாசை, பாழை).*

*பொழு– பொகு. பொகுத்தல் = துளைத்தல் (யாழ். அக.).*

*பொகு – பொக்கு = 1. மரப்பொந்து (பிங்.). 2. உள்ளீடு முற்றாத கூலம் (தானியம்). 3. பொய் (உ.வ.). 4. குற்றம்.* ***தெ.*** *பொக்கி.*

***தெ.*** *பொக்கு.*

*பொக்கு – பொக்கம் = 1. பொய். ''பொக்கம் பலபேசி'' (தேவா. 326 : 7). 2. வஞ்சகம். ''பொய்யும் பொக்கமும் போக்கி'' (தேவா. 1210 : 4). 3. குற்றம். ''பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே'' (தேவா. 1017 : 1).*

***ம.*** *பொக்கம்,* ***தெ.*** *பொக்க* (b).

*பொக்கு– பொக்கல் = பொக்கை.*

*பொக்கு – பொக்கை = 1. துளை* (W.). *2. பல்லின்மை. 3. குற்றம். ''நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து'' (தேவா. 942 : 10).*

***தெ.*** *பொக்க* (b), ***க.*** *பொக்கெ.*

*பொக்கை வாய் = பற்போன வாய். ''பொக்கைவா யாக்கினார் சூரியனை'' (தனிப்பா.* II, 25 : 56).

பொக்கு – பொக்கணம் = 1. சோழியப்பை. ''சுத்திய பொக்கணத்து.....கோலத்தினீர்'' (திருக்கோ. 242). 2. பெருமருந்து என்னும் மூலிகை (மலை.).

**ம.** பொக்கணம், **தெ.** பொக்கணமு (b), **க.** பொக்கண (b).

பொக்கு– பொக்கணி = 1. நெற்குத்தும் உரல். 2. விரிந்த தொப்புள். 3. குடிநீர்க் கலவகை (யாழ். அக.).

பொக்கணி– மொக்கணி = குதிரைக்குக் கொள் கோதுமை முதலிய உணவு கட்டும் பை.

**க.** பக்கண (b).

பொக்கு– பொக்கணை = 1.கல் மரம் முதலியவற்றிலுள்ள பொந்து. 2. நெற்குத்தும் உரல்.

பொகு– பகு.

**கால்டுவெலார்** தம் திரவிட ஒப்பியல் இலக்கணத்தின் இறுதிப் பகுதியில், 'சொல்லியல் உறவுகள்' (Glossarial Affinities) என்னும் தலைப்பின் கீழ்,

''*bhaj*, to share.

*bhajga*, a portion. I am doubtful whether to regard these words as derived from the Tamil *pag-u*, to divide, to share, or to suppose both the Sanskrit and the Tamil to be derived from a common and earlier source. Probably the former supposition is in this case the more correct. At all events the Tamil-Malayalam *pag-u* is a pase, underived Drvidian root. A noun former from it, signifying a share, is *pang-u* (*ng* for *g*, as is after the case); and a collateral root is *pag-ir*, meaning also to share. The Sanskrit word *pangu* means lame, and is altogether unconnected with the Tamil one. Other derived nouns are *pagal*, a division daylight; *pal* (=*pagal*), a portion; and *padi (pagndi)*. half'' - (Dravidian Conparative Grammar, p. 573). என்று கூறியிருத்தல் காண்க.

பகுதல் = (செ.கு.வி.) 1. பிளவுபடுதல். ''சக்கரவாளச் சிலைபக'' (திருப்பு. 841). 2. பிரிவுபடுதல். ''பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்'' (குறள். 187).

(செ. குன்றாவி.). பாகம் பிரித்தல் ''பகுந்துனக்கு வைத்தகோ லறைக்கு'' (திருவாலவா. 30 : 50).

**ம.** பகுக, **தெ.** பகுலு (g).

பகுத்தல் = 1. பங்கிடுதல். ''பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல்'' (குறள். 322). 2. வகைப்படுத்துதல் (W.). 3. வகுத்துத் தெளிவாய்க் கூறுதல்

(W.). *4. வகுத்து கொடுத்தல் (பிங்.). 5. வெட்டுதல் (பிங்.). 6. பிடுங்குதல் ''பாதவ மொன்று பகுத்தான்'' (கம்பரா. இலங்கையெரி. 55). 7. பகுத்து நீக்குதல். ''பண்ணுறு சுளைகள் கையாற் பகுத்துணக் கொடுத்த தன்றே'' (சீவக. 2724).*

*பகு– வகு. வகுதல் = பிளத்தல். ''மரல் வகுந்து கொடுத்த செம்பூங் கண்ணியொடு'' (புறம். 264).*

*வகுத்தல் = 1. கூறுபடுத்துதல். 2. இனம்பற்றிப் பிரித்தல். 3. பகிர்ந்து கொடுத்தல். 4. வெவ்வேறு துறைகட்கு ஒதுக்குதல். ''காத்த வகுத்தலும் வல்ல தரசு'' (குறள். 385). 5. பெருந்தொகையைச் சிறுதொகையாற் பகுத்தல். 6. உயிர்கட்கு இன்பதுன்பக் கூறுகளை இறைவன் பிறப்பில் அமைத்தல். ''வகுத்தான் வகுத்த வகை யல்லால்'' (குறள். 377). 7. ஒன்றை வகைப்படுத்திச் சொல்லுதல். ''அவன் கதை வகுப்பாய்'' (பாகவத. 1, ஸ்ரீநாரதர். 5). 8. படைத்தல். ''என்னை வகுத்திலையேல் இடும்பைக் கிடம்யாது சொல்லே'' (தேவா. 643 ஃ 2). 9. கட்டியமைத்தல். ''பெரும்பெயர் மன்னர்க் கொப்பமனை வகுத்து'' (நெடுநல். 78). 10. வழியமைத்தல்.*

*வகு– வகுந்து = வழி. ''வகுந்துசெல் வருத்தத்து'' (சிலப். 11 ஃ 167).*

*வகு– வகம் = வழி (யாழ். அக.).*

*வகு– வக்கு = வழி (யாழ். அக.).*

*வகு– வக்கு = வழி. அவனுக்குக் கடன் தீர்க்க வக்கில்லை.*

*வகு– வகை = 1. கூறுபாடு. ''அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி'' (தொல். சொல். 146). வலம்புரி, இடம்புரி, சலஞ்சலம், பணிலம் எனச் சங்கு நால்வகைப்படும். 2. பொருட் பிரிவு. இது எவ் வகையைச் சேர்ந்தது? (உ.வ.). 3. குலப்பிரிவு. 4. முறை. கணக்குத் தப்பானாலும் வகைக்கு மதிப்பெண் கிடைக்கும் (உ.வ.). 4. ஆம்புடை (உபாயம்). இந்தத் தொல்லையினின்று தப்ப ஒரு வகை சொல் (உ.வ.). 5. மனையின் பகுப்பு. ''வகைமா ணல்லில்'' (புறம். 398). 6. உடலுறுப்பு. ''வகைநல முடைய காளை'' (சீவக. 695). 7. இடப்பிரிவு ''மூதூ ரிடவகை யெல்லை யெல்லாம்'' (சீவக. 462). 8. விளத்தம் (விவரம்). 9. தன்மை ''வளமங்கையர் வகையுரைத்தன்று'' (பு.வெ. 9 ஃ 50, கொளு). 10. வலக்காரம் (தந்திரம்). ''வகையால் மதியாது மண்கொண்டாய்'' (திவ். இயற். நான்முகன். 25). 11. வலிமை. ''வகைகொண்டு வந்தேன்'' (கம்பரா. பாசப். 36). 12. வாழ்க்கைப் பொருள்கள்* (W.).

**ம.** வக, **தெ.** வக (g), **க., து.** வகெ (g).

*வகைதல் = (செ.கு.வி.) பிரிவு படுதல்*

*(செ. குன்றாவி.) 1. வகைப்படுத்துதல். ''மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்'' (கம்பரா. மந்தரை. 60). 2. வகிர்தல். ''வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇ'' (நற். 120). 3. ஆராய்தல். ''வகையாது தொடர்ந்து'' (கம்பரா. பிராட்டி. 16). தெ. வகச்சு* (g).

*பகு – பக்கு = 1. பிளப்பு* (W.). *2. கவர் படுகை. ''தங் கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து'' (தேவா. 17 : 3). 3. பை. ''கழித்துக் கொண்டீ யெனத்தரலும்'' (கலித். 65 : 14). 4. மரப்பட்டை* (W.). *5. புண்ணின் அசறு* (W.). *6. பல்லின் பற்று* (W.). *காய்ந்து போன மூக்குச் சளி* (W.). *சோற்றுப் பொருக்கு* (W.).

*பக்கு (அசறு)* – **தெ.** *பக்கு.*

*பக்கு (பை)– ஒ.நோ :* ME. bagge, E. bag, ON. baggi. OF. bague, Pr. bagua (baggage), med. L. baga (sack).

*பக்கெனல் = வெடித்தற் குறிப்பு.*

*பக்கிடுதல் = வெடித்தல்.*

*பக்கிசைத்தல் = 1. விட்டிசைத்தல். 2. வேறுபடுத்திக் கூறுதல். ''அதுவும் இதுவும்எனப் பக்கிசைத் தோதப்பட்ட'' (சி. போ. சிற். 12 : 4 உரை).*

*பக்குவிடுதல் = 1. பிளத்தல். ''கரவென்னும் பார்தாக்கப் பக்குவிடும்'' (குறள். 1068). 2. தோலறுதல்* (W.).

*பக்கு – பக்கறை = 1. பை. 2. துணியுறை. ''ஏந்து வெள்ளைப் பக்கறை'' (விறலிவிடு.). 3. குழப்பம் (யாழ். அக.).*

*பகு – பக்கம் = 1. மருங்கு* (side) *''பக்க நோக்கி நிற்கும்'' (திவ். திருவாய். 5 : 5 : 5). 2. அருகு (சூடா.). 3. இடம். ''ஊழையும் உப்பக்கங் காண்பர்'' (குறள். 620). 4. விலாப்புறம். 5. சிறகு. ''இசைபடு பக்க மிருபாலுங் கோலி'' (பரிபா. 21 : 31). 6. அம்பிறகு. 7. பொத்தகத்தின் ஒருபுறம். 8. பொத்தகம், நூல். ''வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு'' (தொல். அகத். 41). 9. பிறைக்கூறு. 10. பிறைநாள் (திதி). 11. வளர்பிறை அல்லது தேய்பிறைக்காலம். ''பகலிராப் பக்கமே திங்கள்'' (காஞ்சிப்பு. காயாரோகண. 2). 12. நட்பு. 13. அன்பு. 14. சுற்றம் ''பக்கஞ் சூழ வடமீன் காட்டி'' (கல்லா. 18). 15. சரவடி, வழிமரபு. 16. சேனை. ''தாவரும் பக்க மெண்ணிரு கோடியின் தலைவன்'' (கம்பரா. இலங்கைக் கேள்வி. 40). 17. தொழிற்றொகுதி. ''அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்'' (தொல். புறத். 20). 18. கோட்பாடு. 19. தன்மை. ''வாலிதாம். பக்க மிருந்தைக்*

கிருந்தன்று'' (நாலடி. 258). 20. ஏரண மேற்கோள். ''பக்க மிம்மலை நெருப்புடைத் தென்றல்'' (மணிமே. 29 : 59). 21. துணிபொருளுள்ளவிடம். ''பக்கந் துணிபொருளுக் கிடமாம்'' (சி.சி. அளவை. 9). 22. மறுதலை யுய்த் துணர்வு (அருத்தாபத்தி). 23. நாடு.

பக்கம் – **வ.** பக்ஷ. ஒ.நோ : L. *pagus*, country, district.

பக்கம் – பக்கல் = 1. பக்கம். ''என்பக்க லுண்டாகில்'' (பெரியபு. இயற்பகை. 7). 2. இனம் (W.). 3. மாதநாள் (தேதி).

பக்கு – பங்கு = 1. பாகம். ''பங்குலவு கோதையுந் தானும்'' (திருவாச. 16 : 9). 2. பாதி (சூடா). 3. கூறு. 4. பக்கம். என் பங்கில் தெய்வம் இருக்கிறது (உ.வ.). 5. இரண்டு அல்லது இரண்டரைச் செறு (ஏக்கர்) நன்செயும், பதினாறு செறு (ஏக்கர்) புன்செயுங் கொண்ட நிலம் (C.G. 288). ம. பங்கு.

பங்கு – பங்கிடு. பங்கிடுதல் = 1. பகுத்துக் கொடுத்தல். 2. பாகம் பிரித்தல்.

பங்கு – பங்கன் = தன் பாகமாகக் கொண்டவன். ''மங்கை பங்கனை மாசிலா மணியை'' (தேவா. 549 : 5).

பங்கு – பங்காளி = 1. தொழிற் கூட்டாளி. 2. தாயத்தான்.

பங்குக்காரன் = பங்கிற் குரியவன்.

பங்கு – பங்கம் = 1. பங்கு. ''பங்கஞ் செய்த மடவாளொடு'' (தேவா. 855 : 5). 2. பிரிவு. ''பங்கப் படவிரண்டு கால்பரப்பி'' (தனிப்பாடல்). 3. துண்டு. 4. கேடு. ''அற்பங்க முறவரு மருணன் செம்மலை'' (கம்பரா. சடாயு. 8).

பங்கு – பங்கி = 1. பாகமாகப் பெற்றுக்கொள்பவன். ''நஞ்சினைப் பங்கி யுண்டதோர் தெய்வ முண்டோ'' (தேவா. 392 : 6). 2. ஆறாண்டிற் கொருமுறை சீட்டுப் போட்டுச் சிற்றூர் நிலத்தைச் சிற்றூரார்க்குக் கொடுக்கும் பற்றடைப்பு முறை (W.G.).

முப்பங்கி (திரிபங்கி), பதின்பங்கி (தசபங்கி), நூற்றுப் பங்கி அல்லது பதிற்றுப்பதின்பங்கி (சதபங்கி) என்பன, ஒரே பா அல்லது பாவினம் முறையே மூவேறு பான்வேறு பதிற்றுப்பான் வேறு பா அல்லது பாவினமாகப் பிரிந்து, வெவ்வேறு பொருள்படுமாறு பாடப்படும் சொல்லணிச் செய்யுள் வகைகள்.

திரிபங்கி (முப்பங்கி) என்பது. மூவளைவாக உடம்பை வளைத்து நிற்கும் நிலையையுங் குறிக்கும். ''வெள்கிய திரிபங்கியுடன்'' (அழகர்கலம். 1).

பகு– பகுப்பு = பிரிப்பு. ''பகுப்பாற் பயனற்று'' (நன். 131).

பகு– வகு– வகுப்பு = 1. கூறுபடுத்துகை. 2. இனம்பற்றிப் பிரிக்கை. ''வகுப்பமைந்த ....... அப்பங்கள்'' (மதுரைக். 626, உரை). 3. உச்சிவகிடு. ''சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழன்முடித்து'' (கூளப்ப. 131). 4. பிரிவு. 5. தடுக்கப்பட்ட அறை. 6. குலம். 7. தரம். 8. பொலிவு. 9. அழகு. 10. செய்யுளிசை யொழுக்கு. ''மங்கல வள்ளை வகுப்பொடு'' (வச்சணந். செய்யு. 32).

பகு– பகுதி = 1. பகுப்பு. ''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்'' (திருவாச. 3 : 1). 2. கூறு. 3. நூற்பிரிவு அல்லது இதழ்ப் பிரிவு. 4. வேறுபாடு. ''மயங்கிய தகுதி அல்லது பகுதியின் றெனின்'' (ஞானா. 35 : 5). 5. திறை. ''இது பகுதி கொள்கெனா'' (அரிச். பு. நகர்நீ. 111). 6. வருவாய் (சூடா.). 7. வரி. 8. பாதி.

பகுதி (திறை) – **தெ.** பகிதி (g), **க.** பகதி (g).

பகுதி – பாதி = 1. சரிசமமாகப் பகுக்கப்பட்ட பொருட் பகுதியிரண்டுள் ஒன்று. ''பாதிப் பெண்ணொரு பாகத்தன்'' (தேவா. 479 : 3). 2. அரைப் பகுதியளவான நடு. ''பாதி வழியின் மிண்டி'' (காஞ்சிப்பு. சிவாத். 28).

வகு – வகுதி = வகுப்பு. ''வகுதியின் வசத்தன'' (கம்பரா. இரணியன். 69).

பகு– பகம் = பிளவு.

பகு– பகவு = 1. பிளவு. 2. வெடிப்பு (யாழ். அக.). 3. பங்கு (யாழ். அக.). 4. துண்டு, துணிக்கை. ''எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்'' (குறள். 889). 5. பகுப்பு.

பகவு – பகவன் = எல்லா வுயிர்கட்கும் உணவைப் பகுத்தளிக்கும் இறைவன். 2. சிவன் (திவா.). 3. திருமால் (பிங்.). 4. தெய்வமாக வணங்கப்படும் கதிரவன் (பிங்.). 5. ஆரியத் தெய்வமாகிய பிரமன் (பிங்.). 6. சமணர்க்குத் தேவன் போன்ற அருகன் (திவா.). 7. புத்த நெறியார்க்குத் தேவன் போன்ற புத்தன் (திவா.). 8. இறைவனிடத்திற்கு வழிகாட்டும் மதக்குரு (பிங்.). 9. இறைவனடியாரும் முற்றத் துறந்த முழு முனிவரும். ''பத்தர்களும் பகவர்களும்'' (திவ். பெரியாழ். 4 : 9 : 6).

திருக்கோவில்களிலும் மடங்களிலும் பண்ணையாரிடத்தும் வேலை செய்வார்க்கெல்லாம், சம்பளமாக நெல்லை அளந்து கொடுப்பதே பண்டை நாள் வழக்கம். அது படியளத்தல் என்று சொல்லப்படும். அதனால், வேலையிலமர்த்தி வாழ்க்கைக்கு வேண்டும்

சம்பளம் கொடுப்பார்க் கெல்லாம், படியளப்பார் என்னும் பெயர் உண்டாயிற்று. எல்லாவுயிர்கட்கும் உணவைப் பகுத்தளிப் பவன் என்னுங் கருத்தில் இறைவனும் படியளப்பான் எனப்பட்டான். ''நமக்குப் படியளப்பார் நாரியோர் பாகர்'' (தனிப்பா. I, 121 : 5).

எல்லாம்வல்ல ஒரு தனி இறைவனுக்குரிய பகவன் என்னும் பெயர், சிறுதெய்வங்கட்கும் சிறந்த மக்கட்கும் நாளடைவில் வழங்கத் தலைப்பட்டுவிட்டதனால், திருவள்ளுவர் தம் திருக்குறட் கடவுள் வாழ்த்தில், முழுமுதற்கடவுளைக் குறிக்க ஆதிபகவன் என்று அடை கொடுத்துக் கூற வேண்டியதாயிற்று. ஆதி என்பது முதல் என்று பொருள்படும் வடநாட்டுச் சொல். அது முந்து திரவிடமாகிய பிராகிருதச் சொல்லாயிருக்கலாம். ஆதிபகவன் என்றது, ஆதியென்னும் புலைச்சியை மணந்த ஒரு பிராமணனை எனின், ஆதி சங்கராச் சாரியார் என்பதும் ஆதியென்னும் புலைச்சியை மணந்த சங்கராச்சாரி யாரை என்று கூறல் வேண்டும். அது பொருளன்மை அறிக.

கார்காலம், முரசுகட்டில், கோவூர்கிழார் என்பன போல, ஆதிபகவன் என்பதும் வலிமிகாது வழங்கிய ஒருசில புணர்ச் சொற்களுள் ஒன்றாகும். அதனால், ஆதி யென்பது வடசொல் (சமற்கிருதச் சொல்) என்று கொள்ள வேண்டுவதில்லை. மேலை யாரிய மொழிகளுள் ஒன்றிலும் ஆதி என்னுஞ் சொல்லின்மையின், அது வடசொல்லாகாது.

வழக்கற்றுப் போன கீழையாரியமும் பிராகிருதமுங் கலந்ததே வேதமொழி என்றும், வேதமொழியுந் தமிழுங் கலந்ததே சமற்கிருதம் என்றும், அவ் விரண்டுந் தேவமொழி யென்னும் ஏமாற்று இக் காலத்துச் செல்லாதென்றும், தமிழர் உண்மை அறிந்து தெளிக.

பகவன்– **வ.** பகவான் (bhagavan).

பகு– பகல் = 1. பகுக்கை (பிங்.). ''நெருநைப் பகலிடங் கண்ணி'' (புறம். 249). 2. (ஒரு பொருள் இரு சமப்பாகமாகப் பகும்) நடு (திவா.). 3. நடுவுநிலைமை. ''அகல்வையத்துப் பகலாற்றி'' (பதிற். 90 : 9). 4. நடு நுகத்தாணி. ''நெடுநுகத்துப் பகல்போல'' (பட்டினப். 206). 5. இருநாழிகை கொண்ட முழுத்தம் (முகூர்த்தம்). ''ஒரு பகல்காறு நின்றான்'' (சீவக. 2200). 6. நண்பகல், உச்சிவேளை. 7. நள்ளிருள். ''யாமத்தும் பகலுந் துஞ்சார்'' (சிலப். 81). 8. காலை முதல் மாலை வரையுள்ள காலம். ''பகல் விளங்குதியாற் பல்கதிர் விரித்தே'' (புறம். 8) 9. அறுபது நாழிகை கொண்ட நாள். ''ஒல்வ கொடாது தொழிந்த பகலும்'' (நாலடி. 169). 10. கதிரவன். ''பன்மலர்ப் பூம்பொழிற் பகன்முளைத் ததுபோல்'' (மணிமே. 4 : 92). 11. ஒளி விளக்கம் (திவா.).

பகல் – பகர். பகர்தல் = ஒளிவிடுதல். ''பக்கங் கருஞ்சிறுப் பாறை மீதே யருவிகள் பகர்ந்தனைய (திவ். பெரியாழ். 1:7:8).

பகர் = ஒளி. ''சிந்தாமணிகள் பகரல்லைப் பகல்செய் திருவேங்கடத் தானே'' (திவ். திருவாய். 6 : 10 : 9).

பகல் – பால். 1. பிரித்துக் கொடுக்கை. ''பாலுங் கொளாலும் வல்லோய்.'' (பதிற். 16 : 19). 2. பகுதி ''அறையென வரூஉம் பால்வரை கிளவிக்கு'' (தொல். தொகை. 23). 3. பாதி. ''பானா ளிரவில்'' (கலித். 90). 4. பக்கம். ''ஒருபாற் கோடாமை'' (குறள். 118). 5. தொழில் வகுப்பு. ''வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்'' (புறம். 183). 6. இடையர் குறும்பர் குல உட்பிரிவு (E.T.V. 450). 7. திசை (பிங்.). 8. இடம் (யாழ். அக.). 9. குணம் (பிங்.). 10. இயல்பு (பிங்.). 11. உயிர்கட்கு அவற்றின் வினைக்கேற்ற இன்ப துன்பம் வகுக்கும் ஊழ். 12. ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் இலக்கண ஐம்பாற் பிரிவு. ''இருதிணை மருங்கின் ஐம்பால்'' (தொல். கிளவி. 10).

**க.** பால், **தெ.** பாலு.

பால் – பான்மை = 1. பகுதி. ''தேவர் பான்மை யிற்றென்று'' (சீவக. 553). 2. குணம். ''சொல்லிய பான்மை யாகி'' (தாயு. பொருள்வ. 12). 3. தகுதி. ''நற்றவம்......பயின்ற பான்மையான்'' (கம்பரா. தாடகை. 23). 4. முறைமை. ''பான்மையிற் பிணித்து'' (மணிமே. 18 : 110). 5. சிறப்பு. ''பரசிரா மேச்சரத்தின் பான்மை சொல்வாம்'' (காஞ்சிப்பு. பரசிரா. 1). 6. நல்வினைப் பயன். ''புருவத்தாட்கு வந்தடை பான்மை'' (சீவக. 539).

பகு – பகிர். பகிர்தல் = (செ. குன்றாவி.) 1. பிளத்தல். 2. பங்கிடுதல். ''பொற்பு மிக்க மாயன் பகிரு மமிர்தந்தனை'' (கந்தபு. மகாசாத். 20).

(செ.கு.வி.) பிரிதல் ''பரதனு மிளவலு மொருநொடி பகிராது'' (கம்பரா. திருவவ. 131).

பகிர் = 1. பங்கு ''கௌசலை கரத்தி னோர்பகிர் தாமுற வளித்த னன்'' (கம்பரா. திருவவ. 89). 2. துண்டம். ''திங்களின் பகிர்புரை..... எயிறு'' (திருவிளை. நாகமெய்த. 15). 3. வெடியுப்பு (யாழ். அக.).

பகிர் – வகிர் = 1. பிளவு. 2. கீறு (W.). 3. பிளந்த துண்டு. ''மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்'' (திருவாச. 9 : 2). 4. உச்சியெடுப்பு. ''வார்ந்த நெடுங்கூந்தல் வகிரினாள்'' (வெங்கையு. 304). 5. தோல்வார் (யாழ். அக.). 6. வார்க்கச்சு (W.). 7. நரம்பு (யாழ். அக.). 8. வழி (பிங்.).

*வகிர்தல் = 1. வகிரெடுத்தல். 2. கீறுதல். ''பகிர்ந்தான் சில வகிர்ந்தான்'' (கம்பரா. அதிகாய. 160). 3. கோதுதல் (சது.). 4. பிளத்தல் (சது.). 5. துண்டாக அறுத்தல் (சது.). 6. பங்கு செய்தல் (சது.).*

*வகிர்– வகிடு = உச்சியெடுப்பு.*

*பகு– பகை. பகைத்தல் = 1. வெறுத்தல். 2. அழிக்கக் கருதுதல்.*

*பகை = 1. வெறுப்பு. 2. எதிர்ப்பு ''பகையென்னும் பண்பி லதனை'' (குறள். 871). 3. பகைவன். ''உறுபகை யூக்க மழிப்ப தரண்'' (குறள். 744). 4. மாறு, மாறுபாடு. ''நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்'' (ஐங். 187). 5. தீங்கு. ''எவன்கொல்யான் மாலைக்குச் செய்த பகை'' (குறள். 1225). 6. இசைமுரண், யாழில் நின்ற நரம்பிற்கு மூன்றாவதாயும் ஆறாவதாயுமுள்ள பகை நரம்பு. ''வெம்பகை நரம்பி னென்கைச் செலுத்தியது'' (மணிமே. 4 : 70). 7. கொல்லும் உயிரி பாம்பிற்குக் கீரி பகை (உ.வ.). 8. நோய் மருந்து. பித்தத்திற்குப் பகை இஞ்சி (உ.வ.). 9. காமம், சினம் முதலிய ஆறு அகப்பகைக் குணம்.*

***ம.** பக, **தெ.**, **க.** பக* (g).

*பகு– பாகு = 1. பகுதி* (W.). *2. பாகம். 3. பக்கம். 4. இரப்போர்க்கிடும் பகுதியாகிய ஐயம் (பிச்சை). ''பாகிடுவான் சென் றேனைப் பற்றி நோக்கி'' (தேவா. 54 : 4). 5. சிவன்பாகமாகிய சிவை (அக. நி.). 6. குளக்கரை (அக.நி.). 7. அழகு. ''பாகா ரிஞ்சிப் பொன்மதில்'' (கம்பரா. ஊர்தே. 82). 8. தோள்.*

*பாகு – வாகு = 1. பக்கம். 2. தோள் (பிங்.). ''வாகுப் பிறங்கல்'' (இரகு. கடிம. 64). 3. ஒழுங்கு. ''வாகா நியாய வட்டி வாங்காமல்'' (பணவிடு. 238). 4. அழகு (சூடா.). ''வாகா ரிபமினாள்'' (திருப்பு. 238). 5. ஒளி. ''இந்து வாகை'' (திருப்பு. 399). 6. திறமை. ''வாகு பெறுதேர் வலவனை'' (கந்தபு. மூன்றாம். யுத். 70). 7. தொட்டால் வாடி (அரு. அக.).*

***ம.** வாகு, **தெ.** பாகு* (bhagu), *து. வாக* (g).

*வாகுபுரி = தோள்வளை.*

*''வாகுபுரி வயங்க'' (காதை.)*

*வாகுவளையம் – **வ.** பாகுவலய* (b).

*பாகு– பாகம் = 1. பகுக்கை (சூடா.). 2. பக்கம். ''பாகம் பெண்ணோ டாயின பரிசும்'' (திருவாச. 2 : 78). 3. கூறு. ''தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்று'' (திருவாச. 5 :37). 4. பாதி (சூடா.). 5. பாகை. 6. ஐயம் (பிச்சை). 7. பங்கம். ''பாகத்தைப் படாத நெஞ்சின்'' (சீவக. 2278, உரை). 8. பறைவகை (சிலப். 3 : 27, உரை).*

பாகம் – **வ.** பாக (bhaga).

பாகு – பாகி. பாகித்தல் = பங்கிடுதல்.

திரிபாகி (முப்பாகி) = மூவெழுத்துகள் கொண்ட ஒரு சொல், அதன் முதலெழுத்தையும் இறுதி யெழுத்தையுஞ் சேர்க்க மற்றொரு சொல்லாகியும், இடையெழுத்தையும் கடையெழுத்தையும் சேர்க்க மற்றுமொரு சொல்லாகியும் வந்து, வெவ்வேறு பொருள் தருமாறு பாடப்படும் சொல்லணி (தண்டி).

இது முப்பாகியென்றிருத்தல் வேண்டும். திரி என்னும் வடமொழி எண்ணுப் பெயர், முப்புரியாகத் திரிக்கப்படும் நூல் அல்லது கயிறு என்னுங் கருத்தினின்றும் தோன்றியிருக்கலாம். ஏக என்னும் வடமொழி முதலெண்ணுப் பெயர், ஒக்க என்னும் தெலுங்குச் சொல்லினின்று தோன்றியிருத்தல் காண்க.

ஒக்க – எக்க – ஏக.

வடமொழியில் எகரக் குறிலின்மையால், எக்க என்பது ஏக (ஏக்க) என நீண்டது.

பாகு – பாகன் = 1. பக்கத்திலிருந்து பேணுபவன். 2. யானைப்பாகன். ''யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்'' (நாலடி. 213). 3. வாதுவன் (குதிரைப் பாகன்). 4. தேரோட்டி. ''தேரிற் பாகனா யூர்ந்த தேவதேவன்'' (திவ். பெரியதி. 7 : 5 : 2). 5. அறிவன் (புதன்) (சூடா.).

**ம.** பாவான்., **மரா.** பாகா (g).

பாகன் – பாகு = 1. யானைப்பாகன். ''பாகு கழிந்தி யாங்கணும் பறைபட வரூஉம் வேக யானை'' (சிலப் 15 : 46). 2. நடாத்துந் திறன். ''போர்ப் பாகுதான் செய்து'' (திவ். திருவாய். 4 : 6 : 3).

பாகம் – பாகன் = ஒரு பாகமாகக் கொண்டவன். ''நாரிபாகன்'' (தேவா. 1172 : 9).

பாகு – பாக்கு = 1. பகுதி அல்லது பக்கம். 2. எதிர்கால வினையெச்ச ஈறு. உண்பாக்கு வந்தான் (இ.வ.). ''வான்பான் பாக்கின வினையெச்சம்'' (நன். 243). 3. தொழிற்பெயரீறு. ''அஞ்சுதும் வேபாக் கறிந்து'' (குறள். 1128).

பாக்கு – வாக்கு = 1. பக்கம். ''இரண்டு கைவாக்கு மியங்கலிப்ப'' (திருவிளை. தடாதகை. 26). 2. இயங்கும் திசை. காயப்போட்ட துணி காற்றுவாக்கிற் பறந்துவிட்டது (உ.வ.). 3. ஒரு வினையெச்ச ஈறு. ''கொள்வாக்கு வந்தான்'' (தொல். சொல். 231, உரை).

*பாக்கு – பாக்கம் = 1. நெய்தல் நகரப்பகுதி. எ - டு : பட்டினப் பாக்கம், மருவூர்ப் பாக்கம் (காவிரிப்பூம்பட்டினப் பகுதிகள்). 2. நெய்தல் நிலத்தூர். ''கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து'' (பட்டினப். 27). 3. ஊர். ''கட்கொண்டிக் குடிப்பாக்கத்து'' (மதுரைக். 137), காவேரிப் பாக்கம். 4. அரசனிருப்பு (பதிற். 13 : 12, உரை).*

*பாக்கு – பாக்கை = 1. நெய்தல் நிலத்தூர். ''நென்னலிப்பாக்கை வந்து'' (பதினொ. திருவே. திருவந். 74). 2. ஊர். எ-டு : கொள்ளிப்பாக்கை.*

*பாக்கம் – வாக்கம் = 1. நெய்தல் நிலத்தூர். எ-டு: கத்திவாக்கம். 2. ஊர். எ-டு. வில்லிவாக்கம்.*

*பாக்கு – பாங்கு = 1. பக்கம். ''காடுகொண் டலர்ந்த பாங்கெலாம்'' (சூளா. நாட். 2). 2. உரிய இடம். ''பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்'' (மணிமே. 1 : 61). 3. இன்கண் (பட்சம்). ''வேந்த னொருவற்குப் பாங்கு படினும்'' (யாப். வி. 96). 4. இணக்கம்* (W.). *5. துணையான– வன் – வள். ''வேல்விடலை பாங்கா'' (திணைமாலை. 87). 6. தோழமை. ''நீயும் பாங்கல்லை'' (திவ். திருவாய். 5 : 4 : 2). 7. ஒப்பு. ''பாங்கருஞ் சிறப்பின்'' (தொல். புறத். 23). 8. நன்மை. ''பாங்கலா நெறி'' (வாயுசங். இருடி. பிரம. 11). 9. அழகு. ''பாங்குறக் கூடும் பதி''. (பு.வெ. 9 : 51, கொளு). 10. தகுதி. ''பாங்குற வுணர்தல்'' (தொல். உரி. 100). 11. இயல்பு* (W.). *12. ஒழுக்கம். ''பாங்குடையீர்'' (திருவாச. 7 :3).*

*ஒ.நோ : போக்கு – போங்கு.*

*பாங்கு – பாங்கன் = 1. தோழன். ''பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப'' (தொல். களவு. 13). 2. கணவன். ''பொருள்வயிற் பாங்கனார் சென்ற நெறி'' (நாலடி. 400). 3. உழையன்.*

**ம.** *பாங்ஙன்.*

*ஒ.நோ :* ME., OF; It. paggis, E. page.

*பாங்கன் – பாங்கி = தலைவியின் தோழி. ''பாங்கியிற் கூட்டம்'' (நம்பியகப். அகத். 27).*

*பாகு – பாகை = 1. பகுதி (சூடா.). 2. (கணக்கு) வட்டத்தை முந்நூற்றறுபதாகப் பகுத்து வந்த பகுதி (யாழ். அக.). 3. கால அளவு வகை* (W.). *4. வெப்பமானியின் அல்லது கண்ணாடிக் குப்பியின் அளவு வரை* (degree).

*பகு – பா. பாதல் = 1. பிளவுபடுதல். 2. பிரிவுபடுதல்.*

*பாத்தல் = பகுத்தல். ''தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்'' (குறள். 1107).*

*பா – பாத்து. பாத்துதல் = பகுத்தல். ''படுதிரை வையம் பாத்திய பண்பே'' (தொல். அகத். 2).*

*பாத்து = 1. பகுக்கை (சூடா.). 2. பங்கு (நாமதீப. 741). 3. பாதி* (W.). *4. இணை. ''பாத்தில் புடைவை யுடையின்னா'' (இன். நாற். 3). 5. நீக்கம். ''பாத்தில்சீர்ப் பதுமுகன்'' (சீவக. 1845). 6. நான்கு என்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக் குறி* (W.).

*நானிலம், நால்வகுப்பு, நாற்பா, நாற்பொருள், நால்வகை யுண்டி, நால்வகை யிசைக்கருவி முதலிய பல்வேறு பொருட் பாகுபாடும்; நாலா பேரும், நானா வகை என்னும் வழக்கும்; பகுத்தலைக் குறிக்கும் சொல்லை நான்கு என்று பொருள்படும் குழூஉக்குறி யாக்கின.*

*பாத்துப்புலு = நாற்பது என்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக்குறி* (W.).

*பாத்து – பாத்தி = 1. பகுதி. ''மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே'' (தொல். தொகை. 30). 2. பங்கு* (W.). *3. இறைவைப் புன்செய்ப் பகுதி, சிறு செய். ''பாத்தியுள் நீர்சொரிந் தற்று'' (குறள். 718). 4. சிறுவீடு (பிங்.).*

***ம., க.*** *பாத்தி.*

*பாத்திப் படுத்துதல் = நிலைபெறச் செய்தல். ''பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு'' (குறள். 465).*

*பாத்தி – பத்தி = 1. பாத்தி* (W.). *2. செய்தித்தாள், பொத்தகம் முதலியவற்றின் நீளவாட்டுப் பகுதி. செய்தித்தாள் பல பத்தி கொண்டது (உ.வ.). 3. வகுப்பு* (W.). *''வரிசை ''பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூல்'' (சிலப். 16 : 118). 4. முறைமை (சூடா.). 5. அழகு வேலைப்பாடு. ''பத்திப் பல்வினை'' (பெருங். இலாவாண. 6 : 55). 6. கடவுள்பாற் பட்ட பற்று. ''பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்'' (திருவாச. 2 : 119). 7. கடவுள் வழிபாடு (சூடா.). 8. அரசன், ஆசிரியன், தந்தை, கணவன், முனிவன் முதலிய பெரியோரிடத்து வைக்கும் பற்று அல்லது செய்யும் பணிவிடை.*

*பத்தி (வரிசை) –* ***வ.*** *பங்க்தி* (pankti).

*பத்தி (பெரியோர் மாட்டுப் பற்று) –* ***வ.*** *பக்தி* (bhakti).

இங்ஙனம் இருவேறு வகையில் வடமொழியில் எழுதப் படுவதால், பத்தி என்பது இருவேறு சொல்லோ என்று ஐயுறற்க. பக்தி என்னும் சொல்லிற்கும் பாகம் என்னும் சொல்லிற்கும் வடமொழி யாளர் பஜ் (bhaj) என்னும் ஒரே மூலங்காட்டுவதையும், பகு என்னும் முதனிலையினின்றே திரிந்துள்ள பக்கம் என்னும் சொல்லை அவர் பக்ஷ என்று திரிப்பதையும், நோக்குக.

இங்ஙனம், ஒரே முதனிலையினின்று திரிந்துள்ள பல்வேறு திரி சொற்களை, எழுத்துமாற்றி வெவ்வேறு மூலத்தினின்று திரிந்த சொற்களாகக் காட்டுவது, வடமொழியாளர் வழக்கம்.

முத்தம் என்னும் தென்சொல்லை முக்த என்று திரித்தது போன்றே, பத்தி என்ற தென்சொல்லையும் பக்தி என்று திரித்துள்ளனர் வடமொழியாளர்.

பத்தி – பந்தி = மக்கள் உண்டற்கு அமரும் வரிசை அல்லது வரிசைத் தொகுதி. ''பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து'' (பழ.). 2. விலங்குகளை நிறுத்தும் ஒழுங்கு. ''பண்ணமை வயப்பரிகள் பந்தியி னிரைத்தார்'' (கம்பரா. வரைக்காட்சி. 13). 3. குதிரைச் சாலை. ''இவுளிகள் கண்ணு பந்தியிற் கட்டத் தகுமென (திருவாலவா. 27 : 16). ஒ.நோ : கொத்து – கொந்து.

பந்தி – **பிரா.** பந்த்தி – **வ.** பங்க்தி.

வடமொழியாளர் பங்க்தி என்னும் சொற்குக் காட்டும் வரலாறு வருமாறு :

பஞ்சன் (பஞ்சம்) = ஐந்து, ஐந்து விரல் போன்ற அல்லது ஐந்து பொருள் கொண்ட வரிசை. பகுத்தறிவுள்ளவர் இதன் புரைமையைக் கண்டுகொள்க.

பாத்து – பாது = பங்கு. ''யார்க்கும் பாதிடு முரவோர்போல்'' (கோயிற்பு. பதஞ். 82).

பாது – பாதிடு. பாதிடுதல் = 1. பங்கிடுதல். 2. வெட்சி மறவர் பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்த ஆநிரையைத் தமக்குள் பங்கிட்டுக் காத்தல். 3. பாதுகாத்தல் (W.).

பாதிடு – பாதீடு = 1. பங்கிடுகை (யாழ். அக.). 2. வெட்சி மறவர் பகைவர் நாட்டினின்று கவர்ந்த ஆநிரையைத் தம்முட் பகிர்ந்து காத்தலைக் கூறும் புறத்துறை.

''வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்'' (தொல். புறத். 2)

*''ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவலுழித் தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென''(தொல். புறத். 3)*

*பாதுகாத்தல் = 1. வெட்சி மறவர் தம் ஆநிரைப் பங்கைக் காத்தல். 2. ஆநிரையைப் போல் அரவணைத்துக் காத்தல்* (W.). *3. வாரா மல் தடுத்தல். ''அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு'' (குறள். 11. முகவுரை). பாதுகாவல் = பாதுகாப்பு. பாது = காவல் (யாழ். அக.).*

*பாதுகாத்தல் என்பது நிலைச்சொல்லின் பொருள் மறைந்து நன்கு காவல் காத்தல் என்று பொருள்பட்டதனால், பாது என்னுஞ் சொற்குக் காவல் என்னும் பொருள் கூறப்பட்டது.*

*(பள்– பண்– பணி– படி)*

*கீழ்ப்படிதல் = அடங்கி நடத்தல், பணிவாயிருத்தல். படி = 1. நீர்நிலை (யாழ். அக.). 2. தாழ்வாரம் (யாழ். அக.). 3. இருதிணைப் பொருள்களும் படியும் அல்லது தங்கும் இடமாகிய ஞாலம்.*

*ஞாலத்தைக் குறிக்கும் படி யென்னும் சொல், ப்ருத்வீ என்னும் வடசொல்லின் திரிபாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியிற் காட்டப்பட்டுள்ளது. புடவி என்னும் தென் சொல்லே, ப்ருத்வீ என வடமொழியில் திரிக்கப்பட்டுள்ளது.*

*படிகாலி = தட்டையாய்ப் படிந்திருக்கும் பாதமுடையவ– ன்– ள் (நாஞ்.).*

*படி – பதி. பதிதல் = 1. நாள் கோள் முதலியன இறங்குதல்* (W.). *2. பள்ளமாயிருத்தல் பதிந்த நிலம் (உ.வ.) 3. முத்திரை உருவம் முதலியன அழுந்துதல். 4. ஆழ்தல். வண்டிச்சக்கரம் சேற்றிற் பதிந்து விட்டது (உ.வ.). 5. குழித்தெழுதுதல். 6. எழுதுதல். 7. ஊன்றுதல். மனம் பாடத்திற் பதிந்ததா? (உ.வ.). 8. விலை தணிதல். விலையைப் பதியக் கேட்டான் (உ.வ.). 9. தங்குதல். ''பதிசென்று பதிந்தனன்'' (தணிகைப்பு. பிரமன். 2). 10. நிலையாயிருத்தல். எனக்கு இன்னும் எங்கும் பதிந்த வேலையில்லை. (உ.வ.). 11. அமைதியாதல். பையன் பள்ளிக்கூடத்திற் பதிந்திருக்கிறான் (உ.வ.).*

*பதி–* ***வ.*** *பத்.*

*பதித்தல் = 1. தாழ்த்துதல். 2. அழுத்துதல். ''பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி'' (திருவாச. 11 : 12). 3. பதியம் போடுதல். 4. மணி முதலியன இழைத்தல். 5. குழித்தல். 6. குழித்தெழுதுதல். 7. எழுதுதல்.*

*பதிவு = 1. வான்மீன்களின் இறக்கம். 2. பள்ளம். நிலம் பதிவாயிருக்கிறது (உ.வ.). 3. திங்கள் எழு முன்னை நிலை. 4. அழுந்துகை.*

5. பதுக்கம். 6. பதியம். 7. நிலைவரம். அவன் அந்த வூரில் பதிவாயிருக்கிறான் (உ.வ.). 8. மனம் ஊன்றுகை. 9. அமைதி. 10. பதிவேட்டில் எழுதப்படுகை. 11. விலை தணிவு.

பதிவு சாப்பாடு = உண்டிச் சாலையில் மாதக் கணக்கில் நிலையாகச் சாப்பிடுதல்.

பதி = 1. அழுந்துகை. ''நுண்ணிலைவேல் பதிகொண்டு'' (சீவக. 1186). 2. பதியம். 3. நாற்று. 4. பதிவிளக்கு (W.). 5. உறைவிடம். ''பதியிற் கலங்கிய மீன்'' (குறள். 1116). 6. வீடு (திவா.). 7. கோயில் (சங். அக.). 8. நகர். ''பதியெழு வறியாப் பழங்குடி'' (சிலப். 1 : 15). 9. ஞாலம்.

பதி – பதம் = 1. நிலத்திற் பதியும் உறுப்பாகிய கால். ''மதுநுக ரறுபத முரல'' (தேவா. 568 : 5). 2. காலின் அடிப் பகுதியாகிய பாதம். 3. செய்யுளடி (W.). 4. நாலிலொன்று (பிங்.). 5. நிலை. 6. இடம். ''பதங்க ளேழும்'' (தக்கயாகப். 147). 7. பதவி. ''பிரிவில் தொல்பதந் துறந்து'' (கம்பரா. திருவடி சூட்டு. 101), ''சிவபத மளித்த செல்வமே'' (திருவாச. 37 : 3).

பதம் – **வ.** பத, L. pedis.

பதம் = 1. (பள்ளத்தில் நிற்கும்) நீர் (திவா.). 2. ஈரம் (திவா.). ''மாவெலாம் பதம்புலர்ந்த'' (கம்பரா. மூலபல. 79). 3. நீரின் மென்மை. 4. மெல்லிய பதம். ''சில்பத வுணவின்'' (பெரும்பாண். 64). 5. (வெந்து மெல்லிய) அவிழ் (சூடா.). 6. சோறு (திவா.). 7. உணவு. ''பதமிகுத்துத் துய்த்தல் வேண்டி'' (சிலப். 28 : 189). 8. நீர்ப்பதமான கள். ''மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி'' (பொருந. 111). 9. பதநீர். 10. பதநீரின் இனிமை. 11. இன்பம் (சூடா.). 12. ஏற்ற சமையம்.

பதம் பார்த்தல் = 1. வேகும் உணவின் நிலைமையை அறிதல். 2. மக்களின் நிலைமையை ஆராய்ந்தறிதல்.

பதி– பதனம் = 1. இறக்கம் (யாழ். அக.). 2. தாழ்மை (சங். அக.). 3. அமைதி. 4. பாதுகாப்பு. கண்ணாடியைப் பதனமாகக் கொண்டுவா (உ.வ.).

பதனம் – **வ.** பதன.

பதம் – பாதம் = 1. காலின் அடிப்பகுதி. ''பாதக் காப்பினள் பைந்தொடி'' (சிலப். 14 : 23). 2. விளக்குத் தண்டின் அடிப்பகுதி. பாதம் வைத்த விளக்கு (உ.வ.). 3. அடிச்சுவடு. 4. செய்யுளடி. ''வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி'' (கம்பரா. நாட்டுப். 1). 5. காற்பங்கு.

''முன்னைப் பீடத்தின் பாதங் குறைந்து'' (மேருமந். 1172). 6. பணி (சரியை), பத்தி (கிரியை), ஓகம் (யோகம்), ஓதி (ஞானம்) என்னும் நால்வகைச் சிவநெறி யொழுக்க நிலை.

பாதம் – **வ.** பாத, Gk. podos, OS., OE. fot, OHG. fuoz, ON. fotr, Goth. fotus, E. foot.

பாதம் – பாதை = நடப்பவர் பாதம் படுவதால் அமையும் வழி. ஒ.நோ: தடம் = அடிச்சுவடு, வழி.

OE., E.path, OLG. pad, OHG. pfad.

பாதம் என்னும் சொல் வடமொழியிற் பெருவழக்காய் வழங்குவதனாலும், பொய்யுடை வடமொழியர் சொல்வன்மை யாலும், ஆழ்ந்த ஆராய்ச்சியின்மையாலும், தமிழ்ப் பேராசிரியர் பலரும் அது வடசொல்லென்றே கருதிக்கொண்டிருக்கின்றனர். அடி என்பது, ஒன்றன் கீழ்ப்பகுதியையுங் கீழிடத்தையுமேயன்றி, பாதம் என்னும் சினைப் பகுதியைக் குறிப்பதாகாது. பாதை யென்னும் சொல் வடமொழியிலின்மையும் இதை வலியுறுத்துஞ் சான்றாகும்.

படு – பது – பதுங்கு. பதுங்குதல் = 1. பதிவிருத்தல். ''பதுங்கிலும் பாய்புலி'' (திருமந். 2914). 2. ஒளிதல். ''அரண்புக்குப் பதுங்கி னானை'' (கம்பரா. அங்கத. 31). 3. மறைதல். ''பருதியை முகின் மறைப்பப் பாயொளி பதுங்கி னாற்போல்'' (சி. சி. 2 : 83). 4. பின்னிற்றல்.

பதுங்கு = பதிக்கும் குத்துக்கல் வரிசை.

பதுங்கு பிடித்தல் = மேற்றளத்திற்குச் செங்கற் பாவுதல்.

பதுங்கூன்றுதல் = பதுங்கு பிடித்தல்.

பதுங்கு – பதுங்கி = 1. பின்னிற்பவன். 2. கூச்சமுள்ளவன்.

பதுங்கல் – பதுங்கலன் = பதுங்கி.

பதுங்கு – பதுக்கு – பதுக்கம் = 1. ஒளிகை. 2. கரவு. பதுக்கமாய் நடக்கிறான் (W.). 3. எய்தல் பாய்தல் முதலியவற்றிற்குப் பதுங்குகை. 3. பின்னிற்கை (W.). 5. வணிகப் பொருள்களை அல்லது திருட்டுப் பொருள்களை மறைத்து வைக்கை.

பதுக்குதல் = ஒளித்தல்.

பதுக்கு – பதுக்கை = போரிற்பட்ட மறவரை அல்லது காட்டு விலங்காற் கொல்லப்பட்டவரை மறைக்குங் கற்குவியல். ''பதுக்கைத் தாய வொதுக்கருங் கவலை'' (ஐங். 362). 2. மணற்குன்று. ''பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி'' (புறம். 264). 3. இலைக்குவியல். ''பதுக்கை

நிரைத்த கடுநவையா ராற்று'' (கலித். 12 : 2). 4. சிறுதூறு (திவா.). ''உவலைப் பதுக்கை முரம்பு'' (தஞ்சைவா. 363). 5. பாறை (பிங்.). ''பாடலம் புனைந்தகற் பதுக்கையிவ் விடனே'' (கல்லா. 6).

பதுக்கைக் கடவுள் = மணற்குன்றின் மேலுள்ள நடுகல் தெய்வம். ''வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்'' (அகம். 35).

பள் – படு. படுதல் = 1. விழுதல். 2. தொங்குதல். ''படுமணி யிரட்டும்'' (திருமுருகு. 80). 3. சாய்தல். ''படாஅ முலைமேற் றுகில்'' (குறள். 1087). 4. கிடத்தல். 5. கதிரவன் அடைதல், படுஞாயிறு. ''சுடர் நோக்கி மலர்ந்தாங்கே படிற்சாம்பு மலர்'' (கலித். 78). 6. சாதல். ''காதலிநீ பட்டதூஉம்'' (சிலப். 29, அடித்தோழி யரற்று). 7. அழிதல். ''படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே'' (புறம். 24). 8. துன்பப்படுதல். ''படுவேன் படுவ தெல்லாம்'' (திருவாச. 50 : 4). 9. வாடுதல். 10. நிலைத்திணை சாதல். மரம் பட்டுவிட்டது (உ.வ.). 11. புண் ஆறுதல். புண்பட்டுப் போயிற்று (உ.வ.). 12. புகுதல். ''நாடுபடு செலவினர்'' (புறம். 240). 13. அகப்படுதல். எலி பொறியிற் பட்டுவிட்டது (உ.வ.). 14. புதைக்கப்படுதல். ''படுபொருள் வவ்விய பார்ப்பான்'' (சிலப். 23 : 102). 15. பெய்தல். ''படுமழை யாடும் வரையகம்'' (கலித். 103 : 20).

படுத்தல் = 1. விழச் செய்தல். ''எறிந்தகளம் படுத்த ஏந்துவாள் வலத்தர்'' (புறம். 19). 2 எழுத்தொலியைத் தாழ்த்தி யொலித்தல். ''படுத்துக் கூற'' (தொல். எழுத்து. 76, உரை). 3. மட்டமாக்குதல். 4. தளவரிசை செய்தல். ''எண்டிசையு மேற்பப் படுத்து'' (சீவக. 592). 5. கிடத்தல். ''அரியுந்தன் ஆழிபடான்'' (குலோத். கோ. 165). 6. அழித்தல். ''எதிர்ந்தோர் தம்மைப் படுத்தலும்'' (கம்பரா. மூலபல. 56). 7. ஒழித்தல். ''காப்படுப்பின்'' (சிறுபஞ். 40). 8. துன்பப் படுத்துதல். அந்த வீட்டில் மருமகளை மிகவும் துன்பப்படுத்து கிறார்கள் (உ.வ.).

பட்டவன் குறி = போரில் இறந்தவர்க்கு அடையாளமாக நட்ட கல் (G. Tp. D. I. 90).

பட்டபாடு = அடைந்த துன்பம், ''உண்டிருப் பதற்கே துணிகின்றான் பட்ட பாடே'' (பாரத. கிருட்டிண. 16).

படு – படுக்கை = 1. படுத்துக்கிடக்கை. 2. படுக்கும் பாய் அல்லது மெத்தை. 3. சரக்கு மூட்டைமேல் நீர் படாதிருக்குமாறு தோணியின் அடியிற் பரப்பும் புல் அல்லது ஓலை (W.). 4. பொருள்கள் வைத்தற்கு ஏற்றவாறு அடியிற் பரப்பிய ஓலை அல்லது வைக்கோல். 5. தெய்வங்கட்குப் படைக்கும் படையல் (நாஞ்.). 6. சிற்றூர்த் தெய்வங்கட்குச் செய்யும் ஒருநாள் விழா.

படுக்கையறை = பள்ளியறை.

படுக்கையிற் போடுதல் = நெட்டுக்குத்தாக நிற்பதைப் படுகிடையில் அல்லது நீளவாட்டில் வைத்தல்.

படுக்கைப் பற்று = 1. சீர் வரிசை (சீதனம்). ''தன் ராஜ்யத்தை அவர்களுக்குப் படுக்கைப் பற்றாக்கி'' (ஈடு, 4 : 1 : 5). 2. உவளகம் (அந்தப்புரம்). ''நாங்கள் படுக்கைப் பற்றில் உள்ளோம்'' (ஈடு, 4:8:1).

படுக்கை மரம் = தோணியிற் பண்டங்களை வைக்குமாறு அமைக்கும் பலகை (W.).

படுகட்டை = 1. உலர்ந்த மரத்துண்டு (W.). 2. பயனற்ற கிழவன் அல்லது கிழவி.

படுகண் = படுகண்ணி. படுகண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை (S.I.I. II, 157).

படுகண்– படுகண்ணி = அணிகலத்திற் கொக்குவாய் மாட்டப்படும் உறுப்பு. ''கொக்குவாயும் படுகண்ணியும் போலே'' (திவ். பெரியதி. 5 : 4 : 7. வியா.).

படு– படுகர் = 1. பள்ளம் (திவா.). ''தான்விழும் படுகர் வீழ்த்தான்'' (குற்றா. தல. புட்பகந்த. 16). 2. நீர்நிலை (பிங்.). ''தத்துநீர்ப் படுகர்'' (திருவிசைப். கருவூர். 8 : 9). 3. வயல் (W.). 5. மருதநிலம், ''பூம்படுகர்ப் பகட்டினங்கள்'' (காஞ்சிப்பு. திருநாட்டு. 131). 6. ஏற்றிறக்கமான வழி. ''ஆரிப் படுகர்ச் சிலம்பு'' (மலைபடு. 161).

படுகல் = நீர்நிலை. ''பூம்படுகல் லிளவாளை பாயும்'' (தேவா. 82 : 2).

படுகளம் = புண்பட்டு விழும் அல்லது இறக்கும் போர்க்களம். ''உலக மேத்தும் படுகளங் கண்டு'' (சீவக. 17).

படுகாடு = 1. மரங்கள் ஒருசேர விழுந்த காடு (திவ். திருப்பா. 6 : 95, வியா.). 2. சுடுகாடு. ''படுகாட்டகத் தென்றுபோர் பற்றொழியீர்'' (தேவா. 879 : 6).

படுகாடு கிடத்தல் = ஒருசேர விழுந்த மரங்கள் போலச் செயலற்றுக் கிடத்தல். ''பறவையின் கணங்கள்..... படுகாடு கிடப்ப'' (திவ். பெரியாழ். 3 : 6 : 8).

படுகிடை = 1. நோய் மிகுதியால் எழமுடியாமற் படுக்கையிற் கிடத்தல். 2. தன் எண்ணம் நிறைவேற ஒட்டாரமாய்ப் படுத்துக் கிடக்கை.

*படுகுடி = கெடுகுடி (யாழ். அக.).*

*படு – படுகை = 1. ஆற்றோரத்துத் தாழ்ந்த நிலம். 2. நீர்நிலை. ''பழைய பாகீரதிப் படுகைமேல்'' (திருப்பு. 493).*

*படு – படை. படைத்தல் = மக்கட்கு முன் அல்லது தெய்வப் படிமைக்கு முன் உணவு இடுதல். இடுதலென்பது கீழ்வைத்தல்.*

*படை – படையல் = உணவு தெய்வப் படிமைக்குமுன் இடுதல்.*

*படு – பாடு = 1. விழுகை. ''காடுகழி யிந்தனம் பாடுபார்த் தெடுத்து'' (தனிப்பாடல்), ''நொச்சிப் பாடோர்க்குஞ் செவியோடு'' (கலித். 46). 2. கதிரவன் விழுந்து மறைதல். ''செங்கதிர்ச் செல்வன் எழுச்சியும் பாடும்'' (பெருங். வத்தவ. 2 : 87). 3. கீழோரை (நீசராசி). ''பார்க்கவனார் பாடுச்சி சேருங்கால்'' (சினேந். 207). 4. படுக்கை நிலை. ''பன்னா ளாயினும் பாடு கிடப்பேன்'' (மணிமே. 18 : 158). 5. தூக்கம் ''பாடின்றிப் பசந்தகண்'' (கலித். 16). 6. சாவு. ''அபிமன்னுவின் பாடு'' (பாரதவெண். 813, குறிப்பு). 7. கேடு. ''ஆடுறு குழிசி பாடின்று தூக்கி'' (புறம். 371). 8. குறைவு. அளவுபாடு (உ.வ.). 9. வருத்தம். ''தம்பா டுரைப்பரோ தம்முடையார்'' (நாலடி. 292). **க.** பாடு. 10. உழைப்பு. ''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்து'' (நல்வழி, 22). 11. கருமம் (காரியம்). அவனவன் தன்தன் பாட்டைக் கவனிக்க வேண்டும் (உ.வ.). 12. தாழ்மட்டம்.*

**தெ.** *பாடு,* **க.** *பாடு, ஹாடு.*

*பாடு காட்டுதல் = பக்கஞ் சரிந்து கிடத்தல். 2. நீட்டமாகக் குப்புற விழுதல்.*

*பாடு காட்டி விழுதல் = சாய்ந்து விழுதல்* (W.).

*பாடு கிடத்தல் = தெய்வத்திற்குமுன் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வரங்கிடத்தல். ''பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந் தாளுக்கு'' (சிலப். 9 : 15).*

*பாடுபடுதல் = 1. வருந்தி யுழைத்தல். ''பாடில்லாமற் பயனில்லை'' (பழ.). 2. துன்பப்படுதல். கொடுங்கோல் மன்னர் ஆட்சியில் குடிகள் மிகப் பாடுபடுவர் (உ.வ.). 8. வாரத்திற்குப் பயிரிடுதல். நீ யார் நிலத்திற் பாடுபடுகிறாய்? (நெல்லை வட்டார வழக்கு).*

*பாடு பார்த்தல் = ஒருவரது கருமத்தைக் கவனித்தல்.*

*பாடு பிடித்தல் = நீரில்லாமையாற் பயிர் பட்டுப் போதல்.*

பாடாற்றுதல் = துன்பம் பொறுத்துக் கொள்ளுதல். ''சிலநா ளாற்றாமை யோடே பாடாற்றிக் கிடந்தார்'' (ஈடு, 5 ៖ 3 ៖ 1).

பாடு – பாடி = மிகத் தாழ்மட்டமான கூரை வீடுகள் சேர்ந்த முல்லைநிலத்தூர் (திவா.). 2. இடையர் குடியிருப்பு. ஆயர்பாடி (திவ். நாய்ச். 14 ៖ 2). 3. சிற்றூர். 4. பாசறை. ''பாடி பெயர்ந்திட்டான் பல்வேலான்'' (பு. வெ. 3 ៖ 10). 5. சேனை. 6. ஊர். 7. நகரம். ''பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப'' (சிலப். உரைபெறு. 3). 8. உள்படும் உளவாளி.

**ம., க.** பாடி, **தெ.** பாடு.

பாடிகாவல் = 1. ஊர்காவல். (கல்வெட்டு). 2. தலையாரி. 3. ஊர்காவற்கு வாங்கும் வரி. (S. I. I. I, 89). 4. வழக்குத் தீர்த்து இடும் தண்டனை. ''பாடி காவலிற் பட்டுக் கழிதிரே'' (தேவா. 232 ៖ 2). 5. பாடிப்பேச்சு = ஊர்ப்பேச்சு, வீண்பேச்சு (நாஞ்.).

பாடி மாற்றம் = உலக வழக்குச் சொற்கள் (தொல். செய். 240, உரை).

பாடி வீடு = பாசறை. ''பாடி வீட்டினை வலஞ்செய் கின்றான்'' (கம்பரா. விபீடண. 151).

பாடி – வாடி = 1. முல்லை நிலத்தூர். 2. இடையர் குடியிருப்பு. 3. சிற்றூர் பட்டி. 4. ஊர். 5. பாசறை. 6. இடையர் மாட்டுத் தொழுவம். 7. காணிக்காரரின் புல்வேய்ந்த மூங்கிற் குடிசை (G. Tn. D. 1 : 7). 8. சாவடி. 9. அடைப்பிடம். 10. மரமண்டி. எ-டு ៖ மரவாடி, விறகுவாடி.

பாடி வாசல் – வாடி வாசல் = 1. முல்லைநில மாட்டுத் தொழுவ வாசல். 2. இடையர் குடியிருப்பு வாசல். 3. சல்லிக்கட்டுக் காளைகளை அடைத்து வைத்திருக்கும் தொழுவ வாசல். 4. பாசறை வாசல். 5. அரண்மனை வாசல்.

பாடி வீடு – வாடி வீடு = 1. பாசறை. 2. அரசன் தங்கல் மனை. 3. சாவடி.

பாடு– பாடை = காலில்லாத மிகத் தாழ்வான பிணக்கட்டில். ''உயர் பாடைமேற் காவுநாள்'' (தேவா. 927 ៖ 3).

**தெ.** பாட.

பாடைச்சுழி – மாட்டின் நடு முதுகந்தண்டிற்கு வலப்புறமுள்ள தீச்சுழி வகை (அபி. சிந். 788).

பாடையவரை = பாடவரை (நாஞ்.).

பாடோடிக் கிடத்தல் = 1. பாடு கிடத்தல். 2. துயரத்தினாற் படுகிடையாய்க் கிடத்தல். ''நான் பாடோடிக் கிடந்தேன்'' (ஈடு, 6 ஃ 8 ஃ 4).

பது – பாது – பாந்து. பாந்துதல் = பதுங்குதல் (சூடா.). ''ஆந்தை பாந்தி யிருப்ப'' (கலிங். 127, புதுப்.).

பாந்து – பாந்தல் = பதுங்குகை (சூடா.).

பாந்தல் – பாந்தள் = 1. (புல்லுள்ளும் செடிகளுள்ளும் பதுங்கியிருக்கும்) பாம்பு. ''பாந்தளஞ் சடில முக்கட் பாவலன்'' (திருவாலவா. 16 ஃ 32). 2. மலைப்பாம்பு. ''கானிடைப் பாந்தள் கண்படுப்பன'' (சீவக. 1900).

பாந்து என்னும் சொல்லிற்குப் பொந்து என்னும் பொருளுமுண்டு. மலைப்பாம்பு பொந்திற்குள் இராமையின், பதுங்குதற் பொருளே பொருத்தமானதாகக் கொள்ளப்பட்டது.

புல்– புள்– பொள்– பள்– பள்ளம்.

இக் காலத்தை நோக்க முற்காலம் பள்ளம் போன்றிருத்தலால், பள்ளக் கருத்தினின்று பழமைக் கருத்துத் தோன்றிற்று.

ஒ.நோ ஃ கில்லுதல் = தோண்டுதல். கில் – கீள் – கீழ் = 1. பள்ளம் (சூடா.). 2. கீழிடம். ''நள்ளுதல் கீழுளு மேலுளும் யாவுளும்'' (திருவாச. 5 ஃ 46). 3. முற்காலம். ''கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டு'' (திருவாச. 40 ஃ 9). கீழ் – கிழம் = முதுமை, முதியது.

தொல்லுதல் = துளைத்தல், தோண்டுதல். தொல் – தொள். தொள்ளுதல் – தொளைத்தல், தோண்டுதல். தொல் = பழைய. தொல் – தொல்லை = பழமை. தொல் – தொன்று = பழமை. தொன்றுதொட்டு = பழைய காலந்தொடங்கி. தொல்– தொன்மை = பழமை, பழைமை. தொள் – தொண்டு = பழமை (திவா.) ''தொண்டு போலவெவ் வுலகமுந் தோன்றுதல் வேண்டும்'' (விநாயகபு. 82 ஃ 55).

பள்– பண்டு = 1. பழமை. ''பண்டாய நான்மறையும்'' (திருவாச. 48 ஃ 1). 2. முன்பு. ''பண்டறியேன் கூற்றென் பதனை'' (குறள். 1083).

**ம., தெ.** பண்டு. பண்டு – பண்டை = (பெ.). 1. பழமை. ''பண்டைப் பிறவிய ராகுவர்'' (மணிமே. 11 ஃ 33). 2. முற்காலம். ''தண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே'' (புறம். 10).

(கு.பெ.எ.). = பண்டைக் காலம்.

பள்– பழம்– பழமை = 1. தொன்மை. 2. தொன்மையானது. ''பரமர் பழமை யெனலாம்....... மயிலாடுதுறை'' (தேவா. 496 : 5). 3. வழங்கா தொழிந்தது (W.). 4. சாரமின்மை. 5. முதுமொழி (சூடா.). 6. பலநாட் பழக்கம். 7. நாட்பட்டதால் ஏற்படுஞ் சிதைவு. 8. பழங்கதை. 9. மரபு (W.). 10. வழக்கம்.

பழநடை = வழக்கம். ''பழநடைசெய் மந்திர விதியிற் பூசனை'' (திவ். பெரியதி. 2 : 3 : 4). பழங்கணக்கு = 1. பழைய கணக்கு. 2. கடந்துபோன செய்தி.

பழங்கதை = 1. பழைய கதை. 2. தெரிந்த செய்தி.

பழங்காசு = பண்டை நாளில் வழங்கிய காசுவகை.

பழங்கிடையன் = கட்டுக்கிடைப் பண்டம்.

பழஞ்சொல் = பழமொழி.

பழம்– பழன்– பழனம் = பண்டை நாளிலேயே பண்படுத்தப்பட்ட வயல். ''பழன மஞ்ஞை யுகுத்த பீலி'' (புறம். 13). 2. மருதநிலம். ''பன்மலர்ப் பழனத்த'' (கலித். 78). 3. பொய்கை. ''பழன வாளைப் பரூஉக்கட் டுணியல்'' (புறம். 61).

பழமை– பழைமை = தொன்மையானதாய் அல்லது நாட்பட்டதாய் இருத்தல். **க.** பழவே.

பழை = பழங்கள் (பிங்.), கள்.

பழையன் = 1. முன்னோன். 2. கிழவன். 3. மோகூர்த் தலைவன் பெயர். 4. போரூர்த் தலைவன் பெயர்.

பழையர் = 1. முன்னோர். 2. கள் விற்போர். ''பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்'' (மலைபடு. 459).

பழையது = 1. நீரூற்றி வைத்த பழஞ்சோறு. 2. பழம்பொருள்.

ஒ.நோ : Gk. *palaios*, old, ancient, palaeocrystic, palaeography, palaeolithic, palaeontology, palaeothere, palaeozioc என்னுங் கூட்டுச் சொற்கள், palaios (பழைய) என்னுஞ் சொல்லை முதலுறுப்பாகக் கொண்டுள்ளன.

பழமை – வழமை = வழக்கம். நாட்டு வழமை (உ.வ.). வழ – வழப்பு – வழப்பம் = வழக்கம் (யாழ். அக.).

பள்– பய்– பயில். ஒ.நோ : அள் = கூர்மை. அள்– அய்– அயில் = கூர்மை.

பயில்தல் (பயிறல்) = 1. பழகுதல். ''பயிறொறும் பண்புடை யாளர் தொடர்பு.'' (குறள். 783). 2. கற்றல். ''படைக்கலம் யாவும்..... மாதவன் வயிற்பயில் வரதன்'' (பாரத. வாரணா. 29). 3. தேர்ச்சியடைதல். 4. உலாவித் திரிதல். ''நந்தி நந்தினி பயிலுகின்ற பேரொலி'' (தணிகைப்பு. அகத். 103). 5. தங்குதல். ''புலவர் பயிலுந் திருப்பனையூர்'' (தேவா. 635 : 6). 6. பொருந்துதல். 7. நெருங்குதல். ''பயிலிதழ் மலர்'' (கலித். 103).

பயில் – பயில்வு = இருப்பு, வாழ்வு. ''அடிமைக்கட் பயிலாதார் பயில்வென்னே'' (தேவா. 1063 : 6).

பயில் – பயிற்சி = 1. தொழில் பழகுதல். 2. ஆட்பழக்கம்.

பயில் – பயிற்றி = பழக்கம். ''பழமையும் பயிற்றியும்..... உடையார்'' (இறை. 2).

பழையது – பழைது = 1. பழஞ்சோறு. 2. பழையது.

பழைது – பழைசு – பழசு = நாட்பட்டது. ''தேன் அல்பமுமாய்ப் பழசுமாயிருக்கும்'' (திவ். திருநெடுந். 26, வியா. 226).

பழஞ்சரக்கு = 1. கட்டுக்கிடைப் பண்டம். 2. இன்று நுகரும் பழவினைப் பயன். ''வறிதே தீயப் பழஞ்சரக்கும்'' (மதுரைக். 49).

பழையான் = 1. பழைமையானவன். ''வானத்துயர் வானைப் பழையானை'' (தேவா. 1064 : 9). 2. நெடுநாள் நண்பன். ''பழையார்கட் பண்பிற் றலைப்பிரியா தார்'' (குறள். 810).

பழையோள் = பழைமையான பாலைநிலத் தெய்வமாகிய காளி. ''இழையணி சிறப்பிற் பழையோள் குழவி'' (திருமுருகு. 269).

பழம் – பழவு – பழகு. பழகுதல் = 1. நெடுங்காலமாக வழங்கி வருதல். ''பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'' (தனிப்பா.). 2. பலநாட் பார்த்தல். பழகின முகம் (உ.வ.). 3. உறவாடுதல்.

''நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே'' (நறுந். 33)

''ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.'' (ஷை 34)

4. விலங்கு பறவைகள் புதிய இடத்தில் அல்லது புதிய ஆள்களொடு பயின்று இணங்கிப்போதல். நாய் நன்றாய்ப் பழகிவிட்டது. எருமை ஏருக்குப் பழகிவிட்டது. (உ.வ.). 5. ஓர் உணவுப் பொருளைப் பலநாள்

உண்டு பயிலுதல். ''பழகப் பழகப் பாலும் புளிக்கும்'' (பழ.). 6. ஒரு வினையைப் பலநாட் செய்து தேர்ச்சி பெறுதல். ஐந்தாண்டு வீணை பழகி வருகின்றான். ஆங்கிலம் பேசிப் பழகிக் கொண்டான் (உ.வ.). 7. ஒரு வினையை வழக்கமாகச் செய்தல். கல்லூரிக்குச் சென்ற பின் சுருட்டுக் குடிக்கப் பழகிவிட்டான் (உ.வ.). 8. ஒத்துப்போதல். குற்றாலஞ் சென்றபின் குளிர்ந்த நீர்க்குளிப்பிற்கு என் உடம்பு பழகிவிட்டது (உ.வ.)

பழகு – பழக்கம் = 1. பயிற்சி.

''சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம்'' (தனிப்பா.)

2. வழக்கம். ''பழக்கங் கொடியது, பாறையினுங் கோழி கீறும்'' (பழ. 3). அறிமுகம். அவர் எனக்கு நல்ல பழக்கம் (உ.வ.). 4. ஒழுக்க வினை. அவனிடத்திற் சில கெட்ட பழக்கங்கள் இருக்கின்றன (உ.வ.). 5. வினைத் தேர்ச்சி, திறமை, சமர்த்து (W.). 6. அடங்கிப் போகை. 7. வயக்குதல், பயிற்றல். விலங்குகள் போருக்கும் வட்டக் காட்சிக்கும் (circus) பல்லாண்டு பழக்கம் பெறல் வேண்டும் (உ.வ.).

பழகாளி – பழகாடி = பட்டறிவுள்ளவன் (யாழ்ப்.).

பழகு – பழக்கு. பழக்குதல் = பழகச் செய்தல், பயிற்றுதல், வயக்குதல்.

**க.** பழகிசு.

பழகு – பழங்கு. பழங்குதல் = 1. பழகுதல். 2. உறவாடுதல். 3. கையாளுதல். வீட்டிற் பழங்குவதற்கு வேண்டிய கலங்கள் இல்லை (உ.வ.).

பழங்கு – புழங்கு. புழங்குதல் = 1. பழகுதல். 2. கையாளுதல். ''விதர்ப்ப தேயத்திற் புழங்கலுறும் பொருண் முழுதும் பொலிந்து'' (விநாயகபு. 55 : 4). புழங்கலுக்குரிய கலம் ஒன்றும் மருமகள் கொண்டு வரவில்லை (உ.வ.).

பழக்கம் – புழக்கம் = 1. பழக்கம். 2. அறிமுகம்.

புழங்கு– புழக்கம் = 1. கையாட்சி, புழக்கத்திற்குக் கலங்களில்லை. 2. பண நடமாட்டம். இவ் வாண்டு பணப்புழக்கம் மிகக் குறைந்துவிட்டது (உ.வ.).

பழங்கு– வழங்கு. வழங்குதல் = (செ. கு. வி.) 1. தொன்றுதொட்டு நடைபெற்று வருதல். ''வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்''

(தொல். குற்றி. 78). 2. பயிற்சி பெறுதல் (W.). 3. நிலைபெறுதல். ''வானின் றுலகம் வழங்கி வருதலான்'' (குறள். 11). 4. இயங்குதல். ''வளிவழங்கும் மல்லன்மா ஞாலம் கரி'' (குறள். 245). ''முந்நீர் வழங்கும் நாவாய்'' (புறம். 13). 5. உலாவுதல். ''சிலம்பில் வழங்க லானாப் புலி'' (கலித். 52). 6. நடமாடுதல். ''பேய் மகள் வழங்கும் பெரும்பா ழாகும்'' (பதிற். 22 : 37). ''வழங்காப் பொழுது நீ கன்றுமேய்ப் பாய்போல்'' (கலித். 112). 7. அசைந்தாடுதல். ''மழகளிறு கந்து சேர்பு....... வழங்க'' (புறம். 22). 8. ஏற்றதாதல். வாய்க்கு வழங்காத கறி (W.).

(செ. குன்றாவி.) 1. கையாளுதல். தமிழ்ப் புலவர் தனித்தமிழ்ச் சொற்களையே வழங்குதல் வேண்டும் (உ.வ.). 2. சொல்லுதல், ''யானோ தேறேன்அவர் பொய்வழங் கலரே'' (குறுந். 21). 3. கொடுத்தல். ''வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி'' (பெரும்பாண். 26). 4. விடுத்தல் 'சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்'' (புறம். 14). 5. பகிர்ந்தளித்தல்.

**க.** பழகு (g).

வழங்கு– வழக்கு (பி.வி.). வழக்குதல் = போக்குதல். ''வழக்குமாறு கொண்டு'' (கலித். 101).

வழங்கு – வழக்கு (பெ.) = 1. இயங்குகை. ''வையை யன்ன வழக்குடை வாயில்'' (மதுரைக். 159). ''வழக்கொழியா வாயில்'' (பு. வெ. 10, முல்லைப். 4). 2. உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கிடம். ''வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே'' (தொல். மரபு. 93). 2. உலக வழக்கு. ''வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்'' (தொல். பனம். சி. பா.). 3. இயல்பு வழக்கு தகுதி வழக்கு என்னும் இருவகைச் சொல் வழக்குகள்.

''இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகும் மூவகை யியல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்'' (நன். 207)

4. பழக்கவொழுக்கம். ''வாய்மையுடையார் வழக்கு'' (திரிகடு. 37). 5. நெறி. ''அன்புற் றமர்ந்த வழக்கென்ப'' (குறள். 75). 6. நயன்மை (நீதி). ''வழக்கன்று கண்டாய்'' (திவ். இயற். 2 : 19). 7. சச்சரவு, உரிமைப் பிணக்கு. 8. சச்சரவுபற்றிய முறையீடு. ''வழக்குரை காதை'' (சிலப். 20). 9. கொடை. ''உடையான் வழக்கினிது'' (இனி. நாற். 3).

வழக்கு என்னும் சொற்கு, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகர முதலியிற் குறிக்கப்பட்டுள்ள 7ஆம் பொருள். "Litigation; நீதி ஸ்தலத்திற்

*செய்யும் வியாச்சியம்.* Mod'' *என்றுள்ளது. இஃது எங்ஙனம் இக்காலத்தது என்பது விளங்கவில்லை.*

*வழங்கு– வழக்கம் = 1. பழக்கம். 2. நாள்தொறும் செய்வது. அவர் காலை எழுந்தவுடன் கடவுளை வணங்குவது வழக்கம் (உ.வ.). 3. ஈகை. ''திருக்கை வழக்கம்'' (கம்பன்). 4. படைக்கலத்தைக் கையாளுதல்.*

**க.** *பழகெ* (b).

*வழக்கு– வழக்கர் = (அரு. நி.). 1. நீள்வழி. 2. வழக்கம்.*

*வழக்கு – வழக்கன் = 1. வழக்காளி* (W.). *2. இலவசமாகப் பகிர்ந்தளித்தற்குரிய பொருள். வழக்கனாயிருக்கிற சந்தனத்தைக் கொடுத்தான் (ஈடு, 4 : 3 : 1).*

*வழக்காறு = வழக்கு, வழக்கியல்.*

*வழக்காளி = 1. வழக்குத் தொடுத்தவன். 2. போராடுபவன்.*

*வழக்காடுதல் = வழக்கிற் போராடுதல். வழக்காட்டு = போராட்டு.*

*வழக்காடி = போராடி.*

*பழம் பொருள்கள் பொதுவாகப் பழுதுபடுமாதலால் பழமைக் கருத்தினின்று பழுது கருத்தும் தோன்றும்.*

*பழமனை = இடிந்து பாழான வீடு (யாழ். அக.).*

*பழ– பாழ். பாழ்த்தல் = 1. அழிவடைதல். 2. பயனறுதல். ''பாழ்த்த பிறப்பு'' (திருவாச. 5 : 16). 3. சீர் குன்றுதல். ''பாழ்த்த பாவிக் குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கும்'' (கம்பரா. குகப். 70). 4. இனிமை யின்மை. ''பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்'' (தனிப்பா.).*

*பாழ் = 1. அழிவு. ''நரகக்குழி பலவாயின பாழ்பட்டது'' (சடகோபரந். 5). 2. கெடுதி* (W.). *3. வறப்பாழ், வெள்ளப் பாழ், குடிப்பாழ் என்னும் முப்பாழான இழப்பு. 4. இழிவு* (W.). *5. அழகின்மை. ''நீறில்லா நெற்றிபாழ்'' (நல்வழி, 24). 6. வீண். 7. வெறுமை. ''வளமனை பாழாக வாரி'' (பு. வெ. 3 : 15). 8. இன்மை. 9. ஒன்றுமில்லா இடம். 10. விளையா நிலம். ''முதுபாழ்ப் பெயல்பெய் தன்ன'' (புறம். 381). 11. புறம்போக்கு நிலம். 12. குற்றம். ''முப்பாழ் கழிந்து'' (காசிக். வயிர. 25). 13. வானம். 14. மூலமுதனிலை (மூலப் பிரகிருதி). ''முடிவில்பெரும் பாழேயோ'' (திவ். திருவாய். 10 : 10 : 10). 15. ஆதன் (புருடன்). ''பாழெனக் காலெனப் பாகென வொன்றென'' (பரிபா. 3 : 77).*

*நத்தப்பாழ் = பாழூர்.*

*முப்பாழ் = 1. மூவகை இழப்பு. 2. உடம்பிற்குள் வெறிதான மூவிடம். 3. முப்பொருளின்மை. ''முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்''*

*பாழ்க்கோட்டம் = சுடுகாடு. ''பொடியுடுத்த பாழ்க்கோட்டஞ் சோரமுன்'' (பதினொ. ஐயடி. க்ஷேத். 2).*

*பாழ்கிடை = விடாமற் பற்றிக்கிடக்கை. கடன்காரன் பாழ்கிடையாய்க் கிடக்கிறான் (உ.வ.).*

*பாழ்ங்கிணறு = தூர்ந்து அல்லது இடிந்து பயனற்ற கிணறு.*

*பாழ்ங்குடி = சீர் கெட்ட குடும்பம்.*

*பாழ்மூலை = எளிதிற் செல்ல முடியாத தொலைவான இடம். அவன் எங்கேயோ பாழ்மூலையில் இருக்கிறான் (உ.வ.).*

*பாழ்வாய் கூறுதல் = நன்றி மறந்து முணுமுணுத்தல்.*

*பாழ்வாயன் = நன்றி மறந்து குறைகூறி.*

*பாழ் – பாழி = 1. வெறுமை. 2. வானம் (ஆகாயம்) (யாழ். அக.).*

*பாழி – பாழிமை = வெறுமை. ''பாழிமை யான கனவில்'' (திவ். பெரியதி. 11 : 2 : 6).*

*பாழூர் = குடிநீங்கிய ஊர். ''பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே'' (புறம். 132).*

*பாழுக்கிறைத்தல் = 1. பாழ்நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுதல். ''இரவுபகல் பாழுக் கிறைப்ப'' (குமர. பிர. நீதி. நெறி. 90). 2. வீணான வினை செய்தல். ''பாழ்க்கிறைத்துக் கழித்தீர்'' (அருட்பா.* VI, *உறுதி கூறல், 2).*

*பாழ் – பழுது = 1. சிதைவு. ''இவை பழுதிலை'' (தேவா. 543 : 2). 2. பதனழிந்தது. 3. பிணமாயிருக்குந் தன்மை (சிலப். 19 : 66, அரும்.). 4. தீங்கு. ''பழுதெண்ணும் மந்திரியின்'' (குறள். 639). 5. குற்றம். ''பழுதிறொல் புகழாள் பங்க'' (திருவாச. 28 : 10). 6. பயனின்மை. ''பழுது பயமின்றே'' (தொல். உரி. 26). 7. பொய். ''பழுதுரை யாதவன் உரைப்பான்'' (திருவாலவா. 19 : 9). 8. வறுமை. ''பழுதின்று'' (பொருந. 150). 9. உடம்பு. ''பழுதொழிந் தெழுந்திருந்தான்'' (சிலப். 19 : 66). 10. ஒழுக்கக்கேடு. 11. வெற்றிடம்.*

*பழுது – வழுது = பொய் (பிங்.).*

*பழங்கண் = 1. துன்பம். ''பகைவ ராரப் பழங்கண் ணருளி'' (பதிற். 37 : 3). 2. மெலிவு (பிங்.). முதுமையில் துன்பமும் மெலிவும் நேர்வது இயல்பே.*

*ஒருவரைப் பழிப்பது தாழ்வுபடுத்துதலாதலால், தாழ் மட்டத்தைக் குறிக்கும் பள்ளக் கருத்தினின்று பழிப்பு அல்லது இழிப்புக் கருத்துந் தோன்றும்.*

*பள்– பழி. பழித்தல் = 1. இகழ்ந்து அல்லது இழித்துக் கூறுதல். 2. கடிந்து கூறுதல். ''உலகம் பழித்த தொழித்து விடின்'' (குறள். 290). 3. புறங்கூறுதல். 4. நகையாடுதல்.*

*பழித்துக் காட்டுதல் = ஒருவரது உறுப்பை அல்லது செயலைப்போல் நடித்து நகையாடுதல்.*

**க.** *பழி.*

*பழி = 1. இகழ்ச்சி. ''புகழிற் பழியி னென்றா'' (தொல். சொல். 73). 2. அலர். ''ஒன்றார் கூறும் உறுபழி நாணி'' (பு. வெ. 11, பெண்பாற். 4). 3. குறை* (W.). *4. குற்றம். ''மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்து'' (பட்டினப். 216). 5. தீவினை (பாவம்). ''தசமாமுகன் பூவியலும் முடிபொன்று வித்த பழிபோயற'' (தேவா. 890 : 2). 6. தீவினைப் பயன். அவனைக் கொலைப்பழி விடாது (உ.வ.). 7. தீங்கிற்குத் தீங்கு செய்வு. 8. கொலை. வெட்டுப்பழி குத்துப்பழி (உ.வ.). 9. பகை. இருவகுப்பார்க்கும் பழிமூண்டுவிட்டது (உ.வ.).* **க.** *பழி.*

*பழிகரப் பங்கதம் = வசையை வெளிப்படையாகக் கூறாது, குறிப்பாக அல்லது மறைத்துக் கூறும் செய்யுள். ''மொழிகரந்து சொல்லினது பழிகரப் பாகும்'' (தொல். செய். 125).*

*பழிகாரன் = 1. பிறர்மேற் குறைகூறுபவன்* (W.). *2. கொலை காரன்.*

*பழி சுமத்தல் = 1. கரணியமின்றிக் குற்றவாளிப் பெயர் தாங்கல். ''தேரையர் தெங்கிளநீ ருண்ணாப் பழிசுமப்பர்'' (தமிழ்நா. 74). 2. தன் வினையால் அல்லது பிறர் வினையால் குற்றந் தாங்குதல்.*

*பழி சுமத்துதல் = குற்றஞ் செய்யாதவனைக் குற்றவாளி யெனல்.*

*பழிதீர்த்தல் = 1. கொலைக்குக் கொலை செய்தல். 2. தீவினையைப் போக்குதல். ''இந்திரன் பழிதீர்த்த படலம்'' (திருவிளை.).*

*பழிமொழி = 1. இழித்துரை. 2. குற்றச்சாட்டு. 3. புறங்கூற்று. 4. வசையுரை.*

*பழிவிழுதல் = 1. கொலை நேர்தல். 2. கொலைக் குற்றம் நேர்தல்.*

*பழிவாங்குதல் = கொலைக்குக் கொலை அல்லது உறுப்பறைக்கு உறுப்பறை நிகழ்த்துதல்.*

*பழி– பழிப்பு = 1. இழிப்பு. ''பெறுவது பழிப்பால்'' (கம்பரா. படைக் காட்சி. 50). 2. வசவு. 3. நகையாட்டு. 4. குறளை. 5. குற்றம். 6. குறை. ''பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோர்'' (பு. வெ. சிறப்புப்.)*

**க.** *பழிவு.*

*பழி– பழிசை = இகழ்ச்சி (இலக். அக.).*

*பள்– பண்டு = பழிமொழி.*

**தெ.** *பண்டு* (b).

*பண்டு– பண்டை = 1. இடக்கர் மொழி. 2. வசைமொழி. பண்டை பண்டையாய்த் திட்டுகிறான் (உ.வ.).*

**தெ.** *பண்ட* (b).

*பண்டு– வண்டு = குற்றம் (பிங்.).*

*பண்டை – வண்டை = கொச்சை மொழி. வண்டைப் பேச்சு. வண்டை வண்டையாய்ப் பேசுகிறான் (உ.வ.).*

*வண்டு – வடு = 1. ''பழி வடுவன்று வேந்தன் றொழில்'' (குறள். 549). 2. குற்றம். ''வடுவில் வாய்வாள்'' (சிறுபாண். 121).*

*இனி, பழமை முதிர்ச்சியாதலால், பழமைக் கருத்தினின்று முதிர்ச்சிக் கருத்துந் தோன்றும்.*

*ஒ.நோ : முதுமை = பழமை.*

*முது– முதிர். முதிர்தல் = 1. முற்றுதல். 2. தக்க பருவமடைதல்.*

*பள்– பழு. பழுத்தல் = 1. காய் முதிர்ந்து பழமாதல். ''பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றால்'' (குறள். 216). 2. மனங்கனிதல். ''பழுத்த மனத்தடியர்'' (திருவாச. 24 : 4). 3. நுகர்ச்சிக்குத் தகுந்த பருவமடைதல்* (W.). *4. தேர்ச்சியடைதல். ''செந்நாச்சொற் பழுத்தவர்க்கும்'' (சீவக. 435). 5. வினைவெற்றியாய் முடிதல். எடுத்த கருமம் (காரியம்) பழுத்துவிட்டது (உ.வ.). 6. குழைதல். ''விற்பழுத்து'' (சீவக. 435). 7. செழித்தல். ''பல்கிய*

*கிளைஞரும் பழுக்க வாழுநர்'' (பிரமோத். 6 : 47). 8. சிரங்கு சிலந்தி முதலியன முற்றி மென்மையாதல். சிலந்தி பழுத்துவிட்டது. கட்டி பழுத்து உடைந்துவிட்டது (உ.வ.). 9. பழுப்புநிறமாதல். பழுக்கக் காய்ச்சிய இரும்பு (உ.வ.). 10. பருத்தல், பிள்ளை பெற்ற வயிறு காரவுணவு உண்ணாமையாற் பருத்துப் போதல். வயிறு பழுத்துவிட்டது (உ.வ.). 11. மிகுதல். ''தொளிபழுத்த தண்பணை'' (காசிக. துருவ. 11). 12. முதிர்தல். ''மற்பழுத் தகன்ற மார்பத்து'' (சீவக. 435). 13. மூப்படைதல். பழுத்த கிழம் (உ.வ.).*

*பழு – பழம் = 1. கனி. ''காயே பழமே'' (தொல். மரபு. 89). 2. முதிர்ந்த காய், தென்னைநெற்று. ''நாய்பெற்ற தெங்கம்பழம்'' (பழ.). 3. முதிர்ந்த காய்போன்ற முள். ''மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்'' (குறள். 1120). 4. அகவை முதிர்ந்தோ– ன்– ள். இன்று சுடுகாட்டிற்குப் போகிறது பழுத்த பழம் (உ.வ.). 5. வினையின் வெற்றி, போன கருமம் (காரியம்) காயா? பழமா? (உ.வ.). 6. சிறுவர் விளையாட்டு வெற்றி. இன்று நான் மூன்று பழம் எடுத்தேன் (உ.வ.). 7. முக்கால் (குழூஉக்குறி). 8. ஆறுதற்பழம், இணங்கற் பழம்.*

*பழம் –* **வ.** *பல* (ph).

*பழு– பழுப்பு = 1. பொன்னிறம். 2. முதிர்ந்து மஞ்சள் நிறமடைந்த இலை. பழுப்பெல்லாம் நீக்கிவிடு (உ.வ.). 3. பூங்காவி நிறம். துவை வேட்டி பழுப்பேறிவிட்டது (உ.வ.). 4. உதட்டுச் சிவப்பு. ''அதரத்திற் பழுப்புத் தோற்ற'' (ஈடு, 5 : 3 : 3). 5. அரிதாரம். ''பந்தியாப் பழுப்பு நாறில்'' (சீவக. 1287). 6. சீழ். புண்ணிலுள்ள பழுப்பை யெடுத்துவிட வேண்டும் (உ.வ.)*

*பழுக்க = முற்றவும், முழுதும். ''சாஸ்திரார்த்தங்களையும் பகுக்க ஓதி'' (குரூபரம். 186).*

*பழு – பழுநு. பழுநுதல் = 1. கனி. 2. முதிர்தல். ''வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப் பூவும்'' (மதுரைக். 475). 2. நிறைவுறுதல். ''வளம் பழுநி'' (மலைபடு. 578).*

*பழுநு – பழுனு. பழுனுதல் = முதிர்தல். ''தீந்தொடை பழுனிய'' (பதிற். 8 : 21).*

*பழுக்காவி = 1. மஞ்சள் கலந்த செந்நிறம். 2. மஞ்சணை.*

*பழம் – பயம் = 1. பயன். ''பயங்கெழு மாநிலம்'' (புறம். 58). 2. வினைப்பயன். 3. இனிமை. ''சீரமை பாடற் பயத்தாற் கிளர்செவி'' (பரிபா. 11 : 69). 4. அரசிறை. ''பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்'' (சிலப். 2 : 2). 5. தன்மை. ''அங்கையு ணெல்லி யதன்பய மாதலால்'' (பு. வெ. 2 : 13).*

*ஒ.நோ :* **த.** *பழம் –* **வ.** *பல –* **த.** *பலன்.* E. fruit = result.

*பயம் – பயன் = 1. விளைவு. ''வேள்விப் பயன்'' (குறள். 87). 2. பழம். ''பயனாகு நல்லாண் பனைக்கு'' (சிவப். பிரபந். நால்வர். 17). 3. சாறு. ''வம்பார் கொழுங்கனிச் செழும்பயன் கொண்டு'' (தேவா. 460 : 3). 4. சொற்பொருள். ''சொற்குப் பயன்றேர்ந்துவா'' (குமர. பிர. மதுரைக். 53). 5. செல்வம். ''பயன்றூக்கி'' (குறள். 912).*

*பயம் – பய. பயத்தல் = (செ. கு. வி.) 1. விளைதல் ''பயவாக் களரனையர் கல்லாதவர்'' (குறள். 406). 2. உண்டாதல் (திவா.). 3. நிகழ்தல். ''நல்வினை பயந்த தென்னா'' (கம்பரா. கார்முக. 36). 4. கிடைத்தல் (சூடா.).*

*(செ. குன்றா வி.) 1. கொடுத்தல். ''இன்னருள் பயந்து'' (தேவா. 775 : 4). 2. படைத்தல். ''தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கும்'' (திருவாச. 5 : 30). 3. பெறுதல். ''பராவரும் புதல்வரைப் பயக்க'' (கம்பரா. மந்தரை. 47). 4. பூத்தல். ''தாமரை பயந்த வொண்கேழ் நூற்றித ழலரின்'' (புறம். 27). 5. இயற்றுதல். ''சிங்கடி தந்தை பயந்த....... தமிழ்'' (தேவா. 201 : 12).*

*பய – பயப்பு = 1. பயன். ''பயப்பே பயனாம்.'' (தொல். உரி. 9). 2. அருள்*(W.).

*பள் – பண்டு = பழம்.* **தெ., க.** *பண்.*

*பண்டு (பழம்) என்னும் சொல் இற்றைத் தமிழில் வழங்காவிடினும், குமரிநாட்டுத் தமிழில் வழங்கியிருத்தல் வேண்டும். பள் என்னும் மூலத்தினின்று பண்டு என்னும் சொல்லே முதலில் தோன்றியிருக்கும். ழகர வுயிர்மெய் ணகர வுயிர்மெய்யாகத் திரியினும் ழகரமெய் தனிக்குறிலடுத்து வழங்காமையின் பிறவெழுத்தாய்த் திரிவதில்லை. பழமை, பழி என்னும் சொற்கள் பண்டு என்னும் வடிவுங் கொண்டு வழங்குவது போன்றே, பழம் என்னும் சொல்லும் அவ் வடிவுகொண்டு வழங்கியிருத்தல் இயல்பே.*

*குமரிநாட்டு இலக்கியமனைத்தும் அழிக்கப்பட்டு விட்டமையால், பல சொற்கட்கும் சொல்வடிவுகட்கும் மேற்கோள் எடுத்துக்காட்ட இயலவில்லை.*

*குமரிநாட்டுச் சொற்கள் சில இற்றைத் தமிழில் வழங்காது ஏனைத் திரவிட மொழிகளில் வழங்குவதனால், அவை தமிழிற்குரிய வல்ல என மயங்கற்க.*

## குறிப்புகள்

## குறிப்புகள்

மோருக்கு முன்வடிவம் தயிரும் பாலும்
முத்துக்கு முன்வடிவம் சிப்பி; வான்
நீருக்கு முன்வடிவம் முகிலாம்; வட்ட
நிலவுக்கு முன்வடிவம் பிறையாம்; வாழைத்
தாருக்கு முன்வடிவம் அடுக்குப் பூவாம்
தமிழ்ச் சொல்லின் முன்வடிவாம் மூலச் சொல்லின்
வேருக்குள் ஆய்ந்தறிந்து வெற்றி கண்டார்
வேறெவர் நம் பாவாணர் ஒருவர் தாமே!

சூரியன் தமிழ்ச்சொல் சொலித்தலும் தமிழ்ச்சொல்
சுவடியும் நடனமும் தமிழே
ஆரியன் அறியான், மந்திரம் தமிழ்ச்சொல்
அதிகமும் பகவனும் தமிழே
பூரியும் மதமும் மாதமும் மதியும்
பொத்தகம் பொக்கசம் இவையும்
வேரினைப் பிடித்தால் தமிழெனத் தெரியும்
வேட்கபா வாணரின் தெரிவே!

எதுவெங்கே எக்கேடா கெட்டுப் போனால்
எமக்கென்ன என்றிருந்தால் இடுப்பில் கட்டும்
புதுவேட்டி சற்றேதான் நெகிழும் போது
பொள்ளென்று தாம் உருவிக் கொண்டு மேலும்
இதுநாங்கள் உங்களுக்குத் தந்த தென்பார்
இருக்கின்றார், நாம்வாளா விருக்கின் றோமே!
எதுதான்நம் கடன்என்று தெரிந்து கொள்ள
இருக்கும்பா வாணர்நூல் எல்லாம் கற்பீர்!

– பாவலர் அருள் செல்லத்துரை

'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை – 17.